160953

மாதர் மித்திரி

©

160953

# மாதர் மித்திரி.

புத். உரு. ககூ௰க ௵ - ஆகஸ்டு மீ. இல. உ

## THE PLAGUE OF DRUNKENNESS.

## குடிவெறியாகிய வாதை.

“அதினால் எகிப்து தேசம் எங்கும் முன்னும் பின்னும் ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல் உண்டாகும்.” யாத். 11 : 6.

பத்து வாதைகளில் இது மிகவும் கொடியது. சங்கார தூதன் நடுராத்திரியிலே தன் சிறகைத் தேசமெங்கும் பரவச்செய்ததினால் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ஆள் செத்துக்கிடந்தது. எகிப்து தேசமெங்கும் புலம்பலும் அழுகையும் கூக்குரலும் உண்டாயிருந்தது. சங்கார தூதன் வெகு துரிதமாய் பூமியை வாதையால் நிரப்பினான். ஆனாலும் அதைவிட அதிகக் கேடான இன்னொரு சங்கார தூதன் இப்போது வந்திருக்கிறான். அவன் தேசத்திலுள்ளவர்களையெல்லாம் வாரிக்கொண்டு போய்விடுகிறான். அவன்,

**சங்கார தூதனான**

குடிவெறியே. முதலாம் சங்கார தூதனைவிட இரண்டாம் சங்கார தூதனால் அதிக அழிவு உண்டாயிருக்கிறது. எகிப்தில் உண்டான உபத்திரவத்தைப் பார்க்கிலும் இந்த உபத்திரவம் மகா கொடியது. இதினால் ஜனங்கள் ஆயிரக்கணக்காகவும், கோடானுகோடியாகவும் மாண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொகையைக் கணித சாஸ்திரத்தைக்கொண்டு கணக்கிட்டுப் பார்க்க முடியாது. ஒரு காலத்தில்,

### நாலு கொள்ளிவாய்ப் பிசாசுக்கள்.

கெட்டுப்போன உலகத்தில் ஒன்றையொன்று சந்தித்தன. அவைகள் நமது பூமியிலுள்ள ஜனங்கள் மட்டுக்குமிஞ்சின சந்தோஷம் நிறைந்தவர்களாயிருந்தார்களென்று தீர்மானித்துக்கொண்டு, தீங்கை விளைவிக்கும் பொருட்டு தாறுபத்தியஞ் செய்துகொண்டு பூமிக்கு நேராகப் புறப்பட்டு வந்தன. அவைகளில் ஒரு கொள்ளிவாய்ப் பிசாசு, “திராட்சத்தோட்டங்களுக்கு நான் உத்தரவாதியாயிருக்கிறேன்” என்று சொல்லிற்று. இன்னொன்று, “தானியம் விளைகிற வயல் நிலங்களுக்குநான் உத்தரவாதியாயிருக்கிறேன்” என்றது. வேறொன்று “நான் பாற்சாலைக்கு உத்தரவாதியாயிருக்கிறேன்” என்றது. மற்றொன்று, “நான் பாட்டுக்கு உத்தரவாதியாயிருக்கிறேன்” என்றது. அந்த நாலு கொள்ளிவாய்ப் பிசாசுக்களும் மகா பெரிய சஹாரா வனாந்தரத்தில் ஒன்றையொன்று சந்தித்துக்கொண்டு, எலும்புக் கூடுபோன்ற மெலிந்து நீண்ட விரல்களால் ஒன்றையொன்று இறுகப் பிடித்து உண்மைக் கடையாளமாய்க் கைகுலுக்கிக்கொண்டும் நீலநிறமான ஜ்வாலையுள்ள உதட்டினால் அவைகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியுமுன் ஒன்றையொன்று முத்தஞ்செய்துகொண்டும் தங்கள் தங்கள் வேலைக்குப் புறப்பட்டுப் போயின.

திராட்சத் தோட்டத்துக்கு உத்தரவாதியாயிருந்த கொள்ளிவாய்ப் பிசாசு,

160953



ஒருநாள் விடியற்காலத்தில், திராட்சப் பழங்கள் நடுவாக வந்து, முற்றிலும் அழைக்கப்பட்டவனைப் பின்னிக்கொண்டிருந்த திராட்சச்செடியின் வேரருகே உட்கார்ந்தான். அந்தத் திராட்சப்பழந் தோட்டத்தை எவ்விதமாய்ப் பாழாக்கிப் போடலாமென்றுவது, அல்லது அதின் மூலமாய் உலகத்தை எவ்விதமாய்ப் பாழாக்கிப் போடலாமென்றுவது அந்தக் கொள்ளிவாய்ப் பிசாசுக்குத் தெரியாமல் போய்விட்டது. ஏனென்றால், திராட்சப் பழங்கள் அவ்வளவு நன்றாய்ப் பழுத்து, பார்வைக்கு அழகாயும், சுவைக்கு மிகுந்த மதுரமுள்ளதாயுமிருந்தன. திராட்சப்பழங்களின் இனிய வாசனை ஆகாய மண்டலத்தையளாவி அதை மயக்கிற்று. திராட்சப்பழங்களின் ஒவ்வொரு குலையும் அதிகமான சுகத்துக்கேற்றதாகக் காணப்பட்டது. மேலும், அந்தக் கொள்ளிவாய்ப் பிசாசு அதிகக் கோபத்தோடு நம்பிக்கையற்ற விதமாய் உட்கார்ந்துகொண்டிருந்தபொழுது, பொறுமையினால் அவன் ஒரு திராட்சக் குலையை இறுகப் பிடித்துப் பிழிய, இதோ! அவனுடைய கை திராட்சப்பழத்தின் இரசத்தினால் இரத்தமயமாகி, "நொறுங்குண்ட இருதயங்களின் இரத்தத்தை அது என் ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறது. திராட்சத் தோட்டத்திலுள்ள கனிகளையெல்லாம் நான் பறித்து, அவைகளின் இரசத்தைப் பிழிந்தெடுத்து, அது கெட்டு நாற்றமெடுக்கும்படி விட்டுவிடுவேன். இப்படிச் செய்வதைப் புளிக்க வைக்கும் விதமென்று கூறுவேன்" என்று சொன்னான். ஒரு பெரிய தொட்டி ஆயத்தம்பண்ணப்பட்டிருந்தது. ஜனங்கள் தங்கள் கிண்ணங்களையும் குடங்களையும் கொண்டுவந்து இரத்தமயமான திராக்ஷப்பழரசத்தை மொண்டு குடித்துக் கொண்டேபோய், வழிநெடுக விழுந்து, வரிசை வரிசையாய் மாண்டார்கள். ஆகவே திராக்ஷத்தோட்டத்துக் கொள்ளிவாய்ப் பிசாசு, பாதாளத்திலுள்ள தன் வீட்டுக்குத் திரும்ப விரும்பினபோது, அவன் வழிநெடுகக் கிடந்த பிணங்களை ஒவ்வொன்றாய்த் தாண்டிக்கொண்டே போனான்.

அப்புறம் இரண்டாவது கொள்ளிவாய்ப் பிசாசு, வயல் நிலங்களுக்குள்ளே பிரவேசித்தான். தன் தாடையளவு உயரமாய் வளர்ந்திருந்த வாற்கோதுமைப் பயிர்களுக்கூடாகவும், ஓர்வகைக் கோதுமைப் பயிர்களுக்கூடாகவும் நடந்துகொண்டிருந்தான். தானியமெல்லாம் அப்பத்தைக் குறித்தும்; செழிப்பான கிருஷித்தொழிலைக் குறித்தும், விர்த்தியுள்ள வீடுகளைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டான். அவன் நெடுநேரமாக வயலிலுள்ள தானியத்தைப் பிடுங்கி, தண்ணீருக்குள் எறிந்து அதற்கடியில் பெரிய நெருப்பைக் கொளுத்தினான். அந்த நெருப்பு தன் இருதயத்திலிருந்துண்டான தீப்பொறியிலிருந்து பற்றினதாயிருந்தது. பற்கடிப்பும், கை கொடிப்பும் நாற்றமும் உண்டாயிற்று. ஜனங்கள் தங்கள் துருத்திகளைக் கொண்டுவந்து, கொதிக்கிற தண்ணீரை மொண்டு, குடித்து, தேவதூஷணஞ்சொல்லி, தத்தித் தடுமாறி, சண்டை செய்து, கலகம்பண்ணிக் கொலை செய்தார்கள். தானிய வயலின் பள்ளத்திலிருந்த கொள்ளிவாய்ப் பிசாசு, ஜனங்களுடைய கட்டத்தையைக் குறித்து அதிக சந்தோஷமடைந்ததினால், பாதாளத்திலிருந்த தன் இருப்பிடத்தை மாற்றி, வயலிலுள்ள தீங்கற்ற தானியத்தைப்போலொத்த எந்த வஸ்துவிலிருந்தும்கூட உலகத்தைப் பேய்கள் வாழும் பெரும் மாளிகையாகத் திருப்பக்கூடுமென்று எண்ணிக்கொண்டும், அதிக உல்லாசமாய்ச் சிரித்துக்கொண்டும் பிப்பாயத் துவாரத்தண்டையில் உட்கார்ந்தான்.

பாற்சாலைக்கு முகாமையான கொள்ளிவாய்ப் பிசாசு, பசுக்கள் பசும்புல் மைதானத்திலிருந்து, பால் நிறைந்த மடிகளுள்ளதாய் வீட்டுக்குத் திரும்பினதைக் கண்டு, பால் கறப்பவன் பாலைக் கறந்த உடனே, "அந்தப் பாலையெல்லாம் சீக்கிரத்தில் கெடுத்துப்போடுவேன், அதில்

Y15 m211, M71
M77.25



பிராந்தியையும், சர்க்கரையையும், சாதிக்காயையும் கலந்து, அதைப் பானகமாக்குவேன். பிள்ளைகளும் அதைக் குடிப்பார்கள். மதுபான விலக்குச் சங்கத்தைச் சேர்ந்தவர்களில் சிலரும் அதைக் குடிப்பார்கள். நான் அவர்களுக்கு அதிகமான தீங்கைச் செய்யக்கூடாவிட்டாலும், அவர்களுக்குத் தலை நோவை உண்டாக்கி, அதற்கப்புறம் அவர்களை பிசாசுக்களின் தானாபத்தியத்தைச் சேர்ந்த அதிக பலமுள்ள பிசாசுக்களிடத்தில் ஒப்புக்கொடுப்பேன்" என்றான். அதற்கப்புறம் பாற்சாலைக் குத்தரவாதியான கொள்ளிவாய்ப் பிசாசு நீண்ட வரிசையான பிரகாசமுள்ள பாற்பானைகள் அதிருமட்டும் தட்டின்மேல் ஏறிக் குதித்தாடினான்.

சங்கீதத்துக்கு முகாமையான கொள்ளிவாய்ப் பிசாசு ஒரு சாராயக்கடைக்குள் புகுந்தான். அங்கே வாடிக்கையாய்ச் சாராயம் வாங்குகிறவர்களில் சிலர் மாத்திரம் வந்திருந்தார்கள்; வாடிக்கையாய்ச் சாராயம் வாங்குகிற சிலரைக் கண்டு, பட்டணமெங்கும் சுற்றித்திரிந்து, சங்கீத வாத்தியங்களைச் சேகரித்து, இராத்திரியானபின்பு, அவன் ஒரு கூட்டமாய் அணிவகுத்துச் சென்று, எக்காளங்களை ஊதி, கைத்தாளங்களைக் கொட்டி, பேரிகைகளை முழக்கி, தாரைகளை ஊதியழைக்கவே, ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்து, ஒவ்வொருவனும் தன் தன் கையில் ஒரு மதுபானப் பாத்திரத்தைப் பிடித்துக்கொண்டு உல்லாசமாய்ச் சுற்றிச் சுற்றியாடினார்கள். வீடு அதிரத்தக்கதாயும், கண்ணாடிப் பாத்திரங்கள் உடைந்துபோகத்தக்கதாயும், தரை பேர்ந்துபோகத்தக்கதாயும், ஜனங்கள் நரகத்துக்குள் விழுந்து கிடக்கத்தக்கதாயும், ஆட்டம் அவ்வளவு மூர்க்கமாயும், மும்முரமாயும் பலமாயும் நடந்தேறிற்று.

அதற்கப்புறம் திராட்சத்தோட்டத்துக்கு முகாமையான கொள்ளிவாய்ப் பிசாசும், தானியம் விளைகிற வயல் நிலத்துக்கு முகாமையாக நின்ற கொள்ளிவாய்ப் பிசாசும், பாற்சாலைக்கு முகாமையாயிருந்த கொள்ளிவாய்ப் பிசாசும், சங்கீத மண்டபத்துக்கு முகாமையான கொள்ளிவாய்ப் பிசாசும்—ஆக நாலு கொள்ளிவாய்ப் பிசாசுக்களும் தங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போய், தங்கள் வேலை மிகவும் நேர்த்தியாய் நடந்தேறினதினால் ஆனந்தபரவசமடைந்து, மாம்ச பட்சணங்களோடு விருந்துண்டார்கள். சாத்தான் தனது சிம்மாசனத்தை விட்டெழுந்து இந்த நாலு கொள்ளிவாய்ப் பிசாசுக்களும் பேய்த்தன்மையான செய்கைகளை நடப்பிப்பதற்கு அப்படிப்பட்ட சமர்த்துள்ளவைகளாயிருக்கையில் பூலோகம் இரட்சிக்கப்பட்டுப்போகுமென்று பயப்பட வேண்டியதில்லையென்று சொன்னான். அதற்கப்புறம் எல்லாப் பிசாசுக்களும், அசுத்த ஆவிகளும், கொள்ளிவாய்ப் பிசாசுக்களும் தங்கள் மதுபானப் பாத்திரங்களில் சாராயத்தை நிரப்பி, கடகடவென்று குடித்து: "சாராய வியாபாரம் சதாகாலமாய் விர்த்தி பெறவேண்டுமென்று சொல்லி, நாமெல்லோரும் குடிக்கக்கடவோம். இங்கே துக்கமும், அந்தகாரமும், கொலையும், சாவும் அதிகமாய்ப் பெருகும்படி குடிப்போமாக. குடியுங்கள்! குடியுங்கள்!" என்று சொல்லிக் கூச்சலிட்டன.

ஒட்டலங்காரமாகவோ; அல்லது இடுக்கிடச் செய்கிற பொழிப்பாகவோ இந்த விஷயம் நமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆயினும் குடிவெறியினாலுண்டாகும் தீங்குகளை விஸ்தரித்துச் சொல்வது கூடாதகாரியமென்று உங்களுக்கும் எனக்கும் தெரியும். அது ஒரு வாதை! ஒரு வாதை! குடியருக்கு அது துன்பத்தையுண்டாக்கும் வாதையென்று நான் எடுத்துக் காட்டுகிறேன். முதலாவது அது,

**நற்கீர்த்திக்கு நஷ்டமுண்டாக்குவதினால்**

குடியருக்கு அது துன்பத்தையுண்டாக்கும் வாதையாம். ஒருவனும் தன் சொந்தக் கிரியையினாலல்லாமல் மற்றப்படி தன் நற்கீர்த்திக்கு நஷ்டத்தை வருவித்துக்கொள்ளாவண்ணம் தேவன் ஒழுங்குப்படுத்தியிருக்கிறார். உலகம்

ஒரு மனிதனுக்கு எதிர்த்து நிற்கலாம். அந்தகாரத்தின் வல்லமைகளெல்லாம் அவனுக்கு விரோதமாய் எழும்பினாலும் எழும்பும். அவனுடைய இருதயம் சுத்தமாயிருந்து அவனுடைய ஜீவனும் சுத்தமாயிருந்தால் அலைகள் அவனைப் பிடிக்கமாட்டாது. பூலோகத்திலும் நரலோகத்திலுமுள்ள அதிகாரங்களெல்லாம் அந்தக் கற்பாறையாகிய ஜிப்ரால்ற்றரைப் பிடிக்கமாட்டாது. ஒருவன் நீதிமானாயிருந்தால், ஐந்து, பத்து, இருபது, நாற்பது வருஷங்களாக உலகம் சட்டி பீரங்கியினால் சுடுகிறதுபோல அவனை வதைத்தாலும் அதெல்லாம் அவனுடைய நேர்மையான நிலையை பலப்படுத்துகிறதாய்த்தான் இருக்கும். ஆகையால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களை நேர்மையான வழியில் காத்துக்கொள்வதேயாம். உலகத்தைக்குறித்து ஒருக்காலும் கவலைப்படாதேயுங்கள். உலகத்தையொரு பொருட்டென்று ஒருபோதும் எண்ணாதிருங்கள். உலகம் என்ன சொன்னாலும் சொல்லட்டும். அது உங்களுக்கு யாதொரு தீங்கையும் செய்ய முடியாது. ஆனால் அவன் “குடிகாரன்” என்றும் அதை நிருபகாரப்படுத்தக்கூடுமென்றும் குசுகுசென்று மெதுவான சப்தத்தில் பேசப்பட்டவுடனே அவன் மனந்தளர்ந்துபோகிறான்.

அவ்விதமான அபகீர்த்தியுடைய எந்த விதனுக்கு 'உத்தியோகம்' கிடைக்கக்கூடும்? எந்த வர்த்தகசாலையில் அவனை வேலைக்கு ஏற்றுக்கொள்வார்கள்? தேவனுடைய எந்தத் திருச்சபை அவனைத் தன் அவயவமாக ஒப்புக்கொள்ளும்? சாகப்போகிற எந்த மனுஷன் அப்படிப்பட்ட குடிவெறியன் தன்னைக் கழுவேற்றிக் கொல்லுகிறவனாயிருக்க விரும்புவான்? “அவன் குடிவெறியன்!” நற்கீர்த்தியே தங்களுக்குரிய முதலாகக் கொள்ளவேண்டிய சிறந்த வாலிபருக்கு முன்பாக நின்று, முகஸ்துதியாய் நான் பேசுகிறதில்லை. இப்போதும் வாலிபனே, உன் சொந்த வலது கை பிரயாசத்தினால் உன் ஆஸ்தியைச் சம்பாதிக்க நீ தேவனுக்கடங்கினவனாயிருக்கிறாய். உன் நற்கீர்த்தியே உனக்குக் கையிருப்பாயிருப்பதினால், சாராயக்கடைக்குப் போய் வந்து கொண்டாவது, அல்லது உன் சுவாசத்தின் துர்வாசனையினாலாவது, அல்லது உன் கண்ணின் திருதிருத்த பார்வையினாலாவது, அல்லது உன் கன்னங்களில் இயற்கையல்லாத முகச்சிவப்பினாலாவது உன் நல்ல பேருக்கு சந்தேகத்தை உண்டாக்காதிரு. உன் நற்கீர்த்தியை நீ இழந்துவிட்டால் உன் ஆஸ்தியையும் இழந்துவிடுவாய்.

### ஆத்ம சம்மானத்தை இழந்துவிடுதல்.

குடிவெறியன் தன் சுய மரியாதையை இழந்து போவதினாலும் வாதைக்குள்ளாகி துன்பத்தையனுபவிக்கிறான். ஒருவனுடைய சுய மரியாதைக்குக் கேடுண்டானபின், அவனைப்பற்றிய மதிப்பு அதிகமாய்க் குறைந்து, அவன் ஒன்றுக்கும் உதவாமல் போய்விடுவான். ஒருவன் தன்னை ஒரு அடிமையென்று எப்போது எண்ணுகிறானோ, அப்போதே அவன் தனக்குண்டான சுய மரியாதையை இழந்துவிடுகிறான். அப்போது அவன் தான் செய்த்தகாத காரியங்களையெல்லாம் செய்வான்; பேசத்தகாத காரியங்களையும் பேசுவான். ஏனென்றால் அவன் தன் சுய மரியாதையை இழந்து போனவன்.

சங்கதி யென்னவென்றால், அப்படிப்பட்ட மனிதன் ஒருபோதும் தாமதிக்கமாட்டான், அல்லது இப்போதே தாமதித்து நின்றுவிடுவான். பெலிஸ்தியர் சிம்சோனுடைய கையையும் காலையும் கட்டி, அவன் குடுமியைச் சிரைத்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனை மிகவும் பயங்கரமான ஆலையில் மாவரைக்கும்படி செய்தார்கள். இவ்விதமாக குடியன் அடிமைத்தனத்தில் முக்கால் பாகம் முழுகிப்போனபின்னும் தான் அதை எந்த சமயத்தில் நிறுத்த விரும்புகிறானோ அந்தச் சமயத்தில்' அதைத் தான் நிறுத்திவிடக்கூடுமென்னும் விஷயத்தை முதலாவது உன் பனதில் படும்படி செய்ய ஆசிப்பான்.



ஆ! என் பாலிய சிநேகிதரே, குடிவெறியிலும் ஒருவன் அளவுக்குமிஞ்சிப் போய்விட்டால், அவனைக் குடிவெறியிலிருந்து நிறுத்துவது கூடாதகாரியம் என்று உங்களுக்குச்சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் சில வேளைகளில் ஒரு மனிதன் அதைப்பற்றி தக்க அறிவற்றவனாயிருப்பான். அதிகக் குடிவெறிக்கு இரையாய்ப்போன ஒருவன், ஒரு சீர்திருத்தக்காரனை நோக்கி: “குடிவெறியை நிறுத்துவது என்னால் கூடாத காரியம். நான் அதை நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். ஆனால் நாளை இராத்திரிவரைக்கும் நான் குடிக்கக்கூடாதென்றும், அப்படிக் குடித்தால் என் விரல்களெல்லாம் தறிக்கப்பட்டுப்போகும் என்றும் நீ எனக்குச் சொல்லுகிறதாயிருந்தாலுங்கூட, ‘கோடரியைக் கொண்டுவந்து என் விரல்களையெல்லாம் தறித்துப்போடு’ என்றுதான் நான் சொல்ல விரும்புவேன்” என்றான். எனக்கு மிகவும் பிரிய சிநேகிதன் ஒருவன் இருந்தான். அவன் மருமகன் அவனிடத்தில் வந்து, தன் வருத்தத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தபோது தான் ஒரு குடிவெறியனென்றும் குடிவெறியைத் தான் நிறுத்த தன்னால் கூடாமற் போயிற்றென்றும் அறிக்கையிட்டான். அப்போது என் சிநேகிதன் அவனைப் பார்த்து, “நீ குடிவெறியை நிறுத்தவேண்டும்” என்று சொன்னான். அதற்கு அவன், “குடிவெறியை நிறுத்துவது என்னால் கூடாதகாரியம். பீரங்கியில் வெடி மருந்தைச் செலுத்தி நிறுத்தி வைத்து, அந்த பீரங்கியின் வாயில் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் திராட்சரசத்தை வார்த்து வைத்து, நான் அதற்கு சமீபமாய்ப் போனால் நீ என்னை சுடுவாய் என்று எனக்குத் தெரிந்தாலுங்கூட அந்தக் கண்ணாடிப் பாத்திரத்திலுள்ள திராட்சரசத்தை குடிக்கவே முயலுவேன். அது எனக்கு அவசியம் தேவை. இந்த வழக்கத்தை விட்டுவிடுவது என்னால் கூடாதகாரியம். நானும் அதை விட்டு விலகேன்” என்றான். ஆ! ஒருவன் விழிப்புள்ளவனாய் தான் ஒரு அடிமையென்று உணருவது பயங்கரமான காரியம். “குடிவெறியை மூன்று மாசங்களுக்கு முன்னே நான் நிறுத்தியிருந்திருக்கலாம், ஆனால் அதை இப்பொழுது நிறுத்துவது என்னால் கூடாதகாரியம். நான் செத்த பிணமாய்விட்டேன், நான் அடக்கம் பண்ணப்படாத ஒரு நடைப்பிணம். நான் முன் ஒரு காலத்தில் இருந்தவனுடைய தோற்றமாய்மாத்திரமிருக்கிறேன். மேலும் என் ஆத்துமா நான் அடையுண்டு இருக்கிற கூட்டின் இந்தப் பக்கத்திலுள்ள கம்பிகளிலும் மறுபக்கத்திலுள்ள கம்பிகளிலும், ரத்தம் பீறுமட்டும் என்னை மோதி அடிக்கிறது. ஆயினும் கூண்டைவிட்டு வெளியே வருவது என்னால் கூடாதிருக்கிறது. யாதொரு பரிகாரமுமில்லாமல் மாண்டுபோனேன்!” என்று அவன் தனக்குள்ளே சொல்லிக்கொள்ளுகிறதைக் கேட்கிறேன். மறுபடியும்,

### பிறருக்குப் பிரயோஜனமுள்ளவனாயிருக்கும் சிலாக்கியத்தை இழந்துவிடுவதினால்

குடிவெறியன் சஞ்சலத்தை அனுபவிக்கிறான். குடிவெறியின் பள்ளத்தாக்கில் விழுந்திருக்கிற மனிதரில் சிலர், ஒரு காலத்தில் கோவில்களில் முதல் ஆசனங்களில் வீற்றிருந்ததும் சீர்திருத்த சங்கங்களில் முதல் ஆசனங்களில் வீற்றிருந்ததும் உனக்குத் தெரியுமா? அவர்கள் ஒரு காலத்தில் குடும்ப ஜெபத்தில் முழங்கால் படியிட்டதும், பரிசுத்த நற்கருணை பரிமாறும் நாட்களில் நற்கருணைப் பாத்திரத்தைக் கையில் சுமந்துகொண்டு போனதும் உனக்குத் தெரியுமா? அவர்கள் ஒரு காலத்தில் பிரசங்கப் பீடத்திலிருந்து தேவ குமாரனுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினது உனக்குத் தெரியுமா? மேலும், தனது

### தேக சவுக்கியம் கெடுவதினாலும் கூட

குடிவெறியன் சஞ்சலத்தையடைகிறான். டாக்டர் சிவெல் தேசமெங்கும் சுற்றிப் போய் குடிவெறி மனிதனுடைய வயிற்றில் விளைவிக்கும் கெடுதிகளை திரளான ஜனங்களுக்கு ரூபகாரப்படுத்தி

அவர்களை நடுங்கச்செய்த விஷயம் பூர்வீகத்திலுள்ள ஜனங்களுடைய ஞாபகத்திற்கு வரக்கூடும். வியாதி பற்பல படிகளாய் அதிகரித்து வருகிற விதத்தைக் காட்டுகிற எட்டு அல்லது பத்துப் படங்களை அவர் ஜனங்களுக்குக் காண்பித்ததாகக் கேள்விப்படுகிறேன். மேலும் ஆயிரக்கணக்கான ஜனங்களின் வயிற்றுப்புண்ணை அவர் விளக்கிக் காண்பித்த படத்தைப் பார்க்க மனமில்லாதவர்களாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு சகலவிதமான லாகிரி வஸ்துக்களையும் ஒருபோதும் தொடுகிறதில்லையென்று பலர் ஆணையிட்டதாகவும் கேள்விப்படுகிறேன். குடிவெறியனுக்கு உண்டாகும் சஞ்சலம் இன்னதென்று தேவனுக்கு மாத்திரம் தெரியும். மதுபானம் ஒவ்வொரு நரம்பிலும் வரிசையாய் நோவை உண்டாக்கி, ஒவ்வொரு தசையிலும் சென்று, ஒவ்வொரு எலும்பையும் துளைத்து, ஒவ்வொரு விஷத்தையும் உண்டாக்கி, ஒவ்வொரு வாதையையும் விளைவிக்கிறது. நடுங்குகிற அவனுடைய அவயவங்களிலெல்லாம் எத்தனை பூச்சிகள் நகருகின்றன. நடுராத்திரியில் அவனுடைய தலையணைப் பக்கத்தில் எத்தனை தோற்றங்கள் நிற்கின்றன! புலம்பலின் சத்தங்கள் எவ்வளவாய் ஆகாயத்தை ஊடுருவித் தொனிக்கின்றன! சித்திரவதைச் சூத்திரத்தைப் பற்றிய சம்பாஷணையும், உடன்கட்டை ஏறுவதைப் பற்றிய சம்பாஷணையும், ஜெகநாதத்தைப் பற்றிய சம்பாஷணையும் ஆக சகலவித சம்பாஷணைகளும் ஏககாலத்தில் அவனுடைய வாயிலிருந்து புறப்படுகின்றன. மேலும் குடிவெறியினால் ஒருவன்,

### வீட்டை இழந்து

சஞ்சலத்தையடைகிறான். இந்தத் துர்ப்பழக்கம் அவனை ஆட்கொண்டிருந்தால் அவன் தன் பெண்சாதி பிள்ளைகளை நேசிக்கவுமாட்டான், அவர்களைக்குறித்துக் கவலையெடுக்கவுமாட்டான். இந்தக் குடிவெறியாகிய துர்ப்பழக்கத்தினால் மிகவும் துஷ்டத்தனமான காரியங்களையும் செய்யத் தலைப்படுவான். அவசியம் நேரிடும் வேளையில் காரசாரமான சாராயத்தைக் கொள்ளுவதற்காகத் தன் பெண்சாதி பிள்ளைகளையெல்லாம் சதாகாலமும் அடிமைகளாக விற்றுவிடவும் செய்வான். குடிவெறியினால் முழுவதும் கெட்டழிந்துபோன வீடுகள் நாம் வசிக்கிற பட்டணங்களில் நூற்றுக்கணக்காகவும், ஆயிரமாயிரமாகவும் உண்டு. **அவர்கள் இவ்வாறாய்ப் பிரிந்துபோனதைக் குறித்துப்** பேசுகிறதில்லை. நான் பேசுகிறது **யோகம், சமாதி** இவைகளைக்குறித்துமல்ல. இம்மையிலும் மறுமையிலும் ஒருவனுக்கு அதிகக் கெடுதியை விளைவிக்கக்கூடியது குடிவெறியைப்போல வேறெதாவது உண்டா? ஒருவன் தன் மனைவியின் மனதை வருத்தப்படுத்துகிறவனையும் தன் பிள்ளைகளை கந்தைகளினால் உடுத்துகிறவனையும் இருக்கிறதாகத் தனக்குத் தெரியும்போது, அவன் சந்தோஷமுள்ளவனாயிருக்கக்கூடுமென்று நீ நம்புகிறாயா? சிறு பிள்ளைகள் வெறுங்காலுள்ளவர்களாயும், சுத்தமில்லாதவர்களாயும், தலைசீவாதவர்களாயும், தங்கள் நிறமங்கிய உடுப்பின் ஒவ்வொரு பீறலின் ஒட்டினாலும், பக்குவத்துக்கு முன் முதுமையாய்ப்போன தங்கள் முகத்தின் ஒவ்வொரு சுருக்கினாலும் குறையுள்ளவர்களென்று விளங்குவதேன்? குடிவெறியினால் தங்கள் பெற்றோர் தரித்திரத்திற்கும் அதற்கப்புறம் கல்லறைக்கும் ஆளாகாமலிருந்தால் உங்களைப்போலவே நன்றாய் உடுத்தி சென்ற ஞாயிற்றுக்கிழமை தேவனுடைய வீட்டில் வந்திருக்கக் கூடியவர்களான சிறுபிள்ளைகள் இன்றைக்குங்கூடத் தெருக்களில் உண்டு. ஓ! றம் என்னும் ஓர்வகைச் சாராயமே! றம் என்னும் ஓர்வகைச் சாராயமே! நீயே வீடுகளைக் கொள்ளையடிக்கிறாய்.

ஓ! பிறருக்கு பிரயோசனமுள்ளவனாயிருக்கும் திறமையை இழந்துபோன மனிதனுடைய உணர்ச்சி எத்தன்மையுள்ளதாயிருக்கவேண்டும்? அந்த மனிதன்மேல் சினங்கொள்ளாதே. அவனிடத்தில் உன் பொறுமையைக் காண்பிக்க மறவாதே. அவன் வித்தியாசமான காரியங்களைப் பேசினாலும், குடும்பத்தில் எளிதில் கோபப்படுகிறவனாயிருந்தாலும் அதைக் குறித்து ஆச்சரியப்படாதே. பிரனீஸ் பர்வதமும், ஆண்டிஸ் பர்வதமும், ஆல்ப்ஸ் பர்வதமும், இமாலய பர்வதமும், இவையெல்லாம் அவன் தலைமேலிருக்கின்றன. மேலும், குடிவெறியன்



### தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்துவதினால்

சஞ்சலத்துக்கு ஆளாகிறான் என்று உங்களுக்கு எடுத்துரைக்கையில் அவ்விஷயம் ஆழ்ந்த கருத்துள்ளதாயிருக்கிறது. நமது பாவங்கள் மன்னிக்கப்படாமல் நாம் மறுமைக்குள் பிரவேசித்தால், இம்மையில் நம்மை ஆட்கொண்டிருந்த ஆசாபாசங்கள் மறுமையில் நம்மை உபத்திரவப்படுத்துமென்று சத்தியவேதம் சொல்லுகிறது. குடிவெறியன் தான் இறந்துபோன உலகத்தில் விழித்து எழும்பும்போது அடங்காத தாகம் அவனைப் பற்றுமென்று நினைக்கிறேன். இந்த உலகத்தில் காரசாரமான சாராயம் அவனுக்குக் கிடைக்கக்கூடும். அவன் இந்த உலகத்தில் எவ்வளவு ஏழையாயிருந்தாலும் அவனுடைய தாகத்தை கொஞ்சநேரம் தணிக்கக்கூடிய சாராயத்தை வாங்கும்படி ஐந்து செம்புக்காசுகளை இரந்து கேட்கக்கூடும், அல்லது திருடக்கூடும். ஆனால் நித்தியத்திலோ றம் என்னும் சாராயம் அவனுக்கு எங்கிருந்து வரும்? ஐசுவரியவான் ஒரு சொட்டுத் தண்ணீருக்காகக் கெஞ்சினான், ஆனால் அது அவனுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. குடிவெறியனுக்கு அவசியமாயிருக்கிற சாராயம் எங்கிருந்து கிடைக்கும்?

ஆ! என் சிநேகிதரே, மறு உலகத்தில் குடிவெறியனுக்கு உண்டாகும் துக்கம் தேவன் அல்லது பரிசுத்தம், அல்லது ஒளி, இல்லாமையினால் உண்டாகாது. அந்தத் துக்கம் றம் என்னும் சாராயம் இல்லாமையினாலேயே உண்டாகும். "மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது நீ அதைப் பாராதே. அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும்."

---

## கிறிஸ்து மார்க்க மூலசத்தியங்கள்.

---

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான். 3 : 16.

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது. 1 தீமோ, 2 : 5.

எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. லூக். 24 : 46, 47.

---

## இயேசுகிறிஸ்து தம்மைக் குறித்துக் கொடுத்த பத்து சாட்சிகள்.

---

1. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். யோவா. 10 : 30.
2. நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். யோவான் 8 : 12.
3. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். யோவான் 11 : 25.
4. ஜீவ அப்பம் நானே. யோவா. 6: 48.
5. நான் தேவனுடைய குமாரன். யோவா. 10. 36.

6. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். யோவான் 14 : 6.

7. இழந்துபோனதைத் தேடவும் ரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார். லூக்கா 19 : 10.

8. பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரமுண்டு. மத். 9 : 6.

9. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மத். 28 : 18.

10. மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் காண்பீர்கள். மத். 26 : 64.

---

## இயேசுகிறிஸ்துவின் பத்து வாக்குத்தத்தங்கள்.

---

1. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மத். 6 : 14.

2. ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். யோவான் 14 : 2.

3. நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். யோவான் 14 : 3.

4. மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கைபண்ணுவார். லூக். 12 : 8.

5. என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். யோவான் 14 : 14.

6. நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். யோவான் 14 : 16.

7. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். மத். 11 : 28.

8. ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார். லூக். 12 : 26.

9. இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன். மத். 18 : 20.

10. என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான். மத். 19 : 29.

---

## இயேசுகிறிஸ்து விதித்த பத்து பிரமாணங்கள.

---

1. மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது. மத். 4 : 17.

2. ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டானென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன். யோவா. 3 : 3.

3. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். மத். 6 : 33.

4. நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். மத். 26 : 41.

5. நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. யோவா. 15 : 12.



6. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். மத். 5 : 44.

7. நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். மத். 7 : 1.

8. ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தைமாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். மத். 10 : 28.

9. உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக. லூக். 4 : 8.

10. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். மத். 28 : 19.

---

## பத்து கற்பனைகள்.

---

1. உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

2. ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.

3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

4. ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.

5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே, உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

6. கொலை செய்யாதிருப்பாயாக.

7. விபசாரம் செய்யாதிருப்பாயாக.

8. களவு செய்யாதிருப்பாயாக.

9. பிறனுக்கு விரோதமாய்ப் பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக.

10. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

---

## பாவத்தையும் ரட்சிப்பையுங் குறித்த பத்து சத்திய வேத போதனைகள்.

---

1. அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். மத். 1 : 21.

2. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவா. 1 : 9.

3. பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன். ரோம. 6 : 23.

4. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசா. 53 : 5.

5. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம்பெறுவான். நீதி. 28 : 13.

6. பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. 1 தீமோ. 1 : 15.

7. அவராலேயன்றி வேறொருவராலும் ரட்சிப்பு இல்லை; நாம் ரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப். 4 : 12.

8. நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். அப். 2 : 38.

9. அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். 1 யோவா. 1 : 7.

10 சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. 1 தெச. 5 : 23.

## தங்கவிதி.

ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம். மத். 7 : 12.

## கர்த்தருடைய ஜெபம்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை ரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.

## அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணம்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன். அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன், ஆமென்.

## ஆசீர்வாதம்.

அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். பிலி. 4 : 7.



## INTERNATIONAL SUNDAY SCHOOL LESSON-PICTURES FOR AUGUST, 1911.
## ஓய்வுநாள் பள்ளிக்கூட பாடங்களுக்கடுத்த படங்கள்.– ஆகஸ்டு மீ.

August 6. JEREMIAH TRIED AND ACQUITTED. Jeremiah 26 : 1-24.



ஆகஸ்டு 6. எரேமியா சோதிக்கப்பட்டு விடுதலையடைந்தது. எரே 26: 1-24.

August 13. JEHOIAKIM BURNS THE PROPHET'S BOOK. Jeremiah 36 : 1-32.



ஆகஸ்டு 13. யோயாக்கிம் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை சுட்டெரித்தது. எரே. 36 : 1-32.

JEREMIAH CAST INTO PRISON. Jeremiah 37 : 1-21.



எரேமியா சிறைச்சாலையில் போடப்பட்டது. எரே. 37 : 1-21

JUDAH CARRIED CAPTIVE TO BABYLON. Jeremiah 39 : 9-18.



யூதா பாபிலோனுக்கு சிறையாக கொண்டுபோகப்பட்டது. எரே. 39: 9-18.

7


# மாதர் மித்திரி.

புக். ௨௫. ௧௯௧௧ ௵ - செப்டெம்பர் ௴. இல. ௩.


## PREACHING THE GOSPEL.

இராகம், அடாணா. தரு திரிபுடைதாளம்.

### பல்லவி.

சுவிசேடம் கூறுவோம், வாரீர்,—கன
தேசிகரே, உப தேசிகரே,—நாம்.

### அநுபல்லவி.

திடமாயிப் புடவிலே திரு
வசனத்தையே விதைசெயவே நாம்— சுவி

### சரணங்கள்.

1. ஏசுகிறிஸ்தின் நாமத்தைச் சகல பேர்க்கும்
எடுத்துரைப்போம் போதமாய்;
தேசமெங்கும் சுற்றி நேசமாக வெற்றி
தேசத்தில் அஞ்ஞான மகற்றிட,
நேச கிறிஸ்தேசுவைப் போற்றிடச்— சுவி

2. காணாத ஆட்டையும் பார்ப்போம்; கண்டால் அதையும்
கர்த்தன் மந்தையினில் சேர்ப்போம்;
காணாப் அலையும் அஞ்ஞான ஜாதியைச்
சந்தித் தவருட னுறவாடியே,
முத்திப் பவமற வதைத் தேடியே— சுவி

3. பூமி மீதெங்கு மெட்டுவோம்; சுவிசேடத்தின்
புனித வலையைக் கட்டுவோம்;
காமசமின்றி வந்த சகலரைச் சீடராக்கித்
தருணம் இது ருணப்பட ஏவி,
தரை மீதினில் யாவரும் மேவிச்— சுவி

## CHARITY.
## தர்மம் செய்தல்.

எகிப்தியர் சித்திரப்படப் பாஷைகளால் பற்பல நீதி விஷயங்களை விஸ்தரித்துப் போதிக்கிறதுண்டு. அப்படியே தர்மம் செய்வதைக் குறித்து அவர்கள் காண்பிக்கும் படங்களிலொன்றில் ஒரு குழந்தையானது நிர்வாணமாக தன் கையிலே இருதயத்தை வைத்துக்கொண்டு சிறகில்லாத ஒரு தேனீக்கு தேனை ஊட்டுவதாக காண்பித்திருக்கிறது. இதனால் ஐந்து விஷயங்களை அறிந்துகொள்ளலாம். அவையாவன :— (1) நாபாலைப்போல் கோபமும் துராகிருதமுமான எண்ணத்தோடும் அல்ல. மோசேயைப்போல் குழந்தைக்குரிய தாழ்மையும் சாந்தமும் உள்ளவர்களாக தர்மம் செய்யவேண்டுமென்பது. (2) மனுஷர் காணும்படியாக புகழ்ச்சியை விரும்பி தர்மம் செய்யாமல் பரோபகாரசிந்தையுடன் செய்யவேண்டுமென்பதை நிர்வாண ஸ்திதி குறிப்பிக்கிறது. (3) இருதயத்தை கையில் வைத்துக்கொண்ட அடையாளத்தினால் தர்மம் செய்பவன் உற்சாகமான மனதோடு இருதயமும் கரமும் களங்கமின்றி ஓர் எண்ணமாய் மனப்பூர்வத்துடன் தர்மம் செய்யவேண்டுமென்று போதிக்கிறது. (4) தேனீக்கு தேன் ஊட்டுவது பெண் ஈயைப்போன்ற வேலை செய்யா சோம்பேறிகளை நீக்கி வேலை செய்ய இஷ்டமுள்ள ஏழைகளுக்கு தர்மம் செய்யவேண்டுமென்பது. (5) கடைசியாக செட்டையில்லாத தேனீயைப்போல் திராணியிருந்தால் தேன் சம்பாதிக்கப் பிரியப்பட்டும் சிறகில்லாதபடியால் பெலனும் சுகமும் வேலை செய்யக்கூடிய ஏது காரணங்களும் இல்லாமல் தரித்திரப்பட்டிருப்பவர்களைக் காண்பிக்கிறது. இவ்விதமாக பாத்திராபாத்திரம் அறிந்து தங்களால் இயன்ற உதவியை ஏற்ற சமயத்தில் கிரமமாகக் கொடுக்கவேண்டுமென்று இந்தப்படத்தினால் போதித்தார்கள்.

பிளேட்டோ என்ற பெரிய சாஸ்திரி ஆராதூரியாய் ஜீவனம் செய்த ஒரு ஏழைக்கு தாராளமாய் தர்மம் கொடுத்தபோது அவருடைய சிநேகிதர்கள் எல்லோரும் பெரிய பக்தனாகிய பிளேட்டோ சாஸ்திரியார் உதவாத இவனுக்கு இப்படியும் இரங்குவாரா என்று அதிசயித்தபொழுது அவர் மறுமொழியாக "நான் அவனுடைய துன்மார்க்கத்துக்காக அவனுக்கு உதவிசெய்யாமல் என்போலுள்ள தத்துவமுள்ள மனுஷனுக்கே இரக்கம் காண்பித்தேன்" என்று சொன்னார். அவர் கொடுத்த மாறுத்தரம் செம்மையும் நியாயமுமானது. ஏனென்றால் நம்முடைய ஆதிப்பெற்றோரைக் கவனித்து அவர்களுடைய நடக்கையையும் உற்றுநோக்குவோமானால் நாம் எல்லா மனிதர்களுக்கும் நன்மை செய்யக் கடன்பட்டவர்களாயிருக்கிறோம் என்று கண்டுகொள்வோம். "கிறிஸ்துஇயேசுவுக்குள் யூதனென்றும் கிரேக்கனென்றும், அடிமையென்றும் சுவாதீனனென்றும், ஆணென்றும் பெண்ணென்றும் பேதமில்லை" யென்று சத்தியவேதம் சொல்லுகிறது.

மகா அலெக்சாந்தர் என்னும் இராஜா மக்கதோனியாவை விட்டு யுத்தம் செய்யும் நோக்கமாய் புறப்பட்டபோது தனக்குண்டாயிருந்த ஆஸ்தியையெல்லாம் தன் சேனாதிபதிகளுக்கும் சிநேகிதர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தான். அவன் தனக்காக மீத்துவைக்காதது ஆராதூரித்தனமென்று அவன் சிநேகிதர்களில் ஒருவன் அவனைக் கடிந்துகொண்டபோது அவன் மாறுத்தரமாக "நான் எனக்காக



அதிகமாய் மீத்துவைக்கிறேன், அதாவது பூலோக இராஜாங்க முழுவதையும் பெற்றுக்கொள்வேனென்கிற நம்பிக்கைதான். இந்த சேனாதிபதிகள், பிரபுக்கள் இவர்களின் வீரத்தினாலும் உதவியினாலும் அதைப் பெற்றுக்கொள்வேன்" என்றான். அப்படியே ஏழைக்கு உதாரத்துவமாய் தர்மம் செய்பவன் வீண் சிலவாளியாகக் காணப்படலாம், ஆனால் அவன் பிரதிபலனில் நம்பிக்கை வைத்து செய்வதால் அவனைப் புத்திசாலியான சிக்கனக்காரனென்று கொள்ளவேண்டியது. அலெக்சாந்தரைப்போல நிச்சயமற்ற யுத்த வெற்றியில் அவன் நம்பிக்கை வையாமல் தவறாத தேவ வசன போதனையில் அவன் நம்பிக்கை கொண்டிருக்கிறான். அப்படியே வேதவாக்கியமும் "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான், அவன் கொடுத்ததை அவர் திரும்பக்கொடுப்பார்" என்று சொல்லுகிறது.

---

## WHERE IS LOVE OR OLD AGE AND BOYHOOD CONSIDERED?
## அன்புக்கு உறைவிடம் எங்கே? அல்லது குழந்தைப்பருவத்திற்கும் வயோதிபத்திற்குமுள்ள பேதம்.

முதிர் வயதுள்ள ஒருவனிருந்தான். ஒருகாலத்தில் புஜபலபராக்கிரமமுமுள்ளவனாயிருந்த அவன் தேகத்தில் இப்பொழுது வியாதி குடியேறத் துவக்கிற்று. முன் தனக்கிருந்த ஆஸ்திகளும் செல்வங்களும் நித்தியம் என்னும் திராசில் வைத்து நிறுத்துப் பார்த்தபொழுது அநேகர் அனுபவசித்தமாய் அறிந்திருக்கிறபடி இறகிலும் இலேசாக காணப்பட்டது. இந்த அறிவு தனக்குண்டாகவே சகல நம்பிக்கையும் அற்று நிர்ப்பந்தத்தில் ஆழ்ந்தினான். இப்படியிருக்கிற காலத்தில் உத்தம இருதயமுள்ள தேவ ஊழியன் ஒருவர் ஐக்கியமாகாணத்தில் கடைகோடியிலிருந்த ஒரு எளிய வீட்டிற்குள் பிரவேசித்து அவனைப் பார்த்தார். அந்த பக்தன் பற்பல சபைகளையும் குறித்து அவனோடு பேசத் துவக்கினபோது அவன் சட்டென்று மறுமொழியாக "உலகத்திலுள்ள சகல சபைகளும் கூடினாலும் எனக்கு அவைகளால் யாதொரு பயனும் உண்டாகாது. அவைகளுக்குள்ளிருக்கும் முதல்தர சபையிலும் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட கேடுகெட்ட பாவிகளை சேர்ந்திருக்கிறார்கள். அவர்களில் 'ஒருவனாவது தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும் அவனிமித்தம் மீட்கும் பொருளைத் தேவனுக்குக் கொடுக்கவும் கூடாதே'" என்று சொன்னான். (சங். 49 : 7).

அந்த தேவபக்தன் அவனைச் சந்திக்கப் போனபோதெல்லாம் தேவ வசனத்தை பற்பல பாகங்களிலும் அவனுக்கு வாசித்துக் காண்பித்து இயேசுகிறிஸ்து ஒன்றான இரட்சகராயிருப்பதுமாத்திரமல்ல சுவிசேஷத்தில் இலவசமாக நமக்கு அளிக்கப்பட்டிருக்கிற அவரைப் பூரணமாக விசுவாசிக்கிற அந்த நிமிஷத்திலேயே இரட்சிப்பு நமக்கு நிச்சயமாய்க் கிடைக்கிறது என்றும் ரூபிகரித்தார். (அப். 4 : 12 ; யோவா. 5 : 24; 1 யோ. 5 : 13).

பரிசுத்த ஆவியின் உதவியால் இந்த சத்தியமானது அவனுடைய இருதயத்தில் உதித்தபோதிலும் இவ்வளவு பெரிதான இரட்சிப்பு, இவ்வளவு இல

வசமாகக் கிடைக்கும் என்று உடனே தானே விசுவாசிப்பது அவனுக்கு அசாத்தியமாய்க் காணப்பட்டது. அவன் இடையிடையே "நான் அறுபத்தேழு வயதுள்ளவனாயிருக்கிறேன். என் ஜீவகாலமெல்லாம் பாவத்திலே கழித்த என்னை நான் ஒன்றும் செய்யாமலே இருக்க தேவன் என்னை இரட்சிப்பது கூடியகாரியமாயிருக்குமோ?" என்று சொல்லி அங்கலாய்ப்பான். மேலும் அவன் "நான் கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன், ஆகிலும் என் அன்பு எவ்வளவு அற்பமானது. என்னைக்குறித்தே நான் எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிறபடியால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைக்கும் தேவ சமாதானத்தை நான் அனுபவிக்கும் பாக்கியம் எனக்கு இல்லாமற்போகிறதே" என்று பிரலாபிப்பான்.

ஒரு நாள் வெகுநேரம் சம்பாஷணை செய்தபின் போகும்படியாக விடைபெற்றுக்கொள்ளும்பொழுது அந்த பக்தன்: "நான் உம்மைவிட்டுப் பிரிந்து தேவனுக்குச் சித்தமானால் என் வீடு போய்ச் சேர்வேன். அங்கு சென்றவுடன் என் வீட்டிலிருக்கும் ஒரு குழந்தையை முதலாவது கூப்பிடுவேன் என்று நினைக்கிறேன். அதை என் மடியில் தூக்கிவைத்துக்கொண்டு அதின் இனிமையான முகத்தைப்பார்த்து, அதன் மழலைச் சொற்களைக் கவனமாய்க் கேட்டு நான் சோர்ந்திருந்தபோதிலும் அதின் முகப்பிரகாசத்தால் ஆறுதலடைவேன். ஏனென்றால் சொல்லமுடியா பாசத்தோடு அதின்மேல் அன்பாயிருக்கிறேன். ஆனால் அது என்னிடத்தில் அன்புகூருகிறதில்லை. சொல்லப்போனால், அது எந்நேருக்குக் காண்பிக்கும் அன்பு மிகவும் சொற்பம். அடங்காத துக்கபாரத்தால் என் மனம் வெடித்துப் போனபோதிலும் அந்தக் குழந்தையின் தூக்கத்தை அது சற்றாகிலும் கலைக்கமாட்டாது. சகிக்கமுடியாத வியாதியால் என் தேகம் வாதைப்பட்டாலும் அந்தக் குழந்தை தான் ஆடும் பொம்மை யாட்டத்தைச் சற்றாகிலும் நிறுத்தமாட்டாது. நான் இறந்துபோவேனானால் என் வெளுறின முகத்தையும், மூடின கண்களையும் பார்த்து அது வியப்படையும். என் சிநேகிதர் வந்து என் பிணத்தைத் தூக்கிக்கொண்டு மயானஸ்தலத்துக்குப்போனால் அது கைகொட்டிச் சிரித்து இரண்டு மூன்று நாட்களுக்குள் தன் தகப்பனை மறந்துவிடும். அது மாத்திரம் அல்ல, அந்தக் குழந்தையால் எனக்கு ஒரு காசு லாபமும் இல்லாதிருந்தபோதிலும், அது பிறந்த நாள்முதல் எனக்கு ஓயாத செலவே நேரிட்டுக் கொண்டிருந்தது. நான் உலக பிரகாரமாக ஐசுவரியவானல்லாதிருந்தபோதிலும், உலகம் முழுதிலும் இருக்கிற திரவியமெல்லாம் சேர்ந்தாலும் என் குழந்தையை வாங்கிக்கொள்ள முடியாது. இது எப்படி? அது என்னை நேசிக்கிறதா? நான் அதை நேசிக்கிறேனா? அது என்னில் அன்புகூருமட்டும் நான் அதில் அன்புகூராமலிருக்கிறேனா? என் அன்புக்கு பாத்திரமான எதையாவது அது செய்யுமட்டும் நான் அதினிடத்தில் அன்புகூராமல் காத்திருக்கிறேனா? அப்படியானால் அன்பிருக்கும் ஸ்தானம் எங்கே?" என்று கேட்டார். இந்தத் திருஷ்டாந்தமானது, அந்த மனிதனுடையத் தலையில் ஆணி அடித்ததுபோல் பட்டது. அவன் இதற்கு கருத்தாய் செவிகொடுத்து கடைசியாக தன் சுருங்கின முகத்தின் வழியாய் கண்ணீர் ஆறாய்ப் பெருகி ஓட "ஐயா எனக்கு இப்பொழுது விளங்குகிறது. மிகவும் தெளிவாய் போதப்படுகிறது. நான் சிந்திக்கவேண்டியது நான் தேவனில் எவ்வளவு அன்பு கூருகிறேன் என்பதல்ல, தேவன் என்னில் எவ்வளவு அன்பு கூருகிறார் என்பதே. இதற்கு முன் நான் அவரை ஒருபோதும் நேசியாதவண்ணம் இப்பொழுது அவரை நேசிக்கிறேன்" என்று உணர்த்தான். அந்த நிமிஷ முதல் அவனுடைய சமாதானம் ஆறுபோல் பெருகிற்று. சுயகிரியைகளையே நோக்கிக்கொண்டிருக்கிற தப்பிதத்தை ஒழித்து தேவனுடைய அன்பின் பெருமையை கவனிக்கிற விசுவாசியின் உள்ளத்தில் இவ்விதமாக பிரவாகித்து வரும் சமாதானமாகிய அமர்ந்து தெளிந்து ஓடும் சமாதானமாகிய ஆற்றின் வழியாய் பக்தனவன் மகிமை நிறைந்த பரத்துக்கு நேராய் பிரயாணம்பண்ணி கடைசியில் தேவனுடைய மடியில் போய்ச்சேர்வான்.



"கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் யாவரும் தேவனால் பிறந்தவர்கள். (யோவா. 1:13.) "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்" (1 யோவா. 5:1). இரட்சிப்பானது என்னுடைய அன்பை தேவன் ஏற்றுக்கொள்வதனால் வராமல் பாவம் நிறைந்த உலகத்துக்கு தேவன் அருளிய ஈவை நான் ஏற்றுக்கொள்வதினாலேயே வருகிறது. யோவா. 3: 16. பாவியாகிய உன்னையே நோக்கிக்கொண்டிருந்தால் சமாதானம் வரமாட்டாது. கல்வாரிமேட்டில் மரத்தின்மேல் கிறிஸ்து விளங்கப்பண்ணிய அன்பை விசுவாசத்துடன் நோக்கிப்பார். உன் அபாத்திர நிலைமையையும் பாவத்தன்மையையும் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக பிராணத்தியாகம் செய்து காண்பித்த அன்பின் பெருக்கையும் நீ அங்கே காணலாம். (ரோம. 5: 6). அப்போது அன்புக்கு உறைவிடம் எங்கே என்று கண்டுக்கொள்வாய்.

மீட்கப்பட்டோர் சேனையின் நித்திய பாடல் தேவனுடைய அன்பே. அந்த வல்லமையுள்ள அன்பு உனக்கு சொந்தமாக கொடுக்கப்பட்டிருக்க நீ உன்னுடைய கடந்த காலத்தின் அபாத்திர நிலைமையையே எண்ணிக்கொண்டிருந்தால் சாகாத புழுவும், அவியாத அக்கினியும் உனக்கு தீராத சஞ்சலத்தையே உண்டுபண்ணும்.

"நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" (மத். 18: 3).

---

LATE Mr. A. GNANAPRAGASAM.

## காலஞ்சென்ற ஞானப்பிரகாசம்.

**போந்த வுதாரனுக்குப் பொன்றுரும்பு சூரனுக்**
**சேர்ந்த மரணஞ் சிறு துரும்பாம்—ஆய்ந்த [குச்**
**அறிவோர்க்கு நாரி யருந்துரும்பாமில்லத்**
**துறவோர்க்கு வேந்தன் றுரும்பு.**

செல்வம், இல்லறவாழ்வு, ராஜாங்கம் மூன்றும் மனிதனுக்கு மகா அவசியம் வேண்டியதாயிருந்தபோதிலும், அவைகளை வெறுத்தும் சிலர் பிழைத்துவந்ததும் உண்டு. அவைகளுக்கு அஞ்சாமல் இருப்பதுபோல மரணத்துக்கு அஞ்சாமல் இருக்கமுடியுமா? அது கூடியதா?

ஔவையார் மனதில் அது அற்பமாகத்தான் தெரிகிறது. சத்தியவேதமும் அப்படியே சொல்லுகிறது ஏசா. 26: 19-21.

மரித்த பரிசுத்தவான்களைக்குறித்து:-

அவர்கள்

**ஒரு சத்திரத்திலே தங்கியிருக்கிறார்கள்.**
**போல**
**நஷ்டமடையா ஆவி விழித்துக் கெம்பீரிக்கக்**
**யோகம் காத்திருக்கிறார்கள்.**

| | |
|---|---|
| மண்ணில் புதைந்த புற்கரடுபோல | பனியிலுங் கூட மூளைத்துச் செழிப்பாய் வளரக்கூடியவர்களா யிருக்கிறார்கள். |
| ஒரு சிநேகிதனுடைய வீட்டில் | உள் அறைக்குள் ஒளித்துக் கொண்டிருக்கிறார்கள். |
| வெளிச்சு மாத்திரம் மறைவாய் | ஒளித்துக்கொள்கிறார்கள். |
| பயத்துக்கிடமில்லாமல் | சொந்தக் கதவு, சொந்த அறை. |

இந்தபாக்கியமான நிலைமையில் இருக்கிறவர்கள் மரணத்தைத் துரும்பாய் எண்ணுவார்களென்பது நியாயந்தானே. "இன்றைக்கு நீ என்னுடனே பரதீசிலிருப்பாய்" என்று சொன்னவர், பரதீசில் இருப்பிடங்காட்டி இருத்திவைக்கவும் வல்லவராயிருந்தார்.

சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு விடுதலைபெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள் எபி. 11 : 35. சுத்தவீரன் தான் கோரிய காரியம் சித்தியடையும்படி உயிர்போக நேரிட்டாலும் பின்வாங்காமல் நின்று ஜெயம் பெறுகிறவனே. உண்மையுள்ள கிறிஸ்தவன் உலகத்தாரால் வரும் நிந்தை, மாம்ச இச்சைக்கிடங்கொடாத மனநேர்மை, சாத்தானுடைய உபாயதந்திரங்களை அறிந்து தப்பிக்கொள்ளும் ஞானம் ஆகிய மூன்று குணங்களையும் உடையவனே. இம்மூன்றும் வேதவாசிப்பு தனித்தியானம் என்பவைகளை மங்காச் சுடர் விட்டெரியச்செய்யும் பரிசுத்தாவியால் கிடைக்கிறது.

வடதிருநெல்வேலியில் கீழச்செப்த்தலை யென்ற ஒரு கிராமம் உண்டு. இதில் சுமார் நூறு வருஷத்துக்கு முன்னமே கிறிஸ்துமார்க்கம் தலை காட்டினதாய்த் தெரிகிறது. தஞ்சாவூரில் துரைமார் வீட்டு வேலையிலமர்ந்த ஒரு ரோமானித்தன் வீட்டில் இவ்வூர் ஏழை யொருவன் ஒரு பஞ்சத்தில் ஒதுங்கினான். அவன் மனைவி பெற்ற பாலன் பாலுண்ணாதிருப்பதை யறிந்த வீட்டுக்காரி, "அப்பாலகனுக்குத் தன் நாயகன் பேரிட்டு, வேதப்படி பேரிட்டால் பாலுண்ணும்" என்றாள். அதைக் கேட்ட பெற்றோர் அந்த யோசனைப்படியே தங்கள் மகனை ஞானப்பிரகாசம் என்று கூப்பிட்டார்கள்.

ஞானப்பிரகாசத்துக்கு ஒரே மகன் இருந்தார், அவர் பேர் ஆபிரகாம். ஆபிரகாமுடைய இரண்டாவது குமாரனுக்கு ஞானப்பிரகாசம் என்ற பேர் வந்தது. அவருடைய சரித்திரத்தை பூராவாய் எழுத இடம் பெறாது. ஆயினும் அவர் தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்குள் விசேஷித்த லட்சணமுடையவர். நம்முடைய மெதடிஸ்ற்று மிஷனைச் சேர்ந்தவர்.

சிறுவத்தில் கொஞ்சம் இங்கிலிஷ் பாஷை கற்றுக்கொண்டார். தகப்பனுடைய உத்தரவுப்படி தன் சொந்த சொத்துக்களை விசாரணை செய்து குடும்பத்தை நடத்திவந்தார். இக்கிராமத்தில் கிறிஸ்துமார்க்கம் வந்து அநேக ஆண்டுகளாயிருந்தபோதிலும், யாதொரு மிஷன் ஆசாரியாவது நிலையாயிருந்து ஜனங்களுடைய நன்மைக்காக உழைத்திருப்பதில்லை. என்றாலும் ஆண்டவர் ஞானப்பிரகாசம் என்பவருக்கு நல்ல குணமேன்மையைக் கொடுத்திருந்தார்.

சகல ஜாதியாரையும்நேசித்துவந்தார். எல்லா மனுஷரும் விரும்பத்தக்க தயாளசிந்தையும், ஏழைகட்கு இரங்கும் குணமும் அவரிடத்தில் இருந்தது. தமது சொந்தத்தில் ஒரு கோவிலைக் கட்டி அதைப் பழுதுபார்த்து வந்தார். தமது தகப்பனுருடைய ஞாபகத்துக்காக ஒரு மடங் கட்டி பிரயாணிகள் போக வரத் தங்கும் வசதிகளேற்படுத்தினர்.



மெதடிஸ்ற்று மிஷனைத் தமது கிராமத்தில் நிலைவரப்படுத்தும்படி காகிதம் எழுதுவதிலும், சிநேகிதர் சம்பாதிப்பதிலும், பொருள் செலவிடுவதிலும் வெகு உற்சாகங் காட்டினார். கனம். இங்காம் ஐயரவர்களை வெகு மரியாதையாய் நடத்திவந்தார்கள்.

கடந்த மே மாதம் 15-ம் தேதி யன்று பராச்சேரி என்ற ஒரு கிராமத்துக்குப் போக நேரிட்டது. ஞானத்திரவியம் உபதேசியார் இறந்துபோனதையிட்டு கர்த்தரிடத்தில் மகா பக்தி வைராக்கியமுள்ள மரியம்மாள் என்பவர்களுக்கு ஆறுதல் சொல்லப் போயிருந்தார். அங்கே அன்றையதினம் இருபத்தொரு பேருக்கு விஷபேதி கண்டு சிலர் இறந்தும் சிலர் தப்பியும் கொண்டார்கள். இவர் அவர்களில் அநேகருக்கு மருந்து கொடுத்து வேண்டிய உதவிசெய்தார்.

மறுநாள் சாயங்காலம் இவருக்கே வியாதி கண்டது. ஜனங்கள் பயந்து கலக்கமடைவார்களென்று எண்ணி வெளியிடாது தானுகவே கஷ்டம் அனுபவித்தார். கடைசியில் முனியாண்டி என்ற ஒரு வைத்தியனுக்கும், அவ்வூர் அமெரிக்கன் மிஷன் அந்திரேயா உபதேசியாருக்கும் இது காரியம் தெரியவந்தது. அவர்கள் என்றமட்டும் சிகிச்சை செய்தும் பலன் இல்லாமல் போய்விட்டது.

தெளிந்த புத்தியோடும், அமர்ந்த யோசனையோடும் தான் பேசக்கூடியதை யெல்லாம் பேசிக்கொண்டார். "இயேசுவே இரட்சியும்" என்று குவித்த கரங்களோடே தமது ஜீவனை விட்டார். மரணத்தோடு போராடினவர் மரணத்துக்குத் தப்பவில்லை. ஆயினும் ஆண்டவர் அதை ஜெயமாகவே எண்ணி நடத்துவார். "சாவு எனக்கு ஆதாயம்."

---

"TEN TO ONE ON THE BIBLE."

## வேதாகமம் ஒன்றுக்கு பதின் மடங்கு மேன்மையுள்ளது.

---

"வேதாகமத்தைப் பற்றி வாதாடுவதில் பிரயோஜனமில்லை. அதைப்பற்றி தர்க்கிப்பதில் இரு கட்சியாரும் ஒருவர் அது முற்றும் கெட்டதென்றும், மற்றவர் அது முற்றும் நல்லதென்றும் நியாயத்தின்மேல் நியாயங்களை அடுக்கடுக்காய்ப் பேசி தர்க்கம் அதிகரிப்பதேயன்றி இருபதிகாமான முடிவு கட்டுவது கூடாதையாயிருக்கிறது. நான் பலகாலம் இதைப் பற்றி பிரயத்தனித்தும் கடைசியாய் அது அப்பிரயோஜனமான வேலையென்றெண்ணி அதை முற்றும் விட்டுவிட்டேன். வேதம் நல்லதோ கெட்டதோ என்று தீர்மானிக்கக் கூடாதவனுயிருக்கிறேன். இரு கட்சியாரும் சரிபொத்தே பேசுகிறார்கள். நான் சொல்லுகிறது உமக்கு விளங்குகிறதா" வென்று ஒருவன் சொன்னான்.

இப்படிப்பட்ட எண்ணத்துடன் வேதாகமத்தைத் தள்ளிவிட்டிருந்த அந்த மனுஷனை நோக்கி "சிநேகிதா, உனக்கு என்ன திருஷ்டாந்தங்கள் வேண்டும்? நான் வேதத்தை மதிப்பதுபோல் நீயும் மதிப்பதற்கு உனக்கு வேண்டிய நியாயதோரணைகள் எவை?" என்று நான் வினவ, அவன் பரிகாசமாக,

"ஒன்றுக்குப் பத்து வேண்டும்" என்றான்.

"ஒன்றுக்கு பத்தா! அவ்வளவு நீ கேட்கிறதற்கு காரணமென்ன" வென்று கேட்டேன்.

உடனே அவன் "என் காரணத்தைச் சொல்லுகிறேன். வாஸ்தவத்திலே அப்புஸ்தகம் நல்லதாயும், தேவன் அதற்கு ஆதாரமாயிருந்து அருளிச்செய்த புஸ்தகமாயுமிருந்தால், அந்த நூலுக்கு அவ்வளவு உயர்ந்த தாரிப்பு இருக்கவேண்டுமென்று நான் நம்புகிறேன். நீர் சொல்லுகிற பிரகாரம் என் ஜீவகாலமெல்லாம் அதை எனக்கு பிரமாணமும், வழிகாட்டியுமாக்கிக் கொள்வதற்கு அவ்வளவு அதிகமான நிச்சயம் எனக்கு வேண்டியது. ஒன்றுக்கு பதின்மடங்கு மேலானதாய் அது இராவிட்டால் மெய்யாகவே நான் அதை அங்கிகரிக்கமாட்டேன்" என்றான்.

"வேத புஸ்தகமானது ஒன்றுக்கு பதின் மடங்காய் சிரேஷ்டம் பொருந்தியதென்று உனக்கு ரூபிக்க என்னால் கூடுமா கூடாதா என்று பார்க்கிறேன். நல்லது, பத்து நல்ல மனிதரோடு ஒருவன் எப்பொழுதும் சகவாசமாயிருந்தால் அவனும் நல்லவன்தான் என்பதற்கு ஒன்றுக்கு பத்து சாக்ஷிகள் இருக்கிறதல்லவா?" என்று கேட்டேன்.

அதற்கு அவன் "மெய்தான், அது நிச்சயமான சத்தியம்" என்று தலையசைத்து சொன்னான்.

அப்பொழுது நான் "அந்த பிரமாணத்தின் பிரகாரம் ஒரு புஸ்தகத்தைக் குறித்தும் நாம் தீர்மானிக்கக்கூடாதா? திரளான நல்ல மனிதர் சகஜமாக அதை வாசிப்பார்களேயானால், அது நல்ல புஸ்தகமென்பதற்கு குறைந்தமட்டில் ஒன்றுக்கு பத்து சாட்சிகளில்லையா? வேதத்தை வாசிக்கிறவர்களெல்லாம் தான் இப்பொழுது நல்லவர்களென்று சாதிக்கவில்லை. அவர்கள் நல்லவர்களோ அல்லவோ என்று நீயே தீர்மானிக்கும்படி கேட்கிறேன். மேலும் ஒரு புஸ்தகத்தை வாசிப்பவர்களைக்கொண்டு அப்புஸ்தகம் எத்தன்மையானதாயிருக்கும் என்று தீர்மானிப்பதும் நியாயமாமே. நல்ல மனிதர் கெட்ட புஸ்தகங்களையும், கெட்டவர்கள் நல்ல நூல்களையும் உபேக்ஷிக்கிறார்களே. துன்மார்க்கர் ஒரு புஸ்தகத்தை விலக்கிவைப்பார்களேயானால் அது நல்ல புத்தகமாய்த்தானிருக்குமென்று நான் தீர்மானிப்பேன். வேதாகமத்தினுடைய விஷயத்திலும் இப்படித்தான் சம்பவிக்கிறது. துஷ்டர்கள் கொஞ்சமென்கிலும் அதைக் கையாடமாட்டார்கள். இந்த நியாய நிரூபணையின் பிரகாரம் பார்த்தாலும் வேதமானது ஒன்றுக்குப் பத்து நல்ல புத்தகமே."

"இது ஒரு முக்கியமான விஷயமாயிருப்பதால் நான் உன்னிடத்தில் கேட்க விரும்புகிறதென்னவென்றால், நீ எப்போதாவது திருடனுடைய வேதாகமம், முடிச்சுமாறியினுடைய சங்கீதபுஸ்தகம், குடிகாரனுடைய சுவிசேஷம் என்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறாயா? போனவருஷத்தில் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்ட குடியரில் அநேகர் அல்லது அவர்களில் பாதிபேராகிலும் தங்கள் சட்டை ஜேப்புகளிலே வேதாகமத்தை வைத்திருந்தார்களென்று யாராகிலும் உனக்குச் சொன்னால் நீ அதிக வியப்படைய மாட்டாயா? மெய்யாகவே வியப்படைவாய்."

"அதுமாத்திரமல்ல மனுஷர்களை எந்த இடத்தில் பார்க்கிறாயோ அந்த இடத்



தைக் கொண்டும் அவர்களுடைய குணலக்ஷணத்தை தீர்மானிப்பாயல்லவா? நீ ஒருவனை எப்பொழுதும் சாராயக் கடையில் பார்ப்பாயேயானால், வியாதியஸ்தரையும், மரணஸ்திதியிலிருப்பவரையும் எப்பொழுதும் போய் சந்தித்துவருகிற ஒருவனைப்போல நீ மதிப்பாயா? அல்லது நீ சாதாரணமாய் வேதாகமத்தை எங்கே பார்க்கிறாய்? ஒழுங்கீனமான வீடுகளிலா? அல்லது சூதாடும் ஸ்தலங்களிலா? அல்லது பயங்கரமான கொள்ளைக்காரர்கள் இருக்குமிடங்களில் உன் மகனைப் போகக்கூடாதென்று சாபத்தத்தோடு தடுப்பதுபோல அவன் போகக்கூடாதென்று நீ தடுக்க ஆசைப்படும் இடங்களிலா? இல்லை, இல்லை. உன் குமாரரும் குமாரத்திகளும் சுகபத்திரமாக போய் வரும்படி நீ எந்த இடங்களை தெரிந்துகொள்வாயோ அப்படிப்பட்ட இடங்களில்லவா வேதாகமம் நடமாடுகிறது?"

"மேலும் மனுஷருடைய சட்டைஜேப்புகளை சோதித்து பார்ப்போமானால் அந்த உடைகளை தரித்திருப்பவர்களின் குணகுணங்களை திட்டமாய் அறிந்துகொள்ள ஏதுவாகும். ஒருவனுடைய ஜேப்பிலே கன்னக்கோலாவது, சாவிக்கொத்தாவது, சொருகு விளக்காவது இருக்குமேயானால் அவைகளை வைத்திருப்பவனுடைய குணம் எப்படிப்பட்டதென்று அறிந்துகொள்ளலாம். இன்னொருவனுடைய ஜேப்பிலே வேத புஸ்தகமும், ஒற்றைத்தாள்பிரதிக் கட்டுகளும் இருக்குமேயானால் முந்தினவனுக்கு இவன் எவ்வளவு வித்தியாசமான குணமுள்ளவனென்று அறிந்துகொள்ளலாம்."

"இன்னமும் ஒரு பொருளின் குணம் எப்படியிருக்குமென்று அதினால் விளையும் பயனைக்கொண்டு நாம் தீர்மானிக்கலாம். ஒரு வஸ்துவினால் உண்டாகும் பிரயோஜனம் என்னவென்று நீ சொல்வாயானால் அது நல்லதோ கெட்டதோ என்பதை நான் சொல்லக்கூடும். நீ இராக்காலத்தில் தனித்த சந்து வழியாக இருளிலே நடந்து போகும்பொழுது ஒரு மனிதன் உனக்கு எதிரிட்டு தன் கைத் துப்பாக்கியை உன் நெற்றிக்கு நேரே பிடித்துக்கொண்டு உன்னிடத்திலிருக்கும் பணத்தை ஒப்புவிக்கும்படி கேட்டால், அந்த துப்பாக்கி எப்படிப்பட்டதென்று நீ குறித்துக் கொள்வாயே. அப்படியே நீ அந்த காரிருளில் நடந்து வழி தெரியாமல் திகைக்கும்போது வேறொருவன் ஒரு கை விளக்கை உன் கையில் கொடுத்தால் அதை ஒரு நல் விஷயமாக உன் மனதில் கருதுவாயல்லவா? அத்தன்மையாகவே, வேதாகமத்தைக் குறித்தும் நீ நிதானிக்கலாமே. அது எதற்காக உபயோகிக்கப்படுகிறதென்று உனக்கு தெரியுமே. சன்மார்க்கத்தையும், பரிசுத்த ஜீவியத்தையும் உனக்கு சுட்டிக்காட்ட உன் குழந்தைப் பருவத்தில் அது எவ்விதமாக கற்பிக்கப்பட்டதென்றும் நீ அறிவாயே. அதின் போதனைகளை நீ கைக்கொண்டு நடந்தால் நீ இப்பொழுது இருப்பதிலும் அதிக உத்தமனாயிருப்பாய் என்பதும் உனக்கு தெரியுமே."

“மனுக்குலத்தோர் யாவரும் வேதாகமத்தை உத்தமமான பொருட்களுள் அதி உத்தமமானதென்று அங்கீகரிக்கிறார்கள். மற்ற புஸ்தகங்களெல்லாம் அவ்வளவு நல்லவைகளல்ல வென்றும், புஸ்தகங்களுக்கெல்லாம் மேலான புஸ்தகம் அது தானென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். அதை நாம் வியாதியஸ்தர்களிடத்திலும், மரணதருவாயிலிருப்பவர்களிடத்திலும் எடுத்து கூறி அறிவிக்கிறோம், வைத்திய சாலைகளுக்கும், ரத்தக் கறைப்பட்ட யுத்தக் களத்திற்கும் அதைக் கொண்டுபோய் தெரிவிக்கிறோம். அப்படிப்பட்ட இடங்களில் அதின் பிரயோஜனத்தை மறுத்துக் கூறுவோர் ஒருவருமில்லை, அது தேவனுடைய வசனமென்று எல்லாராலும் மிகவும் அருமையாய் ஏற்றுக்கொள்ளப் படுகிறது” என்றேன்.

---

**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500 க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100 க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு. ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100 க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 3 |
| தைரியசாலியான தலைமையன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| ரூசன் என்னும் சிறுமி 4 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயசித்தியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 3 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100 க்கு ... ... | 0 | 3 |
| செங்கல் சுமந்தவன் மோனுனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை பக்கம் 32 புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க பிரசங்கங்கள் பக். 16 புஸ். 100 க்கு... ... | 1 | 0 |




INTERNATIONAL SUNDAY SCHOOL LESSON-PICTURES FOR SEPTEMBER, 1911.

## ஓய்வுநாள் பள்ளிக்கூட பாடங்களுக்கடுத்த படங்கள்.—செப்டெம்பர்.

September 3. REVIEW.




செப்டெம்பர் 3. பழைய பாடப் பயிற்சி.

September 10. DANIEL AND HIS COMPANIONS. (Temp.) Daniel 1: 8-20.



செப்டெம்பர் 10. தானியேலும் அவன் தோழர்களும். (Temp.) தானி. 1: 8-20.

September 17. DANIEL'S COMPANIONS IN THE FIERY FURNACE. Daniel 3 : 1-30.



செப்டெம்பர் 17. அக்கினிச்சூளையில் தானியேலின் தோழர்கள். தானி. 3 : 1-30.

September 24. DANIEL IN THE LION'S DEN. Daniel 6 : 1-28.



செப்டெம்பர் 24. சிங்கத்தின் கெபியிலுள்ள தானியேல். தானி. 6 :1-28.

MADRAS. 1911

13

# மாதர் மித்திரி.

புத். உரு. ககூகக வரு - அக்டோபர் மீ. இல. ச

## RECONCILIATION BY CHRIST.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

**பல்லவி.**

எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கிக்கொள்வதற்
கிப்புவியிலே உதித்தார் ; அற்புதந்தானே.

**அநுபல்லவி.**

மெய்ப்பரம் புவியும் தந்த தற்பரன் அருநி பிதா
நற்புதல்வனான ஏசு நாத கிருபாகரனார்.— எப்படி

**சரணங்கள்.**

1. மட்டில்லாப் பொருள் அனைத்தும் திட்டமாகவே படைத்து
இட்டமாய் அநுக்கிரகித்த சிஷ்டிகன் தானே ;
கட்டளையிட்ட கற்பனை விட்டொரு சர்ப்பத்தின் வாயில்
பட்டு நரகத்துக்காளாய்க் கெட்டழிந்த பேர் என்றாலும்,— எப்படி

2. அச்சயன் மோசேயைக் கொண்டன் றெச்சரித் தெழுதித்தந்த
உச்சித கற்பனை கடந் திச்சையினாலே
துர்ச்சனப் பசாசைக் கூடி மிச்சமாய்ப் பாவங்கள் செய்து
நிச்சயம் கெட்டுப்போனார்கள் ; ரட்சிக்கக் கூடாதென்றாலும்,— எப்படி

3. தாக்கிய பாரபரன் உண்டாக்கிய அனந்த செல்வப்
பாக்கியங்கள் அனைத்தையும் போக்கடித்துமே
போக்கியம் தெய்வ புத்ர சிலாக்கியம எல்லாம் இழந்து
பேய்க்கடிமை ஆட்கள் கேட்டை நீக்குதற் கேலாதென்றாலும்,— எப்படி

## THE WASPS AND BEES

## குளவிகளும் தேனீக்களும்

நாட்டிலே சஞ்சரிக்கிற அநேகர் கோடைகாலத்தில் குளவிகளால் வாதனைப்படுகிறதுபோல உங்களில் சிலரும் சிலவேளை வாதிக்கப்பட்டிருக்கலாம். அவைகளைப் பிடிக்கும்படியாக பற்பல வகையான ருசிகரமான பதார்த்தங்களைக் கண்ணியாக வைத்து கொல்லப் பார்க்கிறார்கள். ஆனால், அப்படிக் கொல்லப்படுகிற ஒவ்வொரு குளவிக்கும் பதிலாக நூற்றுக் கணக்கானவைகள் புதிது புதிதாக உற்பத்தியாகி தங்கள் நீசத் தொழிலை நடப்பிக்கிறதாகக் காணப்படுகிறது.

ஒரு கடைக்காரன் குளவிகளுக்கு பயந்து தன் கடையை ஒருநாள் சாத்தி விட்டிருந்ததாகவும், மறுநாட் காலையில் கடையைத் திறந்து பார்த்தபொழுது, ஐந்து பவுண் விலை மதிப்புள்ள மிட்டாய் முதலிய தின்பண்டங்களை அவைகள் அரித்துத் தின்றுவிட்டதாகவும் நான் வாசித்தேன். இதை வாசிக்கும் வாலிபர் சிலர் "ஒருநாட் பொழுதிற்குமட்டும் நான் குளவியாய் இருக்கும்படியான சிலாக்கியம் எனக்குக் கிடைக்குமேயானால், இப்படிப்பட்ட ருசிகரமான பதார்த்தங்கள் அடங்கிய அரண்மனைகளுக்குள் புகுந்து வயறு புடைக்கத்தின்று சந்துஷ்டி கொள்வேனே" என்று அவாக்கொள்ளலாம். ஆனால் அடுத்த நாளிலே நீங்கள் வேறுவகையாக ஆசைகொள்வீர்களென்று நம்புகிறேன்.

பக்கிங்காம் ஷியர் என்ற மாகாணத்தில் கடைகோடியான ஒரு கிராமத்தில் நான் சிலநாள் தங்க நேரிட்டபொழுது, இந்த அழகான சிறு திருடரையும் அவைகள் நடப்பிக்கும் கிரியைகளையும் கவனிக்கும்படியாக சிறிதுகாலம் செலவுசெய்தேன். அவைகள் என்னைக் குறித்து எவ்வித அபிப்பிராயம் கொண்டனவென்று வெளியிட அவைகளில் அநேகம் இப்பொழுது உயிரோடிராதபடியால், அவைகளைக் குறித்து நான் கொண்ட அபிப்பிராயத்தை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

அவைகளுக்குப் புகழ்ச்சியாக ஒரு விஷயம் அவைகளைப் பற்றிச் சொல்லுவேன். அதாவது, பெருங் கும்பலான குளவிகள் என்னைச் சுற்றிலும் இரைந்து கொண்டு திரிந்தபோதிலும், அவைகள் என்னை மகா போக்கிரி என்று எண்ணிற்றோ, அல்லது மிகுந்த யோக்கியனென்று எண்ணிற்றோ, ஏது காரணத்தினாலோ, நான் உட்கார்ந்திருந்த இடத்திலாவது, நின்றுகொண்டிருந்த இடத்திலாவது, அவைகள் என்னை வந்து கொட்டினதே இல்லை. எங்கள் கூட்டத்திலிருந்தவர்களுக்குள் சமையற்காரியை மாத்திரம் அது ஒருதரம் கொட்டிற்று; ஏனென்றால் அவைகள் புசித்துக்கொண்டிருந்த மாமிசத்தை அவைகள் தின்று முடியுமுன் போய்ப் பறித்தாள். நான் கண்டமட்டில் நாம் அவைகளின் மத்தியில் சாதாரணமாக அமரிக்கையுடன் சஞ்சரித்து, நாம் அவைகளுக்குப் பயப்படுகிறோமென்கிற அடையாளம் ஒன்றும் காண்பியாமல் இருப்போமானால், ஈக்களைப்போலவே அவைகளும் நமக்கு யாதொரு தீமையையும் செய்யமாட்டாது. ஒரு பையன் மாத்திரம் "அது என் கைமேலேறி ஊர்ந்து திரியுமட்டும் நான் அதை சட்டை செய்யவில்லை, ஆனால், அது அசையாமல் ஓரிடத்தில் உட்கார்ந்தவுடன் என்னைக் கொட்டிவிட்டது" என்று சொன்னான். நான் கற்றுக்கொண்ட ஒரு பாடம் என்னவென்றால், அடிக்கடி நமக்கு வரும் துன்பங்கள் நாமாய் வருவித்துக்கொள்பவைகள்தான். குளவிகள் நமக்கு திகிலை உண்டுபண்ணும்பொழுது, நாம் திகிலடையாமல் மெதுவாய் அவைகளை எடுத்து யோசனையோடு விட்டுவிடுவோமேயானால் அவைகள் நமக்கு அவ்வளவு மோசகரமாயிராது என்பதே.

நாம் குளவிகளைப் பார்க்கிலும் தேனீக்களை ஏன் அதிகமாக விரும்புகிறோம்? தேனீக்களைவிட குளவிகள் அதிக அழகாயிருக்கின்றனவே. கோபமூட்டினால் இரண்டும் கொட்டத்தகுந்தவைகள்தானே. "தேனீக்கள் தேனைக் கொடுக்கின்றன, குளவிகளோ அப்படியல்ல" என்று நீ மறுமொழி சொல்லுவாய். இந்த சத்தியமானது பிரயோஜனமுள்ள சில பாடங்களை நமக்குப் போதிக்கிறது.

1-வது, குளவிகள் தங்கள் ஆகாரத்தை முழுவதும் புசித்துவிடுகின்றன. தேனீக்களோ பிற்கால பிரயோஜனத்திற்கென்று கொஞ்சம் சேர்த்துவைக்கின்றன. சில ஜனங்கள் தங்களுக்குக்கிடைக்கிற வருமானத்தையெல்லாம் உடனுக்குடனே செலவு செய்துவிட்டு வறுமையடைகிறார்கள். மற்றவர்களோ, குறைவுபடும் காலத்திற்கென்று கொஞ்சம் கொஞ்சம் மீதிபிடித்து ஐசுவரியவான்களாகிறார்கள். அற்பமான விஷயங்களுக்கென்று நீ வீண் செலவுசெய்தகால்துட்டு அரைதுட்டுகளை நீ பத்திரப்படுத்தியிருந்தால், எத்தனையோ ரூபாய்கள் இப்பொழுது உன் கைவசத்திலிருக்கும். நீ விருதாவில் கழித்த நிமிஷங்களையெல்லாம் சேர்த்துக் கணக்கிட்டுப்பார்த்தால், சத்விஷயமாய் உபயோகிக்கப்படக்கூடிய எத்தனையோ நாட்கள் உனக்கு லாபமாயிருக்குமென்று நீ யோசித்துப்பார். தேனீயினுடைய ஜாக்கிரதையிலிருந்து நீ கற்றுக்கொள்ளக்கூடிய முதலாம் விசேஷித்த பாடம் இதுவே.

2-வது, தேனீயைப்போலவே குளவியும் மிகுந்த சுறுசுறுப்புடன் அங்குமிங்கும் பறந்து திரிந்தபோதிலும், அது தன் ஜாக்கிரதையினால் யாதொரு நன்மையான விஷயத்தையும் நடப்பிக்கிறதில்லை. அது அழகாயிருக்கிறது உண்மைதான். அதின் அழகும் பரபரப்பும் சேர்ந்து தேனைச் சம்பாதிக்கிறதில்லை. அதுபோலவே சிறுவர் சிறுமிகளும் தங்கள் ஜீவியத்தில் நன்மையான ஒரு விஷயத்தை தங்கள் மனதிலே கடைப்பிடித்து, அந்த நோக்கத்தை சுறுசுறுப்பாகவும் இடைவிடாமலும் நடப்பித்து வரக்கூடிய ஸ்திரமான குணமுடையவர்களாயிருந்தால் அதுவே பிரயோஜனமாக முடியும். நீ நடப்பிக்கும் சகல வேலைகளிலும் சுறுசுறுப்பு மட்டும் போதாது, உண்மையும் நன்மையும் கூடி இருக்கவேண்டியது.

3-வது, குளவியானது தன் சொந்த பிரயோஜனத்துக்கென்றே பிழைக்கவும் உழைக்கவும் செய்கிறது. தேனீயோ (தனக்குத் தெரிந்தோ தெரியாமலோ) தன் பிரயாசைகளையெல்லாம் மற்றவர்களது நன்மைக்கென்றும் படுகிறது. நாம் குளவியில்லாமல் பிழைத்துக்கொள்ளலாம். ஆனால் தேனீக்களில்லாமல்போக நாம் ஆசிக்கமாட்டோம். ஏனென்றால் அப்பொழுது நமக்கு தேன் கிடையாது. ஆகையால், நீயும் சுயலாபத்துக்கென்று மாத்திரம் பிழைக்காதே. தேனீயைப் போலவே நீயும் உன்னைச் சுற்றிலுமுள்ளவர்களுடைய ஜீவியத்தை இன்பமுள்ளதாக்க பிரயாசப்படுவது உன் முக்கிய நோக்கமாயிருப்பதாக.

4-வது, தேனீயானது தனக்கு ஆகாரந்தேடி அலையும்பொழுது, மற்ற பொரு

ட்களுக்கு யாதொரு துன்பத்தையும் விளைவிக்காமல், இயற்கைப் பொருட்க ளடங்கிய தோட்டங்களிற் சென்று தனக்கு வேண்டியவைகளைச் சம்பாதித்துக் கொள்ளுகிறது. ஆனால் குளவிகளோ மனுஷர் தங்கள் பிரயோஜனத்திற்கென்று சேகரித்து வைத்திருப்பவைகளை தகாத விதமாக அபகரிக்கத் தலையிட்டு, உடையவர்களுக்கு அலுப்பையும் சலிப்பையும் வருத்தத்தையும் நோவையும் உண்டுபண்ணுகிறது. அவ்விதமாகவே அநேக சிறுவர் சிறுவிகள் தாங்கள் அறிவையும் சந்தோஷத்தையும் அடைந்துகொள்ளும்படியாக இதமான வழிகளை அனுசரிக்கிறார்கள். வேறு சிலரோ குளவிகளைப்போல மற்றவர்களுடைய சமயத்தையும் பிரயாசத்தையும் வியர்த்தமாக்கி, தாங்கள் கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்யாமல் அறிவை லேசாய் சம்பாதிக்கப் பிரயாசப்படுகிறார்கள். சோம்பேறிப் பையன்கள் சுய பிரயாசத்தினால் தங்கள் பாடங்களைப் படிக்க முயற்சிசெய்யாமல், மற்றவர்கள் தங்களுக்கு அறிவை ஊட்டவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

குளவிகள்பேரில் ஜனங்களுக்கு ஏன் அவ்வளவு திருப்தியில்லையென்று மேற்சொல்லிய காரணங்களால் அறிந்துகொள்ளலாம். குளவிகளைக் குறித்து நான் சொன்ன லக்ஷணங்களில் ஏதாவது உங்களிடத்தில் காணப்படுகிறதென்று உங்களுக்கு தோன்றுமேயானால், ஜனங்கள் உங்கள்பேரில் பிரியப்படுவதைவிட உங்களைப் பார்க்கிலும் குறைவுள்ளவர்களாயிருக்கிறதாக நீங்கள் நினைக்கிற மற்ற பிள்ளைகள்பேரில் அதிக வாஞ்சையுள்ளவர்களாயிருப்பதற்கு காரணமின்னதென்று நீங்களே உணர்ந்தறிந்துகொள்ளலாம்.

குளவிகளுக்கு இயற்கையாய் இத்திய குணங்கள் அமைந்திருப்பதால், அந்த லக்ஷணங்களைத் தாங்கள் ஆசைப்பட்டபோதிலும் மாற்றிக்கொள்ளக்கூடாதென்கிற விஷயத்தை நினைத்து குளவிகளுக்காக நான் பரிதபிக்கிறேன். ஆனால் நம்முடைய தகாத குணங்களில் சிலவற்றையாகிலும் நாம் மேற்கொள்ளவேண்டுமென்று ஆசிப்போமானால் நாம் மெய்யாகவே சீர்ப்படக்கூடும். அவற்றை ஒவ்வொன்றாக நீ மேற்கொள்ளும்பொழுது மேலும் மேலும் நீ வெற்றியடைந்துகொண்டே வருவாய். அப்பொழுது துர்ப்பழக்கங்களால் முளைத்தெழும்பும் மற்ற தீய குணங்களும், தேவனிடத்தில் வேண்கொள்ளும் விண்ணப்பங்களுக்கு மறுமொழியாக அவர் அநுக்கிரகஞ்செய்யும் பரிசுத்த ஆவியின் உதவியினாலே புதிதான நற்குணங்களாக மாறிவிடும். நீக்கோதேமு மறுபடியும் பிறக்கக்கூடுமேயானால் நீயும் அப்படிப் பிறக்கலாமே. (யோவான் 3 : 3.) அப்பொழுது நீ எல்லாருக்கும் சத்துருவாயிருக்கும் குளவியைப்போலிராமல் யாவராலும் சிநேகிதனாக விரும்பப்படுகிற தேனீயைப்போலாவாய்.

A PARABLE

## ஒரு உவமானம்

ஒரு காலத்தில் ஒரு அரசன் இருந்தார். அவர் சிற்பசாஸ்திர நிபுணத்துவத்தில் சர்வ பூரணமான ஒரு அழகான ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று தன் மனதிலே நிர்ணயம் பண்ணினார். முதல் முதல் அதற்கு அஸ்திபாரம் போடவேண்டுமென்றும், அந்த அஸ்திபாரம் ஆழமில்லாமலிருந்தால் கட்டடம் பெலனுயிராதென்றும் நினைத்து அஸ்திபாரத்தை உறுதியாய்க் கட்டினார். பிற்பாடு அந்த ஆலயத்தைத் தாங்குவதற்கு சிறப்பான பலத்த தூண்களையும் நிறுத்தினார். அப்புறம் சர்வஜன பிரீதியுள்ளதாயிருக்கிற வெளிச்சமும் சூரியபிரகாசமும் போதுமான அளவு உட்பிரவேசியாவிட்டால் சுகத்திற்கு அநுகூலமாயிராதென்று எண்ணி பெரிய கதவுகளையும் ஜன்னல்களையும் வைத்து அவைகளை உறுதியாய்க் கட்டினார். அதன்மேல் பலமான கூரையையும் வைத்து, சகல மூஸ்திப்புகளும் அடங்கிய ஒரு சமையலறையையும் கட்டினார். அந்த ஆலயத்தில் அனல் காயவும், புறம்பிலுள்ள செய்திகளை அறிவிக்கவும் தகுந்த சப்தக்கருவி முதலியவைகளையும், அமைத்துவைத்தார். இவ்விதமாக ஆலயம் முற்றுப்பெற்று ஆயத்தமாயிற்று.

தமது ஆலயத்தைச் சுற்றிலும் எப்பொழுதும் தீமை செய்யப் பதுங்கிக்கொண்டிரிகிற ஒரு சத்துரு தமக்கு உண்டென்று அவர் அறிந்து, அவன் உட்பிரவேசித்தால் தமது சிறந்த வேலைப்பாட்டையெல்லாம் குலைத்துக் கெடுத்துவிடுவானென்று பயந்து அவன் உட்பிரவேசியாவண்ணம் ஏற்பாடுகள் செய்யக் கருதினார். இந்த நோக்கமாக வாசலின் உட்பக்கத்தில் காவற்காரனை நிறுத்திவைத்தார். அந்த ஆலயத்தை பத்திரப்படுத்தி அதற்கு உத்தரவாதியாயிருக்கும்படி ஒரு தலைவனையும் ஏற்படுத்தினார்.

ஒரு இரவு காவற்காரனும் தலைவனும் தங்கள் வேலையை ஜாக்கிரதையாகசெய்து கொண்டிருக்கையில், சத்துருவானவன் அங்குவந்து அவ்வாலயத்தை அழிக்கப் பார்த்தபொழுது காவற்காரன் அவனை நோக்கி: "நீ உட்பி[illegible]சிக்கலாகாது" என்று தடுத்தபடியா[illegible]தை நாசம் பண்ண என்ன பிரயத்தனம் செய்யலாமென்று எண்ணிக்கொண்டே போய்விட்டான். காவற்காரன் சற்று அஜாக்கிரதையாயிருக்கிற சமயம் பார்த்து வரவேண்டுமென்று தன் மனதிலே உத்தேசித்து இரண்டாம் தடவையும் வந்தான். அப்பொழுதும் அவனுக்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. மூன்றும் தடவையில் காவற்காரனுக்கு மயக்க மருந்து கொடுத்து, அவன் புத்தியை மயக்கி உட்பிரவேசிக்கக்கருதி, சத்துரு வந்து அவ்விதமாகவே செய்து மேற்கொண்டான்.

ஒவ்வொரு சிறுவனும் சிறுவியும் ராஜாதி ராஜாவாகிய தேவன் கட்டின ஆலயங்களாயிருக்கிறார்கள். முதலாவது தேவன், பலத்த அஸ்திபாரமாகிய நேர்த்தியான பாதங்களை உண்டுபண்ணினார். பிற்பாடு அழகான கடைசல் வேலைபிடித்த தூண்களாகிய கால்களை உண்டுபண்ணினார். இவ்விதமாக சிறந்த மாளிகை போன்ற தேகத்தை உண்டுபண்ணி, அதற்கு சமையலறையாக வயிற்றையும் குடல்களையும் உண்டுபண்ணி சுகத்தையும் பலத்தையும் கொடுக்கத்தகுந்த ருசிகரமான பதார்த்தங்களையெல்லாம் அதனுள்ளே சேர்த்தார். இந்த அரண்மனைக்குக் கொடிய சத்துருவாயிருக்கிறது பொல்லாத மதுபானமே. "எனக்குப் பசிதீபனத்தை விர்த்திபண்ணும்படியாக மதுபானம் சாப்பிடுவது ஹிதமாயிருக்கும்" என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முற்றும் மதியீனம். எனென்றால் ஒரு துண்டு ரொட்டியை மதுபானத்துக்குள் போட்டால் அந்த ரொட்டித் துண்டு கடினப்பட்டுப் போகிறது. ஆனால் அதை தண்ணீரில் போட்டால் மிருதுவாகிறது. ஆகவே, மதுபானமானது ஆகாரத்தை இலகுவாய் ஜீரணிக்கச் செய்வத

ற்கு பதிலாக அது ஜீரண சக்தியை குறைக்கிறதாயிருக்கிறது.

அனல் கொடுக்கும் கருவிக்காக தேவன் இரத்தாசயத்தை உண்டுபண்ணியிருக்கிறார். அந்த தேகம் முழுவதற்கும் பாந்து அனல்கொள்ளத்தக்கதாக இரத்தத்தை எப்பொழுதும் குழாய்கள் வழியாக இறைத்துக்கொண்டே இருக்கிறது. சிலர் “ இரத்த ஓட்டம் நின்று மார் அடைப்பு வாராதபடி கொஞ்சம் பிராந்தி சாப்பிடுவது உசிதமானது ” என்று சொல்லுகிறார்கள். நம்முடைய இரத்தாசயமானது ஒரு கெடியாரத்தின் நாழிகை வட்டத்தை அசையச்செய்கிற தொங்கு கருவிபோலிருக்கிறது (Pendulum). மதுபானத்தை உட்கொள்ளும்பொழுது அது நரம்பை பலவீனப்படுத்தி, பாரிசவாய்வுபோன்ற வியாதியை உண்டுபண்ணி, இரத்தாசயம் ஒழுங்காய் இயங்கிக்கொண்டிருப்பதை தடைபண்ணி இருதயமாகிய கெடியாரத்தின் ஓட்டத்தை நிறுத்திவிடுகிறது. பிராந்திக்குப் பதிலாக சூடான பாலும் தண்ணீரும் சாப்பிட்டால் அதிக பிரயோஜனமாயிருக்கும்.

மேலும் இந்த ஆலயத்திற்கு பேர்ந்த மட்டும் காற்றோட்டம் இருக்கும்படியாக, காதுகளையும் நாசித்துவாரங்களையும் ஏற்படுத்தினார். தகுதியான வெளிச்சம் உள்ளே ஜ்வலிக்கும்படியாக பலகணி வாசல்களுக்குச் சரியான பிரகாசமான கண்களை உண்டுபண்ணி, அந்தக் கணகள் சேதப்படாதபடி கண்ணிமை ரோமங்களாகிய மெல்லிய தொங்கு திரைகளையும் போட்டிருக்கிறார்.

அந்த வீட்டிற்கு மேல்கூரையாக அழகான ரோமங்களாகிய புல்வேய்ந்த மேற்கூரையிட்டு அதற்குள்ளே தேக முழுவதையும் ஆண்டு பாதுகாக்கும்படியாக தலைமைக்காரனாக மூளையை அதிகாரியாக ஏற்படுத்தியிருக்கிறார். ஒருநாள் ஒரு மனுஷன் புகைவண்டி புறப்படுமுன் சமயத்தில் போய்ச்சேரவேண்டுமென்று ஆத்திரப்பட்டு ஓடும்பொழுது கீழேவிழுந்து படுகாயப்பட்டான். வைத்தியர்கள் அவனை பரீக்ஷித்துப்பார்த்தபொழுது ஒரு அவுன்ஸ் (Ounce) லாகிரி வஸ்து அவன் தேகத்திற்குள் புகுந்து மூளையைக் கெடுத்துவிட்டதென்று கண்டார்கள். நம்முடைய தெளிவான மூளையையும் மதுபானத்தினால் மந்தப்படுத்தி அலங்கோலப்படுத்திக்கொள்வது யுக்தமாயிராது. பிள்ளைகளே, உங்களுக்கு தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற காவற்காரனையும், அதிகாரியையும் மதுபானத்தால் மயக்கிவிடாதேயுங்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு அழகான ஆலயத்தை நிருமித்துக்கொடுத்திருக்கிறார். “ நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்று அறியீர்களா ?” தேவனை உங்களுடைய ஆலயத்தை ஆண்டுகொள்ளும்படி இடங்கொடுங்கள். உங்கள் பிராண சத்துருவாகிய மதுபானத்திற்கு கொஞ்சமும் இடங்கொடாதிருங்கள். “ மதுபானம் இரத்தவருணமாயிருந்து பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்பொழுது அதைப் பாராதேயுங்கள். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும்.”

---

QUEEN MARY OF ENGLAND AND HER MINISTERING CHILDREN.

## இங்கிலாந்துதேசத்து ராணி தமது பிள்ளைகளை வளர்க்கும் விதம்.

---

இங்கிலாந்து தேசத்து ராணியாகிய மேரியம்மாள் திக்கற்ற ஏழைகளுக்கு உதவிபுரிய தகுந்த விதமாய் வளர்க்கப்பட்டார்கள். அவர்கள் தமது பிள்ளைகளையும் அவ்விதமாகவே பயிற்றுவித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒவ்வொரு பிள்ளையும் தங்கள் சொந்த கைகளால் வேலைசெய்து ஏழைகளுக்கு உதவும்படியான, பிரயோஜனமுள்ள பொருள்களை தினந்தோறும் செய்வது அவர்களுடைய கடமையும் சிலாக்கியமுமாய் இருக்கிறதென்று போதித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளையின் ஜனன உற்சவதினத்திலும் அந்த உற்சவத்தைக் கொண்டாடும் பிள்ளைக்கு வெகுமதிகளை அனுப்புகிறது மாத்திரமல்ல, தங்களோடொத்த வயதுள்ள சில ஏழைப்பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு ராஜகுமாரனும் ராஜகுமாரியும் வெகுமதிகளை அனுப்பி, இவ்விதமாய் சந்துஷ்டி கொள்வார்கள். அவர்கள் வெகுமதிகளை அனுப்பும் விதத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கையில், எடி ராஜ பிரபு ஒரு வியாதியினின்று சௌக்கியப்பட்டுத் தேறி வருகையில் அவரைப் பாதுகாத்துவந்த ஒரு தாதியிடமிருந்து பின்வரும் சரித்திரத்தைக் கேட்டறிந்தேன் :—

ஒருநாள் அந்த பிரபு கோபமும் எரிச்சலுமடைந்து வெடுவெடுப்பாய் இருந்தபோது அவரைக் கடிந்துகொள்ளும்படியாக அந்த தாதி “ஓய், ராஜ பிரபுவே, நீர் இப்படி கோபதாபமடைவது சரியன்று, உமக்கிருக்கும் செல்வாக்கைக் கவனித்துப்பாரும். உமக்கு பக்ஷமுள்ள தாயும், அருமையுள்ள பிதாவும் இருக்கிறார்கள். வாசம்பண்ண அழகான அரண்மனையும், படுத்திருக்க மிருதுவான மெத்தையும், விளையாட பலவிதமான விளையாட்டுப் பொருள்களும் இருக்கின்றன. நான் முதல் முதல் மருத்துவம் பார்க்கப்போயிருந்த ஒரு சிறுவன் யாரென்று தெரியுமா ? அவனுக்கு தாயும் தகப்பனுமில்லை. அவன் குடிசைப்பாளயத்திலே, அசுத்தமான ஒரு அறையில் தங்கினான். அவன் படுத்து நித்திரைசெய்ய அவனுக்குப் படுக்கை கிடையாது, அவன் வெற்றுத்தரையில் படுத்திருந்தான். அவன் தலையணை சுருளாக கட்டின பழங்காகிதங்களே ஒழிய வேறொன்றும் கிடையாது. அவனுக்கு விளையாட்டுப்பொருள் ஒன்றாவது இருந்ததில்லை ” என்றாள்.

எடி பிரபு உடனே தன் மூர்க்ககுணம் மாறி “ தாதியே, விளையாட்டுப் பொருள் ஒன்றும் இல்லாத அவ்வளவு ஏழைத்தனமுள்ள பிள்ளைகள் யாராகிலும் இருக்கிறார்களென்று நான் இதுவரையில் அறிந்ததேயில்லை. என்னுடைய விளையாட்டுப் பொருள்களில் சிலவற்றை அவனுக்குக் கொடுக்கலாமா ?” என்றார்.

அதற்கு தாதி மறுமொழியாக “ ராஜகுமாரனாகிய நீர் உமக்கு வேண்டாமென்று கழித்துப்போட்டிருக்கிற விளையாட்டுப் பொருள்களில் சிலவற்றை அவனுக்கு கொடுப்பீரானால் அவன் உமது நேருக்கு மிகுந்த நன்றியறிதலுள்ளவனாயிருப்பான் ” என்றாள்.

அதைக் கேட்டவுடனே, எடி ராஜகுமாரன் சொன்னதாவது “ தாதியே ! நீ சொல்வது தகுதியாயிருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. அந்த ஏழைப் பையனுக்கு ஒரு வெகுமதியனுப்ப நான் ஆசிக்கிறேன் என்று சொன்னதற்கு, நான் வேண்டாமென்று வெறுப்புற்று எறிந்திருக்கும் பொருள்களை அவனுக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறாய். நாம் மற்றவர்களுக்கு வெகுமதி அளிக்கும் பொருள்கள் நாம் பிரியப்படுகிறவைகளும், நமக்கு பிரயோஜனமானவைகு

ளுமாய் இருந்தால் அல்லாது அது ஒருக்காலும் வெகுமதியாகமாட்டாது என்று எங்கள் தாயார் எப்பொழுதும் எங்களுக்கு போதித்திருக்கிறார்கள். ஆகையால், எனக்கு மிகவும் பிரீதியாயிருக்கிற என் சொந்தப் பொருள்களையே நான் அவனுக்கு கொடுப்பேன்" என்று சொன்னார்.

---

HOMELESS AND FRIENDLESS

## திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை

---

ஒரு நாள் சூரிய அஸ்தமனமாகி மந்தாரம் மூடப்போகிற சமயத்தில் விருத்தாப்பியமான ஒரு அம்மாள் வாடி வதங்கின முகத்தோடு கவலையால் நிறைந்தவளாய் முன்நடப்பார் பின்நடப்பாரையும் கவனியாமல் நிர்ச்சிந்தனையாக தெருவிலே நின்றுகொண்டிருந்தாள். அந்த வேளையில் திடீரென்று ஒரு போலீஸ் சேவகன் அவளை அதட்டி கூப்பிட்டு "இப்பொழுது நீ வீட்டிற்கு ஏகும் வேளையாயிற்று, சீக்கிரத்துக்குள் இருளாகிவிடும், நீ இங்கே தனியாக நிற்பது யுக்தமல்ல, சீக்கிரம் புறப்படு" என்றான்.

அப்பொழுது அந்த அம்மாள் போலீஸ் சேவகனைப் பார்த்து பரிதாப குரலோடு "ஐயா, நான் எங்கே போவேன்? விஸ்தாரமான இவ்வுலகத்தில் நான் போகிறதற்கும் இராத்தங்கியிருப்பதற்கும் யாதொரு புகலிடமும் இல்லையே, நான் என்ன செய்வேன்" என்றாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு திகைப்புற்ற போலீஸ் சேவகன் மறுமொழியாக மெதுவான சத்தத்தோடு "அப்படியானால் நீ என்னோடுகூட போலீஸ் கச்சேரிக்கு வரவேண்டும். அங்கே உனக்கு இந்த ஸ்தலத்தில் நிற்பதைவிட அதிக சௌக்கியம் கிடைக்கும். ஆகையால் புறப்படு," என்று அழைத்தான். அந்நேரத்தில் சூரிய கிரணங்களின் மங்களான ஒளியும் மறைந்து பூமியில் அந்தகாரம் மூடிக்கொண்டது.

காவலறையில் சென்றபின் அங்கிருந்த வேலைக்காரி அந்த அம்மாளை அன்பாய் உபசரித்து அருமை பாராட்டின போதிலும், அடுத்தநாட்காலையில் தெருச்சுற்றும் குற்றத்திற்காக நியாயாதிபதி முன்னிலையில் நிறுத்தப்படவேண்டுமென்று தான் அறிந்து வெட்கமும் துக்கமும் நிறைந்தவளாய் பிரலாபிக்கலானாள்.

அந்தம்மாளுக்கென்று விடப்பட்ட அறையில் சிறிதுநேரம் அடைப்பட்டிருக்கவே நட்சத்திரங்கள் ஒன்றொன்றாய் வெளிப்பட்டு ஜ்வலிக்கத் தொடங்கின. சிறிதுநேரம் சஞ்சலத்தில் மூழ்கினவளாய் இருக்கும்பொழுது தனக்கு எதிரில் ஒரு சிறு படுக்கை இருப்பதாக கண்டு அதனண்டையில் போய்பார்த்பொழுது, ஒரு வேத வாக்கியம் ஒரு அட்டைக் காகிதத்தில் பெரிய பொன் அட்சரத்தில் பதிக்கப்பட்டு சுவரில் தொங்குவதாக நிலாவெளிச்சத்தில் அவளுக்குத் தெரிந்தது. "உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களோடுகூட சகல நாட்களிலும் இருக்கிறேன்" என்பதே அந்த வாக்கியம். இரட்சகருடைய வார்த்தைகள் அவளுடைய மனதிற்கு இந்த அளவிறந்த ஆறுதலையும் தேறுதலையும் கொடுத்தபடியால் தன் வருத்தங்களையும் கவலைகளையும் மறந்து இரவு முழுதும் யதேச்சையாய் நித்திரை செய்தாள்.

காலையில் கிழக்கு வெளுக்கும் நேரத்தில் எழுந்து காவலறையில் தான் தனிமையாக விடப்பட்டிருந்ததைக் குறித்து வியப்புற்று, தன் உடையைச் சரிப்படுத்திக்கொண்டு, சிறிது நேரத்திற்குள் முகமறியாத நியாயாதிபதிக்கு முன் தான் குற்றவாளியாக நிறுத்தப்படவேண்டுமே என்று கலக்கமடைந்தபோதிலும், முந்தின இரவில் தன் மனதில் உதித்த சந்தோஷமானது அவளுக்கு சற்று ஆதரவாயிருந்தது. ஆதலால் தன்னையறியாமலே ஒரு பாட்டைப் பாடிக்கொண்டு நியாய ஸ்தலத்துக்குள் புகுந்து தனக்குக் குறிக்கப்பட்ட இடத்தில் நின்றாள்.



நியாயாதிபதி கேட்ட கேள்விகளுக்கு மாறுத்தரமாக அந்த அம்மாள் தன்னுடைய பரிதாபமான நிலைமையை எடுத்துக் கூறி: "நான் என் கணவனை இழந்தேன், என் பிள்ளைகளையும் சாகக்கொடுத்தேன், அவர்கள் எனக்குமுன் போயிருக்கிறார்கள். தரித்திரமும் வறுமையும் என்னை மேற்கொண்டபடியால் என் இல்லிடத்தையும் போக்கடித்துக்கொண்டேன்," என்று சொல்லவே அநுதாப சிந்தையுள்ள நியாயாதிபதி மிகுந்த விசனத்தோடு அவ்வார்த்தைகளைக் கூர்ந்து கவனிக்கையில் நியாயஸ்தலத்திற்கு வந்திருந்த எல்லார் கண்களிலும் கண்ணீர் ததும்பி வழிந்தது.

அப்பொழுது நியாயாதிபதி "பாட்டியாரே, நீ சிறு பிள்ளைகளை பராமரிக்கக் கூடுமா?" என்று உருத்தாய் விசாரித்தார்.

அந்த அம்மாள் உடனே ஐயாவே "நான் அந்தப் பிள்ளைகளை பராமரிக்க மாத்திரமல்ல, அவர்களை நேசிக்கவும் செய்வேன்" என்று ஆவலாய் மறுமொழி சொன்னாள்.

நியாயாதிபதி "அம்மா, அப்படியானால், என்னுடைய சிறு பிள்ளைகள் தங்கள் பாட்டி மரித்துபோனதினிமித்தம் இன்னும் துக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். நீ அவர்களை பராமரிக்க ஏற்படுவாயானால் உனக்கு வீடும் சாப்பாடும் மாத்திரமல்ல, வாரமொன்றுக்கு ஐந்து ரூபாய் சம்பளமும் கொடுப்பேன்," என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டபொழுது, நியாயாதிபதியை அறிந்தயாவரும் பிரமிப்புடன் நிற்க அந்த அம்மாள் சந்தோஷத்தினாலும் நன்றியறிதலினாலும் மனம் பூரித்து பேசுகிறதற்கு நாவெழாமல் திகைத்து மரம்போல் நின்றுவிட்டாள்.

சிறிதுநேரத்திற்குப்பின் அவள் ஒருவாறு தைரியமடைந்து "முடிவுபரியந்தம், எப்பொழுதும்" என்கிற வார்த்தைகளை அடிக்கடி சொல்லி உள்ளக்கிளர்ச்சியோடு நியாயாதிபதிக்கு நன்றியறிதல் சொல்லி தன் ஸ்தானத்தில் போய் உட்கார்ந்தாள்.

இவ்விதமாக காரிருளால் மூடப்பட்டு வழி திசைதெரியாமல் மயங்கி நின்ற அந்தம்மாளுக்கு தேவனுடைய வாக்குத்தத்தமாகிய அந்த ஒளி வீசினபடியால் "சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும்" என்று ஆண்டவர் உரைத்த வாக்குத்தத்தமானது நிறைவேறிற்று.

---

A ROW OF MEDICINE BOTTLES

## ஒரு வரிசை மருந்துப் புட்டிகள்

---

நீ உன் ஆவியில் சோர்படைந்தவனாக இருப்பாயேயானால் நீ உபயோகிக்க வேண்டிய மருந்துப் புட்டி இருபத்தேழாம் சங்கீதம்.

உன் இருதயமானது குளிர்விட்டுப் போய் அனலடையவேண்டுமானல் நீ உட்கொள்ளத்தக்க மருந்துப் புட்டி வெளிப்படுத்தல் 3-ம் அதிகாரம்.

நீ மாதாந்த குடிக்கூலி கொடுக்க வகையற்று திகைத்துக் கொண்டிருப்பாயேயானல் உனக்குத் தகுந்த மருந்து 37-ம் சங்கீதத்தில் இருக்கிறது.

நீ ஆதாவற்றவனுய் தனித்து விடப்பட்டிருப்பதாய் காணப்படுவாயேயாகில் உனக்கேற்ற மருந்து 91-ம் சங்கீதத்தில் இருக்கிறது.

உன் அடுப்பு இடிந்து விழுந்து, சுயம்பாகியும் கோபங்கொண்டவளாய் உன்னை விட்டுப் போய்விட்டால், உன் அடுப்பை சரிப்படுத்திவிட்டு உன் கைகளையும் சுத்தம் பண்ணினபின் நீ கையாடவேண்டிய ஔஷதம் யாக்கோபின் நிருபம் 3-ம் அதிகாரம்.

நீ மனுஷர்பேரில நம்பிக்கையற்றவனுய்க் காணப்படுவாயேயாகில் 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தைக் கையாடு.

மற்றவர்கள் உன்மேல் கொடுமையான வார்த்தைகளைச் சொல்லி உன்னை உபத்திரவப்படுத்துவார்களானல், உனக்கு சுகத்தைக் கொடுக்கத்தகுந்த மருந்து யோவான் சுவிசேஷம் 15-ம் அதிகாரம்.

உன் உத்தியோக விஷயமாய், உனக்கு அதைரியம் உண்டாகிறதென்று நீ காண்பாயானல் நீ அருந்தவேண்டிய மருந்து புட்டி 126-ம் சங்கீதமும், கலாத்தியர் நிருபம் 6-ம் அதி. 7-9-ம் வசனங்களும்.

உனக்கு அசௌக்கியம் நேரிடுகிறதாக காணப்பட்டால் எபிரேயர் 12-ம் அதிகாரத்தை நீ பானம்பண்ணு.


Tamil Books and Tracts Published by

## Methodist Publishing House

Mount Road, Madras

| | | |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500 க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100 க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தலைவன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கூசன் என்னும் சிறுமி 4 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயநீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100 க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் சீமானனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை பக்கம் 32 புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் பக். 16 புஸ். 100-க்கு... ... | 1 | 0 |




## INTERNATIONAL SUNDAY SCHOOL LESSON-PICTURES FOR OCTOBER, 1911.

## ஓய்வுநாள் பள்ளிக்கூட பாடங்களுக்கடுத்த படங்கள்.—அக்டோபர்.

October 8. THE LIFE GIVING STREAM. Ezekiel 47 : 1-12.



அக்டோபர் 8. உயிர்ப்பிக்கும் நதி. எசே. 47 : 1-12.

October 15. THE RETURN FROM THE CAPTIVITY. Ezra 1 : 1-11 ; 2 : 64-70.



அக்டோபர் 15. சிறையிருப்பிலிருந்து திரும்புதல். எஸ்று. 1 : 1-11 ; 2 : 64-70.

October 22. THE FOUNDATION OF THE SECOND TEMPLE LAID. Ezra 3: 1-10; 4: 5.



அக்டோபர் 22. இரண்டாம் ஆலயம் அஸ்திபாரம் போடப்பட்டது. எஸ்றா. 3: 1-10; 4: 5.

October 29. A PSALM OF DELIVERANCE. Psalm 85.




அக்டோபர் 29. மீட்பின் கீதம்! சங். 85.

# மாதர் மித்திரி.

புத். ௨௫. ௧௯௧௧ ௵ - நவம்பர் ௴. இல. ௫.

## ROCK OF AGES.

இராகம், இந்துஸ்தானி.

### பல்லவி.

நேசையா, பிளந்த ஆதி மலையே,
மோசநாளில் உன்னில் ஒளிப்பேனே.

### சரணங்கள்.

1. மோசமுள்ள பாவநோய் முழுதும் என்னில் தீர், ஐயா ;
தோஷம் நீக்கும் இரு மருந்தாமே—சொரிந்த உதிரம் நீருமே,— நேசையா

2. இகத்தில் என்னென் செய்தாலுமே ஏற்காதே உன் நீதிக்கு
மிகவாய் கொந்தழுதும் தீராதே—மீளாப் பாவ ரோகமே ;— நேசையா

3. பொறம் அருந்தவம் பெருமிதமாய்ச் செய்திடினும்
நேரஸ்தரின் பாவம் நீங்குமோ ?—நீங்காதே உன்னாலல்லால் ;— நேசையா

4. வெறுங்கையோடோடி வந்து, வினை நாசன் பேரருள் கெஞ்சி,
திருச் சிலுவை தஞ்சம் புகுந்து,—தியங்கி அணைத்தே நிற்பேன் ;— நேசையா

5. அருளிலிருந்தோன் ஆனாலும், அபயமுந்தன் நீதிக்கே !
கருணை ஊற்றிற் கழுவமாட்டாயோ ?—கழுவாயாகிற் சாவேனே ;— நேசையா

6. ஜீவனோடே தங்கினும், தெளிகண் சாவில் மங்கினும்,
தேவாசனமுன் அஞ்சி நிற்க—தேவலோக மேறினும்,— நேசையா

A FATHER'S PART IN TRAINING A BOY.

## ஒரு மகனை வளர்ப்பதற்கு தகப்பன்மேல் விழுந்த கடமை எவ்வளவு.

அநேக தகப்பன்மார், தங்கள் ஆண் குழந்தைகளைப் பராமரித்து வளர்ப்பதில், அஜாக்கிறதையுள்ளவர்களாயிருப்பது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது? அவர்கள் குழந்தை பெரியவனாய் வளர்ந்தபின், தாங்கள் அதைப்பற்றி சிரத்தை எடுத்துக் கொள்ளலாமென்று நிர்ணயித்து தாய்மார்பேரிலே அந்த உத்தரவாதத்தைப் போட்டுவிடுகிறார்கள். மகன் சிறுவனாயிருக்கும்பொழுதே அவனைத் தன் கைவசப்படுத்திக்கொள்ளாத தகப்பன் மகன் வளர்ந்தபின் அவன் அதிகாரத்தை செலுத்த முடியாமல் தனக்குக் கிடைத்த சாவகாசம் முழுவதையும் இழந்துவிடுகிறான். ஐந்து முதல் பன்னிரண்டு வயதுவரைக்கும் பிராயமுள்ள சிறுவர்மேல் தாய்மாருடைய அதிகாரம் மிகவும் சிறந்ததாயிருக்கிறது உண்மைதான். என்றாலும், தகப்பன்மாருடைய புத்தியுள்ள ஆலோசனையும், தோழமையும் இந்தப் பிராயத்தில் அவர்கள் நடக்கையைக் கிரமப்படுத்துவதற்கு இன்றியமையாத அவசியமாயிருக்கின்றன.

வேலையின் மிகுதியால், "பிள்ளைகளுக்காக தொல்லைப்படுவதற்கு எனக்கு இப்பொழுது நேரமில்லை" என்று சொல்வது சரியான சாக்குப்போக்காக இராது. பத்து வயதுள்ள என் மகனுக்கு என்னுடைய அறையிலாவது அதற்கு அடுத்திருக்கும் அறையிலாவது படுக்கை போட்டுக் கொடுத்து நாம் மிகுந்த வேலையாயிருக்கும்பொழுதும் அவனைப் பார்த்து காலையிலும் மாலையிலும் அவனோடு உலாவி வருகிறேன். தகப்பனுக்கும் மகனுக்கும் அநேக உத்தமமான சம்பாஷணைகளும், ஆலோசனையான பேச்சு வார்த்தைகளும் நடத்திக்கொள்ளுகிறதற்கு இது அநுகூலமாயிருக்கிறது. இப்படி ஒருவரோடொருவர் கலந்து பேசிக்கொள்வதினால் இருவருக்கும் அத்தியந்த பிரயோஜனம் உண்டாகிறதுண்டு. அவ்விதமாக கவனியாமல்விட்டால் அப்படிப்பட்ட சாவகாசங்கள் பிற்காலத்தில் கிடையவே கிடையாது.

தாயின் கரிசனையோடு தகப்பனுடைய கற்பிதமும் கலந்திருக்கவேண்டும். என்னுடைய பிள்ளைகளிலொருவன் ஐந்தாறு வயதாயிருந்தபொழுது, ரோசமும், கூச்சமும், கோழைத்தனமும் காண்பிக்கத் தொடங்கினான். நாம் இருவரும் சேர்ந்து செய்த பிரயாசத்தினால் இப்பொழுது அவன் தைரியகுணமும் தேகபலனும் உள்ளவனாயிருக்கிறான். மிகுந்த அவசியம் நேரிட்டாலொழிய அவனை ஒரு விஷயத்திலும் தடைப்படுத்தக்கூடாதென்றும், அவன் தன் சொந்த பெலத்திலே சார்ந்து எதையும் நடைப்பிக்கவும், மற்றப் பிள்ளைகளோடே தாராளமாகவும் கலந்து விளையாடவும், துணிகரமாக எதையும் பிரயத்தனிக்கவும் அவனுக்கு தைரியம் கொடுக்கவேண்டுமென்றும் எங்களிடத்தில் வந்து கோட்சொல்லவோ, சிணுங்கிக்கொண்டிருக்கவோ சம்மதிக்கக்கூடாதென்றும், எங்கள் பேரில் அவனுக்கு நம்பிக்கை கெட்டுப்போகும்படி எந்த விதத்திலும் பழி வைக்கக்கூடாதென்றும் துவக்கமுதலே எங்களுக்குள் ஐக்கிய ஆலோசனை செய்துகொண்டோம்.



"THAT'S WHERE I STAND!"

## "நான் நின்றுகொண்டிருக்கும் கன்மலை அதுதான்!"

இங்கிலாந்து தேசத்து தென்பாகத்து பட்டணமொன்றில் இருந்த இருப்புப் பாதை ஸ்டேஷனில் ஒரு புகை வண்டி தொடர் அப்பொழுதுதான் வந்து நின்றது. பிரயாணிகளின் கூட்டத்தார் வழக்கம்போல் அங்குமிங்கும் விரைந்து சென்றார்கள். மூட்டையெடுக்கிறவர்கள் கைவண்டிகளில் சாமான்களை குவித்து வைத்துக்கொண்டு இழுத்துச் சென்றார்கள். சிறுவர் பலர் வர்த்தமான பத்திரிகைகளையும் பலகார தினுசுகளையும் கூடைகளில் அடுக்கி வைத்துக்கொண்டு விலைகூறி கூவினார்கள். இப்படிப்பட்ட காட்சிகளை புகைவண்டி பிரயாணிகள் யாவரும் சகஜமாக பார்த்திருப்பதுண்டு. ஆனால் அந்த கூட்டத்திலே ஒரு மனிதனை நாங்கள் கருத்தாய் கவனிக்க நேரிட்டது. அவனுடைய வெள்ளிக்கம்பிகளைப்போன்ற நரைத்தமயிர்களால் அவன் மிகவும் வயோதிபன் என்றும், அவனுடைய மங்கலான சிவப்புநிற முகச்சாடையினால் நாட்டுப்புறத்திலே, சுத்தமான ஆகாய வெட்டவெளியிலே, வாசம்பண்ணுகிறவனென்றும் அறிந்து கொண்டோம். நாங்கள் அவனை பார்த்து புன்சிரிப்போடு தலையை அசைத்தபொழுது, வயதுசென்ற அம்மனிதன், தைரியமடைந்து எங்களுக்கு சமீபமாய் சில அடி தூரம் வந்து "ஐயா நீங்கள் சீக்கிரத்தில் புறப்பட்டுவிடுவீர்கள்" என்றான். நாங்கள் அவனைப் பார்த்து: "ஆம் மெய்தான், நாங்கள் சீக்கிரத்தில் வீடுபோய் சேர்ந்துவிடுவோம்" என்றோம். அப்பொழுது அவன்: "பாருங்கள் ஐயா, எனக்கு எழுபத்து மூன்று வயதிற்கு மேலாகிறது. என் ஜீவகாலத்தில் லண்டன் பட்டணத்தை ஒருதரம்கூட பார்த்திருப்பதில்லை" என்றான்.

அதற்கு நாங்கள் "மெய்யாகவே நீ பார்த்திருப்பதில்லையா? நீ ஒரு காலத்தில் பரலோகத்தைப்போய் பார்ப்பாயென்று நாங்கள் நம்புகிறோம்" என்று சொன்னோம்.

நரைத்துத்திரைந்த அவனுடைய முகம் பிரகாசமடைந்து சிரித்துக்கொண்டு: "ஐயாவே, அதைக் குறித்து எனக்கு யாதொரு பயமுமில்லை, நான் செழிப்பான அந்த ராஜன் தேசத்துக்குப்போகிற அந்த சரியான வழியில்தானிருக்கிறேன், அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்றான். அச்சமயத்தில் வண்டி ஓட்டுகிறவன் குழலை ஊதிக்கொண்டு பச்சைக் கொடியை அசைத்தான். நாங்கள் அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு "வந்தனம், போய் வருகிறோம்" என்று விடை பெற்றுக்கொண்டோம். அப்பொழுது அவன் எங்களை நோக்கி: "தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நான் நிற்கும் ஸ்தானம் எதுவென்றால்:

பிளவுண்ட மலையே
புகலிடம் தாருமே
பக்கம்பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவ தோஷங்கள் யாவும்
போக்கும்படி அருளும்

160953

என்று பாடினான். கடைசி வார்த்தைகள் பாடி முடியும்போது வண்டி மெதுவாக அசைந்தது. அந்த நல்ல வயோதிபனுடைய உருவம் ஜனக்கூட்டத்தின் மத்தியில் தூரத்திற் காணப்பட்டு, சீக்கிரத்தில் மறைந்துபோயிற்று.

தேவனால் கட்டப்பட்டிருக்கிற அஸ்திபாரமுள்ள பட்டணமாகிய பரலோகத்தின் வாசஸ்தலங்களிலே, ஒரு காலத்தில் அவனை மறுபடியும் சந்திப்போம். இந்த புகைவண்டி பாதை மேடையிலே அவன் ஒண்டி ஒருவனாய், ஏழைக்கிழவனாய், சிறந்த உடை தரித்தவர்கள் கூட்டத்திலே அசட்டை செய்யப்பட்டவனாக காணப்பட்டான். ஆகிலும், தம்முடையவர்களைக் குறித்து எப்பொழுதும் கவனமுள்ளவராயிருக்கிற தேவனால் நேசிக்கப்பட்ட ராஜகுமாரனாக அவன் விளங்கினான். அவனுடைய பாதங்கள் நித்திய கன்மலையின்மேலும், அவனுடைய முகம் பரத்திற்கு நேராகவும் இருந்தது.

நாம் எதின்மேல் நிற்கிறோம், எவைகளின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோமென்பது நாம் கவனிக்கத்தகுந்த விஷயம். நாம் சிலரை பார்ப்போமானால் தாங்கள் சரியான நிலையில நிற்கிறோம் என்று சொன்னாலும் அதைப் பரீட்சிக்கும் சமயம் வரும்பொழுது தாங்கள் நிற்கிற இடம் சரியானதல்ல என்று விளங்குகிறது. ஒரு மனிதன் தனக்கு பணமிருந்தால் போதும் என்று நினைத்து அதற்காகவே தன் ஜீவியத்தை செலவிட்டு தன் பற்றையெல்லாம் அதின்மேல் வைத்து தன் நம்பிக்கையையெல்லாம் அதில் சாரவிட்டவனாக தன் மகனைப் பார்த்து: ‘நீ பணத்தை சம்பாதி, அப்பொழுது எல்லாம் சரியாய்ப்போகும்’ என்று போதிக்கிறான். ஆனால் காலஞ் செல்ல செல்ல அது போதாதென்று அறிந்துகொள்ளுகிறான். இருந்தாற்போலிருந்து அவன் பிள்ளை சாகிறான். அவன் பணம் அவனுக்கு ஆறுதலைக் கொடுக்கவில்லை. துன்பங்கள் நேரிடுகிறது. அவன் ஆஸ்தி அவன் மன நோவை தீர்க்கிறதில்லை. மரணமானது அவன் கதவை வந்து தட்டுகிறது. பேர்போன பண்டிதர்கள் அதைத் துரத்திவிடக் கூடாமலிருக்கிறது. நடுக்கம் எடுத்துக்கொண்டிருக்கும் அவன் கையினால் ஒரு காசையாவது பிடித்துக்கொண்டிருக்க முடியவில்லை. எல்லாவற்றிலும் முக்கியமாக உலகத்தின் திரவியங்கள் எல்லாம் அவன் பாவக்கறையை கழுவமுடியாதிருக்கிறது. ஏனென்றால் அவன் நின்ற அஸ்திபாரம் மணல்தான்.

இன்னொருவன் இருக்கிறான். அவன் குணத்தை அதிகமாய் கவனியாவிட்டாலும் அறிவே முக்கியமானதென்று எண்ணுகிறான். அவன் நேர்த்தியான புஸ்தகங்களை வாசிக்கிறான். அறிவிலே தான் கெட்டிக்காரனென்று வீம்பு பாராட்டுகிறான். தினசரி வர்த்தமான பத்திரிகைகளெல்லாம் அவனுக்கு மனப்பாடமாக இருக்கிறது. மூர்க்க விரோதம் பேசுவோருடைய சம்பாஷணையைக் கேட்பது அவன் காதுக்கு இனிமையாய் இருக்கிறது. அவைகளை அறிந்துகொள்வதால் தன்னை பெரியவனாக எண்ணிக்கொள்ளுகிறான். அறிவிருந்தால் போதுமென்று நினைக்கிறான். “ஞானத்தை சம்பாதி” என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் இருதயமெல்லாம் கேடாயிருக்கும் பொழுது அறிவுமாத்திரம் போதும் என்று அது சொல்லுகிறதில்லை. ஆகவே, சோதனைகள் வரும்போது புஸ்தகங்களால் யாதொரு தேறுதலும் வரமாட்டாது. வியாதிப்படுக்கையிலாகி தேகம் சகிக்க முடியாத வேதனைப்படும்பொழுது, நியாயதோரணைகளும் தர்க்கவாதங்களும் அவனுக்கு வேண்டியதில்லை. அவன் இப்பொழுது நியாயாசனத்திற்கு முன்பாக கொண்டுபோகப்படுகிறான். தேவனிடத்திலே அவனுடைய தர்க்கங்களெல்லாம் பயன்படமாட்டாது. ஏனென்றால் அவன் மணலின்மேல் அஸ்திபாரம் போட்டு கட்டியிருக்கிறான்.



இன்னொரு மனிதனை நீ காண்கிறாய். அவன் உன்னைப்பார்த்து: “நான் சிற்றின்ப உல்லாசங்களிலே என் காலத்தைக் கழிப்பேன். கூடியமட்டும் ஜீவகாலத்தில் சந்தோஷத்தை அநுபவிப்பதே என் முக்கிய தாற்பரியம். இனிமேல் வரும் காலத்தைக்குறித்து கவலைப்படுவதினால், வருகிற பிரயோஜனம் ஒன்றுமில்லை” என்று சொல்லுகிறான்.

இவ்விதமாக பேசின ஒரு மனுஷனைக் குறித்து நாம் முன்னமே வாசித்திருக்கிறோம். அவன் “என் ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேக பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது, நீ இளைப்பாறி புசித்துக்குடித்து பூரிப்பாயிரு” என்று சொன்னான். ஆனால் தேவன் அவனை நோக்கி: ‘மதிகேடனே’ என்று அழைக்கிறார். பந்தய சாலைகளிலிருந்து திரும்பி வரும் மனுஷருடைய முகங்களையும், மதுபான கடைகளிலிருந்து தடுமாறி நடந்துகொண்டு வருகிறவர்களுடைய சிவந்த கண்களையும் பார். நெறிகெட்ட ஆசாரியின் வீட்டையும் போய் பார். மெய்யான சந்தோஷம் அங்கே உண்டா? சிற்றின்ப பாத்திரத்தை குடிக்கும்பொழுது கசப்பான வண்டலையல்லாமல் வேறொன்றும் அதிலில்லையென்று கண்டுகொள்ளுகிறான். அவனும் தன் அஸ்திபாரத்தை மணலிலே போட்டவன்தான்.

இப்பொழுது புகைவண்டி பாதையில் நின்ற அந்தக் கிழவனைப் போய்த் திரும்பவும் பார்ப்போம். அவனிடத்தில் பெருமைபாராட்டத்தக்கதான அவ்வளவு ஆஸ்தியில்லை. பெரிய வார்த்தைகளை பேசி தர்க்கிக்கிற சாமர்த்தியம் அவனுக்கில்லை. அவன் ஒருபொழுதும் பந்தயம் போடுகிறதில்லை. மதுபானம் சாப்பிடாமலே அவன் ஜீவியம் அவனுக்கு இன்பமாய்த் தோன்றுகிறது. அவன் ஒரு ராஜகுமாரனைப்போல் சந்தோஷமும் கெம்பீரமுமாய் இருக்கிறான். மற்ற மனிதர்களுக்கு நேரிடுவதுபோல, அவனுக்கும் துன்பம் நேரிடும்பொழுது, அவன் தனக்குள்ளே தானே: “கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் உள்ளவர்” என்று சொல்லி தேற்றிக்கொள்ளுகிறான். அவனுக்கு பெலவீனமுண்டாகும்பொழுது: “என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று தன்னை தைரியப்படுத்திக்கொள்ளுகிறான். அவனுக்கு கஷ்ட நஷ்டங்களுண்டாகி சோர்பு நேரிடும்பொழுது: “நான் கர்த்தருக்கு காத்திருக்கிறேன், என் ஆத்துமா காத்திருக்கிறது, அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன்” என்று ஆறுதலடைகிறான். அவனுடைய ஜீவியகாலம் முடிவுக்கு சமீபமாகி தனக்கு அன்பானவர்களையெல்லாம் வழியனுப்பிக்கொள்ளும்பொழுது: “மரணமே உன் கூரெங்கே? பாதாளமே உன் ஜெயமெங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே, நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்” என்று ஆர்ப்பரிக்கிறான். இப்படிப்பட்டவனுடைய ஜீவியம் யாவரும் விரும்பத்தக்கதே. முந்தினவர்களுடைய ஜீவியத்தோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கிறிஸ்தவனானவன் தன் பேரிலே யாதொரு நம்பிக்கையும் வையாமல், தன் இரக்ஷகர் பேரிலேயே பூரண நம்பிக்கையுள்ளவனாயிருக்கிறான். அவனுடைய

அஸ்திபாரம் மணலின்மேலல்ல, கற்பாறையின்மேல் போடப்பட்டிருக்கிறது.

உனக்கு இளைப்பாறுதலும், சமாதானமும், வழிகாட்டியும், இரக்ஷிப்பும் அவசியமாயிருக்கிறதா? இவைகளை அடைந்துகொள்ளுகிறதற்கு தகுந்த வழி ஒரு சிறு குழந்தை முதலாய் அறிந்துகொள்ளக் கூடிய அவ்வளவு சுலபமாயிருக்கிறது. பெருமிதமான, அறிவில்லாத, சாதாரண மனிதருங்கூட இவைகளை பெறுவதற்கேற்ற சுட்டிவாசலை லகுவாய் கண்டுகொள்ளலாம். நீ உன் வேதாகமத்தை திறந்துபார், திறவுகோல் அதிலே இருக்கிறது. நீ உன் முழங்காலில் நின்று தேவன் உன்னை ஆசீர்வதிக்கும்படி பணிவாய் வேண்டிக்கொள். தேவன் அங்கே உனக்காக காத்துக்கொண்டிருக்கிறார். நீ உன் குழந்தை பிராயத்திலே படித்த யோவான் 3: 16-ம் வசனத்தை திருப்பிப்பார். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனையடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." நீ பாவம் செய்து தண்டனைக்கு பாத்திரனாயிருக்கிறாயென்று வேதம் உன்னை எச்சரித்தபோதிலும், இயேசுகிறிஸ்து கல்வாரி மேட்டிலே நமக்காக நமது கடனை செலுத்த மரித்தாரென்கிற சத்தியத்தினால் நமக்கு தைரியத்தையும் உண்டுபண்ணுகிறது.

இதுதான் ஜீவனுக்கு போகும் பாதை. மற்ற வழிவகைகளெல்லாம் மரணத்தையும் நிந்தையையுமே நமக்கு வருவிக்கும். பாவிகள் உட்பிரவேசிப்பதற்கு இதே ஒன்றான வழி. ஆகையால் சுய நீதியை நம்மை விட்டு அப்புறப்படுத்தி கெட்ட குமாரனைபோல "நான் எழுந்திருந்து என் பிதாவினிடத்திற்கு போவேன்" என்று புறப்பட்டு கிறிஸ்துவின் முன்னிலையில் தேவனுடைய இரக்கத்திற்காக வேண்டிக்கொள்ளுவோமாக.

---

## A PLAGUE OF DRUNKENNESS.

## மதுபான வாதை.

எகிப்தில் ஒரு தேவதூதன் தலைப்பிள்ளைகளை ஓரிரவு சங்காரஞ் செய்தபோது வீடுகள் தோறும் கூக்குரலுண்டாக்கின வாதையைப் பார்க்கிலும், கொடிய வாதையைப்பற்றி, இந்தச் சிறிய புஸ்தகத்தில் வாசிக்கிறோம். ஆகையா லதைப்பற்றிக் கருத்தா யறிந்து கொள்ள வேண்டியதவசியமாம்.

பாதாள அரசன் பரலோக ராஜ புதல்வரோடு, கல்வாரி மலைச்சாரலில் சமர்புரிந்து, சிரமுடைந்து கிரீடபங்கமடைந்ததை நினைப்பூட்டும் 18-ம் நூற்றாண்டு உற்சவத்தன்று, தொங்கு சடோபாரத்தின்மீது ஐந்தலை-நாக-பட-மகுடந்தாங்கி, வேலாயுதம், சூலாயுதமுங் கைப் பிடித்து; களாம்பழத்தைப் பழிக்கும் கரிய தேஜசுடைய 60 முழ உயரமும், 6 முழ அகலமுமான காத்திரமேனியுடைய பெயெல்செபூலாகிய வேதாளவேந்தன் கொலுவீற்றிருந்து, தம் மந்திரி, பிரதானி, படைத்தலைவர், சேனைத்தலைவராம் நரகவாசிகளான பூதகணச் சபையோரை நோக்கி, ஓ, நம் ஒட்டாரவுறவி குலப்பெருமான்களே, நமதருமைப் பேலியாளின் பிள்ளைகளே, கேளுங்கள், சவுல்கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரமென்றல்ல, இம்மாநுவேலரசருக்கு ஒன்று, பெயெல்செபூலுக்கோ பதினாயிரம் பிரஜைகள் உண்டு என்று சொல்லத்தக்கதாய், நாம் பார்க்கிற மண்ணுலக மெல்லாவற்றிற்கும் நாமே ஏகசக்கிராதிபத்தியம் வகித்து வரவேண்டுமென, நீங்கள் யாவரும் நம்மேல் ராஜபக்தியுடையவர்களாய், உழைத்து வருகிறீர்களென்பது லோகபிரசித்தமேயாம். இப்பரதகண்டமாகிய இந்தியாவில் மானிடஜாதியி லொருவனாவது, நமது எதிரிக்கு இல்லாமல், எல்லாரும் நமக்கே சொந்தமாயிருந்த காலம்போக, இம்மானுவேலரசரின் ஊழியரில், உல்லியம்



கேரி யெனபவரோடு சிலர் உத்தரபாகத்திலும், சுவார்ச், இரேனியூஸ் போதகர்களோடு சிலர் தக்ஷணபாகத்திலும் பிரவேசித்து, நமதாளுகைக் குட்பட்டிருந்த சிலரைப் பிரித்து, இம்மானுவேலரசருடைய பிரஜைகளாகச் சேர்த்தும், மலையாளத்தில் மறைந்து கிடந்த சீரியானியரைத் துலக்கி வெளிப்படுத்தியும், நமதாளுகையைப் பங்கப்படுத்தத் தலையெடுத்திருப்பதையும் அறிவீர்களே. நம் ஜாதிபேதத் தலைவனுடைய துவஜத்திற்குள் அமைந்த இப்பரதகண்டம், பலபாகங்களாகப் பிரிந்து, ஒருவரோடொருவர் போராடி வாதாடும் பல சிற்றரசாக்ஷிக்குள் மானிடஜாதி யகப்பட்டு, அலசடிப்படும்படியாக, நாம் செங்கோலோச்சும்போது, நமக்கு நாசகாலமாகவே, ஐரோப்பியர், அவர்களிலும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார், இவ்விந்தியாவினுள் நுழைந்து, சிலுவைக்கொடியேற்றி, இம்மானுவேலரசரின் பரிவாரத்தார், அவ்வரசருக்கு ராஜ்யபாரம் ஸ்தாபிக்க இடங்கொடுத்திருப்பதைத் தெரிந்துகொண்டீர்களா? மேலும் பிரிட்டிஷ் அரசாக்ஷியாரம்பித்த இவ்வளவு சொற்பகாலத்திற்குள், தேசத்திலுண்டாகி யிருக்கிற மாறுதல்களைக் கவனித்தீர்களா? சிற்றரசரும், குறுநில மன்னரும் செய்த சண்டை தொலைந்தது. கிராமங்களைத் தீக்கொளுத்திக் கொள்ளையடித்து, பெண்டுகள் பிள்ளைகளைச் சிறைப்பிடித்துக் கொலைசெய்து, விளைந்த மாகுலைச் சூறையாடி, ஆடுமாடுகளை கிரைசாய்த்துக் கொண்டுபோவது தொலைந்தது. மரத்தாலி கட்டும்படி செய்தகாலம் போயிற்று. தாலிக்கு ஒரு வேலி வேண்டியதில்லையென்றாகிவிட்டது. ஜனங்கள் தங்களுயிரைப்பற்றியும், பொருளைப்பற்றியும், பயமில்லாமல் பொருள் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

இவ்வாறு இந்நூற்றாண்டு முழுவதிலும் நடைபெற்றால், இந்தியாவின் மனுஷர் நாகரீகத்தில் தேர்ச்சியடைந்து, செல்வர்களாவார்கள். இப்போது கூழுக்குக் கஷ்டப்படுகிறவர்கள், இந்நூற்றாண்டின் முடிவில் கொக்கோ சாப்பிடுவார்கள். இப்போது கந்தைத்துணி கிடையாமல் வருந்துபவர்கள், விதவிதமான சம்பிளிக்கோட்டுகள், ஷர்ட்டுகள், பெண்டுலேம், கால்ஷராய், மேல்ஷராய், பாவாடை, தாவணி, பட்டுப்பட்டாவளி முதலான பல உடைகள் கட்டுவார்கள். காலுக்குச் செருப்பு இப்போ கிடையாது. அப்போதோ ஜப்பான் பூட்ஸ், அமெரிக்கன் பூட்ஸ், இங்கிலீஷ்பேட் பூட்ஸ் என்னும் பல தினுசான சப்பாத்துக்கள் போட்டுக்கொள்வார்கள். விதவிதமான தொப்பிகள், தலைப்பாகைகள் வைத்துக்கொள்வார்கள். ஒரு பணத்திற்கு விலையாகிற நன்செய் புன்செய் நிலம், ரூ. 250-க்கு நலவு சொல்லிக்கொடுப்பார்கள். ஓலைப்புரை, புல்லுப்புரை வீடுகளுக்குப் பதிலாக, மெத்தைமேல் மெத்தை வீடுகள், மாடமாளிகைகள், பங்களாக்களாக மாறிவிடும். இம்மானுவேலரசரை வணங்கும் ஆலயம், ஒன்றாக்கு ஆயிரமாகப் பெருகிவிடும். நம் ராஜ்யம் சிதைவுற்று, நம் பிரஜைகளில்பெரும்பான்மையோர்எதிரிவசம் போய் விடுவார்கள். நம் நரகலோகம் வெறுமையாகிவிடும். இவைகளைத் தீர்க்க ஆலோசனை செய்து, நம் ராஜ்யம் குறைவுபடாதபடிக்கு, என்னென்ன உபாயங்களைக் கையாடுவீர்களோ, அவைகளைச்செய்து களிமண்ணின் மக்களின் க்ஷேமத்தைத் தொலைத்து நம் நரகலோகத்திற்குத் திரள் கும்பைக் கூட்டுவீர்களாக என்று சொல்லவே, கேட்டின் மகனாகிய கிழமந்திரி, என் சகோதர பூதங்களே, ஒரே ஒரு ரகசியத்தை மனதில் வைத்துக்கொண்டு, அவரவருடைய அபிப்பிராயங்களை வெளியிட்டு நமதாண்டவனின் மனக்கிலேசத்தை மாற்றுவீராக. அவ்விரகசியம் யாதெனில், இம்மானுவேலரசர் தம்பிரஜைகளின் வெளிவேஷத்தைக் கவனியாமல், அவர்களுடைய முழு இருதயத்தாலும், தம்மை நேசிக்கிறார்களா வென்று பார்ப்பாரே யல்லாது, தம்மை நேசிக்கிறதோடு மற்றெவரையும் நேசிக்கிற பிரஜைகளை அங்கீகரிக்கவே மாட்டார். ஆதலினால், அவரது பிரஜைகள், அந்தரங்கத்தில் பெயெல்செபூல் அரசரையும் கொஞ்சம் நேசிக்கும்படி பிரயாசப்படுவீர்களாக என மொழிந்தான்.

உடனே பூதகணங்கள் ஏகமாய்ச் சந்தோஷித்தெழுந்து, கொக்கரித்துக் கூத்தாடி இது என்னால் முடியாதா வென்று புஜம் தட்டி ஆரவாரித்தனர்.

ஒருவன் சொல்லுகிறான்:—மேல்திசை நாகரீகம் இவ்விடத்திலுண்டாகுமென்பது மெய்தான். நாமோ அதைக் கீகரீகமாகப் புரட்டிவிடலாம். கல்வியதிகப்படும். நாமோ இவ்வுலக ஞானத்தைக் கொண்டு தேவஞானத்தில் மூடர்களாக்கிவிடலாம். நமதரசன் பெயெல்செபூலைத் தெய்வமில்லையென்போனை, சிருஷ்டிகரான ஒரு தெய்வமேயில்லையென்னும் நாஸ்திகனுக்கி விடலாம். இம்மானுவேலரசரின் பிரஜைகளில் அநேகரை, வெளி வேஷதாரிகளாக்கி, நமதரசனுக்கு அடிமைகளாகத் திருப்பி விடலாம். தோலையுரியாமல் சுளையை விழுங்கி விடலாமெனப் பலரும் பலவாறு அட்டகாசஞ் செய்துகொண்டிருக்கும் போது, கேட்டின் மகன் ஒவ்வொரு விஷயமாய்ப் பேசி முடிவுசெய்யவேணுமென அமைதலுண்டாக்கினான்.

மதுபானி லேகியோனையும் அவன் தளகர்த்தர்களையும் நோக்கி, அவர்கள் இலாக்கா விஷயத்தைத் தீர்மானிக்க வேணுமென்று, பாதாள வேந்தன் ஆக்கியாபித்தார். உடனே மதுபானி லேகியோன் எழுந்து, அரசருக்கு அஞ்சலி வந்தனஞ் சமர்ப்பித்து, என் புஜபல பராக்கிரமம் ஆண்டவனுக்குத் தெரியாதா? பூர்வ எகிப்தில் தங்களது சிரேஷ்டபக்தன் பார்வோனைக் கொண்டு, பரலோக அரசனின் பிரஜைகளான இஸ்ரவேலரை நாம் அடிமைப்படுத்தி, கிஷ்ரேமாய்ப் பலவாறு ஒடுக்கின போது பரலோக ராஜன் எகிப்தியரை பத்துவாதைகளால் வாதித்து, கடைசியாய் "அதினாலே எகிப்து தேசமெங்கும் முன்னும் பின்னும் ஒருக்காலு முண்டாகாத பெரிய கூக்குரலுண்டாகும்" என்று சொல்லி, ஓரிரவு "நடுராத்திரியிலே சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் காவற்கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும் எகிப்து தேசத்திலிருந்த முதற்பேறனைத்தையும், பரலோக ராஜன் அவரது சம்மனசைக் கொண்டு சங்காரஞ் செய்து அழித்ததினால் "மகா கூக்குரல் எகிப்திலே யுண்டாயிற்று. சாவில்லாத ஒரு வீடுமிருந்ததில்லை" என்று சொல்லும்படியான அழுகையையும், கூக்குரலையு முண்டாக்கினதை நாம் பழிதீர்க்கும்படி, ஒரு தேசத்தில் மாத்திரமல்ல, வானத்தின் கீழுள்ள சகல தேசங்களிலும், ஒரு நாள் மாத்திரமல்ல, ஊழிகாலத்தின் பிரதிதினமும், ஒரு ஜாதி, ஒரு சமயம் என்று மட்டுப்படுத்தாமல், சகல ஜாதிகளையும், சகல மார்க்கத்தாரையும், உபாதித்து கூக்குரலுண்டாக்க ஆரம்பித்திருப்பதை உலகமறியாதா? இவ்விந்தியாவில் மேல்தேச நாகரீகத்தாலுண்டாகும் நன்மைக்குப் பதின்மடங்கு தீமையை வருவித்து விடுவோம். இப்பரதகண்டத்தில் ஆரியவேத காலத்தோர் சோமாவென்னும் புளிச்சிக்கொடியினாலுண்டாக்கும் மதுவையும் பலவித மாம்சத்தையும் சாப்பிட்டு வந்தார்கள். அப்பால் சைவமெனச் சொல்லிக்கொண்டு, யாகம், எக்கியம், வேள்வியென்று சில மிருகங்களை பலியிட்டு மதுவோடு மாம்சத்தையும் சாப்பிட்டு வருகிறார்கள். நவராத்திரியைப் போலுள்ள சில உற்சவகாலங்களில், சக்தி பூசை, இடும்பன் பூசையென பல பூசைகளின் பெயரால் மதுவருந்தி மாமிசபட்சணம் செய்து வருகிறார்கள். தாழ்ந்த குலத்தாரோ நம் சயித்தான்களுக்கு பல நாமங்களால் அம்மனென்றும், சாமியென்றும் சொல்லி மதுமாம்சங்களை வைதீகமாகவும், சாமானியமாகவும் சாப்பிடுகிறார்கள். நமது ஆக்கினைசக்கரத்தினாலோ-ஜாதிபேதம், சமயபேதம், மேன்மக்கள் கீழ்மக்கள், கற்றவன் கல்லாதவன், ஐசுவரியன் ஏழை, ஆண் பெண் என்னுந் தாரதம்மிய விகற்பமின்றி இந்தியாவின் கூக்குரலென்று, ஓலமிட்டு, ஓட்டாண்டிகளாகும்படி செய்து போடுவோம். என் பிராண சிநேகிதர்களான பூதகணாதிசேனாபதிகளே! முன்னுக்கு வாருங்கள், அவரவரால் ஏதேது சாதிக்கக் கூடுமோ, அதைச் செய்வோமென்று நமதரசன் பெயெல்செபூலுக்கு முன் ஒப்புக்கொண்டு, அவரவர் இடது பெருவிரலைக் கீறி அதிலிருந்து வரும் இரத்தத்தை இடது சுண்டுவிரலால் தொட்டு விரல்பதிவு அடையாள முகர் பதிப்பித்து நம் பரதமாதாவியாளுக்கு இராயசம் வாங்கி இபிலீசைக்கொண்டு உடன்படிக்கை எழுதிக்கொடுங்களென்று கூவியழைத்தான்.



புறப்பட்டான் அப்பா! தசக்கிரீவன், பத்து தலைகளோடும், இருபது கரங்களோடும், உதட்டிற்கு வெளியே ஒருச்சாண் நீண்டிருக்கும் வச்சிரத் தந்தங்களோடும், பசுமைத்திருமேனியோடும், சாத்தான்குட்டி அப்பொல்லியோன் வந்து, எனக்குத் திராக்ஷச்செடி ஒப்பந்தத்தைக் கொடும். என்பேர் எப்படியோ, அப்படியே நான் சங்காரனை என் சாமர்த்தியத்தைக் காண்பிக்கிறேன், என்று முழங்கினான். ஓய் சேனாபதியே! அந்தத் திராக்ஷச்செடி ஒப்பந்தத்தை ஐரோப்பியராலே உலகமுழுவதற்கும் நாசமுறுவிக்கும்படி வனசர்ப்பத்தலைவனுக்கு சர்வாதிக்கங் கொடுத்தாயிற்று. பிந்திய காலத்தில் நமதரசன் இந்தியாவுக்கென்று வேறே ஏதேனும் மாறுதல் செய்யுமட்டும் நீ அந்தத் தலைவனுக்கு சார்பாக இருந்து இத்தேசத்திற்கு வேண்டிய கெடுதியைச் செய்யென்று மதுபானி லேகியோன் கட்டளையிட்டான். அவனும்தற் குடன்பட்டான்.

சாத்தான்குட்டி ஹூசியர் எட்டுத்தலையும், பதினாறு கைகளுமுடைய கரிய சொரூபியாய் வெளிப்பட்டு, கற்பகத்தரு ஒப்பந்தத்தையும், பஞ்சசிரசும், தசகரமும், இருண்ட ஸ்தூல பிரகிருதியுமுடைய இபிலீஷ் சாத்தான்குட்டி பட்டை ஒப்பந்தத்தையும், திசைச்சிரமும் திக்குக்கரமும் (4 தலையும், 8 கரமும்) அந்தகாரநிறமுமுடைய கொள்ளிவாய்ச் சாத்தான்குட்டி புகையிலை ஒப்பந்தத்தையும், எடுத்துக்கொண்டு, தனித்தனியே இராயசம் வாங்கி குருபியைக்கொண்டு உடன்படிக்கை எழுதி இரத்தக்குறி விரற்பதிவு செய்து கையொப்பமுமிட்டுக் கொடுத்த விபரமாவது:

I. சாத்தான்குட்டி அப்பொல்லியோன் உடன்படிக்கைச் சுருக்கம்.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேல்தேச நாகரீகத்தால் இந்தியாவிலுண்டாகும் ஐசுவரியத்தை தினுசுதினுசான பிராந்தி, உவைன், உஸ்கி, ஜின், ரம், பீர் முதலான மதுபான வியாபாரத்தால், ஐரோப்பியர் தட்டிப்பறித்து தக்க லாபம் சம்பாதிக்கவும், கவர்ன்மென்றார் மதுபான வியாபாரத்தைத் தடுக்கும் நோக்கமாக பலுவான தீர்வை ஏற்படுத்தவும் ஏவிவிட்டு, இந்தியாவில் ஐசுவரியமும், செல்வச்செருக்குமுள்ள எக்குலத்தோரும் கற்றோரும், மற்றோரும், மேற்சொல்லிய லாகிரி வஸ்துக்களை மருந்துக்கும் விருந்துக்கும், உபயோகப்படுத்துகிறோமென்பதாய், குடிகார ராக்கிவிட, பரதமாதாவாகிய உன் முன் பிரமாணஞ்செய்து கொடுத்திருக்கிறபடி முழுபலத்தோடும் முழுமனதோடும், உழைத்து உன் நரகலோகத்திற்குத் திரளான பிரஜைகளைத் திரட்டி வருவேனாகவும்.

II. சாத்தான்குட்டி ஹூசியர் மேற்சொல்லிய விதமாய் எழுதிவைத்த உடன்படிக்கையின் கருத்து:—நீறுட்சியென்னும் பாண்டியராஜன், தேவலோகத்திற்குப் படையெடுத்துப் போய்; தேவேந்திரனை ஜெயித்து, அரிச்சந்தனம், சந்தானம், பாரிசாதம், கற்பகம், மந்தாரமாகிய பஞ்ச தருக்களை, தன் ராஜதானிக்குக் கொண்டுவந்து விட்டதால், மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களடங்கிய, பாண்டிய நாட்டிற்குக், கள்நு என்னும் போதை வஸ்து வந்து விட்டதை ஞாபகப்படுத்துமாறு, பாண்டிய ராஜதானிக்கு மதுரை (கள்நு) என்னும் பேர் வாய்த்ததாம். இந்நாகரீக காலத்திலோ, கற்பக விருக்ஷமென்னப்படும் பனை, தென்னம்பனை, ஈந்தப்பனை, கூந்தப்பனை, தாளிப்பனையாகிய பஞ்ச விருக்ஷங்களை இந்தியருக்கு வேண்டியதெல்லாங் கொடுக்கும் விருக்ஷங்களாக பாவிக்கும்படி செய்துபோடுகிறேன். அவைகளில் பனை, தெங்கு, ஈந்து முதலியவற்றின் சாற்றை, சுண்ணாம்பு சேர்த்து இறக்கி, வெல்லம் கருப்புக்கட்டி கற்கண்டு முதலியவையாகவும், பனம்பழம் தேங்காய் ஈந்தம்பழம் முதலியவைகளாகவும், உணவு பொருட்களைச் சேகரித்து வந்தார்கள். சுண்ணாம்பு சேர்த்த பனஞ்சாற்றை பதனீர் என்று பருகுவதில் பாதகமில்லை. நாகரீகம், கீகரீகமாக மாறின பின்போ, மேற்படி ஐவகை விருக்ஷங்களிலிருந்து, புளித்த மதுவாகிய கள்ளிறக்கி, கீழ்மக்கள் மேன்மக்களான எக்குலத்தோரும், குடித்து வெறித்து உருண்டு புரளும்படி மயக்கி விடுவேனாகவும். இவைகளல்லாமலும் வேப்ப மரத்திலும் மது உற்பத்தி செய்ய பழக்குவிப்பேனாகவும்.

III. பட்டை ஒப்பந்தமெடுத்த சாத்தான் குட்டி இபிலீஷ் செய்த உடன்படிக்கையின் சாராம்சம்:—வேலம்பட்டை கருப்புக்கட்டி வேர்த்துவடிந்தால் சாராயமென்று முன்னோர்கள் சொல்லிவந்ததை நாகரீகத் தேர்ச்சியால் வேலம்பட்டையுடன், வேப்பம்பட்டை கருப்புக்கட்டி வேர்த்துவடிந்தால் சாராயம் என்று பணப் புஷ்டியற்றவர்களை, நாசமாக்கும் பானமாக உபயோகப்படுத்தும்படி செய்துபோடுவேனாகவும்.

IV. கொள்ளிவாய்ச் சாத்தான் குட்டியின் உடன்படிக்கையின் பொருள்:—இந்தக் களிமண்ணின் மக்களிலனேகரை சுருட்டு, பீடி, சிகரெற்று பிடிக்கும் கொள்ளிவாய்ப் பிசாசுகளாக்கி நம் மதுபானி லேகியோனின் வேலைக்கு பயனீர்பட்டாளமாக உழைக்கும்படி, இந்தப் புகையிலை ஒப்பந்தத்தின்மூலமாய், பேலியாளுக்கு உண்மையுள்ள தளகர்த்தனாக உழைத்து வருவேனாகவும் என்று நான்கு சேனைத் தலைவரும் உடன்படிக்கை செய்தார்கள்.

மதுபானி லேகியோன் தம் தளகர்த்தர்களைப் புகழ்ந்து வியந்து, நீங்களடைந்திருக்கும் கல்வித்தேர்ச்சிக்குத் தக்கதாக செய்துகொடுத்த உடன்படிக்கையும், ரத்தக்குறி விரற்பதிவும், ஆணை சத்தியங்களும், நமது பாதாள வேந்தனுக்கு மிகவும் திருப்திகரமாயினும், அவரவர் பொறுப்பை நிறைவேற்றும் வகையைச் சற்று விபரமாயறிய விரும்புகிறேனென்று கூறவே, கொள்ளிவாய்ச் சாத்தான் குட்டி துள்ளிக் குதித்துச் சொல்லுமாறு:—

(இன்னும் வரும்.)

---


**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500 க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500-க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழுகிய கைகள் 8 பக். 100-க்கு .... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தமையன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு .. ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| குசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ், 100-க்கு | 0 | 8 |
| எல்லவளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுய நீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனைது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |




INTERNATIONAL SUNDAY SCHOOL LESSON-PICTURES FOR NOVEMBER, 1911.

ஓய்வுநாள் பள்ளிக்கூட பாடங்களுக்கடுத்த படங்கள்.—நவம்பர்மீ.

ESTHER PLEADING FOR HER PEOPLE Esther 4: 1-10; 5: 3.



நவம்பர் 5. எஸ்தர் தன் ஜனத்துக்காக மன்றாடல். எஸ். 4: 1-10; 5: 3.

November 12. BELSHAZZAR'S FEAST AND FATE. (TEMP. SUNDAY.) Daniel 5: 1-21.




நவம்பர் 12. பெல்ஷாத்ஷாரின் விருந்தும் அவன் சம்பவமும். தானி. 5: 1-21.

November 19. EZRA'S JOURNEY TO JERUSALEM. Ezra 8: 1, 15-23.



நவம்பர் 19. எஸ்றா எருசலேமுக்குப் பிரயாணஞ் செய்தது. எஸ். 8: 1, 15-36.

November 26. NEHEMIAH'S PRAYER. Nehemiah 1.



நவம்பர் 26. நெகேமியாவின் ஜெபம். நெகே. 1.

# மாதர் மித்திரி.

புத். ௨௫. ௧௯௧௧ ௵ - டிசம்பர் ௴. இல. ௬

## MEANING OF ORDINATION

இராகம், அசாவேரி. ரூபகதாளம்.

**பல்லவி.**

அபிஷேகஞ் செய்துவைத்தாரே—குருமார் கூடி;
அன்புகொண் டாடினாரே.

**அனுபல்லவி.**

ஜெபதப சிந்தையார,—அபசாரம் யாதுந் தீர்,
தேவதூதர்கள் பாட,—கோவிலிற் பலர் கூட,— அபி.

**சரணங்கள்.**

1. திரள், திரளாகச் சேர்ந்த—ஜனங்கள் கண்டுமகிழத்
திவ்யவா ரணமுறைச்—செயல்கள் பல நிகழ,
அருளளி யன்பமைந்தோர்—அருகினின்று புகழ,
அஞ்ஞான திமிரம் போக்—கருண னீயாவையென்று— அபி.

2. ஆனமந்தையை மேய்க்கும்—அருளார்கோனே னீயாவை,
அகிலத்தாரேற்றிப் போற்றும்—அழகிய தீபம்போல்வை,
வானமிருந்துவரு—மாவி வதிய வாழ்வை,
மாசணுகாத வாசீர்—வாதம்பெறுவை யென்று— அபி.

3. வலக்கரங் கொடுத்துான்—மந்தையை யொப்படைத்து,
வகைவகை செய்கடமை—வகுத்து வகுத்துரைத்து,
கலக்கமில் லாமலதைக்—காத்துப் புன்மேய்ச்சல்காட்டி
காலந்தொறுஞ் சுனைநீர்—காதலா யூட்டென்று— அபி.

4. அன்பார் நாயகியுடன்—அன்யோன்யமாக வாழும்
ஆசை நாயகன்போல,—அங்கத்தாருடன் சேர்ந்து
துன்பம் நெருங்கி யென்ன—துயரம் வளைந்துமென்ன
துண்ணு சாடுசிபோற்—றுலங்க வாழ்தியென்று— அபி.

5. கரங்கள் சிரத்தில் வைத்து—கண்ணிலானந்தபாஷ்பம்
கசிந்து வழியநின்று,—கர்த்தாவிப்பத்தற்கின்று
சுரந்தாவி மழைபோலச்—சொரியுஞ் சொரியுமென்று
சோபனஞ் சொல்லித்தேற்றி,—தொடர்ப்பாய்ப் பிரார்த்தித்தேத்தி-அபி.

## THE FAITH THAT INSPIRES.

## உயிர் கொடுக்கும் நம்பிக்கை.

"நாங்கள் அலங்கத்தைக் கட்டிவந்தோம்; அலங்கமெல்லாம் பாதிமட்டும் ஒன்றாய் இணைந்து உயர்ந்தது; ஜனங்கள் வேலைசெய்கிறதற்கு, ஆவலாயிருந்தார்கள்" நெகேமியா 4: 6.

நெகேமியா பாபிலோனிலிருந்து திரும்பிவந்தபொழுது அவன் செய்யவேண்டிய வேலை மிகவும் கஷ்டமானதாயிருந்தது. தேவாலயத்தைக் கட்டிமுடித்தான், ஜனங்கள் குடியிருக்க சில வீடுகளையும் கட்டி முடித்தான். ஆனால் பட்டணமானது இன்னும் அழிந்து குப்பை மேடாகவே இருந்தது. திருடரும், கொள்ளைக்காரரும் இலேசாய் உட்பிரவேசிக்கத்தக்கதாக அலங்கத்தின் சுவர்கள் எழுப்பப்படவில்லை. ஆகையால், ராஜாங்க முறைமையும் ஆராதனை முறைமையும் நடத்தப்படக்கூடாமலிருந்தது. ஆதலால் நெகேமியா எருசலேமைப் பார்த்தபொழுது அவனுடைய இருதயம் மெழுகுபோல் கரைந்து, அவனுடைய நம்பிக்கை சோர்வடைந்தது. பாபிலோனிலிருந்து அவன் புறப்பட்டு வருகையில் அவனுக்குள்ளுண்டாயிருந்த திடதைரியமும் நம்பிக்கையும் அற்றுப்போய் தான் கோரியிருந்த வேலைகளை விட்டுவிடலாமோ என்று எண்ணமுண்டாயிற்று.

ஒரு கட்டடம் அழிந்துகிடக்கும் நிலைமையைப் பார்க்கும்பொழுது அதை முன்னிருந்த ஸ்திதிக்கு கட்டி எழுப்பி முடிப்பது முதல் முதல் அதைப் பார்க்கும்பொழுதே அதைரியத்தை உண்டுபண்ணும். முன் குடியேறியிராத ஒரு இடத்தில் புதிதாய் ஒரு பட்டணத்தை கட்டதுணிந்தால் அதில் யோசனைக்கும் நம்பிக்கைக்கும் தைரியமுண்டாகும். ஆனால் இடிந்துவிழுந்த குப்பைகளையெல்லாம் அப்புறப்படுத்தி, ஒடிந்துபோன சுவர்களை மறுபடியும் கட்டி எழுப்புவதும், அந்த பட்டணத்தின் அக்கிரமங்களும் பாவங்களும் காரணமாயிருந்து, சாபத்தீடான கூட கோபுரங்களை புதிதாகக்கட்டுவதும் அந்த வேலை செய்பவனுடைய மனதிற்கு எழுப்புதலை கொடுத்துக்கொண்டிராமல் ஆயாசத்தையே கொடுத்துக்கொண்டிருக்கும். பாழடைந்திருக்கும் அந்த இடம், புல்லும் செடிகளும் வளர்ந்து, காடடர்ந்துபோக விட்டுவிட்டு புதிதான வேறோர் இடத்தில் கட்டடங்களை கட்டி எழுப்பலாமென்று மனதிலே தூண்டப்படுவான்.

என்றபோதிலும், நெகேமியாவினுடைய விசுவாசமும், அவனுடைய தேசாபிமானமும், இவ்வித சோதனையை மேற்கொண்டது. அந்த பாழ்நகரத்தைச் சுற்றி நள்ளிரவிலே ஒண்டியாய் சவாரி செய்து பார்வையிட்டுக்கொண்டு வரும்பொழுது, அவன் மனதிலே எவ்விதமான யோசனைகள் உண்டாகி, அவன் இருதயத்திலிருந்து எத்தன்மையான விண்ணப்பங்களை ஏறெடுத்திருப்பான். அதை நாம் கிரகிக்கமுடியாவிட்டாலும், அவன் நிர்மானம் என்னமாயிருக்குமென்று நிர்மானிக்கலாம். எருசலேம் பேர்போன நகரமாயிருந்தது. அதின் பாவங்களின் நிமித்தம் தாழ்த்தப்பட்டு போயிற்று. திரும்பவும் அது சிறப்பான நகரமாகும், அதின் சுவர்களெல்லாம் இடிந்துபோயிருந்தபோதிலும், புதிதாய்க்கட்டி உயர்த்தப்பட்ட ஆலயத்தின் தூண்கள் பிரகாசமான நிலாவெளிச்சத்தில் கண்ணிற்கு அழகாய்த் தோன்றிற்று. பூமியின் சகல ஜாதியாரும் சீயோன் பர்வதத்தண்டையில் வந்து தமது நியாயப்பிரமாணங்களை கற்றுக்கொள்வார்களென்று யெகோவா செய்த வாக்குத்தத்தமானது நிறைவேறப்போகிறதென்பதற்கு அது ஒரு அச்சாரமாக தோன்றிற்று. இனிமேல் வரும் காலங்களிலே சீயோன் மலையிலிருந்து பிரகாசிக்கிற ஒளிக்கிரணங்கள் சகல தேசங்களையும் ஒளியுள்ளதாக்கும். அந்த தரிசினமானது மகா பெரிதும் சிறப்புமாக அவன் மனதில் பட்டபடியால் அவன் உள்ளக்கிளர்ச்சியும் திடநம்பிக்கையுமடைந்து, இடிந்துகிடந்த பாழான நிலைமையையும், அவன் வெகுநாளாகப்பட்ட அரும் பிரயாசங்களையும் மறந்து அப்பால் என்ன செய்யலாமென்று சிந்திக்கலானான். தன் ஜனங்களால் உண்டாகும் விரோதத்தையும் வெளிச்சத்துருக்களால் உண்டாகும் பகையையும் அவன் பொருட்செய்யாமல் தனக்குமிகவும் அருமையாயிருந்த பட்டணத்தின் சுவர்களை கட்டிமுடித்து அதற்கு நேரிட்டிருந்த நிந்தையை நீக்கிவிட துணிந்தான்.

இந்த கஷ்டமான வேலையை துணிந்து செய்வதற்கு அவனுக்கு பலத்தைக் கொடுத்தது அவனுடைய விசுவாசந்தான். தான் செய்யத் துவக்கிய வேலை எவ்வளவு கஷ்டமானதென்று அவனுக்குத் தெரிந்தது. ஆகிலும் அது தேவனுடைய வேலையானபடியால் அதை செய்துமுடிக்கும் சக்தியை அவரே கொடுப்பார். "பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்கு காரியத்தை கைகூடிவரப்பண்ணுவார், அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்" என்று சொன்னான்.

விசுவாசமானது கஷ்டத்தை அசட்டைபண்ணி காரியத்தை நிறைவேற்றுவதிலேயே கண்ணாயிருக்கும். அப்படியே நெகேமியா தான் கையிட்ட வேலையை வெற்றியுடன் செய்துமுடித்தான் என்று அறிந்திருக்கிறோம். நெகேமியா கொஞ்சம் கொஞ்சமாக இடிந்து கிடந்த திட்டுகளையெல்லாம் அப்புறப்படுத்தி பிரயாசத்தோடும் பொறுமையோடும் சுவர்களை கட்டி எழுப்பினான். அவன் இனைவுபோல் நினைத்தவைகள் மெய்யாகவே நிறைவேறிற்று. எருசலேமின் பலமான கோட்டை மதில்களும், அழகான கோபுரங்களும், கொத்தலங்களும் வானத்திற்கு நேராக எழும்பி நின்றது. தேவனுடைய பரிசுத்த சந்நிதியும், யெகோவாவின் பிரசன்னத்திற்கு அறிகுறியாயிருந்த ஆலயம் பூர்வகால மகிமைக்கொப்பாக கீர்த்தி பெற்று ஆசரிக்கப்பட்டு வந்தது. சன்பல்லாத், தொபியா, கேஷெம் முதலிய தேவனுடைய சத்துருக்கள் யாவரும் தங்களுடைய துர்நோக்கம் நிறைவேறாமல் அபஜெயமடைந்தார்கள்.

இவைகளெல்லாம் தன் தேசத்திற்கு வந்த நிந்தையென்று உணர்ந்து தேவனுக்கு முன்பாக தன் கோரிக்கையை அறிக்கையிட்டு தேவனால் நிறைவேற்றக்கூடாத காரியம் ஒன்றுமில்லையென்று உறுதியாய் நம்பின ஒரே மனிதனாலே நடந்தது. சந்தேகமும் அவநம்பிக்கையும் பேதமைத்தனமும் உடையவர்களாயிருந்த நெகேமியாவின் உடன் தேசத்தவர்கள் இவனுடைய விசுவாசத்தினாலும் வைராக்யத்தினாலும் ஏவப்பட்டார்கள். "என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன்; அப்பொழுது அவர்கள்: எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்."

நாம் உலகத்தை உற்று பார்க்கும்பொழுது, தேவனுக்குரிய பணிவிடையில்



10 JUN 1912 MADRAS

நம்மை அதைரியப்படுத்தி கலங்க செய்வது, பிசாசானவன் பாவங்களினாலே உலகத்தை அலங்கோலப்படுத்தி பலவித அசுத்தங்களால் நிறைத்துவைத்திருக்கிற குப்பைமேடுகளே. தேவனுக்கேற்ற அரண்மனைகளையும் வாசஸ்தலங்களையும் புதிதாய் கட்டினால் நலமாயிருக்குமென்று நாம் ஆசிப்போம். ஆனால் அது கூடிய காரியமல்ல. ஆகையால், தேவனுக்கு நகரத்தை கட்டி எழுப்ப விரும்புகிறவர்கள் முந்தின நாட்களின் கேடுபாடுகளை எதிர்த்து நின்று சீர்ப்படுத்தவேண்டியது அவசியம். அக்கிரமத்தின் பலாபலன்கள் தற்காலத்தில் ஜனங்களுக்குள்ளே காணப்படுகிற குடிவெறி முதலிய முறை கேடுகளினால் அறிந்துகொள்ளலாம். அவைகள் கிறிஸ்தவனை தன் உத்தம ஜீவிய பாதையில் முன்னேறி செல்லவொட்டாமல் தடைப்படுத்துகிறது. தேவனுடைய பரிசுத்த நகரத்தின் மதில்களை கட்டுகிறதற்கேற்ற முஸ்திப்புகள் தற்காலத்தில் பிரபலமாயிருக்கிற நாஸ்திகம், நிரிச்சுரவாதம், அவிசுவாசம், கொடுமை, சிற்றின்ப உல்லாசம் இவைகளிலிருந்து கிடைக்குமா? ஆம் அப்படித்தான் சம்பாதிக்கவேண்டியது. சகல விதமான குன்றுகளும் தாழ்த்தப்பட்டு, பள்ளங்களெல்லாம் மேடாகி, கரடுமுரடானவைகள் சமமாகி, உருக்குலைந்திருக்கிறவைகள் அழகுள்ளவைகளாய் விளங்குவதற்கு, அவசியமான ஒரே காரியம் நெகேமியாவுக்கு இருந்ததைப் போன்ற விசுவாசமே. தேவன் பேரில் விசுவாசமும், தான் கொண்ட நோக்கத்தில் உறுதியும் விடாமுயற்சியுமே சித்தி அடையும்.

தேவன் பேரிலும், பரிசுத்த ஆவியின் வல்லமையின் பேரிலும், விசுவாசத்தினாலும் ஜெபத்தினாலும் கிடைக்கும் பலத்தின்பேரிலும், நம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்களுக்கு எதுவும் அசாத்தியமாயிராது. கிறிஸ்தவ ஊழியர்கள் ஒவ்வொருவரும் தனக்கும் தேவனுக்கும் சம்மந்தம் இருப்பதை உணர்ந்துகொள்ளட்டும். பிரான்க்லின், சாஸ்திரியார், மேகத்திலிருந்து மின்சார அக்கினியை சம்பாதித்ததுபோல, தேவ பணிவிடையில் முயற்சித்துவரும் ஒவ்வொருவரும் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரோடு ஒரு ஐக்கியத்தை உண்டுபண்ணி, உன்னதத்திலிருந்து சக்தியைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கவேண்டும்.

அநேக தலைமுறைகளின் அக்கிரமங்களால் நிறைந்த குப்பைமேடுகளின் மத்தியில் தேவனுடைய நகரம் கட்டி எழுப்பப்படக்கூடும், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர், அவர் அதை நிறைவேற்றுவார். அவருடைய பணிவிடையாட்களாகிய நாம் எழுந்து நின்று கட்டடத்தை ஆரம்பிப்போமாக.

---

HOW BOYS LEARN TO BE KINGS.

## இராஜ குமாரரின் போதனை முறைமை.

சாதார்ண பிள்ளைகள் தாங்கள் படிக்க வேண்டிய பாடங்களை பார்த்து கலக்கமடைந்து நாங்கள் இராஜ குமாரராயிருந்தால் இவ்வளவு கஷ்டப்படவேண்டாமே என்று நினைப்பார்கள். ஆனால், அந்த இராஜ குமாரர் தாங்கள் உயர்ந்த பதவி அடையுமட்டும் மிகுந்த அரும்பிரயாசைகளுடன் கற்றுக்கொள்ளும் விஷயங்களை அறிந்த சிறுவர்கள் தங்களுடைய பாடங்கள் மிகவும் சுலபமென்று கண்டுகொள்வார்கள்.



இராஜ குமாரர்கள் ஐந்தாறு வயதாகும் முன்னதாக நாலைந்து பாஷைகளையாவது கற்றுக் கொள்ளவேண்டும். ஏனென்றால் தங்கள் அரண்மனைக்கு வாத்துபோக்காக இருக்கிற மற்ற இராஜாக்களோடும், பிரபுக்களோடும், அயல்தேச ஸ்தானுபதிகளோடும், பரதேச மந்திரி பிரதானிகளோடும், பற்பல நாடுகளிலிருந்து வரும் கப்பல் தளகர்த்தரோடும் அவர்கள் தாராளமாக சம்பாஷிக்க அறிந்திருக்கவேண்டியது.

இதுவுமன்றி, பற்பல தேசத்து சரித்திரங்களை அவர்கள் அறிந்திருக்கவேண்டும். சுயதேச நடபடிகளையும், அயல்தேச சரித்திரங்களையும் கற்றறிவதோடு, யுத்தங்கள் ஏன் உண்டாகிறது, அவைகள் எப்படி நடத்தப்படவேண்டியது, அவைகள் நடக்கும்போது எவ்வித ஆயத்தங்களை செய்துகொள்ளவேண்டும்? ஒரு தேசத்தின் சரித்திரத்திற்கு ஆதாரங்கள் எவை? செங்கோல் முறைமைக்கேற்ற உத்தம சட்டதிட்டங்கள் எவை? அவைகளால் விளையக்கூடிய நன்மை தீமைகள் எத்தன்மையனவாய் இருக்கும்? இவைகளையெல்லாம் திட்பநுட்பமாய் விசாரித்தறியவேண்டும்.

ஒரு இராஜ குமாரன் பயிலவேண்டிய கஷ்டமான பாடங்கள் இவைகள் மாத்திரமல்ல, சாதாரண பிள்ளைகளைபோல் அவர்கள் துஷ்டராய் திரியவிடப்படமாட்டார்கள். ஏனென்றால், அவன் நடப்பிக்கிற ஒவ்வொரு காரியமும் அவன் ஜீவியத்தில் ஒரு முக்கிய ஏதுகரமாக முடியும். இப்படி, மிகுந்த கட்டுதிட்டத்தில் வைக்கப்படுவது அவன் கற்றுக்கொள்ளும் பாடங்களில் அதிக வருத்தமாகத் தோன்றும்.

இத்தாலி தேசத்துக்கு தற்காலம் அரசனாயிருக்கிறவர் மிகுந்த சிறுவனாயிருக்கும்பொழுதே இந்த வித்தியாசங்களை அறிந்துகொண்டபடியால், நேபில்ஸ் இளவரசர் என்று அவருக்கு பட்டப்பெயருண்டாயிற்று. அவருடைய தாயாகிய ராணி மற்ற சிறுவர்களும் அவருடன் வந்து விளையாடும்படி சம்மதித்திருந்தார்கள். மற்ற பிள்ளைகள் தாங்கள் பிடித்ததை சாதிக்கும் வண்ணமாகவே இவரும் நடந்துகொள்ள ஆசித்தார். அவருடைய தாயாருக்கு இது சற்றும் பிரியமாயிருக்கவில்லை. அந்த அம்மாள் மகனை அழைத்து நீ மற்ற எல்லா பிள்ளைகளையும்விட அதிக மரியாதையுள்ளவனாய் நடந்துகொள்ள வேண்டுமென்றும், நீ இராஜ குமாரனாயிருப்பதால், அவர்கள் உனக்கு இணங்கிப்போக வேண்டுமென்று ஒருக்காலும் ஆசிக்கலாகாது, நீயே அவர்கள் விருப்பத்திற்கு இணங்கி நடக்கவேண்டுமென்றும் புத்திசொல்லுவார்கள். மற்றப் பிள்ளைகள் இந்த இராஜ குமாரனுடைய எண்ணத்திற்கு சம்மதித்தாலல்லாமல் இவர் யோசித்ததையெல்லாம்கொண்டு நடத்தவேண்டுமென்கிற க்ஷாத்திரம் தனக்கு இருக்கக்கூடாதென்கிற சத்தியத்தை அவர் கற்றுக்கொண்டார்.

ஒரு நாள் நேபில்ஸ் இராஜ பிரபு தன் விளையாட்டுத் தோழரில் ஒருவனோடு வாஸ்தவத்தில் சண்டையிட நேரிட்டது. அந்த பையன் இராஜகுமாரனைப்பார்த்து "நீ எங்களோடு நியாயமாய் விளையாடவேண்டுமென்று இராணியார் சொல்லியிருப்பதால், நீ உன் மனம் போலவே நாங்கள் நடக்கவேண்டுமென்று பிடிவாதம் பண்ணுவது தகுதியுள்ளதல்ல" என்று சொன்னான். அப்பொழுது

இராஜ பிரபுவுக்கு சாதாரண் பிள்ளைகளுக்கு உண்டாவது போன்ற உக்கிர கோபம் உண்டாகி கூட்டத்தில் விளையாடின சிறுவரை பார்த்து "இப்பொழுது நான் விட்டுவிடுகிறேன், தற்சமயம் உங்கள் மனம்போல நடக்க விட்டுவிடுகிறேன், நான் வளர்ந்து இராஜனாகும் காலத்தில் உன்னை சிரச்சேதம் செய்வேன்" என்று சொன்னார்.

இப்படி பிள்ளைகள் விளையாடும் தருணங்களிலெல்லாம் பெரியவர்கள் யாராவது பக்கத்தில் நின்று மோசம் நேரிடா வண்ணம், கவனித்துக்கொண்டிருப்பார்கள். ஏனென்றால், இராஜ குமாரனுக்கு ஏதாவது சம்பவிக்குமானால் அது பெரும் ஆபத்தாய் முடியும். அப்படியே இராஜ குமாரனை கண்காணித்து வருபவர் பக்கத்தில் நின்று இராஜ குமாரன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அம்பர்ட் ராஜனுக்கும் மார்கரட் ராணிக்கும் அதை அறிவித்தார்.

அப்பொழுது இராஜனும் இராணியும் நேபில்ஸ் பிரபுவை தங்கள் சமுகத்தில் வரவழைத்து அவரோடு மிகவும் கண்டிப்பாய் பேசினார்கள். அவர்கள் அவரை நோக்கி "நீ ஒருபோதும் இவ்வித வார்த்தையை இனி சொல்லலாகாது. நீ இராஜனாகும்போது, உன் இஷ்டப்படி நடவாத எல்லா ஜனங்களுடைய தலைகளையும் வாங்கிவிட உனக்கு அதிகாரமுண்டென்று நினையாதே," என்று கண்டித்ததோடு விட்டுவிடாமல், அவரை மூன்று நாள் இரவும் பகலும் இருட்டறையிலே அடைத்துவைத்து ரொட்டியும் குளிர்ந்த ஜலமுமட்டும் அவருக்கு ஆகாரமாக கொடுத்து இதைப்பற்றி தீர்க்காலோசனை செய்து, இப்படிப்பட்ட வார்த்தைகளை இனிமேல் ஒருக்காலும் யோசிக்கவோ பேசவோ மாட்டேனென்று உறுதிவாக்கு அளிக்கும்படி திட்டம் செய்தார்கள்.

இந்த சரித்திரத்தை இத்தாலி தேசத்தில் நான் சிறு பிள்ளையாயிருக்கும்பொழுது கேள்விப்பட்டு, இராஜகுமாரனுக்கு இது மிகுந்த கஷ்டகாலமாயிருக்குமேயென்று யோசித்தேன். இதைக் கேள்விப்படும் மற்றவர்களுக்கும் அவ்விதமான எண்ணமே உண்டாகலாம். இராஜ பிரபுக்கள் தங்கள் பேச்சு வார்த்தைகளிலும் நடபடிக்கைகளிலும் மிகுந்த எச்சரிக்கையாயிருக்கவேண்டியது நியாயந்தான். ஏனென்றால் அவர்கள் செய்கிறவைகளை ஒவ்வொருவரும் கவனிப்பார்கள். அவர்கள் துஷ்டர்களாயும், மரியாதையற்றவர்களாயும் நடப்பார்களேயானால், அவர் ஆளுகைக்குட்பட்ட பிரஜைகள் யாவரும் இப்படித்தான் இருப்பார்களென்கிற எண்ணம் உண்டாகும். ஒவ்வொரு சிறுவனும் தான் முரட்டாட்டமும் அறிவீனமுமாய் நடந்தால் எல்லாரும் இதை அறியாவிட்டாலும் தங்கள் ஜாதிக்கே ஈனமாயிருக்குமென்று உணரவேண்டியது. சிறியோரும் பெரியோருமாகிய நாமெல்லாரும் நம் ஒவ்வொருவருடைய நடக்கைகளினாலும், நல் நடக்கைகளினாலும் நம்முடைய தேசத்தின் மகிமையை முன்னுக்கு கொண்டுவரலாம்.

---

## A PLAGUE OF DRUNKENNESS.

## மதுபான வாதை.

(தொடர்ச்சி.)

1. அரசே! அமைச்சே! அன்புள்ள தளவாய்களே! செவிகொடுப்பீர்களாக. ஆறும் நாளின் சிருஷ்டியான இந்தக் களிமண்ணின் மக்களிற் சிலர் என்னைக் கொள்ளிவாய்ப்பிசாசென்று நிந்தித்ததை கேள்விப்பட்டு மனவருத்தங் கொண்டேன். ஆனாலும் பரதமாதா



பேலியாளின் கிருபையால் தைரியமடைந்து, அதற்குப் பழிவாங்குமாறு, புகையிலையைக் கொண்டே அம்மானிட ஜாதியை, அவர்களே ஒருவருக்கொருவர் கொள்ளிவாய்ப் பிசாசுகளென்று சொல்லிக்கொள்ளும்படி செய்துவிடுவேன். மானிடர் பழகும் எவ்வித துர்ப்பழக்கமும், நம் பாதாள ராஜ்ய விருத்திக்கு உபகரணமாம்; தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் செல்லும். துர்ப்பழக்கமுடைய ஒவ்வொருவனும், நம் வலுசர்ப்பத் துவஜத்திற்குட்பட்டவனாக, மற்றவனையும் துர்ப்பழக்கஞ் செய்யும்படி ஏவிவிட்டு, நமது வேலைக்கு உதவி செய்வானென்பது, எங்களப்பனாணை நிச்சயம். ஜட்காவண்டி ஓட்டுகிறவன் மாடுமேய்க்கிறவனைப் போலுள்ள ஏழைகளைச் சிறுவயதிலேயே வேடிக்கையாக, ஜவடால்காரன் என்று ஒருவனை யொருவன் சொல்லிக்கொள்ளும்படியாக, சொற்பச் செலவிலே பழக்கி, ஒரு துர்ப்பழக்கத்திலிருந்து, மற்றொன்றிற்கு இழுத்துவிட்டு, மரணத்தோடு முடிவடையச் செய்யத்தக்க வஸ்து புகையிலையேயாம். மேலும் புகையிலைச் செடிக்கு கஞ்சாச் செடியும், கற்பகத் தருக்களும் நெருங்கின உறவினராம். பூர்வத்தில் இப்பரதகண்டத்தில் புகையிலையைக் கருப்புக் கட்டிசேர்த்தும், சேராமலும் தாம்பூலத்தோடு உபயோகித்தார்கள். வெள்ளைப்புகையிலையை நாசிக்குத் தூளாக உபயோகித்தனர். அப்பால் நம் வலுசர்ப்பக் கொடியோருடைய பிரயாசையினால் புகையிலையை ஆவன்னாச்சுருட்டு, மேனிலாச்சுருட்டு, திண்டுக்கல், திருச்சினாபள்ளி, வேலூர், தம்பம்பட்டி சுருட்டுகளென்றும், சிகரெற்றுகள், பீடிகளென்றும் பலவகையாகச்செய்து பெரும்பான்மையோர் வேடிக்கையாகவும், சிலர் மலபந்தம், வாய்வு முதலியவைகளுக்கு மருந்தாகவும், வேறு சிலர் தாங்கள் உட்கொண்ட மதுபானத்தினால் வாயிலிருந்து வெளிப்புறப்படும் துர்நாற்றத்தை மாற்றும்படியாகவும், அல்லது போதையை அதிகப்படுத்தும்படியாகவும், சுருட்டுகளிலும், சுங்கான்களிலும் தீயைக் கொளுத்தி வாயில்பிடித்து புகையை உபயோகிக்கும்படி செய்து சிறுப்பத்திலும் வேடிக்கையிலும் ஆரம்பித்தது மரணம்வரை பிரியாமலிருந்து அவர்கள் பற்களை பாலியத்திலேயே பிடுங்கி, ஈரற்குலை முதலிய உள்ளுறுப்புகளையும், நாடி நரம்பு முதலியவைகளின் தொழிலையும், பலவீனப்படுத்தி பல பிணிகளுக் குணவாகவுஞ் செய்துபோடுவேன். ஜட்காஓட்டி, மாடாடுமேய்க்கிகளான ஏழை நிஷ்டூர குணிகளை மட்டுமென்று நினைக்கவேண்டாம். அவர்களில் ஆரம்பித்த சனியன், பள்ளிக்கூடப் பிள்ளைகளையும், கௌரவப்பட்டதார்களாகும்படி கலாசாலைகளிற் படிக்கும் வித்தியார்த்திகளையுந் தப்பவிடவில்லை. இவர்களுள் பெரும்பான்மையோரை, ஐஸ்கூலிலேயே எனக்கு அடிமைகளாக்கிக் கொள்வேன். அதற்கு மேற்படிப்புக்குப் போவோரை முக்கால்வாசிப்பேரையாவது பிரமச்சாரியின் தோழன் (Bachelor's Companion) எனப் புகைப்பிடிக்கப் பழக்கி, பூட்ஸ், ஆற்றுஸ் (Boots, Hats.) களால் மயக்கி பிராந்தி, ஜின், உஸ்கிகளுக்குத் தொண்டர்களாக்கி, உத்தியோகம் வகிக்கும்போது, சுருட்டுச்சனியன், உஸ்க்கிச்சனியன், தன்னைப் பிடித்துக்கொண்டதாக, மதுபானிலேகியோனின் ஆளுகையின்கீழ் முறையிடச் செய்வேன். அவர்களைச் சேர்ந்தவர்களையும் மறக்கமாட்டேன். அம்மனுஞ் சாமியும் நூதன உடைதரித்து, எத்தும் எதிருமாக ஈசிச்சேயரில் உட்கார்ந்திருக்கும்போது புருஷன்வாயில் கொள்ளி எரிய பெண்டீர் சம்மதிப்பளோ! இருவரும் ஒரே சரீரத்தையுடையவர்களல்லவா! ஆதி நந்தவனத்திலுண்டான ஒற்றுமையல்லோ இக்கோலமாக்கி வருகிறது. ஆணைப் பிடித்த மலபந்தமும், வாயுச்சேட்டையும், பெண்ணையும் பிடித்துக்கொள்ளாதோ! சுருட்டு, பீடி, சிகெரெட்டு, சுங்கான் பிடிப்போரில் 100 க்கு 90-பேரையாவது, கள்ளு, சாராயம், உஸ்கி, ஜின், பிராந்தி முதலியவைகளை பாயசம்போல உட்கொள்ளச் செய்து போடுவேன் என்று முடித்தான்.

2. சாத்தான்குட்டி அப்பொல்லியோன் மொழிவது:—நம் வலுசர்ப்பக் கொடிக்குள்ளான இந்தியரை, தாங்களே ஐரோப்பிய மதுபானங்களை உண்டுபண்ணும்படி பழக்குவிக்க நமதரசன் உத்தரவு கொடுக்கு மட்டும், ஐரோப்பாவிலிருந்து உலகமுழுவதையும் மதுபானத்தால் கெடுக்க, சர்வமுக்ஸ்தியார் நாமாப்

பெற்றிருப்பவரோடு ஜாயிண்டாக உழைத்து வரும்படி நான் ஒப்பந்தம் செய்திருக்கிறேன். இதற்காக என் உத்தியோகஸ்தரில் சிலரைப் பல பவிஞ்சாகப் பிரித்து, ஒன்றை மெடிக்கல் டிப்பாட்டுமென்றுக்கனுப்புவேன். இரத்தப் புஷ்டியில்லை, அன்னத்துவேசமாயிருக்கிறது, முகம் வெளுத்துப்போயிருக்கிறது, கைகால் அசதி, மேல்கால்வலி, நீர் கடுக்கிறது, வெள்ளை விழுகிறது என்று வைத்தியரிடம் முறையிடுவோருக்கு, பிராந்தியுடன் பாலும் முட்டையுஞ் சேர்த்துக்கொடு, குப்பு,பிராத் முதலியவைகளில் பிராந்தி சேர்த்துக்கொடு, உவிஸ்கியைக்கொடு, ஜின்னைச் சாப்பிடு, நீராளங்கட்டிக் கள்ளைச்சாப்பிடு. இது நிச்சயமான மருந்து. இது பெஸ்ற்று டானிக். பிள்ளை பெற்றவளுக்குப் பிரசவ மருந்தாகப் பிராந்தியைக் கொடு என்று சொல்லும்படி அவ்வைத்தியரை நம் பாதாளவேந்தனுக்கு கௌரவ வேலைக்காரராக்கி விடுவேன்.

மற்றொரு பவுஞ்சு விருந்துசாலைக்குப்போகும் சுபகால விருந்தினரை மகிழ்ச்சியாக்கும்படி, மேலே சொல்லிய பல தினுசான மதுபானங்களையும், ரொட்டி, பிஸ்கோத்து, கேக்கு, ரோஸ்று முதலானவைகளையும், தனித்த அறைகளிலும், பகிரங்க மேசைகளிலும் பரிமாறும்படி செய்வேன். துக்கசாகரத்திற் குட்பட்டவர்கள் மயான ஞானஉணர்ச்சியால் தங்கள் முடிவையும், கடவுள் தயவையும், கனவிலும் நினையாதபடி தடுக்கும் நோக்கமாக, அவர்களைக் குடிவெறியில் அமிழ்த்தி, சுருட்டுப் பிடித்து, பல சண்டை சச்சரவு செய்யவும், கூடுமானால் கச்சேரிவாசல் காக்கவும், காவற்கூடம்புகவும், ஆஸ்பத்திரியில் அலறவுஞ் செய்து விடுவேன்.

உற்சவப் பவுஞ்சு. கிறிஸ்தவர், மகமதியர், விஷ்ணுபக்தர், சிவபக்தர் ஏனைய சகலமதஸ்தரும், திருநாள், நோம்பு நாள், பண்டிகை நாளெனப் பலஉற்சவங்களைக் கொண்டாடுவார்களே. அந்நாட்களின் வைதீக அனுஷ்டிப்புக்களை, ஈசுப்ரபக்தியோடு நிகழ்த்தாமல், பெரும்பான்மையோரை மதுபான வகைகளைக் குடித்து, வெறித்துக் கூத்தாடி, உருண்டு புரண்டு, மதிமயங்கி. வார்க்கைகள் மட்டுத்தப்பாயும், உதாசினமாயும் பேசி, கைகலந்து மல்லாடி, மண்டையுடைத்து, மதுவியாபாரிகளின் பெட்டியை நிரப்பி, போலீசாரிடம் பல்கெஞ்சவுஞ் செய்வார்கள்.

வேறு சில பவுஞ்சுகள் பரத்தையர் ஆசிரமத்திற்கும், நாடகசாலைகளுக்கும் விஜயமாய் அவ்விடம் காமுகருக்கும் காமா குடிகளுக்கும் பரதேச சுதேச பானவகைகளைக் கொண்டாட்டமாக்கி திண்டாடச் செய்வார்கள் என்று சொல்லி முடித்தார்.

3. பட்டை ஒப்பந்தமெடுத்த இபிலீஷ் சாத்தான்குட்டி தன் சத்தத்தை உயர்த்தி வசனித்ததாவது:—வலுசர்ப்பக்கொடியின் கீழ் போர்செய்யும் சகலரும் சகோதர ஐக்கமுடையவர்களாய், ஒருவர் வேலைக்கு மற்றவர் சகாயஞ்செய்து, ராஜபக்தியுடையவர்களாய் வேலை செய்கிறபடியால், எனக்கு முந்தினவரும், பிந்தினவரும் செய்வதுபோல நானும் வேப்பம் பட்டை வேலம்பட்டை கருப்புக்கட்டி முதலியவைகளைக் கொண்டு, திராபகமாய் வடிக்கும் நாட்டுச்சாராயம், கண்டிரி ஸ்டவ் (Country Stuff) என்னும் மதுவை பணப் புஷ்டியற்றவர்களைக் குடித்துக் கூத்தாடச் செய்துபோடுவேன்.

4. கற்பகத்தரு ஒப்பந்த லூசிபர் சாத்தான்குட்டி சொன்னது:—பலவகைப் பனைகளிலிருந்து சுண்ணாம்பு சேர்த்து இறக்கும் சாற்றைப் பதனீர் என்று பலரும் பருகுவார். அதற்கு லாகிரியில்லை. சுண்ணாம்பு சேராவிட்டால் லாகிரிவஸ்தாகும். அதைக் கீழ்மக்களோ பானம்பண்ணி வந்தனர். சர்க்காரில் கள்ளேறும் பனைகளின்பேரில் தீர்வையையதிகரிக்கச் செய்துவிட்டபடியால், சுண்ணாம்பு சேர்த்துப் பதனியுடன், கொஞ்சங் கள் சேர்த்து ஏழைகளை ஏமாற்றி விற்கவும், செல்வச் செருக்குடையோருக்குச் சுயம்பான மது கிடைக்கவுந் திட்டஞ்செய்து மேல்மக்கள் கீழ்மக்களென்று வீம்பு பேசாமல், களிமண்ணின் மக்களெல்லாரும், அம்பட்டரல்லாத குடிமக்களாக்கிவிடுவேன். ஏழைகள், கள்ளுக்கடைகளில் போய் பட்டைகையேந்திக் குடிக்கவும், தனவான்கள் புட்டிகளிலும், பாத்திரங்களிலும், ஏவலாட்கள் மூலமாய் வருத்திக்குடிக்கவுஞ் செய்வேன்.



மதுபானத்தாலுண்டாகுங் கெடுதியை யாரால் விபரிக்கமுடியும். பொருளோ, புகழோ, புத்தியோ, தேக சுகமோ நஷ்டமாம். விபசாரம், களவு, விரோதம், சண்டை முதலியவை விருத்தியாம் என்று தன் வேலையின் பிரயோஜனத்தைச் சொல்லிமுடித்தான்.

**பாதாள வேதாள வேந்தனான பெயெல்செபூல்,** நரக வாசிகளான எனதருமைப் பூதகணங்களே, சாத்தான்குட்டிச் சேனாபதிகளே, எட்டாரலூசி குலமக்களே, நீங்களனைவோரும் ராஜபக்தியுடையவர்களாய் இந்தியாவின் பல பாகங்களிலும் படையெடுத்துச் சென்று, இம்மானுவேலரசருடைய ஆளுகைக்குட்படாதபடி, நரஜீவிகளைத் தடுத்துக் கெடுத்து, நம் வலு சர்ப்பக்கொடியின் கீழாக்கி மதுபானிகளாக்கி, எகிப்தின் கூக்குரலுக்கு எத்தனையோ ஆயிரமடங்கு அதிகக் கூக்குரலுடன், என்றும் அவியா எரிநரகத்திற்கு எரிதுரும்புகளாக்கிவிடும்படி உங்கள் பரதமாதாவாகிய பேலியாள் கிருபைபுரிவாளாக! என்று ஆசீர்கூறியனுப்பிவிட்டார்.

இதை வாசிக்கும் நண்பர்களே! கல்விப் பொருளிலும், செல்வப்பொருளிலுங் கியாதி பெற்றவனான ஒரு மனிதன், குடியில் படிப்படியாய்ப் பழகி, பொருளிழந்து, புகழிழந்து, வீடுவாசலிழந்து, பெண்டீர் பிள்ளை யிழந்து, உண்ணச் சோறும் உடுக்கத் துணியுமிழந்து, சுகமிழந்து, பலமிழந்து, ஊட்டி வளர்த்த சதையிழந்து, தெருவில் கிடந்து புரளுவதைப் பார்த்து, சீ! சிச்சீ! குடிகேடு! யாருக்கென்றாலோ! குடிக்கிறவனுக்கு மாத்திரமல்ல, அவன் குடும்பத்திற்குமே கெடுதியாய் முடியுமென்று அறிந்தவனும், மற்றவர்களுக்குப் புத்தி போதித்தவனுமான, அறிவானந்த முதலியென்று மிகச் சிறப்புற்று வாழ்ந்தோன், சில நாட்களுக்குப் பின், மதுபான நாச்சியாருக்குத் தொண்டனாகி, சகல மேன்மையும் பறிகொடுத்து, தெருவிலும், அடுத்த வீட்டுத்திண்ணையிலும், வாறு காலிலும் அலங்கோலமாய், உருண்டு புரளும்படி செய்துபோட்டால் மதுபானத்தின் வல்லமையையும், அதின் கொடுமையையும், மட்டிட்டெழுதுவது சாத்தியமாமோ! ஆகிலும் நாமும் சில புத்திமதிகளைச் சொல்வதைச் சிந்தனைசெய்ய வேண்டுகிறோம்.

சில வருஷங்களுக்குமுன் பாளையகாரனான ஒரு ஜமீன்தாரிடம் வயித்தியனாயிருந்த ஒரு கிறிஸ்தவனை யறிவோம். ஜமீன்தாரின் சிநேகிதர் ஒருவர் ஒருநாள் ஜமீன்தாரவர்கள் முன்புக்கு வைத்தியரைப் பார்த்து ஜமீன்தாரவர்கள் தேகம் வெளுத்து, களைத்துப்போகிறதாகத் தோன்றுகிறதே, நல்ல ஒரு டானிக் (Tonic) கொடுக்கக்கூடாதாவென்று பக்கவழியாய்ப் பல பேச்சுப்பேசி நேர்வழியாகவே, போர்ட்டு உவைன் கொடுக்கவேண்டுமென்று சொன்னார். வயித்தியனோ, மருந்துகளிலொன்றைக் கொடுப்பேனேதவிர, மதுபான வஸ்துக்களை மருந்தாகக் கொடுக்கமாட்டேனென்று, பிரதிக்கினை செய்திருப்பதாயும், அப்பிரதிக்கினை செய்யவேண்டிய முகாந்தரமின்னதென்றும் சொன்னார். அஃதெவ்வாறெனின், சில வருஷங்களுக்குமுன் ஆஸ்திரேலியாவில் மதுவிலக்குச் சங்கத்தைச் சேர்ந்திருந்தவொரு வாலிபன், கொடிய விஷச்சுரத்தினால் பீடிக்கப்பட்டு, ஆஸ்பத்திரியில் வந்து, சிகிச்சையடைந்து, சுகம்பெற்றான். பெலவீனமாயிருக்கும்போது, டாக்டர் கொஞ்சம் பிராந்தியைச் சாப்பிடக்கொடுத்தார். வாலிபனோ மறுத்து பலவாறு வாதாடினதிலும் பயன்படாமல், வயித்தியரின் வார்த்தையே மேற்கொண்டு, அவன் பிராந்தி சாப்பிட்டுச் சுகமடைந்து, அனுப்பிவிடப்பட்டான். அப்பால் சற்று சுகவீனம் வரும்போதெல்லாம், உவையின் பிராந்திகளைச் சாப்பிட்டான். சுகமாயிருக்குங் காலத்திலுஞ் சாப்பிட்டான். அப்பால் ஏதேனும் அற்பசுகத் தாழ்வுண்டாகும்போது வழக்கத்திற்குச் சற்று அதிகம் சாப்பிட ஆரம்பித்தான். அளவுப்படி சாப்பிட்டதை நிறுத்தி, உத்தேச மதிப்பின்பேரில் சாப்பிட்டான். கடைசியாய் சீசாவின் அடைப்பைத்திறக்க ஆயுதம் வருமட்டும் பொருக்காமல், புட்டியின் வாயைத் தட்டி யுடைத்துத் தன் வாய்க்குள்ளே தலைகீழாகக் கவிழ்த்துவிடும் சமர்த்தனாகிவிட்டான். பிராந்தியென்று ஆரம்பித்தது உவிஸ்கி, ஜின், உவையின்

முதலான சகல மதுபானங்களும் பற்றிப் பிடித்துக்கொண்டது. மதுபானியின் சகோதரி விபசாரியும் சிநேகமானுள். தட்டுக்கெட்டான். மெட்டுக்கெட்டான். சகலமுங்கெட்டான். ஜீவனமிழந்தான். கூட்டாளிகள் குடிகாரரே ஒன்று சேர்ந்தனர். கடன்கொடுப்பாரில்லை. கவலைப்படுவாரில்லை. உள்ளது உரியது எல்லாம் போயிற்று. பக்கத்துவீட்டு கோழி, புரு, வாத்து முதலியவைகளைத் திருடப் பழகி, பெரிய கொள்ளை, கொலைகள்செய்து, சூதாட்டத்திலும் திறமையாகி, ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குத் தாவினதின் பலனாகத் தூக்கு மரத்தடியில் வந்து சேர்ந்தான். சூழ்ந்து நின்று வேடிக்கை பார்ப்போரை, அவன் பார்த்து, மேலே சொல்லிய விபரங்களை விபரித்து, வைத்தியரே தன்னை இக்கெதிக்குள்ளாகும்படி கெடுத்துப்போட்டாரென்று, கேட்டோருள்ள முருகும்படியாயும், தீர்ப்பு நிறைவேற்றும்படி காத்துநிற்கும், டாக்டர் தலை கவிழ்ந்து வெட்கப்படும்படியாகவுஞ் சொல்லி முடித்து உயிரிழந்தான்.

மேலே சொல்லிய வைத்தியர், ஜமீன்தாரை விட்டுச் சில நாளைக்குப்பின் நீங்கிவிடவே, ஜமீன்தார் குடிவெறியில் மூழ்கி, பரத்தையர் கொடுத்த பாக்கியத்தால், படுக்கையும் பாயுமாகி, இளவயசில் அகாலமரணத்திற்குட்பட்டார்.

வைத்தியர்களே! உங்கள் நோக்கம் நல்லது தான். ஆனால் முடிவோ கசப்பு. நோயாளிக்கு தான்சாப்பிடுகிறது இன்னதென்று தெரியாதபடி, ஸ்பிரிட் வகைகளைக் கொடுக்கப்படாதா? எவ்வகையிலும், மற்றவர்கள் கெட்டுப்போகாவண்ணம் கவலையாயிருங்கள். நோயாளிகளே, மருந்தாக மதுபானங்களைச் சாப்பிடாதேயுங்கள். வழக்கமாக்கிக் கெடுத்துப் போடுவதினாலேதான், அதின் சாவகாசத்தை முற்றிலும் தள்ளிவிடுவது நன்கெனச் சொல்லுகிறோம். (இன்னும் வரும்.)

---

## Tamil Books and Tracts Published by
## Methodist Publishing House
### Mount Road, Madras

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500 க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500-க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தலைமயன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு .. ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| சூசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுய நீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் சீமானானது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100 க்கு ... ... | 0 | 8 |



## INTERNATIONAL SUNDAY SCHOOL LESSON-PICTURES FOR DECEMBER, 1911.
## ஓய்வுநாள் பள்ளிக்கூட பாடங்களுக்கடுத்த படங்கள்.—டிசம்பர்மீ.

December 10. NEHEMIAH AND HIS ENEMIES. Nehemiah 6: 1-19.



டிசம்பர் 10. நெகேமியாவும் அவன் சத்துருக்களும். நெகே. 6: 9-19.

December 17. EZRA TEACHES THE LAW. Nehemiah 8: 1-18.



டிசம்பர் 17. எஸ்றா பிரமாணங்களைப் போதித்தல். நெகே. 8: 1-18.

December 24. JESUS BORN IN BETHELEM. (Christmas Lesson.) Matt. 2 : 1-12.



டிசம்பர் 24. இயேசு பெத்லகேமில் பிறந்தது. (Christmas Lesson) மத். 2 : 1-12.

December 31. REVIEW.




டிசம்பர் 31. பழைய பாடப் பயிற்சி.

# மாதர் மித்திரி.

புத். உரு. ககூகஉ ஹு - ஜனுவரி மீ. இல. எ.

## WONDERS OF HIS COMING.

இராகம், அசாவேரி. கும்மிச் சிந்து.

### பல்லவி.

எனது கர்த்தரின் ராஜரீக நாள்
எப்போ வருகுமோ?
எங்கும் என் கவி நீங்கி மகிழ்ச்சி
எப்போ பெருகுமோ?

### அனுபல்லவி.

மனிதசுதனின் அடையாளம் விண்ணில் காணும், என்றுரே ;
வல்லமையோடு மகிமையாய்த் தோன்றி வருவேன், என்றுரே.— எனது

### சரணங்கள்.

1. தேவ தூதரின் கடைசி எக்காளம் தொனி முழங்கவே
ஜெகத்தில் யேசுவைப் பற்றி மரித்தோர் உயிர்த்தெழும்பவே,
ஜீவனுள்ளோரும் அவருடன் மறு ரூபமாகவே,
ஜெகத்தில் பக்தர்கள் கர்த்தரிடத்துக் கெழுந்து போகவே ;— எனது

2. தூதர் எக்காளத்தொனியிலென்னிடம் சேர்ப்பேன், என்றுரே ;
சோதனை காலந்தனில் தப்பவுன்னைக் காப்பேன், என்றுரே ;
பாதக மனுஜாதி வேதனை அடையும், என்றுரே ;
பாவ மனுஷன் தோன்றி நாசமாய்ப் போவான், என்றுரே.— எனது

3. சூரியன் இருளாகிச் சந்திரன் ரத்தமாகவே,
ஜோதி நட்சத்திரங்கள் அத்திக் காய்போல் உதிரவே,
பாரில் அக்கினி விழுந்து மூன்றிலோர் பங்கு வேகவே,
பயங்கள், பஞ்சங்கள், யுத்தங்கள், பூமி அதிர்தலாகவே ;— எனது



Their Imperial Majesties King George V and Queen Mary



THE KING'S VISIT.

## சக்கரவர்த்தி இந்தியாவை சந்தித்தது.

இதை வாசிப்பவர்களில் எத்தனை பேர் ராஜாவையும் ராணியையும் பார்த்திருப்பார்களோ எனக்குத் தெரியாது. அவர்கள் டெல்லிப்பட்டணத்தில் இருந்தபொழுது அங்கே போகும்படியான சிலாக்கியம் வாய்த்த பலர் தாங்கள் கண்ட அநேக வியப்பான காட்சிகளைக் கதையாய்ச் சொல்லுகிறார்கள். அங்கேதான் அவர்களிருவரும் இந்திய சக்கரவர்த்தியாகவும் சக்கரவர்த்தினியாகவும் பறை முறையிடப்பட்ட சடங்கு நிறைவேற்றப்பட்டது. இந்த முறைமையைக் கண்டுகளிக்க ஆசித்த எல்லாரும் சித்திபெறவில்லை. அதிஷ்டசாலிகளான சிலர் மாத்திரம் சமீபத்தில் போக ஏதுவிருந்தது. அநேகர் தூரத்தில் நின்று பார்த்து தாங்கள் கண்ட மட்டும் சந்தோஷமடைந்தார்கள். எல்லாரையும் சமீபத்தில் சேரவிடுவது அசாத்தியமாயிருந்தபடியால் பலர் வெளியிலேயே நின்றுவிட நேரிட்டது.

இந்தச் சடங்கை அநேகர் கண்ணால் காணக்கூடாதிருந்தும் வேறு அநேக காட்சிகளைக் கண்டுகளித்து ராஜாவையும் ராணியையும் மற்றும் பெரிய மனுஷர்களையும் அலங்காரமான பவனிபோகுதலையும் பார்த்து அககளிப்புக் கொண்டார்கள்.

நான் டெல்லிக்குப்போக ஏதுவில்லாதிருந்தும் ராஜா கல்கத்தாவுக்கு வந்தபொழுது கண்டுகொள்ள சிலாக்கியம் பெற்றேன். ராஜாவும் ராணியும் கவர்ன்மென்ட் மாளிகைக்கு பவனிபோவதை கண்டு களிக்கும்படியாக சிறுவரும் சிறுமிகளுமான பாடசாலை பிள்ளைகளுக்கென்று தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ராஜ பாதை ஓரமாய் அநேக ஆசனங்கள் போடப்பட்டிருந்தது. 20,000 பிள்ளைகள் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய தொகையே ஒரு பெரிய பட்டணத்தை குடியேற்ற போதுமானதாயிருந்தது. ஒவ்வொரு பிள்ளையும் தன் கையில் கொடி பிடித்துக்கொண்டு ராஜாவும் ராணியும் கடந்துபோகும் பொழுது அந்தக்கொடிகளை அசைத்துக்கொண்டு ஜார்ஜ் ராஜா நீடூழிவாழ்க, மேரி ராணி என்றும் வாழ்க என்று ஆர்ப்பரிக்கவேண்டியது. ஆனால் அந்தப் பிள்ளைகள் சமயத்துக்கு முன்னமே கொடிகளை அசைத்துக்கொண்டிருந்தபடியால் அசைகிற இந்தக் கொடிகளையும் பலவர்ண அங்கிகளை தரித்திருந்த பிள்ளைகளையும் பார்ப்பது வெகு விநோதகரமான காட்சியாயிருந்தது. பிள்ளைகளுடைய வரிசைக்கு அப்பாலே அநேக பீடங்கள் தொங்கு திரைகளால் மறைக்கப்பட்டிருந்தன. வெளிப்படையாக கூட்டத்தில் வர ஏதுவற்ற அந்தர்புர ஸ்திரீகள் அவைகளுக்குள் இருந்தார்கள். அங்கே இருந்துகொண்டு தங்களை ஒருவரும் பார்க்காமல் தாங்கள் எல்லாக்காட்சிகளையும் காணத்தக்கதாக இருந்தது.

பாதை முழுவதும் அலங்கரிக்கப்பட்ட கம்பங்களாலும் அழகான பூமாலைகளாலும் பற்பல விதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாதைக்கு மேலாக வில்வளைவாக செய்யப்பட்ட இரண்டு தோரணங்கள் இருந்தன. அவைகளில் ஒன்று இந்திய வேலைப்பாடாகவும், மற்றொன்று ஐரோப்பிய வேலைப்பாடாகவும் இருந்தது. இவைகள் பார்வைக்கு மிக சிறப்பாய் இருந்தபோதிலும் மரத்தினாலும், சித்திரம் தீர்ந்த துணிகளாலும் செய்யப்பட்டபடியால் அதிகநாள் இருக்கமாட்டாது.

மைதானம் முழுவதிலும் கண்ணுக்கெட்டிய தூரம் ஜனங்களால் நிறைந்திருந்தது. இவ்வளவு திரளான கூட்டத்தை ஒரே தடவையில் நான் ஒருக்காலும் பார்த்ததில்லை. ராஜாவும் ராணியும் புகைவண்டி மார்க்கமாக அவ்ரா ஸ்டேஷனுக்கு வந்து அங்கிருந்து ஒரு சிறிய புகைக்கப்பலில் ஆற்றைக் கடந்து மைதானத்தின் தெற்கு அற்றத்தில் போய் இறங்கினார்கள்.

ஆற்று வழியாக அவர்கள் புகைக்கப்பலில் போகும் பொழுது 1,000-க் கணக்கான ஜனங்கள் ஆற்றின் இருகரைகளிலும் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய படவு தாண்டிப் போகப் போக அவர்கள் கவர்ன்மெண்ட் மாளிகைக்கு சவாரி போகையில் மறுபடியும் பார்க்க வேண்டுமென்கிற நம்பிக்கையோடு ஒருவரை யொருவர் நெருக்கிக் கொண்டு ஓடினார்கள். மைதானத்து வழியாய் அவர்கள் ஓடினதைப் பார்க்கையில் அந்தக் கூட்டத்துக்கு முடிவே இல்லாததுபோல் காணப்பட்டது. அப்படி ஓடியும் கிட்டத்தில் நின்று ராஜாவையும் ராணியையும் பார்க்க அநேகருக்கு கூடாதே போயிற்று. ஏனென்றால் இவர்களுக்கு முன்னதாகவே ராஜபாதை முழுவதும் ஜனங்களால் நிரம்பிப்போயிற்று. அவர்கள் அங்கே அநேக மணிநேரங்களாக காத்துக்கொண்டு நின்றார்கள். நாங்கள் போகிறதற்கு முன்னதாகவே ஜனக்கூட்டம் நிரம்பி யிருந்தது. நாங்களே ராஜாவின் வருகைக்கு 4-மணி நேரம் காத்து நின்றோம். எங்களுக்கு முன் இவர்கள் எவ்வளவு நேரம் காத்திருந்தார்களோ! ராஜ தரிசனை பெற்றுக் கொள்வதற்கு வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் வந்திருந்தார்கள். ஜனங்களுக்கு கூடியமட்டும் அனுகூலம் செய்யும் படியாக போசாலீர் தங்களால் இயன்ற ஒத்தாசை யெல்லாம் செய்திருந்த போதிலும் அநேக ஜனங்கள் காரிய சித்தி பெறாமல் ஏமாந்துபோயிருந்திருக்கலாம். ஒரு புருஷனும் மனைவியும் தூரமான கிராமத்திலிருந்து வந்து கூட்டத்துக்குள் புகுந்தபோது கலங்கித் திகைத்து மறுபடியும் வீடுபோய்ச் சேரலாம் என்றிருக்கும் தருணத்தில் போலீசாரில் ஒருவர் அவர்களைப்பற்றி ஒரு மாறுவாடி துரைமகனுக்கு தெரியப்படுத்தின பொழுது அவர் அவர்களை தன் வீட்டின் மேல்தளத்தில் கொண்டுபோய் நிறுத்தி ராஜாவும் ராணியும் ஆற்றுவழியாக கப்பலேறிச் செல்வதை அவர்களிருவரும் பார்த்து சந்துஷ்டி கொள்ளும்படி தயவு பண்ணினார்.

ராஜபவனியின் முதல் வரிசையில் அநேக யுத்த சேவகர்கள் அழகிய குதிரைகளில் ஏறிச்செல்ல, அவர்களுக்குப் பின்னால் காலாள் பட்டாளம் நடந்துபோக, கடைசியில் ராஜாவும் ராணியும் ரதத்தில் ஏறிச் சென்றார்கள். நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்குச் சமீபமாய் அவர்கள் வந்த தருணத்தில் எங்களுக்கு எதிர் பக்கமாக அவர்கள் திரும்பிப்பார்க்க நேரிட்டது. அதின் காரணத்தை பின்னாலே அறிந்தோம். கொடிகள் அசைகிறதையும் மிகுந்த ஆர்ப்பரிப்பையும் பார்த்தபொழுது குதிரைகளில் ஒன்று மிகவும் மிரண்டு முன்னங்காலை நேராய் உயர்த்திக் கொண்டு நின்று கடைசியாக தன்மேல் ஏறியிருந்தவனையும் கீழே, விழும்படி செய்தது. அவனுக்கு கொஞ்சம் காயமும் நேரிட்டது. ராஜாவும் ராணியும் அவனைக் கருத்தாய் பார்த்தபடியால் எங்கள் பக்கமாக அவர்கள் திரும்பவில்லை. அவர்களுடைய அன்பான இருதயத்தை அது



விளங்கப் பண்ணிற்று. அந்த மனுஷனைக் குறித்து அவர்கள் மிகுந்த கவலை எடுத்தபடியால் மற்ற விஷயங்களை யெல்லாம் மரந்துவிட்டார்கள். நாங்கள் அவர்களுடைய முகங்களை நன்றாய்ப்பார்க்க ஏது இல்லாமல் போயிற்று. ஆனால் எங்களில் சிலர் அப்புறம் நன்றாய்ப் பார்த்தோம்.

வெள்ளிக்கிழமை இரவில் பட்டாளத்து சேவகர்கள் குதிரையிலிருந்துகொண்டு தங்கள் கரங்களில் தீவட்டி பிடித்தவர்களாய் படைவகுப்பு வேடிக்கை காண்பித்தார்கள். அது மிகவும் சிறப்பாய் இருந்ததென்று யாவரும் சிலாகித்துக் கொண்டார்கள். அதன்பின் அழகான பாண வேடிக்கைகள் நடந்தது. ஆனால் கூட்டத்தில் இருந்தவர்களில் மிகுதியானவர்கள் குதிரைபட்டாளத்தின் வேடிக்கையையாவது பாணவேடிக்கையையாவது பார்க்க ஏதுவிருந்ததில்லை. பாணவேடிக்கைகளில் ஆகாயத்திலெழும் பிணைவைகளை மாத்திரம் பலர் பார்த்தார்கள். ஆனாலும் தாங்கள் வெகுநேரம் காத்திருந்ததற்கு தகுந்த பிரதிபலனை அடைந்துகொண்டதாக சந்துஷ்டியுள்ளவர்களாய் நடுச்சாமத்திலே தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போனார்கள். ராஜா வந்த அன்று கூடின கூட்டத்தை விட இந்தக் கூட்டம் மிகவும் சொற்பமாக இருந்ததென்று பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள். கூட்டம் மிகுந்த திரளாய் இருந்தபோதிலும் ஜனங்களுக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாமல் சகலமும் க்ஷேமமாய் முடிந்ததைக் குறித்து பலரும் ஆச்சரியப்படுகிறார்கள். சனிக்கிழமை இரவிலே நகரமுழுவதும் தீப அலங்காரம் செய்யவேண்டுமென்று ஒழுங்கு ஏற்பட்டிருந்தது. இதற்கு ஆயத்தமாக பெரிய வியாபார ஸ்தலங்களிலும், உத்தியோக சாலைகளிலும், முக்கிய வர்த்தகங்கள் நடக்கும் தெருக்களிலும் 1,000-க் கணக்கான மின்சார தீபங்கள் சித்தம் செய்யப்பட்டிருந்தன. அவைகளில் தீபங்கள் ஏற்றின உடனே கட்டிடங்கள் அதிகமாய்த் தெரியாமல் மந்திர உச்சாடனத்தினால் நிருமிக்கப்பெற்ற அலங்காரமாளிகைகள் போல் காணப்பட்டன. சில கட்டிடங்களில் பல்வர்ண கண்ணாடிகளால் செய்யப்பட்ட லாந்தர்களுக்குள் மெழுகுவர்த்தியோ எண்ணெயோ வைத்து விளக்கேற்றப்பட்டிருந்தன. மின்சார தீபங்கள்கூட பற்பல நிறங்களில் விளங்கின. இந்த மாளிகைகள் சிலவற்றில் ஒவ்வொரு சாயங்காலங்களிலும் விளக்கு கொளுத்தப்பட்டது. ஆகவே பிரதான தீப அலங்காரத்தை நான் பார்க்க தாமதிக்கக் கூடாதிருந்தாலும் போதுமான சிறப்பை நான் கண்டு சந்தோஷித்தேன்.

இன்னொரு சமயத்தில் நான் அங்கு கண்ட பற்பல வேஷங்களைக் குறித்து நான் கண்டமட்டுக்கும் உங்களுக்கு எழுதி தெரிவிப்பேன்.

---

COW-DUNG

## சாணியின் குணாகுணம்

இந்து தேசத்தவர்களின் ஜனசமுதாய முறைமைகளிலும், மார்க்க சம்பந்தமான ஆசாரங்களிலும், அவர்களுடைய பழக்க வழக்கங்களிலும், தேறின அறிவும், நெருங்கிய சம்பந்தமுமுள்ள ஒருவர் Lancet என்னும் வைத்திய பத்திரிகைக்கு மனோகரமான ஒரு செய்தி எழுதி அனுப்பியிருக்கிறார். அதில் சென்னைப்பட்டணமும், கீழ்பங்காளமும் பிளேக் வியாதிக்கு ஒருவாறு நீங்கலாயிருப்பதற்கு

முக்கியகாரணம், அவ்விடத்து ஜனங்கள் தங்கள் முன்னோர்கள் தொன்று தொட்டுக் கைக்கொண்டுவந்த வீட்டு சுகாதார வழக்கங்களை கை நெகிழவிடாதிருப்பதும், விசேஷமாய் தங்கள் வீட்டுத்தளங்களில் அடிக்கடி சாணிமெழுகி வருவதுந்தான் என்று ரூபிக்க பிரயத்தனித்திருக்கிறார். மேலும், பிளேக்வியாதி அதிக மும்முரமாக நடமாடினதும் இப்பொழுது நடமாடி வருகிறதுமான பிரதேசங்களாகிய பஞ்சாபிலும், வடமாகாணத்திலும், வடகிழக்கு மாகாணத்திலுமுள்ள ஜனங்கள் மகமதிய முறைமைகளை அதிகமாய் பின்பற்றி காலாகாலங்களாய் தங்கள் முற்பிதாக்கள் அநுசரித்து வந்த இந்தவழக்கத்தை அசட்டைசெய்து வருகிறார்களென்று அதை ஒரு திருஷ்டாந்தமாக எடுத்துக் காண்பிக்கிறார். Lancet வாகடபத்திரிகையின் அதிபர், இது விஷயத்தின்மேல் இரண்டு வகையான தாற்பரியம் கொள்ளுகிறார். முதலாவது வீட்டுத்தளத்திலே நடமாடுகிற பூச்சிகளின்மேல் சாணத்திலுள்ள ரஸாயன சக்திபடும்பொழுது அவைகள் செத்துப்போகலாமென்றும், இரண்டாவது தண்ணீரில் கலக்கிய சாணம் தரையிலே மெழுகப்படும்பொழுது, தளத்திலுள்ள கொசுகு, தெள்ளுப்பூச்சி முதலிய கிருமி வர்க்கங்களின் முட்டைகள் சாணியில் அகப்பட்டு வெளிப்பட ஏதுவில்லாமல் நாசப்பட்டுப் போகலாமென்றும் சொல்லுகிறார். மேலும் அந்த பத்திராதிபர் வீட்டுத்தளத்தில் சிமிட்டி (cement) முதலியவைகள் பூசி உறுதியும் சமமுமாகச்செய்து அதின்மேல் தொற்று வியாதி நிவாரண (disinfectants) அவுழ்தங்களை பூசுகிறதினாலும், தெளிக்கிறதினாலும், உறைப்பாய் தட்டிப் பெருக்கி சுத்தம்செய்வதனாலும் சாணியைவிட அதிக பலனுண்டாகுமென்று நினைக்கிறார். இது மாத்திரமல்ல, மாட்டு சாணியில், வியாதிக்கு அநுகூலமான கிருமிகள் ஜெனித்து, குடியிருப்பவர்களுக்கு பற்பல வகையான நோய்களை உண்டுபண்ணக்கூடும். Lancet பத்திரிகைக்கு எழுதினவர் வீடுகளுக்கு சாணிமெழுகும் இந்த பூர்வீகவழக்கம் இந்தியர் யாவருக்கும் நன்றாய் தெரிந்திருப்பதால் சுகாதார முறைமைகளை கொண்டு நடத்தும் உத்தியோகஸ்தர்கள் (plague officers) யாவரும் ஜனங்கள் இதைக் கைக்கொள்ளும்படி போதித்து புத்திசொல்லுவது இலகுவும் பிரயோஜனமுமான விஷயம் என்று புத்திசொல்லுகிறார். ஆகிலும் பிளேக் நிவர்த்தி முறைமைக்கு சாணிமெழுகுவதால் யாதொரு பிரயோஜனமும் உண்டாகாது. ஏனென்றால், சாரமற்ற சாணியில் கிருமிகள் அதிக நாள் பிழைத்திருக்கிறதில்லையென்றும், மருந்துகளால் சாரம்கெட்ட (sterilised) சாணிகளில் சீக்கிரத்திற்குள்ளாக அவைகள் மாய்ந்து போகின்றனவென்றும் பரீக்ஷையினால் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படி பரீக்ஷை செய்யும்படி ஏற்படுத்தப்பட்ட கூட்டத்தாரில் முக்கிய அங்கமாயிருந்த Dr. C. J. Martin பின்வருகிறபடி எழுதுகிறார். "சாணியினாலும் மற்றும் பலவிதமான குப்பைகூளங்களாலும் நிறைந்திருக்கும் அநேக இந்தியர் வீடுகள் எலி, தேள் முதலியவைகளுக்குமாத்திரமல்ல, கொசுகு முதலிய பலவகை ஈக்களுக்கும் புழுக்களுக்கும் உறைவிடமாயிருக்கிறது. எலி செத்து விழுந்து பிளேக் நேரிட்ட ஒரு வீட்டின் அறையில் மேற்படி விசாரணைக் கூட்டத்தார் இருநூற்று அறுபத்து மூன்று கிருமிகளை கண்டெடுத்தார்க



ளாம். ஆகவே இந்தியர் வீடுகளில் சாணிமெழுகுவதைவிட அவர்கள் தங்கள் உடம்பையும் வீடுகளையும் சுத்தி செய்து சூரியபிரகாசமும், தாராளமான சுத்த ஆகாயமும் வீட்டிலே அதிகமாய் நடமாடும்படி பிரயத்தனிப்பதினால் தொற்றுவியாதியானது விசேஷமாய் நீக்கப்படலாமென்று அறிந்து கொள்ளலாம். சூரியனுடைய காங்கையினாலும் சுத்த ஆகாயத்தினாலும் பிளேக்வியாதிக் கிருமிகள் சீக்கிரத்தில் மாண்டுபோகின்றன என்பது பலரும் அறிந்த சத்தியம்.

---

WHAT GOD SAYS TO US BY HIS SON.

## தேவன் தமது குமாரன் மூலமாய் நமக்கு என்ன சொல்லுகிறார்.

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகளின் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன்மூலமாய் நமக்கு திருவுளம்பற்றினார்." பூர்வீகத்தில் பற்பல வகையான கற்பனைகளும், கட்டளைகளும், பிரமாணங்களும், சுகாதார சாஸ்திரங்களும் பலவாறாக நமக்குச் சொல்லப்பட்டன. ஆனால் மனிதருடைய குறைவான பாஷையில் எல்லா சத்தியங்களையும் போதிக்க முடியாது. மழை, புஷ்பங்கள், சூரியன், நட்சத்திரங்கள் இவைகளால் தேவனைக் குறித்த எண்ணம் ஒருவாறாக நமக்கு விளங்குகின்றன. என்றாலும் தேவகுமாரனுடைய ஜீவியத்தினாலும் மரணத்தினாலுமேயல்லாமல் வேறெந்த வகையினாலும் நமக்கு விளங்கக் கூடாத மகா பெரிய சத்தியங்களும் உண்டு.' அவைகளெவை?

1-வது. தேவன் பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதா. அவருடைய சாயலாக, அவருடைய ரூபத்தின்படியே நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார். (ஆதி. 1: 26.) தகப்பனைப்போல பிள்ளை. பூலோகத்திலிருக்கிற ஒவ்வொரு பிள்ளையும் தேவனை நோக்கி, "அப்பா, பிதாவே" என்று கூப்பிடலாம். (மத். 6: 9.) மனுஷரெல்லாருக்கும் தேவன் பிதாவாயிருக்கிறபடியால், தேவகுமாரனாகிய கிறிஸ்து தேவனுடைய சித்தத்தின்படி செய்கிற ஒவ்வொருவனையும், தனக்கு சகோதரன் என்கிறார். (மத். 12: 50).

2-வது. "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்," என்று அறிவித்திருக்கிறார். (யோவான் 3: 16).

3-வது. பாவஞ்செய்த மனிதர் யாவரும் இரட்சிப்பு அடையலாம். தேவகுமாரன் நம்மை அவ்வளவாய் நேசித்தபடியால் நம்முடைய பாவங்கள் நீங்கத்தக்க வழியாக அவைகளுக்காக அவரே தண்டனையை உத்தரித்து, நாம் பாவமன்னிப்படைய நமக்காக அவர் மரிக்கவும் செய்தார். (மத். 26: 28).

4-வது. பாவத்தினாலே மனுஷர் தேவசாயலையும் உருவத்தையும் இழந்துவிட்ட பின்பு மறுஜெனனத்தினால், அதை மறுபடியும் அடைந்துகொள்ளலாம். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."

(யோவான் 1: 12). இந்த புதிய சுவாபமானது தேவன் நம்மில் அன்புகூருவது போல நாமும் அவரில் அன்புகூரும்படி நமக்கு சக்தியைக் கொடுக்கிறது.

5-வது. அப்புறம் நம்மை சகல சத்தியத்திலும் வழி நடத்தும் படியாக தமது பரிசுத்த ஆவியை நமக்கு கொடுத்து, நம்முடைய பெலவீன சித்தத்தை பலப்படுத்தி விசுவாசத்தினாலுண்டாகும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நமக்கு அளித்து, மனப்பூர்வமாய் பாவஞ்செய்யாமல் நம்மை விலக்கிக்காத்து, தமது பெரிய அன்பானது நம்முடைய இருதயங்களில் பிரகாசிக்கும்படி செய்கிறார். (யோவான் 16: 13; ரோமர் 5: 5).

6-வது. இந்த பாக்கியமான ஜீவியம் முடிவற்றது, மரணமும் அதை மேற்கொள்ளமாட்டாது (யோவான் 3: 15).

7-வது. இந்த உலகத்தை மனுஷர் குடியிருக்கும் வாசஸ்தலமாக மண், கல், மரம், மிருகங்கள், சூரியன், புஷ்பவகைகளால் ஆயத்தப்படுத்தினதுபோல, பூரணமாக்கப்பட்டவர்கள் குடியிருக்க, பூரணமான ஒரு உலகத்தை ஆயத்தப்படுத்த போயிருக்கிறார். (யோவான் 14: 2).

இந்த ஏழு பலத்த செய்கைகளும் தேவன் தம்முடைய குமாரனைக்கொண்டு சகல மனிதருக்கும் அறிவித்திருக்கும் சத்தியங்கள்.

என் பிதாவும், ரட்சகரும், என் பெலவீனங்களில் பெலமுமாயிருக்கிறவரே, சதாகாலங்களாக என்னை ரட்சியும் ஆமென்.

---

## A PLAGUE OF DRUNKENNESS.

## மதுபான வாதை.

---

(தொடர்ச்சி.)

ஒரு சிவில் அப்பாதிக்கரியிருந்தார். அவர் மதுபானத்திற்கும், வேசித்தனத்திற்கும் முழுயடிமையா யிருந்தார். அவருடைய இரண்டு குமாரர் ஐஸ்கூலில் படித்தார்கள். தகப்பனார் குடித்துவிட்டு மீதிவைத்திருக்கும் சாராயங்களை பிள்ளைகள் திருட்டளவாய்க் குடித்தார்கள். ஒருநாள் தகப்பனார் பிள்ளைகளைச் சிக்ஷிக்கும்போது, நீர் எங்களுக்கு முன்பாகக் குடிக்கலாமோ வென்று கூச்சலிட்டனர். அப்பாதிக்கரியும் அகாலமரணமானார். பிதாக்களே! மாதாக்களே! குடும்பத்தின் தலைவர்களே! சபையின் தலைவர்களே! நீங்கள் கெட்டுப்போகிறதுமல்லாமல், உங்கள் குடும்பத்தையும் கெடுக்கிறீர்களென்பதை மறவாதேயுங்கள். நீங்கள் செய்கிறதைக் கண்டு படியாதது, கழுதைப்பிறவி. நன்மை செய்வதற்குப் போதனை, சிட்சை வேண்டும். தீயபழக்கத்திற்கோ மேலே சொல்லிய பிசாசுகள் படிப்பிக்கும்.

ஒரு குடும்பத்தில் தகப்பன், தாய், மக்கள் மருமக்கள், பேரன் பூட்டனாகிய நாலு தலைமுறையோரும் குடிவெறிக்குக் கொத்தடிமைகளாயிருக்கிறார்கள்.

பாரஸ்டு ரேஞ்சர் ஒருவர் ஒரு பண்டிகையின்போது, தானும் மனைவி மக்களுஞ் சூழ்ந்திருந்து மதுமாம்சம் உண்ணும்போது, தகப்பனார் தமது அருமையான ஒரு வயதுக்குட்பட்ட குழந்தையைக் கையிலே வைத்துக்கொண்டு, ஓலை அலகினால் கள்ளைத்தொட்டுப் பிள்ளையின் வாயில் விட்டு, நல்லநாளில் நீயும் சாப்பிடுவென்று சொன்னார். சொற்பநாளுக்குள் அவருடைய ஜீவனும்போய், அவர் போனபோக்குந் தெரியாது.

பிரசவ மருந்தைக் கவனிப்போம். பிரசவத்தின் வேதனையை உணராதிருக்கவும், களைத்துப்போன ஸ்திரீயைச்சற்று உற்சாகப்படுத்தவும், பிரசவத்திற்கு முன்னும் பின்னும் கொஞ்சம் சாராயங் கொடுப்பது தோஷமில்லாவிட்டாலும், அதிலிருந்துண்டாகுந் தீமையாவது:—பிரசவத்தின் பின் சிலநாட்களுக்கு, ஒவ்வொருவேளை பத்தியபோஜனமாக, ஒறுத்துண்ணும் நமது சுதேச ஸ்திரிகள், வெறுவயிற்றில் கொடிய வெளிற்காலத்திலுங்கூட மிகவுங் காந்தலைக் கொடுக்குஞ் சாராயங்களை, 16 நாளுக்கோ, மாசக்கணக்காகவோ கொடுக்கிறார்கள். அதினால் பிள்ளைகளுக்குப் பாலில்லாமல் தேம்பி, மெலிந்து, எமனுக்கிரையாவது முண்டு. அம்மாளுக்கோ குடலைப் பலவீனப்படுத்திப் புண்ணாக்கி, அழைச்சல், கழிச்சல், கடுப்பு, மூலம் முதலிய பல பிணிகளுக்குணவாக்கி, வாணாளை வீணாளாக்கி, அகாலத்தில் யமலோகத்திற் கனுப்புகிறது. இவ்வித ஆபத்துகளுக்கெல்லாம் தப்பிக்கொண்டவர்களையும், காலைச்சுற்றினபாம்பு கடியாமல் விடுகிறதில்லை. மதுபானத் தேவிக்கு முழியடிமையாகவுஞ் செய்துவிடும்.



குடிகாரருக்குள், கூத்தியாளைவிட்டு மனஸ்தாபமுண்டானவுடனே, விரோதிகள் மறைவாயிருந்துகொண்டு, விபசாரியைக் கொண்டாவது, மதுவியாபாரியைக் கொண்டாவது, வேறு குடிக்காரத் தோழரைக்கொண்டாவது, விரோதிக்கு வெறிக்கக் கொடுத்து, மயக்கி, எங்கேயாவது கொண்டுபோய், கொலை செய்வது வழக்கமாகிவிட்டது.

கள்ளுக்கடைச்சண்டை பிரதிதினமும் பார்க்கிற விஷயமே. நாலைந்து வருடங்களுக்கு முன் சாம்பானொருவரும், தீக்ஷதரொருவரும் ஒரு கள்ளுக்கடையிலிருந்தார்கள், பனை ஓலையும் பட்டைகளுஞ் செலவாகிவிட்டன. தீக்ஷதருடைய வேண்டுகோளின்பேரில், சாம்பான் வெளியேகிடந்த ஒரு எச்சில்பட்டையைக் கழுவிக் கொடுக்கவே, இருவரும் உள்ளேயிருந்து குடித்துக் கொண்டிருக்குங்கால், தீக்ஷதருடைய வைதீகபெருமைக்குப் பங்கம் வர, பறையன் ஏசினபோது, ஐயர் கைக்கோணத்தடியால், அவன் காலையடித்து முறித்துவிட்டார். காலை முறித்தவர் காவற்கூடத்திற்கும், முறிக்கப்பட்டவன் ஆஸ்பத்திரிக்கும், கொண்டுவரப்பட்டனர். ஐயருக்கு ஆறுமாசம் கடின காவல் தண்டனை விதித்ததாய் அம்பாசமுத்திரம் கஸ்பா போலீசார் ரிக்கார்டு காண்பிக்கிறது.

குடிகாரனுங் கும்பிடு ஏற்குஞ் சாமியாகிறான்! சுயபாஷை வாசித்து, சில பாடல்களைச் சொல்லத் தெரிந்தவனும், ஜீவனோபாயத்திற்குக் கதியற்றவனுமான குடிகாரனொருவன் காவிவஸ்திரங்கட்டி, திருமேனி விபூதி குளித்து, சிரமுண்டன் அல்லது சடாதரனாகி, உருத்திராட்ச, தாழ்வடம் கழுத்தில் பூட்டி, மௌனச்சாமி, மாணூட்டுச்சாமி, யோகிசாமி, ஆண்டிபட்டிச்சாமி, அண்ணாமலைச்சாமி, உண்ணாமலைச்சாமி யெனப் பேர் வைத்துக்கொண்டு, கஞ்சாப்புகைத்து, கள் சாராயங்குடித்து, வெளிப்புறப்பட்டுவிட்டால் கும்பிடுவார் பலர், கூப்பிட்டழைத்துப் போஜனம்பண்ணுவிப்பார் பலர், பாலோடன்னம் பசியமர்த்துமென்பார் பலர், கைகட்டி வாய்பொத்திப் பின்செல்வார் சிலர், மதுமாம்சம் இஷ்டபூர்த்தி செய்யுமென்பார் சிலர், கொஞ்சம் ஜோசியம், வைத்தியம், மாந்திரிகந் தெரிவதாகக் கரவடஞ்செய்தாலோ, பெரிய வீட்டுப் பெருச்சாளியாகி, குலஸ்திரீகளையும், பரஸ்திரீயாக்கிவிடுவார். இவ்வித வேஷதாரிகளின் திருக்கூட்டம் இந்தியாவின் எப்பாகத்திலும் மொய்த்து நாசமாக்கியும், கவனிப்பாருமில்லை, சீர்திருத்தஞ் செய்வாருமில்லை!

ஏழைகள்தான் குடியினால் கெட்டுப்போவார்கள். பெரிய சீமான்களுங் கெட்டுப்போகக் கூடுமா? ஒரு மனுஷன் வருஷத்திற்கு 30 ஆயிரம் 40 ஆயிரம் வரும்படி வரும்போது, மாசம் ரூபாய் 100, 150-க்கு சாராயம் வாங்கிச் சாப்பிடுவதினால், பெரிய காரியமாவென்று நினைப்பாருண்டு.

காகத்தைப்போல மதுபானிகளும் விருந்தோம்ப மறவார்கள். எரிசுடர்முன் ஏராளமான பூச்சிகள் பறந்தோடி வருகிறதுபோல, குடிகாரப் பிரபுவிடம், கூடிவருவார் பலர். செல்வர் வீட்டு விசேஷங்களை சிறப்பிக்கவும், பலர் வந்து சேர்வார். இவ்விதமாகச் செலவு அபரிமிதமாகவுண்டாம். கடிவாளமில்லாக் குதிரை போவதுபோல், வெறிக்கக் குடித்த பிரபுவின் போக்கு மிருக்கும். பிரபுவைப் பிடித்த மதுபானியாத்தாள் பரத்தையரையும் பழக்கம் பண்ணிவிடுவாள். இல்லற இனிமை கெட்டு, அழுகையுங் கண்ணீரும், சண்டையுஞ் சச்சரவுமாகிவிடும். முகஸ்துதிபேசி காலந்தள்ளும் கூட்டாளிகள் கூடி தீர்த்தயாத்திரை, திருஸ்தலயாத்திரை போகவும், கட்டிடங்கள் சிறப்பாய்க் கட்டவும், சவாரிவாகனங்கள் பல வருவிக்கவும் தூண்டிவிடுவார்கள். எஜமான் புத்திதடுமாறிப் போதையாயிருக்கும்போது, வேலைக்காரர் கணக்குகளைக் காண்பித்துக் கையெழுத்து வாங்கவோ, இனும் செலவுக்கு உத்தரவு வாங்கவோ, வம்பு வியாஜியந்தொடர ஏவிவிடவோ, எல்லாம் முடித்துவிடுவார்கள். பெரியவரின் பேர்கெடும், புகழ்கெடும், கடனுக்குள்ளாகி கஷ்டதிசையில் வந்துவிடுவார்.

சில தனவான்களின் கூக்குரலைக் கேளுங்கள்:—சாத்தான் குளத்து சடையப்பமுதலியார் மகன், பேய்க்குளத்துப் பெருமாள் பிள்ளை மகன், மாயாபுரி மாணிக்கமுதலி மகன், மூக்குப்பீறி ராமலிங்கையர் பேரன் முதலிய பிரபுக்களின் நடப்புப் படிப்பைப்பார்த்து, ஒரு சொல் வாசகமுதலியார் தன் மகனை தோட்பாரத்தோடு படித்த படிப்புப் போதுமென்று நிறுத்தி வீட்டிலிருக்கும்படி செய்துபோட்டாராம். நடப்புப் படிப்புத்தானென்னவென்றாலோ, செல்வப் பிள்ளைகள் ஒருவரையொருவர் பார்த்து, கண்டு படியாதது கழுதைப் பிறவியென்றும், பழி கூறலுக்கஞ்சி, குடுமியைக் கத்தரித்து, முன் தலையில் சற்று

னீள ரோமத்தை வைத்து, உச்சி வகுந்து, சீவி விட்டுக்கொண்டும், பின் தலைமயிரை ஒட்டக் கத்தரித்தும், விதம் விதமான தொப்பிகள், குல்லாக்கள், தலையில் வைத்துக்கொள்ளுகிறார்கள். பூட்ஸ், காலுடுப்பு, மேலுடுப்பு, ஷர்ட்டு, கோட்டு, கழுத்துக்கட்டி, இடுப்புக்கட்டி என்னென்னவோ மாட்டிக்கொள்ளுகிறார்கள். சைக்கிள் என்னும் கால்மிதிவண்டி சவாரியாயிற்று. கையில் பீடி, சிகரெட்டு, சுருட்டுப் பிடித்துக்கொண்டு, பொக்பொக் என்று புகையை விடலாயிற்று. கள்ளுக்கடை, சாராயக்கடை, ஷாப்புக்கடைக்கு அடிமை புகுதலாயிற்று. சிரைக்கும் அம்பட்டனே, உழவு பண்ணைக்காரனே பரிமாறலாயிற்று. திருத்தளிகை செய்வாரை செப்பவும் வேண்டுமோ! ஐயோ! இடையிலே வந்த சைவம் இடைவழித்தட்டாய்ப் போயிற்று. இவ்வளவுக்கும் செலவுக்கு வகையென்ன வென்பீரேல், வீட்டுத்திருட்டு வெளியாகி, பெற்றோர் விழித்துக் கொண்டபோது, இப்பெயரெடுத்தமைனர் ஆசாமிகள் எப்போது முன்னுக்கு வருவார்களென்று, கமிஷன் ஏஜண்டுகள் வைத்துக் காத்துக்கொண்டிருக்கும் புண்ணியவான்கள் கொடுக்கும் தொகைக்கு மூன்று பங்கு நாலு பங்குக்குத் தஸ்தாவேசுகள் எழுதி வாங்கிக் கொண்டு கொடுக்கிறார்கள். பெரிய வீட்டுப் பிள்ளைகள் பலர் இவ்விதம் துர்ப்பழக்கத்திற் குட்பட்டிருப்பதால் ஐசுவரியப்பெருக்கத்தையாவது, பாந்தவ்ய நெருக்கத்தையாவது கவனியாமல், வறிஞனையினும், புதுப்பழக்கமில்லாத ஒருவரன் பார்த்துத் தன் புத்திரிகளுக்குக் கன்னிகாதானம் பண்ணுவித்து, தன் குடும்பத்தோடு சவரக்ஷணை செய்வதே நலமென்று சிலர் முறையிடக் கேட்டிருக்கிறோம். குடிகார ஏழைகளின் அன்றாடகக் கூக்குரலை யாவரும் அறிந்திருப்பதினால் இவ்விடத்தில் விபரிக்கவில்லை. பெரியவீட்டுச் செல்லப்பிள்ளைகளை வேசிகளும், மதுபானிகளாக்கிவிடுவார்கள்.

கொடி முந்திரிகையென்றும் நாம் சொல்லும் திராக்ஷச்செடியை பலஸ்தீன தேசத்தில் அபரிமிதமாய்ப் பயிரிட்டு அதின் பழத்தின் இரசத்தைப் பிழிந்து சாதாரண பானமாக எபிரேயர் பருகிவந்ததாக சத்திய வேதபுஸ்தகத்தில் வாசிக்கிறோம். அத்தேசத்தைவிட்டுத் துரத்துண்ட அந்த ஜாதிகள் பலவிடங்களிலுமிருந்து தற்காலத்தில் திரும்பிவந்து காணி பூமி வாங்கி அந்த திராக்ஷச் செடியையே விசேஷ கவலையோடு பயிரிட்டு அதின் பழரசத்தை ஜலத்துக்குப்பதிலாக பானம்பண்ணிவர ஆரம்பித்தலானது அவர்களின் முன்னோர் வழக்கத்திற்கு அத்தாக்ஷியாகிறது. நமது தேசத்தில் ஒரே பனையின் ஒரே பாளையிலிருந்தும் ஒரு பக்குவமாய் வடித்த இரசமானது குற்றமற்ற அமிர்த பானமாகிறதும் மறுசமயம், வேறு பக்குவமாய் வடித்த இரசமோ புத்தியைக் கெடுத்து போதையையுண்டாக்கும் மதுவாகிறதும் அறிந்த விஷயமே. ஜீரணத்தொழில்கெட்டு குன்மவலிக்குட்பட்ட சிலர் லாகிரியற்ற பதனீரைச் சாப்பிட்டு தற்கால சாந்தியடைகிறதும் தெரிந்த விஷயமே. அதுபோலவே பலஸ்தீன யூதரும் திராக்ஷப்பழ ரசத்தை லாகிரியற்ற பானமாக மருந்துக்கும் விருந்துக்கும் சாதாரண பானத்திற்கும் உபயோகித்து வந்தனர். வேறுவகையாய் மேற்படி இரசத்தை புளிக்கவைத்துப் பக்குவப்படுத்தி மதுபானமாகவும் உபயோகித்திருக்கின்றார்கள். ஆகவே யூதஜாதி திராக்ஷரசம் சாப்பிட்டார்கள் என்னும்போது லாகிரியுள்ள பானமாகவே சாப்பிட்டார்கள் என்றெண்ணுவது அறிவின்மையாம்.

எசாயா தீர்க்கதரிசனம் 28 : 7-ல் தீர்க்கதரிசி குடிகாரரைக் கண்டிக்கும்போது சொன்ன வார்த்தைகளில் திராக்ஷரசம், மதுபானம், சாராயம் என்று தமிழிலும்; உவையின் (Wine) ஸ்டிராங் டிரிங் (Strong drink) என்று இங்கிலிஷிலும்; யயின், மீன்யயின், ஷேக்கார், மீன்ஷேக்கார் என்னும் எபிரேய வார்த்தைகளால் வித்தியாசப்படுத்தியிருப்பதால் திராக்ஷரசமென்னும்போது போதையுண்டாக்கும் வஸ்துவென்று தீர்ப்பது பிசகாம்.

ஆகையால் வாசிக்கும் நண்பரே, “உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோவென்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்” என்று மேலே விபரித்திருக்கிறபடியால் மருந்துக்கென்றாவது விருந்துக்கென்றாவது மதுபானத்தை முற்றிலும் சாப்பிடாமல் தள்ளிவிடுங்கள். உங்களால் பிள்ளைகள், குடும்பத்தார், இஷ்டர்கள் முதலிய மற்றவர்களுங் கெட்டுப்போகாதபடிக்குக் குடியைத் தள்ளிவிடுங்கள். உங்கள் சுகமும், பெலனும், கீர்த்தியும், செல்வமும் போய்விடாதபடி மதுபானத்தைத் தள்ளுங்கள். உங்கள் ஆத்துமாவையும் சரீரத்தையுங் கெடுத்து நரகத்திலே தள்ளிவிடுமென்று பயந்து விலகி ஓடுங்கள். முன்னமே குடியில் தவறிவிழுந்தவர்களே, அதினின்று தப்பி வெளியேறிவிடுவதற்குத் தேவ ஒத்தாசையைத் தேடி பிரயாசப்பட்டுத் தள்ளிவிடுங்கள். இயேசுரக்ஷா பெருமான் உங்களை மதுபானத்திற்கு விலக்கிக் காப்பாற்றுவாராக.



## INTERNATIONAL SUNDAY SCHOOL LESSON-PICTURES FOR JANUARY, 1912.
## ஓய்வுநாள் பள்ளிக்கூட பாடங்களுக்கடுத்த படங்கள்.-ஜனுவரிமீ.

January 7. THE BIRTH OF JOHN THE BAPTIST FORETOLD. Luke 1 : 5-23.



ஜனுவரி 7. யோவான்ஸ்நானனின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது. லூக். 1 : 5-23.

January 14. THE BIRTH OF JOHN THE BAPTIST. Luke 1 : 57-80.



ஜனுவரி 14. யோவான்ஸ்நானனின் பிறப்பு. லூக். 1 : 57-80.

January 21. THE BIRTH OF JESUS. Luke 2 : 1-20.



ஜனுவரி 21. இயேசுவின் பிறப்பு. லூக். 2 : 1-20.

January 28. THE PRESENTATION IN THE TEMPLE. Luke 2 : 22-39.



ஜனுவரி 28. இயேசுவை தேவாலயத்தில் பிரதிஸ்டை செய்தல். லூக். 2 : 22-39.

# மாதர் மித்திரி.

புத். ௨௫. ௧௯௰௨ ௵ - பெப்ருவரி மீ. இல. ௮.

## PRAYER FOR HELP.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

**பல்லவி.**

ஏசுவே, திரு பாசனப்பதியே, கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்,
ஏசுவே, திரு பாசனப்பதியே.

**சரணங்கள்.**

1. காசினியில் உன்னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா.
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து,
நித்தமே, எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி,— ஏசு

2. பேயுடைச் சிறையதிலும், காய வினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட துர்க் கன்மி ஆயினேன்;
நீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்றுதிரம் விட்ட
தேவனே, எனைக் கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி,— ஏசு

3. சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள எங்கள் உபகார வள்ளலே,
குறை ஏதுனை அண்டினோர்க் கிறைவா? எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து, முற்றுமுடியக் கண்பார்த்து,— ஏசு

4. பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை;
புண்ணியனே, உன் சரணம் நண்ணி அண்டினேன்;
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள் புரிந்து, உன் ஆவியைச் சொரிந்து,— ஏசு

BUILDERS.

## கட்டட வேலைக்காரர்.

ஒருவன் ஒரு புதுவீடு கட்ட யோசிக்கும்பொழுது கட்டட வேலையில் தேர்ந்த ஒருவனை அழைத்து அவன் கையில் அதை ஒப்புவிக்கிறான். இதை வாசிக்கிறவர்களுக்குள்ளே ஒருவருக்காவது கட்டப்போகிற ஒரு வீட்டின் வடிவத்தை வரைந்து ஏற்படுத்தவோ அல்லது கட்டடத்தை செய்து முடிக்கவோ திராணி இருக்குமென்று நான் நினைக்கிறதில்லை. நாம் அதை ஒரு பெரிதும் முக்கியமுமான வேலையென்று நினைக்கிறோம். காரியமும் அப்படித்தான்.

என்றாலும் நாம் ஒவ்வொருவரும் வீடு கட்டுகிறவர்களாகவே இருக்கிறோம். நாம் அதை வேண்டும் என்று செய்யாவிட்டாலும் செய்தல்லாமல் முடியாது. நாம் நம்முடைய ஜீவியமாகிய வீட்டை கட்டுகிறவர்களாக இருக்கிறோம்.

ஒருவன் ஒரு வீட்டை கட்டும்பொழுது அந்த வீடு பெலனாகவும் அழகாகவும் இருப்பதற்காக கவனிக்கவேண்டிய சில விஷயங்கள் உண்டு. வெளிப்படையாக கண்ணுக்கு தெரிகிற சுவர்களை துவக்கு முன்னதாக ஆழமாக தோண்டி மண் எடுத்து கண்ணுக்கு மறைவாக இருக்கிற அஸ்திபாரத்தை பெலனாக போடவேண்டும். இதின் முக்கியத்தை அறியாத ஒருவன் இதை விருதா காலப்போக்காகவும் சாமான்செலவாகவும் எண்ணிக் கொள்வான். ஆனால் கட்டட வேலை அறிந்தவன் தான் இதை செய்யாவிட்டால் வீடு எவ்வளவு அழகாய் தோன்றினபோதிலும் சீக்கிரத்தில் அது விழுந்து போகுமென்றும், காற்றுக்கும் மழைக்கும் பூமி அதிர்ச்சிக்கும் நிலைநிற்கமாட்டாதென்றும் அறிவான். ஆகையால் அஸ்திபாரத்திற்காக அதிகமான திரவியத்தை செலவு செய்வான்.

நம்முடைய ஜீவியமும் இப்படித்தான் இருக்கிறது; அதற்கு அஸ்திபாரங்கள் வேண்டும். மேல் கட்டடத்தை நன்றாய் தாங்கத்தக்கதாக போடப்படும் அஸ்திபாரம் தகுதியுள்ளதாய் இருக்கவேண்டும். அந்த அஸ்திபாரத்தை செம்மையாயும் யோசனையாயும் போடவேண்டும். ஆகையால் இளம்பிராயத்திலதானே கல்வி பயிற்சி, சன்மார்க்க போதனை, தேகாப்பியாசம், ஆவிக்குரிய போதனை, இவைகளில் எல்லாம் பயிற்சி அடையவேண்டும். ஒருவனுடைய ஜீவியத்திற்கு ஆதாரமாய் இருக்கத் தகுந்த சத்தியம், மன உறுதி முதலிய அஸ்திபாரங்களில் பண்படுத்தப்படவேண்டும். அவ்வித அஸ்திபாரம் இல்லாதபடியால் அநேகருடைய ஜீவியம் நாசம் அடைந்தது. சடுதியாய் நேரிட்ட சோதனையாகிய புசல்காற்றிலும், பலத்த துன்பங்களாகிய பூகம்பம் மனதை கலங்கடிக்கும் சமயத்திலும் அந்த கட்டடங்கள் விழுந்து அதமாயின.

நிலைவரமாக நிற்கவேண்டிய கட்டடத்திற்கு நல்ல சாமான்கள் அவசியம். மண்ணையும் குச்சுகளையும் வைத்து நாம அதைக் கட்டினால் அவ்வித வீட்டைப் பற்றி நாம் அதிக நம்பிக்கை கொள்ளக் கூடாது. சாமான்களில் அநேகம் நல்லவைகளாகவும் பெலனுள்ளவைகளாகவும் இருந்தபோதிலும் உதவாத சில சாமான்களை அவற்றோடு சேர்த்தால் எவ்விதத்திலும் சீக்கிரத்திற்குள் துன்பம் வந்தே தீரும். ஒரு காலத்தில் ஒரு பெரிய வீட்டை கட்டி எழுப்பினார்கள். வேலைக்காரர் அடுக்கு அடுக்காக செங்கல்களை



வைத்தார்கள். அந்தவழியாய் போகிறவர்கள் அதை பார்த்து இது எவ்வளவு அழகான கட்டடமாக சமையப்போகிறது என்று சொல்லிகொண்டார்கள், ஒரு நாள் வேலையாட்களில் ஒருவன் கவலையீனமாக உதவாத சில செங்கல்களை வைத்து பெலனற்ற சுண்ணாம்பை பூசினான். இன்னொரு வேலைக்காரன் அவனுக்கு எச்சரிக்கை சொல்லியும் அவன் அதைப்பற்றி பாவாயில்லையென்று சொல்லிவிட்டான். அப்படி இருக்க ஒரு நாள் காலையில் அவர்கள் எல்லாரும் வேலைக்கு வந்து பார்க்கையில சுவரெல்லாம் விழுந்து ஒடிந்துகிடப்பதை கண்டார்கள். ஏதோ ஒரு இடத்தில் பூசப்பட்டிருந்த கேவலமான சுண்ணாம்பும் வைக்கப்பட்டிருந்த செங்கல்லும் தான் இந்தவேலை செய்தது.

நம்முடைய ஜீவியமும் இப்படித்தான் இருக்கிறது. ஆனால் நம்முடைய ஜீவியமாகிய வீடு எந்த வீட்டையும்விட விலையேறப்பெற்றது. இராஜாவுடைய அரண்மனையாய் இருந்தாலும் காரியமில்லை, நாம் உபயோகப்படுத்தும் சாமான்களைக் குறித்து மிக்க ஜாக்கிரதையோடிருப்பது அவசியம். அந்த சாமான்களெவை? அவை மற்ற ஜனங்களிடத்திலிருந்தும், உபாத்திமார், தோழர், பெற்றோர் முதலியவர்களிடத்திலிருந்தும் நாம் கற்றுக்கொள்ளுகிறவைகளே; நாம் யோசிக்கிற யோசனைகளும் நாம் நடப்பிக்கிற செய்கைகளும் தான். சில வேளைகளில் நாம் என்ன யோசித்தாலும் அக்கரையில்லை, யாரும் நம்முடைய மனதிற்குள் புகுந்து அங்கே என்ன இருக்கிறதென்று பார்க்கப்போகிறதில்லையென்று எண்ணுவோமானால், பின்னாலே நம்முடைய ஜீவியத்துக்கு இடையூறுவரத்தக்கவிதமாக மோசம் விளைவிக்கும் கட்டடத்தைக் கட்டுகிறோம். நம்முடைய ஜீவியம் சீர்குலைந்து அழிந்து போம். நம்முடைய யோசனைகள் நாள்தோறும் அன்பும் பட்சமும் அமைந்து, பலமும் சுத்தமும் அழகுமான கிரியைகளால் நிறைந்திருக்கட்டும். அப்படியானால் நம்முடைய ஜீவியம் சுகபத்திரமாய் இருக்கும்; அது விழுந்துபோகமாட்டாது.

இந்த நம்முடைய வீடுகள் கட்டி முடிந்தபின்பு நாமே அதில் குடியிருக்கவேண்டும். சாதாரணமாய் வீட்டைக் கட்டுபவன் ஒருவன், அதில் குடியிருப்பவன் வேறொருவன். கட்டடம் நன்றாய் முடியாவிட்டால் சொந்தக்காரன் நஷ்டமடைவான். ஆனால் ஜீவியமான இந்த கட்டடத்தை நாமே கட்டி, அதில் நாமே குடியிருப்பதால், அதில் உண்டாகிற லாபநஷ்டத்துக்கு நாமே உத்தரவாதிகளாகிறோம்.

ஒரு காலத்தில் ஒரு துரை, ஒரு சிற்பாசாரியைக் கூப்பிட்டு ஒரு வீடு கட்டும்படி ஒப்பந்தம் செய்தார். அவன் அதிக ஆதாயம் சம்பாதிக்க ஆசித்து கேவலமான சாமான்களைக்கொண்டு வேலை செய்து நல்ல சாமான்களின் விலையை கணக்கில் எழுதிக்கொண்டான். அவன் வீடுகட்டி முடிந்த உடன் அந்த துரை அவனைக் கூப்பிட்டு இந்த வீட்டை நான் உனக்கே கொடுத்துவிடுகிறேன் என்றார். அவன் அதிலேபோய்க் குடியிருக்க நேரிட்டது. அவன் தன்னைத்தானே வஞ்சித்துக்கொண்டான். அவன் புத்தியீனனல்லவா? நாமும் எத்தனையோதரம் அவ்விதமாகவே செய்கிறோம். நம்முடைய ஜீவியத்தில் தகாத சாமான்களை சேர்த்து கட்டடம் எழுப்ப ஏவப்படும்பொழுது, நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளுகிறோமென்று எப்பொழுதும் நினைத்துக்கொள்ளுவோமாக.

இது ஒரு புது வருஷத்தின் ஆரம்பம். இந்த வருஷ முழுவதிலும் நம்முடைய ஜீவியத்தில் நலமான வஸ்துக்களையே சேர்த்து கட்டடம் எழுப்ப பிரயாசப்பட வேண்டியது. சுகபத்திரமான கட்டடம் எழுப்பப்படக்கூடிய பெலனுள அஸ்திபாரம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறதென்பதை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அந்த அஸ்திபாரம் நமது கன்மலையாகிய இயேசு கிறிஸ்துவே.

"அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது."

---

CRUEL KINDNESS.

## குரூரமான அன்பு.

---

### (ஒரு மெய்யான சம்பவம்.)

சகிக்கமுடியாத மழைபெய்து மிகுந்த குளிராயிருந்த ஒரு நாள் தடித்த கம்பளி உடை தரித்து இரண்டுபேர் டிராம் வண்டி படியின்மேல் நின்றுகொண்டு பிரயாணம் செய்தார்கள். அதிலிருந்து அவர்கள் இறங்கப்போகும் தருணத்தில் அந்த வண்டியில் டிக்கற் சோதிப்பவன் நடுக்கல் எடுத்துக் குளிர் சகிக்கமுடியாமல் பல்லைக் கடித்து முகத்தை சுளித்துக்கொண்டு சமீபத்தில் வந்தான். பிரயாணிகளில் ஒருவர் அவனைப் பார்த்து: "உனக்கு பயங்கரமான இருமல் இருக்கிறது. இதோ, இந்த புட்டியை வைத்துக்கொள். நீ படுக்கைக்குப் போகும்பொழுது அந்த விஸ்க்கியில் கொஞ்சம் ஒரு பாத்திரத்தில் ஊற்றி சாப்பிட்டுக்கொள்வாயானால் உன் இருமல் வாசியாகும். இது நல்ல மருந்து" என்று சொல்லி அவன் கையில் ஒரு புட்டியைக் கொடுத்தார்.

டிக்கற்சோதிப்போன் வந்தனத்தோடு அதைக் கைப்பற்றிக்கொண்டு சந்தோஷமாக போனான். பிரயாணிகள் இருவரும் வண்டியை விட்டு இறங்கி சிறிது தூரமட்டும் ஒருவரோடொருவர் பேசாமல் அமரிக்கையாய் போனார்கள்.

இருவரில் அதிக வயசாளியானவர் தன் தோழனைப்பார்த்து, நான் ஒரு கதை சொல்லட்டுமா? என்று வினவினார். மற்றவர் வேடிக்கையாக அவரைப் பார்த்து சிரித்துக்கொண்டு, ஆகட்டும் அக்கதையைச் சொல்லும் பார்ப்போம் என்றார். அந்த மூத்தோர் சிரிப்பும் உல்லாசமும் இன்றி கருத்தோடு கதை சொல்ல துடங்கினார்:—

"இன்று டிராம் வண்டியில் நடந்த சம்பவம் நான் அனேக வருஷங்களுக்கு முன்னே லாங்காஷியர் மாகாணத்தில் வசித்தபொழுது நடந்த ஒரு சம்பவத்தை எனக்கு ஞாபகப்படுத்துகிறது. அப்பொழுது நான் ஹெல்லென்ஸ் பட்டணத்தில் இருந்த என் வீட்டிற்கு எப்போதும் டிராம் வண்டி ஏறிபோனபடியால் அந்த வண்டியில் டிக்கற் சோதிப்போனை எனக்கு நன்றாய்த்தெரியும். அவன் நெட்டையான நிமிர்ந்த தேகமும் போர்ச் சேவக ரீதியும் உடையவனாயிருந்தான். அவனைப் பார்த்தவுடன்தானே இவன் பட்டாளத்தில் சேவகம் செய்து பெருமை வாய்ந்தவனென்று யாரும் அறிந்துகொள்ளலாம். அவன் என்னோடு ஒருதரம் பேசிக்கொண்டிருக்கையில் "நான் சங்கை பொருந்திய விக்டோரியா ராணியின் சேனையிலே சேவகம் செய்தவன். தேவன் அந்த அம்மாளை ஆசீர்வதிப்பாராக. நான் பட்டாளத்தில் சிறுவனாய் சேர்ந்த காலத்தில் இப்பொழுது இருப்பது போல் இரண்டு மூன்று வருஷத்து விளையாட்டுச் சேவகம் செய்யவில்லை, ராணிக்காகவும் தேசத்திற்காகவும் இருபத்தொரு வருஷம் உத்தமசேவகம் செய்தேன்" என்று சொன்னான்.

நான் அடிக்கடி அவனுடன் சம்பாஷித்திருக்கிறேன். குளிர்காலம் வரும்பொழுது அவன் பயங்கரமான விதமாய் இருமுவான். அதைப் பார்க்க மிகவும் பரிதாபமாயிருக்கும். அவன் சில வேளைகளில் நான் இந்தியாவிலே பதினாலு வருஷம் சஞ்சரித்ததினால் என் உடம்பு கெட்டுப் போயிற்று, இவ்விடத்திய குளிர் மிக கொடுமையாயிருக்கிறது, எனக்கு இதை தாங்குவது அரிதாயிருக்கிறது என்பான். நீர் சற்றுநேரத்திற்குமுன் டிக்கற் சோதிப்போனுக்கு சொன்னதுபோலவே நானும் அவனைப்பார்த்து படுக்கைக்குப் போகுமுன் ஏதாவது குடிவகை சாப்பிட்டுக்கொண்டால் சுகமாயிருக்குமென்று சொன்னேன். அப்பொழுது அவன் என்னைப் பார்த்து வெறுப்புற்றவனாய் தலையசைத்துக்கொண்டு 'ஐயா நான் அதை விட்டுவிட்டேன். நான் மதுவிலக்குச் சங்கத்தில் சேர்ந்து கையொப்பம் இட்டிருக்கிறேன். அந்த உடன்படிக்கையை நான் காப்பாற்றுவேன்' என்று சொன்னான். நான் அவனைப் பார்த்து 'அதெல்லாம் நல்லதுதான், நானும் மதுவிலக்கு சங்கத்தில் சேர்ந்தவன்தான், என்றாலும் மருந்துக்காக நான் அதை சாப்பிடுகிறேன், நீயும் அப்படியே செய்துவருவாயானால், அதினால் உனக்கு நன்மையுண்டாகும்' என்று சொன்னேன்.

நான் என்ன சொல்லியும் அவன் அதை சட்டை பண்ணவில்லை. குளிர்காலம் வந்து அதிக இருமலினால் அவன் உபத்திரவப் படுகிறதை நான் பார்த்து அவனுடைய முரட்டாட்டத்தினிமித்தம் கோபமாய் அவனைக் கடிந்துக் கொண்டேன்.

கடைசியாக ஒருநாள், நான் அவனை நோக்கி "இதோ என்னுடைய மேல்விலாசம், உனக்கு வேலை ஒழிந்த நாளில் என் வீட்டிற்கு வருவாயானால் ஒருபுட்டி போட்வைன் நான் உனக்குக் கொடுப்பேன். அதினால் உன் உடம்பு தேறிப்போகும்" என்று சொன்னேன்.

அவன் முதலில் சற்று திகைத்தபோதிலும் என்னுடைய அன்பை அசட்டை செய்ய தைரியமற்றவனாய் என் வீட்டிற்கு வந்து அந்த புட்டியை வாங்கிக்கொண்டு போனான்.

அடுத்த நாளில் வேலை விஷயமாக நான் ஊரைவிட்டு வெளிப்பட்டு அநேகவாரங்களாக திரும்பி வரவில்லை. நான் திரும்பி வந்தபோது வேலைத்தலத்தில் அவனைக் காணாமையால் வியாதியாயிருப்பானென்று உத்தேசித்துக் கொண்டேன். கடைசியாக அவனுக்கு பதிலாக வேலைபார்த்துவந்த ஒருவனைக்கண்டு விசாரித்தேன். அதற்கு அவன் மறுமொழியாக: "ஐயா பட்டாளத்தானாகிய ஸிமித்தைப்பற்றியா விசாரிக்கிறீர்? அவன் சங்கதி மிகவும் பரிதாபம், அவனுக்கு கொடிய விபத்து நேரிட்டது. அவன் சற்று அதிகமாய் குடித்து வண்டியிலிருந்து விழுந்துவிட்டான். அவனால் காலூன்றி நிற்கமுடியாது. அந்த ஏழைமனிதனுக்கு கொஞ்சமும் பெலனில்லை." என்று சொன்னான்.

அந்த மனிதன் மதுவிலக்கு சங்கத்தில் கொடுத்திருந்த வாக்கை நான் நினைக்க நினைக்க நான் இந்த மனிதனிடத்திலிருந்து கேட்டறிந்தது நிசமாய் இருக்குமோ என்று நம்பக்கூடாதிருந்தது.

அவனுக்கு நான் மதுபானம் கொடுத்ததை குறித்து மிகவும் மனஸ்தாபப்

பட்ட போதிலும் சீக்கிரத்திற்குள் அதை மறந்துவிட்டேன். ஒருநாள் வர்த்தமான பத்திரிகையை வாசிக்கும்படி நான் உட்கார்ந்தவுடனே, என் மனைவி என்பக்கத்தில் பெருமூச்சுவிட்டுக்கொண்டு வந்து உட்கார்ந்து, மனுஷனுடைய ஜீவியம் எவ்வளவு அபாயமும் கிலேசமும் உள்ளது என்று சொன்னாள்.

நான் அவளைப் பார்த்து எனக்கு அப்பேர்ப்பட்ட எண்ணமில்லை. தற்சமயம் நான் சொல்லவேண்டுமானால், எனக்கு மிகுந்த சந்தோஷகரமாயிருக்கிறது என்று சொன்னேன். அப்பொழுது அவள் என்னைப்பார்த்து, நீர் சிரிக்கவேண்டாம், நான் நம்முடைய விஷயத்தைப் பற்றி பேசவில்லை. எங்களுடைய தாய்மார் கூட்டத்திற்கு வருகிற ஒரு ஏழை மனுஷியைக்குறித்து பேசுகிறேன். சில நாட்களாக அவள் கூட்டத்திற்கு வராதபடியால் காரணம் என்ன என்றறிய அவள் வீட்டிற்கு போயிருந்தேன். அவள் மிகுந்த வியாகுலம் உள்ளவளாயிருந்தாள். அவள் புருஷன் மறுபடியும் குடிக்க துடங்கினான். அவன் முன்னே பட்டாளத்தைச் சேர்ந்தவன். இந்தியாவிலிருந்து திரும்பி வந்தபோது, பட்டாளத்தை விட்டு விட்டு குடிக்கத் தலைப்பட்டான். வீட்டுச்சத்தம் வெளிக்குவராமல் கஷ்டத்தோடு அவன்மனைவி குடும்பத்தைப் பாதுகாத்து வந்தாள். வீட்டிலுள்ள பொருட்களெல்லாம் மதுபானத்திற்காக விலைப்படுத்தப்பட்டன. ஏழு வருஷங்களுக்கு முன்னே, ஒரு பெரியவர் அவனை மதுவிலக்கு சங்கத்தில் கையொப்பமிட்டு சேர்ந்துகொள்ளும்படி செய்தார். அதுமுதல் அந்த குடும்பம் சந்தோஷமுள்ளதாயிருந்தது. குளிர்காலத்தில் அவனுக்கு கடினமான இரும்பலுண்டாகும். அப்பொழுது ஒரு துரை அவன் சாப்பிடும்படியாக ஒரு புட்டி சாராயத்தைக் கொடுத்து பலவந்தம் செய்தாராம். அதைக் கொண்டுவந்தவுடனே அவன் மனைவிக்கு திகில் உண்டாயிற்று. ஒரு சின்ன கிண்ணம் சாராயமட்டும் குடிப்பேன் என்று அவன் அவளுக்கு வாக்குக்கொடுத்தான். அவன் அதை முழுவதும் சாப்பிட்ட பின்பு பழைய துற்பழக்கம் அவனை ஆட்கொண்டது. கிறிஸ்மஸ் அன்று அவள் தன் பிள்ளைகளுக்காக பலகாரம் செய்துகொண்டிருந்தபொழுது, அவன் பைத்தியக்காரனைப் போல் வீட்டிற்குள் பிரவேசித்து நெருப்புக்குள்ளே அதையெல்லாம் உதைத்துத் தள்ளிவிட்டான். சிலநாள் சென்றபின்பு அவன் டிராம் வண்டியிலிருந்து கீழே விழுந்து அவன் உத்தியோகத்தையும் போக்கடித்துக்கொண்டான். இது என்ன சஞ்சலமான விஷயம் என்றாள்.

அவன் விழுந்ததற்கு நான்தான் காரணமாயிருந்தபடியால் இந்த சங்கதியைக் கேட்க கேட்க என் மனம் புண்ணாயிற்று; இதுதான் என் கதையின் முடிவு. மதுபான நிவிர்த்தி விஷயத்தைக் குறித்து என்னை வைராக்கியமுள்ள உன்மத்தன் என்று சொல்வீர். என்னை அப்படியாகும்படி செய்தது இந்த சரித்திரமே என்று சொல்லிமுடித்தார்.

அப்பொழுது அந்த சிநேகிதனுடைய முகநாடி வேறுபட்டு “இந்த நிமிஷமுதல் நீரும் நானும் ஒன்று. தெய்வ ஒத்தாசையை முன்னிட்டு நான் இனிமேல் மதுபான வஸ்துக்களைத் தொடவோ, மற்றவர்களுக்கு அதைக்கொடுக்கவோ துணிய மாட்டேன்” என்று வாக்களித்தார்.



FIFTEEN USES OF A LEMON.

## எலுமிச்சம் பழத்தின் பதினைந்து பிரயோஜனங்கள்.

எலுமிச்சம் பழத்தினால் விளையும் பிரயோஜனத்தை வெகு ஜனங்கள் அறியாதிருக்கிறார்கள். காய்ச்சல், தொண்டை நோவு, ஈரல் வியாதிகள் முதலியவைகளுக்கு அது சிறந்த மருந்தாயிருக்கிறது.

1-வது. நேர்த்தியான தேத்தண்ணீரில் எலுமிச்சம் பழத்தின் இரண்டொரு துண்டுகளை போட்டு சாப்பிட்டால் நரம்பு சம்பந்தமான தலைநோவு நீங்கும்.

2-வது. ஒரு கோப்பை நல்ல காப்பித் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி எலுமிச்சஞ்சாற்றை கலந்து பானம்பண்ணினால் பித்தத் தலைநோவு வாசியாகும்.

3-வது. பாதி எலுமிச்சம்பழச் சாற்றை ஒரு கோப்பை சுடுதண்ணீரில் காலையில் தூங்கி எழுந்திருக்கும்போது உட்கொண்டால் ஈரல் குலையை சரிப்படுத்தி உற்சாகத்தை பிறப்பிக்கும். பேதி உப்பின் குணமும் அதற்குண்டு.

4-வது. சுத்தமான ஜலத்தில் கொஞ்சம் எலுமிச்சஞ் சாற்றை விட்டு பல் துலக்கினால் பல்லிலிருக்கும் அசடுகளை நீக்குவதோடு இன்பமான ஸ்வாஸத்தையும் கொடுக்கும்.

5-வது. எலுமிச்சஞ் சாற்றையும், ரோஜா திராவகத்தையும் சேர்த்து உடம்பு கழுவினால் தேமலைப்போக்கி தோலை வெண்மையாக்கும்.

6-வது. சமனளவுள்ள எலுமிச்சஞ் சாறும் ஒலிவ எண்ணையும் பச்சடி செய்வதற்கு காடியை விட அதிக சிறந்தது.

7-வது. எலுமிச்சஞ் சாறும் கட்டிச் சர்க்கரையும் தொண்டைக் கம்மலுக்கு நல்ல மருந்து.

8-வது. பூச்சி கடிக்கு எலுமிச்சஞ் சாற்றை தேய்த்தால் நோயையும் நமைச்சலையும் தீர்க்கும்.

9-வது. எலுமிச்சஞ் சாற்றோடு முட்டையை அடித்து சாப்பிட்டால் ஆரோக்கியமான பானமாகும்.

10-வது. அதை உறையவைத்தால் ருசிகரமான ஜலக்கட்டி (ice) ஆகும்.

11-வது. சவ்வரிசி அல்லது நெல்லரிசி கஞ்சி காய்ச்சும் பொழுது ஒரு தேக்கரண்டி எலுமிச்சஞ் சாற்றை அதோடு கலந்து கொண்டால் அரிசி நிறம் தூய வெள்ளையாவதோடு நல்ல வாசனையும் உண்டாகும்.

12-வது. இரைப்பு வியாதிக்கு தேனையும் படிகாரத்தையும் எலுமிச்சஞ் சாற்றையும் கலந்துகொடுப்பது முன்காலத்து வைத்திய முறைமை.

13-வது. வெண்மையான வஸ்துக்களிலுள்ள கறைகளை நீக்க, எலுமிச்சஞ் சாறும் உப்பும் உபயோகிப்பது நாமெல்லாரும் அறிந்த முறைமை.

14-வது. இரசத்தை பிழிந்து எடுத்துவிட்டு தோலை உப்பிலே கலந்து தேய்த்து வெண்கல பாத்திரங்களை சுத்தம் செய்யலாம்.

15-வது. கையில் படிந்த கறைகளையும் நிவிர்த்திக்க அது உபயோகமாகும்.

## THE VICTORY OVER DEATH.

BY BISHOP J. M. THOBURN.

## மரண ஜெயம்.

அநேக ஜனங்கள் மரணம் சமீபிக்கும்போது யோசனை எண்ணம் ஆகிய இவைகளின் வல்லமையை இழந்துவிடுகிறார்கள். ஆகையினாலே தங்களுக்கு நேரிடப்போகிற பெரிய மாறுதலைக் குறித்து யாதொரு கவனமும் காட்டுகிறதில்லை. சிலர் முழு ஸ்மரணையோடிருந்து இந்த உலகத்தை விட்டு நித்தியத்திற்குள் தாங்கள் போகப்போகிறதாக அறிந்துகொள்ளுகிறார்கள். இவர்களில் சிலர் தாங்கள் போகிற மறைவான உலகத்தில் தங்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று அறியாதபடியினாலே பயப்படுகிறார்கள். இன்னும் சிலர் தங்களுக்கு அருமையாயிருக்கப்பட்ட உலகத்தை விட்டுப்போகப் பிரியப்படாதபடியால் அவஸ்தைப்படுகிறார்கள். இன்னும் சிலரோ மரணந்தான் நித்திய ஜீவனுக்கும் நித்திய சந்தோஷத்திற்கும் பிரவேசிக்கவேண்டிய வழி என்று நினைத்து சந்தோஷத்தினால் நிரப்பப்படுகிறார்கள்.

மரணம் சகலருக்கும் சத்துரு. அதைப்பற்றி நினைக்கவாவது பேசவாவது கேழ்விப்படவாவது ஒருவருக்கும் பிரியமில்லை. அது ஜீவ ஓட்டத்தில் வழிச்குமேல் கவிர்ந்திருக்கிற கார்மேகம்போலிருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் தான் அந்தப் பயங்கர மேகத்தின்கீழ் கடந்துபோகவேண்டுமென்று தெரியும். ஆனால் கொஞ்சமாகத்தான் அதை எதிர் நோக்குகிறான். நம்முடைய ஜீவியத்தின் சந்தோஷமும் பிரகாசமும் அதினால் குறைந்துபோகிறது. எல்லா ஜாதியாருக்குள்ளும் சகல மனிதர்மேலும் அதின் பயம் தங்கியிருக்கிறது. சாகிற மணி நேரம் எல்லா ஆத்துமாக்களுக்கும் பயங்கரமாயிராதபடி தேவன் தமது இரக்கத்தினால், மனிதர்களுடைய புத்தியை மரணம் வரும்போது மந்தமாகும்படிசெய்கிறார். மனிதர் தங்கள் ஜீவகாலமெல்லாம் மரண பயத்திற்கு அடிமைகளாயிருக்கிறார்கள். உண்மையான மார்க்கத்தின் முக்கிய வேலை யாதெனில், இப்பயத்தை நீக்கி சாகிறவர்களுக்கு மகிமையான மரண ஜெயத்தைக் கொடுப்பதேயாம். மனிதருக்குத் தெரிந்த எந்த மரணத்திலும் இயேசுகிறிஸ்துவின் மரணந்தான் அதிக பயங்கரமானது. மற்ற மனிதர்கள் கொடிய மரண வேதனைகளை அடைந்திருக்கிறார்கள். ஆனால் எந்த காலத்திலாவது மரித்த எந்த மனிதனுடைய மரணத்தைக் காட்டிலும் இயேசுவின் மரணத்தில் ஏதோ விசேஷமுண்டு. அவருடைய வேதனை மகா பயங்கரமுள்ளதாயிருந்தது. ஏனெனில் சரீரப்பாட்டின் வேதனை மட்டுமல்ல, அவரைக்குறித்து "எல்லா மனிதருக்காகவும் அவர் மரணத்தை ருசிபார்த்தார்" என்றெழுதப்பட்டிருக்கிறபடி மரணத்தின் பயங்கரமான கசப்பை எந்த மனிதனும் தனித்தனி உணர்ந்து அறிந்ததைக் காட்டிலும் அவர் அதிகமாய் உணர்ந்து அறிந்தார். கிறிஸ்து சகலருக்காகவும் மரித்தார் என்று எல்லா ஜாதியாருக்கும் அறிவிக்கப்படுகிற, பெரிய சத்தியம் இங்கே விளங்குகிறது. அவர் பாவமுள்ள மனிதரைப் போல மரித்தார். ஆனால் சாகும்போதோ எந்தப் பாவமுள்ள மனிதனும் அடையாத மரணத்தின் கலக்கம் பயங்கரம் வேதனை முதலியவைகளை உத்தரித்தார். ஆகையினாலே இயேசுவின் மரணம் பூமியிலே நாம் பார்த்த எந்தப் பயங்கர சம்பவத்திலும் மகா பயங்கரமானதாயிருந்தது. பயத்தினால் பூமி நடுங்கினது என்றும், பெரிய கற்பாறைகள் பிளந்தனவென்றும், சூரியன் இருளடைந்தது என்றும் நாம் வாசிக்கும்போது நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை.

நமக்கு மகிமையான மரணஜெயம் கிடைக்கும்படி இயேசு இப்படிப்பட்ட பயங்கரமான மரணத்தையடைந்தார். மரணம் அவர்மேல் ஜெயங்கொள்ளவில்லை. அவர் தாமே தமது ஆவியை தேவனிடத்தில் ஒப்புவித்தார். ஆனால் மூன்றாம் நாள் காலையில் அவர் அதை மறுபடியும் பெற்றுகொண்டு அழிவற்றவராய் தைரியத்தோடும் பலத்தோடும் திரும்பிவந்தார். மரணம் அவரை அழிக்கக்கூடவில்லை. என்றென்றைக்கும் சதாகாலமாக மரணஜெய கெம்பீரனானார். அவர் மூலமாகவே, ஒவ்வொரு உண்மையான சீஷனும் இந்தக் கடைசிச் சத்துருவை ஜெயிக்கப் பலப்படுத்தப்படுகிறான். இது ஒரு உத்தம கிறிஸ்தவனின் மரணத்தில் கலக்கங்களில்லை என்று



காட்டுகிறது. கிறிஸ்தவ விசுவாசி, தன் ஆண்டவராகிய கிறிஸ்து மரணத்தை ஜெயித்தார் என்று அறிந்து, மேலான உலகத்தில் அழியாத நிலைமையின் ஆரம்பத்தைக் காட்டுகிற அமைதியான நிச்சயத்தோடு, தன் மரணநேரத்தை எதிர்நோக்குகிறான். அவனுடைய சூரியன் அஸ்தமிக்கும்போது நித்தியத்தின் காலை உதயமாகிறது. அவனுடைய சாயங்காலம் நித்திய நாளின் துவக்கமாகிறது.

பூலோகத்தின் சகல மனிதர்களுக்குள்ளும் உண்மையான கிறிஸ்தவன்தான் இச்சீவியத்திற்கப்பால் பார்த்து, நித்திய வெளிச்சமுள்ள உலகத்தின் அலங்காரம் மகிமை முதலியவற்றை அறிந்துகொள்ளத் திறமையுள்ளவனாகிறான். அநேக கிறிஸ்தவ விசுவாசிகளுடைய மரணஜெயத்தை நான் பார்த்திருக்கிறேன். மோட்சமே சமீபத்தில் வந்திருக்கிறதாக உணருகிறார்கள். அதின் வெளிச்சம் மரிக்கிறவனுடைய முகத்தில் பிரகாசிக்கிறது. மரிக்கிற ஒரு சீஷன் மரண நோவை சகித்துக்கொண்டு "ஓ! மரிக்கிறது எவ்வளவு இன்பமாயிருக்கிறது" என்று பரவச பார்வையோடு சத்தம் இட்டான். நெடுநேரமாக வருத்தப்பட்டு களைப்படைந்த ஒரு பக்தன் அதிகாலையில் மணி என்ன என்று கேட்டார். விடிந்துபோயிற்று என்று சொன்னேன். ஆனால் அவருடைய பஞ்சடைந்த பார்வையானது வெளிச்சத்தைக் காணக்கூடவில்லை. நான் ஜன்னல்களைத் திறந்து "இதோ விடிந்துபோயிற்று; வெளிச்சத்தைப் பார்க்க உம்மால் கூடவில்லையோ?" என்று கேட்டேன். "இல்லை, நித்திய நாளின் வெளிச்சந்தான் என் ஆத்துமாவில் உதிக்கிறது" என்று மறுமொழி பகர்ந்தார். அநேகர் இவ்விதமாய் சந்தோஷத்தோடும் பரிசுத்த வெற்றியோடும் மரிக்கிறார்கள் "சாயங்காலத்தில் வெளிச்சம் உண்டாகும்." என்ற கடவுளுடைய வாக்குத்தத்தம் அவர்களுக்கு உண்மையாயிருக்கின்றது. இருளின் ராச்சியத்தைக்கடந்து வெளிச்சமும் மகிமையுமுள்ள வாசலண்டை வந்து சேருகிறார்கள். நித்திய ஜீவன் அவர்களுக்கு நிச்சயம். சந்தேகமும் பயமும் சதாகாலமும் பறந்துபோகின்றன. நோவு துக்கத்தை அவர்கள் இனி ஒருபோதும் அறியார்கள். களைப்பும் தொந்தரவும் நீங்கி இன்பமான இளைப்பாறுதலும் சமாதானமும் உண்டாகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் தேவ சந்நிதானத்துக்குப் போகிறார்கள். ராஜாவை அவருடைய அலங்காரத்துடனே காணவும், மேலே பரலோகத்தில் அரசாளுகிற நித்தியருடைய மகிமையைப் பார்க்கவும் அவர்கள் போகிறார்கள்.

இவைகள் எல்லாம் உண்மையே. அது பாவனையான அல்லது மனோராச்சியமான காரியமல்ல, நிச்சயமான மரண ஜெயமே. சந்தேகம் பயம் ஆகிய இவற்றை மேற்கொள்ளுகிற பரிசுத்த ஜெயமாயிருக்கிறது. அழிந்துபோகிறவர்களின் மற்றெல்லா சாவின் அனுபவங்களைப்போலல்ல. எந்தப் புருஷரானாலும் ஸ்திரீகளானாலும் சரி. இயேசுகிறிஸ்துவுக்கு உண்மையான சீஷர்களாகாவிட்டால் இந்தச் சந்தோஷமான ஜெயத்துடன் மரிக்க முடியாது. எந்த அவிசுவாசியாகிலும் நித்திய ஜீவனின் முழு நிச்சயத்தோடு அல்லது, தனக்கு முன் விரிக்கப்பட்டிருக்கிற நித்திய ஜீவக் காட்சியோடு மரித்ததைப்பற்றிய ஒரு சமாசாரமும் உலகத்தின் எந்தச் சரித்திரத்திலும் சொல்லப்படவில்லை. ஒரு அவிசுவாசியின் மரணத்தைப்பற்றி முக்கியமாய் கவனிக்கக்கூடியது யாதெனில், நோயாளி, சில வேளைகளில் தன்னை மறந்து அல்லது பொறுமையாய் அமைதியாய் அல்லது பயமில்லாமல் இருக்கிறான். ஆனால் இவைகள் எல்லாம் அந்த கடைசி நேரத்துக்கு எம்மாத்திரம்? அவிசுவாசி தன் முடிவைத் தைரியத்தோடு எதிர்க்கிறான். எல்லாம் இவ்வளவுதான். ஆனால் விசுவாசியோ மேலே தொங்குகிற மரணத்தை ஜெயித்து தன் கால்களின் கீழே மிதித்து அதின்மேல் தன் ஜெய கெம்பீரப்பாட்டைப் பாடுகிறான்.

இந்த வித்தியாசத்தை உண்டாக்குகிறது என்ன? பாவத்தின் வல்லடியிருந்து இயேசுகிறிஸ்து தம் உண்மையான சீஷர்களை ரட்சிக்கிறார் என்பதை அது காண்பிக்கிறது. இதுதான் அவர்களை மரண வல்லமையிலிருந்து விடுவிக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். இயேசு ஜனங்களை அவர்களுடைய பாவங்களினின்று இரட்சிக்க வந்தார். அவர் இதைச் செய்யும்போது மரணபயத்திலிருந்தும் அதின் வல்லமையிலிருந்தும் அவர்களை இரட்சிக்கிறார்.

நமக்குப் பதிலாக அவர் அடைந்த பயங்கரமான பாடுகளால் நம்மை இரட்சித்திருக்கிறார். நாம் அவரை நம்பி விசுவாசித்தால் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவோம். பாவமும் துன்மார்க்கமுமான இருதயத்தோடு ஒருவரும் மரணத்தை ஜெயிக்கமுடியாது. அவனுக்கு நித்திய ஜீவகாட்சி தென்படமாட்டாது. ஏனெனில் அவனுடைய இருதயம் பாவத்தினால் இருளடைந்திருக்கிறது.

மரணமானது நம்மெல்லாருக்கும் சம்பவிக்கப் போகிற பெரிய சம்பவமாயிருக்கிறது. ஒவ்வொருவருடைய வழியிலும் அது நிற்கிறது. ஒருவருக்காவது பக்கமாய் விலகிக்கொள்ளாது. வருங்காலத்தில் நாம் எல்லாரும் இந்தப் பயங்கரமான சத்துருவை சந்திக்கவேண்டும். இதை வாசிக்கிற அநேகருக்கு அந்தநாள் அதிக தூரமாயிருக்காது. ஒவ்வொரு நிமிஷமும் அந்த நாளைச் சமீபப்படுத்துகிறது. ஒவ்வொருவரும் தன்னைக் குறித்து பயங்கரமான மரண நேரத்துக்கு நான் ஆயத்தமாயிருக்கிறேனா? அப்பால் இருக்கிற ஜீவனைக்குறித்து உறுதியும் நிச்சயமுமான நம்பிக்கை எனக்கு உண்டா? என்று கேட்கவேண்டும். இல்லாவிட்டால் நித்திய ஜீவனைத் தேட உடனே ஆரம்பி. உன் ஆத்துமாவுக்கு ஜீவனும் நம்பிக்கையும் கண்டடைகிறவரையில் இளைப்பாறாதே.

---

**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500 க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500-க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தமையன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு .. ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| சூசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுய நீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் சீமானானது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100 க்கு ... ... | 0 | 8 |



INTERNATIONAL SUNDAY SCHOOL LESSON-PICTURES FOR FEBRUARY, 1912.

ஓய்வுநாள் பள்ளிக்கூட பாடங்களுக்கடுத்த படங்கள்.—பெப்ருவரி.

February 4. THE WISE MEN LED BY THE STAR. Matt. 2: 1-23.



பெப்ருவரி 4. சாஸ்திரிகள் நட்சத்திரத்தால் வழி நடத்தப்பட்டது. மத். 2: 1-23.

February 11. THE BOY JESUS IN THE TEMPLE. Luke 2: 40-52.



பெப்ருவரி 11. இயேசு பிள்ளை தேவாலயத்திலிருந்தது. லூக். 2: 40-52.

February 18. THE MINISTRY OF JOHN THE BAPTIST. Mark 1: 1-8; Luke 3: 7-20.



பெப்ருவரி 18. யோவான்ஸ்நானனுடைய ஊழியம். மாற். 1: 1-8; லூக். 3: 7-20.

February 25. THE BAPTISM AND TEMPTATION OF JESUS. Mark 1: 9-13; Matt. 4: 1-11.



பெப்ருவரி 25. இயேசுவின் ஞானஸ்நானமும் சோதனையும். மாற். 1: 9-13; மத். 4: 1-11.

7 - MAY 1912 MADRAS

43

# மாதர் மித்திரி.

புத். ௨௫. ௧௯௧௨ ௵ - மார்ச்சு ௴. இல. ௯.

## PLEA FOR MERCY.

இராகம், மலேயமாளி. திரிபுடதாளம்.

### பல்லவி.

ஐயையா, நான் பாவி,—என்னை—ஆளும்
தயாபரனே.

### சரணங்கள்.

1. பொய்யாம் உலக உல்லாசத்திலே மனம் போன வழி நடந்தேன்,—ஏ
சையா, அபயம்! அபயம்! இரங்கும் மேசையா, என் தாதாவே.— ஐயை

2. எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள், எத்தனை தீதுகளோ,—என
தத்தனே! என் பிழை அத்தனையும் பொறுத் தாண்டருளும், கோவே.— ஐயை

3. வஞ்சகமோ, சரமோ, கபடமோ, மாய் மாலமோ, நிண்டகமோ,—மனச்
சஞ்சலம் நீக்கி எனக்கருள் செய்யும், சமஸ்த நன்மைக் கடலே.— ஐயை

4. பொய்யும், புரட்டும், உருட்டும், திருட்டும், பொறாமையும், ஆணவமும்,—விட்
டெய்யும்படி அருள் செய்யும், அறுதி ஓர் ஏகதிரித்துவனே.— ஐயை

5. உன்னை எல்லாத்திலும் பார்க்கச் சிநேகித்துன தடியார்களையும்,—நான்
என்னைச் சிநேகிக்கிறதுப்போல் சிநேகிக்கவும், பராபரனே.— ஐயை



Their Excellencies Sir Thomas and Lady Gibson-Carmichael.



## H. E. LORD THOMAS GIBSON CARMICHAEL. GOVERNOR OF MADRAS.

## லார்ட் கார்மைக்கேல்.

சென்ற வருஷ கடைசியில் லார்ட் கார்மைக்கேல் என்பவர் சென்னை இராஜதானிக்கு கவர்னராக நியமிக்கப்பட்டார். அவரும் அவருடைய பத்தினியாகிய லேடி கார்மைக்கேலும் இந்திய ஜனங்கள்பேரில் மிகுந்த தயாபந்தமுள்ளவர்களாய் விளங்கினபடியால், இவ்வளவு சொற்பகாலத்திற்குள்ளாக எல்லா ஜனங்களாலும் அன்புடன் மதிக்கப்பட்டார்கள். அவர் தமிழ், தெலுங்கு பாஷைகளை கற்றுக்கொண்டு துபாஷிகள் மூலமாயல்ல முகதாவிலேயே ஜனங்களோடு சம்பாஷணைசெய்து அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை நேராகக் கேட்டறிந்து அவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவி புரியும்படியாக மிகவும் ஆவலுள்ளவனாயிருக்கிறேனென்று அறிக்கை பண்ணினார். ஆகிலும், இந்த இராஜதானியின் துர்அதிர்ஷ்டத்தால் அவர் பங்காளத்துக்கு கவர்னராக மாற்றப்பட்டார். வருகிற ஏப்ரல் மாதத்தில லார்ட் பெண்ட்லாண்ட் என்பவர் அந்த ஸ்தானத்தில் கவர்னராக ஏற்படுவார்.

## A GREAT PRIZE WON BY A WOMAN.

## ஒரு பெரிய பரிசுபெற்ற மாது சிரோன்மணி.

உலகமெங்குமுள்ள ஸ்திரீ ஜனங்கள் தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சன்மானியம் கிடைக்கும்பொழுது மிகுந்த சந்துஷ்டி அடைவார்களென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. சாஸ்திர பயிற்சியில் பெண்கள் சாதாரணமாய் பிரக்யாதி அடைகிறதில்லை. ஆனால் மாடெம் கூரி என்னும் ஒரு பிரான்ஸ்யமாது தனது சொந்த கல்வி முயற்சியினாலும் பொறுமையோடு நடத்திவந்த சாஸ்திர விசாரணையினாலும், பூலோக முழுவதும் வியந்து கொண்டாடும்படி ஏதுவாயிற்று. அதோடுகூட அவ்வித சாஸ்திர அறிவில் மகா நிபுணருக்கு மாத்திரம் அளிக்கப்படுகிற பரிசும் கிடைத்தது. அநேக வருஷங்களுக்கு முன்னே அந்த அம்மாள் தன் பர்த்தாவோடுகூடி ஒரு நூதனத்தைக் கண்டுபிடித்தார்கள். அதினால், சாஸ்திர பயிற்சிக்கு பலவகையிலும் அநுகூலம் உண்டாயிற்று. அப்படி அவர்கள் இருவரும் சேர்ந்து கண்டுபிடித்த விஷயம் (Radium) என்னப்பட்ட ஒருவித மூலவஸ்து. அவ்வித பிரயாசத்துக்கும் அதினால் விளைந்த நன்மைக்குமாக ரசாயன சாஸ்திர விர்த்திக்கென்று ஏற்படுத்தப்பட்ட நோபெல் பரிசு அந்தம்மாளுக்குக் கொடுக்கப்பட்டது. நோபெல் என்னும் ஒரு தனவான் இதற்கென்று பொருள் சகாயம்செய்து ஐந்து பரிசுகளை ஏற்படுத்தினார். இந்த ஐந்து பரிசுகளும் முறையே தத்துவ சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், உடல்கூறு சாஸ்திரம், வாகட சாஸ்திரம், கலைஞானம் முதலிய ஐந்து வகுப்புகளிலும் முக்கிய விஷயங்களை நூதனமாக கண்டுபிடிப்பவர்களுக்கென்று தீர்மானிக்கப்பட்டது. சென்ற வருஷத்தில் கலைஞான சம்பந்தமாக ஒரு மாதும், இவ்வருஷத்தில் ரசாயன சாஸ்திர சம்பந்தமாக இந்த அம்மாளும் பரிசு ஜெயித்தார்கள்.

THE KING EMPEROR'S VISIT TO INDIA.

## சக்கிரவர்த்தியின் இந்திய விஜயம்.

இராஜாவும் இராணியும் இந்தியாவிலே ஜெய கம்பீரத்துடன் திக்குவிஜயம் செய்தார்கள். அவர்கள் பம்பாயில் வந்து இறங்கின நிமிஷம் முதல், இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியாரும் பாஷைக்காரரும் மார்க்கத்தாரும் காண்பித்த சந்துஷ்டியும் வைராக்கியமும் ஆர்ப்பரிப்பும் ஒற்றுமையும் சகலருக்கும் வியப்பைக் கொடுக்கிறது. பம்பாய் பட்டணத்தில் அவர்களை வரவேற்றுக்கொண்ட அதிசய காட்சியானது டெல்லி பட்டணத்தில் டர்பார் சம்பந்தமாக நடத்தப்பட்ட அலங்கார சிறப்புகளுக்கும் வேடிக்கைகளுக்கும் முன்குறிப்பாக இருந்தது. சாதாரணமாகவே இராஜபவனி அலங்காரங்களுக்கு பேர்போனதாயிருக்கிற ஆசியாக் கண்டத்தில் இவ்வித சிறப்பும் சிங்காரமும் இதற்கு முன் ஒரு போதும் விளங்கினதில்லையென்று ஒத்துக்கொள்ளாதவர்கள் ஒருவருமில்லை. சக்கிரவர்த்தி இந்து தேசத்து இராஜாக்களாலும் ஜனங்களின் பிரதிநிதிகளாலும் அடைந்த கௌரவத்தைப் பார்க்கிலும் அதற்கு சில நாளைக்குப் பிறகு அரங்கஸீபுடைய மாளிகையின் மேல் உப்பரிகையில் ஏறி நின்றபொழுது, இலக்ஷகணக்கான சாதாரண ஜனங்கள் யமுனைநதிக்கும் கோட்டைக்கும் மத்தியிலுள்ள விஸ்தாரமான மைதானத்தில் இராஜ தம்பதிகளை கொண்டாடின முறைமை சற்றும் தாழ்ந்ததல்ல. கல்கத்தா பட்டணத்தில் நடப்பிக்கப்பட்ட சிறப்பின் விமரிசையைக் குறித்து நாம் விஸ்தரிக்கத்தரமல்ல. பெங்காலிகள் இந்தியாவிலே குழந்தைகளுக்குரிய பக்தியும் பாசமும் காண்பிப்பதில் பெயர்போனவர்கள் ஆகையால், தங்கள் அரசன் தங்கள் மத்தியில் சமுகமாயிருப்பதைக் குறித்து, தலைகால் தெரியாமல் மகிழ்ச்சியடைந்தார்கள். இப்படிப்பட்ட மனோகர காட்சி இராஜ தம்பதிகள் சந்தித்த இடங்களில் மாத்திரமல்ல, அவர்கள் காலடிபடாத தூரமான பட்டணங்களிலும், இந்து தேசமெங்குமுள்ள சிறு கிராமங்களிலுங்கூட கண் கொள்ளா கொண்டாட்டங்கள் நடந்தன. ஏதுமற்ற ஏழைகள் முதலாய் தங்கள் வெள்ளைக்கார சக்கிரவர்த்தியின் ஆளுகையினாலே முன்னிருந்த இந்திய இராஜாக்களால் தங்களுக்குக் கிடைக்காதிருந்த சமாதானம் சௌக்கியம் நிர்விக்கினம், ஆதரவு முதலியவைகளை நினைத்துத் தங்கள் நன்றியறிதலைக் காண்பிக்க பற்பல விநோதங்களை நடப்பித்தார்கள்.

இந்தியாவுக்கு வருவது பிரயோஜனகரமாயிருக்குமென்று ஜியார்ஜ் அரசர் முதலில் கொண்ட அபிப்பிராயம் மிகவும் திருப்திகரமாய் முடிந்தது என்று அவருடைய கூரிய ஞானத்தைக் குறித்து மிகவும் ஸ்லாகிக்கிறோம். இப்படி அவர் இந்தியாவுக்கு வருவது யுக்தமாயிராதென்று இங்கிலாந்திலும் இந்தியாவிலும் சிலர் தடை செய்யப்பார்த்தார்கள். இந்தியாவைக்குறித்தும் இந்திய ஜனங்களின் குணாகுணங்களைக் குறித்தும் அனுபவசித்தமாய் அறிந்தவர்கள் தகுந்த ஜாக்கிரதையுடன் இருந்தால் இந்தியரால் அரசனுக்கு யாதொரு தீங்கும் நேரிடாதென்று உறுதி சொன்னார்கள். வேறு சிலர் இராஜா இப்படி விஜயஞ் செய்யும் காலத்தில் ஜனங்கள் திரளான நன்மைகளையும் அநுகூல ஒழுங்குகளையும் செய்வாரென்று எதிர்பார்த்திருப்பார்களென்றும், அவைகள் எல்லாவற்றையும் இராஜாவால் நிறைவேற்றுவதற்கு அரிதென்று அவர்கள் காணும் பொழுது திருப்திகேடுகளுண்டாகக் கூடுமென்றும் சொன்னார்கள். இந்த அபிப்பிராயம்கொண்டவர்கள் பெரும்பாலும் இராஜாங்க விரோதிகளே. அவர்கள் இராஜா இந்தியாவுக்கு வரப்போகிறாரென்ற செய்தி கேட்ட உடனே பூர்வீக இந்திய அரசர்களின் சர்வவல்லமையைக் குறித்து மிகவும் ஸ்லாகித்துப் பேசி இங்கிலாந்து தேசத்து இராஜன் எவ்வளவு சிறந்த குணமுள்ளவராய் இருந்தபோதிலும் அவர் பார்லியமெண்டின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பதால் தமது யுக்தப்படி ஒன்றும் செய்ய இயலாது என்று பிரசித்தப்படுத்தினார்கள். டில்லி பட்டணத்தில் சக்கிரவர்த்தி செய்த முக்கியமான விளம்பரம் இவர்கள் திட்பமாக சொன்னவைகளையெல்லாம் பொய்யாக்கிவிட்டது. இராஜாவுடைய மந்திராலோசனைக் காரருடைய சம்மதத்தோடுங்கூடி இராஜா டில்லியில் செய்த விளம்பரமானது அவருடைய அதிகாரத்தையும் வல்லமையையும் மிகுதியும் மேன்மைப்படுத்திற்று. ஐரோப்பியர் சுயநயம் கருதியே இராஜாவைக் கனப்படுத்தி வருகிறார்கள். இந்தியரோ இராஜாவை அவர் எப்படிப்பட்டவராய் இருந்தபோதிலும் கடவுளின் அம்சம் என்று பாரம்பரையாகவே மதித்து வருகிறார்கள். இராஜா டில்லியில் செய்த விளம்பரம் இந்தியருடைய பாரம்பரையான நம்பிக்கைக்கு ஒத்ததுபோல் காணப்பட்டது. இராஜா இந்த விளம்பரத்தினால் இந்தியாவுக்கு நடப்பித்த நன்மையானது தலைமுறை தலைமுறையாக ஸ்லாகித்துப் பேசப்படும்.



இராஜாவைக் கனப்படுத்தும்படியாக கவர்னர் ஜெனராலும், கமிட்டி மெம்பர்களும், பம்பாய் கவர்னரும், பெரியோரும் சிறியோருமாகிய பற்பல உத்தியோகஸ்தர்களும் செய்த அலங்கார ஒழுங்குகள் யாவும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் சிறப்புடன் நிறைவேறிற்று. இவைகளையெல்லாம் இராஜனும் இராணியும் தகுந்த பிரகாரம் நன்குமதித்து தேவனால் தங்கள் அதிகாரத்தின் கீழ் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற பிரஜைகளின் மனதிற்கு அதிதிருப்தி உண்டாகத்தக்கதாக அவர்கள் பேசின வார்த்தைகளும் நடப்பித்தக் கிரியைகளும் அவர்கள் வரவால் விளைந்த பிரயோஜனத்தை மிகவும் பெருப்பித்துக் காண்பித்தது. அவர்கள் பிரஜைகளின் மத்தியில் தங்கியிருந்த காலம் மிகவும் சொற்பமாய் இருந்தபோதிலும், அந்த நாட்களின் ஞாபகமானது கண்டோர் கேட்டோர் யாவருடைய உள்ளத்தையும் காலா காலத்திற்கு கவர்ந்து கொள்ளும்.

சக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தினியும் பம்பாயில் வந்து இறங்கின நாள் முதல் அவர்கள் இந்தியாவின் எல்லையை விட்டு புறப்பட்டதுவரையிலும் நடந்த சம்பவங்கள் யாவும் அவர்கள் நேருக்குக் காண்பிக்கப்பட்ட அன்பும் மரியாதையும் அவர்கள் மனதிலே திருப்திகரமான சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் கொடுத்திருக்குமென்று இந்திய பிரஜைகள் யாவரும் அகமகிழ்ச்சியுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

FIGHT WITH A LION.

## சிங்க வேட்டை.

கலாக்ஸன் வில்லியம்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்.—நானும் என்னைச் சேர்ந்த சிலரும் சிங்க வேட்டையாடும் நோக்கமாக 1909-ம் வருஷத்தில் விக்டோரியா நையான்ஸா ஏரிக்குக் கிழக்கே

160953
JL
Y15m211;M77
M77.25
46

இன்ஜின்மலைக்குச் சமீபமாய் விஸ்தாரமான பூமியைக் கண்டு இது வேட்டைக்குத் தகுந்த இடமென்று எண்ணி அங்கேபோய்த் தங்கினோம். நாங்கள் போய்ச்சேர்ந்த அடுத்த நாள் வேட்டையாடும் இடத்தைச் சுற்றிப்பார்த்து வரலாமென்று இரண்டு வேலைக்காரரைக் கூட்டிக்கொண்டு போயிருந்தேன். நான் எதிர்பார்த்திராதவண்ணம் நான் நின்ற இடத்திற்கு முந்நூறுகெஜ தூரத்துக்கப்பால் ஒரு பெரிய சிங்கம் நான் போகும் திசையே போய்க்கொண்டிருந்தது. அதைப் பார்த்து சுட்டேன். காயப்பட்ட சிங்கத்தோடு மல்லாடுவது மிகவும் அபாயகரமானது என்று எனக்குத் தெரிந்தபடியால என்ன செய்யலாமென்று தீர்க்காலோசனை செய்தேன். எனது வலதுபக்கமாக புதர்கள் அடர்த்தியில்லாத மைதானமாயிருந்தபடியால் அது வசதியான இடமல்லவென்று நினைத்து வேலைக்காரர் இருவரையும் எங்கே நிற்கவேண்டுமென்று உத்திரவு கொடுத்துவிட்டு சிங்கத்தைப் பார்த்தவண்ணமாகவே 300 அல்லது 400 கெஜம் தூரம் முன்னேறிச் சென்று புதர் அடர்ந்த இடத்திற்கு வந்தேன். சிங்கம் அந்த இடத்திற்கு வந்து படுத்துக்கொள்ளுமென்றும், அப்பொழுது அதை படுகாயப்படுத்திக்கொல்லலாமென்றும் நினைத்திருந்தேன். ஆனால் அது அந்த புதரண்டை தங்காமல் எனக்கு நேராக எதிர்த்து வந்தது. சமீபத்தில் வந்தால் சுடுவது இலகுவாயிருக்குமென்று பொறுத்திருந்தேன். என் துபாக்கிக்குள்ளே 450-ம் நம்பர் கார்ட்றிஜ் ஒன்றுதான் இருந்தது. என்னுடைய சட்டை பையிலிருந்தவைகளைப் பார்த்தபோது அவைகளெல்லாம் 350-ம் நம்பர் என்று கண்டேன். சிங்கம் சமீபத்தில் வந்தவுடனே நான் சுட்டகுண்டு தவறிப்போயிற்று, இரண்டாவது வேட்டு அதின் கழுத்தில் பட்டது, ஆனால் கழுத்தின் நரம்பை அறுத்துக்கொண்டுபோனதேயல்லாமல் எலும்பில் படவில்லை. ஆகையால் சிங்கம் பின்வாங்காதபடிக்கு எனக்கு மிகவும் சமீபத்தில் வந்துவிட்டது. நான் சுற்றுமுற்றும் பார்த்தபோது என் வேலைக்காரரைக் காணவில்லை. நான் குறித்த இடத்திலே அவர்கள் நின்றுவிட்டார்கள் போலும். நான் ஓடிப்போவது கூடாது, எப்படியும் அது என்னைப் பிடித்துக்கொள்ளும். ஆகையால் என் துபாக்கியைத் திருப்பிப் பிடித்துக்கொண்டு என்னால் கூடிய பலத்தோடு தலையைப்பார்த்து ஒரு பக்கமாய் அடிக்கும்படி நின்றேன்.

என் கைகாம்புகள் எல்லாம் தளர்ந்து போயிற்று, என்ன செய்வதென்று தெரியவில்லை. அது என் கழுத்தைப் பிடிக்க நெருங்கிற்று, அதின் சுவாசம் என்மேல் படவே என் பெலன் எனக்குத் திரும்பி வந்ததுபோல் தோன்றிற்று, துபாக்கியால் அதை பலமாக அடித்தேன். அந்த அடியினால் அது அபஜெயப்படவில்லை. அது என் வலதுகாலைத் தன் வாயிலே கவ்விக்கொண்டது. நானும் அதுவும் கீழே விழுந்தோம். என்தலையும், தோளும் அதின் கால்களுக்கிடையே சிக்கிக்கொண்டது. என் தலை அதின் பின்னங்கால்களுக்கு அருகே இருந்தது. அது என் காலைப்பிடித்து எலியை உதறுவதுபோல் அங்குமிங்கும் உதறிற்று, நான் செத்தவனைப்போலானேன். தப்பிப் பிழைக்க வேறொரு வழியுமில்லை. அது என் கெண்டைச்சதையை கடிக்கும்போதேயல்லாமல் மற்றப்படி எனக்கு நோவு தெரியவில்லை.

ஒரு நிமிஷத்திற்கு பிறகு என் துபாக்கிக்காரனுடைய சத்தம் கேட்டது. அவன் வைத்திருந்த துபாக்கியில் கொக்கு திரும்பியிருந்ததால் அதைச் சரிப்படுத்துவது எப்படியென்று தெரியவில்லை என்று தன் பாஷையில் பேசினான். துப்பாக்கியை என்னிடம் கொடுக்கும்படி சொன்னேன். என்னுடைய வலதுகை எனது துபாக்கியோடு சிங்கத்தின்கீழே நெருக்கப்பட்டிருந்தபடியால் என் இடது கையினாலே அவனுடைய துபாக்கியைச் சரிப்படுத்திக்கொடுத்தேன். உடனே அந்த வேலைக்காரன் சிங்கத்தின் விலாவிலே சுட்டான். அதைவிட தாழ்த்திச் சுட்டால் என்னைக் கொன்றுபோடுவானென்று அவன் பயந்தான். அவன் சுட்ட இந்த குண்டு சிங்கத்தை முற்றும் கொல்லாவிட்டாலும் என்னை பிடித்த பிடியை விட்டுவிட்டு சிறிது தூரத்துக்கப்பால் போய் விழுந்தது. என் உணர்வு எனக்கில்லாமலே என் சட்டை பையில் கைவிட்டுப் பார்த்தபொழுது இரண்டு 450-ம் நம்பர் கார்ட்றிஜ் தற்செயலாய் என் கையில் அகப்பட்டு அதில் ஒன்றை உபயோகித்தேன். இதினாலும் சிங்கம் சாகவில்லை. நான் சற்று எழுந்திருந்து சுடலாமென்று எத்தனிக்கும்பொழுது அதுவும் எழுந்திருந்தது. நானும் என் வேலைக்காரனும் கலக்கமடையாமல் மறுபடியும் சுட்டோம். ஒரு குண்டு தவறிப்போக மறுகுண்டு சரியான இடத்தில் பட்டபடியால் சிங்கம் செத்து விழுந்தது. நானும் பிரக்கினையாகி தரையில் விழுந்தேன். இரண்டு வேலைக்காரரும் என்னைத் தூக்கிக்கொண்டுபோய் என் காயங்களைக் கட்டினார்கள்.



## THE LATE DUKE OF FIFE.

## காலஞ்சென்ற பைப் டியூக் பிரபு.

சிறிது நாட்களுக்குமுன் டில்லி என்ற கப்பலில் நடந்த விபத்தினால் ஜலத்தில் நனைந்து அதனால் குளிரும் இருமலும் உண்டாகி ஜனுவரி மாதம் 29-ம் தேதி பைப் பிரபு தேக வியோகமானார். நமது சக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தினியும் சந்தோஷமாக இந்திய விஜயம் செய்து மகிழ்ச்சியுடன் இங்கிலாந்துக்கு திரும்பும்போது இப்படிப்பட்ட துக்க சமாசாரம் நேரிட்டது மிகவும் விசனமான காரியம். இந்த விஷயத்தினால் துக்கசாகரத்தில் அழுந்தியிருக்கும், டச்சஸ் பெருமாட்டிக்கும், அலெக்சாந்திரா ராணிக்கும், நம்முடைய சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினிக்கும் சகலத்திராளும் அநுதாபங் காட்டுகிறார்கள். பைப் டியூக் பிரபு 1849-ம் வருஷம் பிறந்து, 1879-ம் வருஷத்தில் தமது தகப்பனார் ஸ்தானத்தில் பிரபுவானார். 1874-ம் வருஷத்திலும், 1879-ம் வருஷத்திலும் வைக்கவுண்ட் மாக்டப் என்னும் நாமதேயத்துடன் (Commons) ஆலோசனை சங்கத்தில், இல்ஜின், நாயர்ண் நாடுகளின் பிரதிநிதியாக இருந்து கிளாட்ஸ்டன் மந்திரியின் கட்சியில் மிகவும் வைராக்கியமும் சாமர்த்தியமும் காண்பித்தார். அவரைப்பற்றி அதிக பிரசித்தி இல்லாதிருந்த அந்த சமயத்தில் வேல்ஸ் இளவரசியாகிய, லூயிஸ் விக்டோரியா அம்மாளை கல்யாணம் செய்யப்போகிறாரென்கிற வதந்தி வெளியாயிற்று,

இதற்குமுன் இந்தம்மாளுடைய அத்தை இராஜ குடும்பத்தைச் சேராதவரான ஆர்கைல் டியூக் என்று பட்டம் பெற்ற லார்ன் மார்க்குவஸ் பிரபுவை விவாகம் செய்ததுண்டு. ஆனால், அந்த அத்தை விக்டோரியா இராணியினுடைய இளைய குமாரத்திகளில் ஒருத்தி. ஆனால் ஹ்ப்ஸ் இராஜகுமாரத்தி எட்வர்ட் அரசனின் மூத்த குமாரத்தியா யிருந்தபடியால், இராஜ குடும்பமல்லாதவரை விவாகம் செய்து கொள்வது அரச குடும்பகௌரவத்திற்கு மகிமையாயிருக்கமாட்டாது. வெகுநாள் மட்டும் இராணியார் இந்த விவாகசம்பந்தத்திற்கு சம்மதம் கொடுக்கவில்லை. ஆனால் அப்பொழுது வேல்ஸ் பிரபுவும் பெருமாட்டியுமாயிருந்த எட்வர்ட் அரசனும் அலெக்சாந்திரா இராணியும் தங்கள் மகளோடு அநுதாபம் பாராட்டி, தங்கள் மகள் தெரிந்துகொண்டவரையே, விவாகம் செய்துகொள்வது நலமாயிருக்குமென்று விரும்பினார்கள். 1889-ம் வருஷத்தில் விக்டோரியா இராணி தங்கள் ஆக்ஷேபணையை நிராகரிக்க, ஹைப் அர்ல் பிரபு இராஜ குடும்ப பவனி விஷயத்தில் சேர்த்துக்கொள்ளப்படத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டபின் இந்த கலியாணம் நிறைவேறிற்று. இவ்வளவுகாலம் அர்ல் பிரபுவாயிருந்த இவர் டியூக் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டார்.

இவர் அநேக வருஷங்களாக பிரித்தானிய தென் இந்திய கம்பெனியில் வைஸ்-பிரஸிடென்டாக இருந்தார். அவர் சர் சாமுவேல் ஸ்காட் பாங்கில் ஒரு பிரதான அங்கமாகவும் இருந்தார். 1891-ம் வருஷத்தில் பிறந்த அவருடைய மூத்த குமாரத்தியாகிய அலெக்சாந்திரா இராஜ குமாரத்தி தகப்பனுடைய கௌரவத்தை இப்பொழுது அடைந்துகொண்டாள்.

## NEWS AND NOTES.

## சமாசார திரட்டு

மாட்சிமை தங்கிய லார்ட் கார்மைக்கேல் சென்னையை விட்டு பங்காளத்துக்கு கவர்னராக போகும்படி நியமகம பெற்றிருக்கிறார். சீமை வர்த்தமானங்களை கவனித்திருப்போர்க்கு இது வியப்பாய் தோன்றமாட்டாது.

நமது ராஜாவும் ராணியும் இந்தியாவுக்கு வந்தபொழுது, அவர்களோடு சேர்ந்தோர் உபயோகித்த படுக்கை, பாத்திரங்கள் யாவற்றையும் போப்பால் நாட்டு ராணியாகிய பீகம் அம்மாள் விலைக்கு வாங்கிக்கொண்டார்கள்.

குவாலியர் மகாராஜாவுக்கும், பரோடா இந்திர ராஜ குமாரத்திக்கும் நியமிக்கப்பட்டிருந்த கலியாணம் சில நாளுக்கு தள்ளிவைக்கப் பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது.

இந்தியாவுக்கு நூதன தலைநகரியாக்கப்பட்ட டில்லி பட்டணத்தில் ஸ்தாபிக்கப்படும்படியாக நமது சக்கிரவர்த்தியின் சிலை ஒன்றை குவாலியர் மகாராஜா வெகுமதி செய்யப் போகிறாரென்ற சமாசாரம் வெளியானவுடனே பிக்கனீர் நாட்டு மகாராஜா நமது சக்கிரவர்த்தினியின் சிலை ஒன்றை அங்கு நிறுத்துவதற்கு வெகுமதி செய்வதாக கொடுத்த வாக்கு அங்கீகாரம் பெற்றது.

சென்னை கவர்னர் நாளது மாதம் பத்தாம் தேதி சக்கிரவர்த்திக்கு அனுப்பிய தந்தி விவரம் :—சென்னை ராஜாங்கத்தாரும் ஜனங்களும் தாங்களும் தங்கள் பத்தினியும் சுகபத்திரமாக தங்கள் சுயதேசம்போய்ச் சேரவேண்டுமென்று ஆசீர்வதிக்கிறோம். தாங்கள் இந்தியாவுக்கு எழுந்தருளினதினால், இவ்விடத்திய ஜனங்களின் அன்பார்ந்த ராஜபக்தியும் தாங்கள் இவ்விடத்தில் நடப்பித்த நடபடிக்கைகள் யாவும் பிரஜைகள் பேருக்கு தாங்கள் கொண்டிருக்கும் விசுவாசமும் கருணையும் எவ்வளவு உறுதியானது என்பதை சகலத்திராளும் அறிந்துகொள்ள ஏதுவாயிற்று என்று தெரிவித்தார். அதற்கு இராஜா பதிலாக "நானும் சக்கிரவர்த்தினியும் சென்னை இராஜாங்கத்தாரும் அதின் ஜனங்களும் அனுப்பிய உபசார வாழ்த்துதலுக்காக மிகுந்த நன்றியறிதல் உள்ளவர்களாயிருக்கிறோம்" என்று செய்தி அனுப்பினார்.

நமது சக்கிரவர்த்தி கல்கத்தாவில் இருந்தபொழுது ஒருநாள் காலையில் குதிரைப் பந்தயத்துக்குப் போன வழியில் பின் வரும் சம்பவம் நேரிட்டது :—அவ்விடத்திய வைத்தியர் ஒருவர் வண்டியேறிப்போகும்பொழுது தனக்கு முன்னாலே குதிரைமேலேறி அதே மார்க்கமாய் போய்க்கொண்டிருந்த சில துரைமாரை வைத்தியருடைய சாரதி பார்த்து வழிவிட்டொதுங்கும்படியாக உரத்துக் கத்தினான். ஒருவரும் அதை சட்டை செய்யாதபொழுது, முன்னிலும் அதிகமாய் உரக்கக்கூவி அதட்டினான். அப்பொழுது முன்னாலே போனவர்களில் ஒரு துரை சமீபத்தில் வந்து பாதையின் ஓர் பக்கமாக வண்டியை ஓட்டிக்கொண்டுபோகும்படி சொன்னார். அந்த வண்டி தாண்டிப் போன பின்புதான் தன்னுடைய வண்டிக்காரன் அதட்டிக்கூவி ஒதுங்கிப்போகும்படியாகச் சொன்னது சக்கிரவர்த்தியையல்லாமல் வேறொருவரையும் அல்லவென்று வைத்தியர் அறிந்து வியப்பும் திகிலும் கொண்டார்.

இராஜாவும் இராணியும் கல்கத்தாவில் சணல்நூல் காருக சாலையை பார்க்கும்படியாக சங்கரோல் என்ற இடத்தை சமீபித்தபொழுது சாதாரண உடைதரித்த ஒரு சிறுபெண் கூட்டத்திலிருந்து வெளியேவந்து இராணியைக் கிட்டிச்சேர்ந்து, ஒரு பூச்செண்டை கையில் கொடுத்து நடுக்கத்துடனே மதலைச்சொல்லில் சலாம் "துரைசானியம்மா" என்று சொன்னாள். இராணி மிகுந்த சந்தோஷப்பட்டு தன் மாளிகைபோய்ச் சேருமட்டும் அந்தச்செண்டை தன் கையிலேயே பிடித்துக் கொண்டிருந்தார்கள். மேலும், இந்தியாவிலிருந்து அவர்கள் கொண்டுபோகிற அரும் பொருள்களோடு இந்த சணல்நூல் சாலை பெண் கொடுத்த இந்தப்பொருளும் கொண்டுபோகப்படுமென்பதற்கு ஐயமில்லை.

## HYPNOTIC MARRIAGE.

## நித்திரைப் பிரமை விவாகம். ஒரு பணமகளுடைய வாதம்.

லாஸ் ஆஞ்சலஸ் என்ற இடத்தில் பலத்த உத்தியோகம் நடப்பித்து வந்த மார்காற் ஹவ்வார்ட் என்னும் துரைசானி தன் கல்யாண விஷயமாக ஒரு வழக்குத் தொடுத்து இருக்கிறாள். தனவந்தனை ஒரு சுரங்கத்துக்கு சொந்தக்காரன் தனக்கு மாயா நித்திரையை மந்திர பெலத்தால் உண்டுபண்ணி தன்னை கலியாணத்துக்கு சம்மதிக்கப் பண்ணினபடியால் என் சுய இஷ்டத்தின்படி நடப்பிக்கப்படாத இந்த விவாகம் நியாயமான

தல்ல. ஆகையால் அதை ரத்துசெய்ய வேண்டுமென்று நியாயவாதம் செய்கிறாள்.

இந்த விவாகம் பதினாறு நாட்களுக்கு முன் நடந்தது. விவாகம் நடந்த மறுநாட் காலையில் அவள் புருஷனை விட்டு பிரிந்துபோய்விட்டாள். தான் சுயபுத்தி இல்லாதிருக்கும்படி மந்திரத்தினால் மயக்கப்பட்டு விவாகஞ்செய்ய நேரிட்டபடியால் கோர்ட்டார் இந்த விவாகக் கட்டுப்பாட்டை நிராகரிக்க வேண்டுமென்றும், விவாகத்துக்கு முன்னிருந்ததுபோலவே தன்னுடைய பெயர் Miss மார்காற் ஆர்ம்ஸ்டிராங்தான் என்றும் தீர்மானிக்க கேட்டுக்கொள்ளுகிறாள்.

---

CURIOUS ESKIMO LIVING.

## எஸ்கிமோ ஜாதியாருடைய விநோத குடியிருப்பு.

---

கிரீன்லான்டு தேசத்து கவர்னருடைய பத்தினியாகிய அன்னாள் மிஸ்ட்ரப் அம்மாள் எஸ்கிமோ ஜாதியாரைப்பற்றி பின் வருமாறு எழுதுகிறார்கள் :—எஸ்கிமோவர் வீடுகளில் சாமான்கள் கிடையாது. அவர்கள் தங்கள் வீடுகளை கல்லாலும் புல்லாலும் கட்டுவார்கள். அவைகளின் ஜன்னல் சூரியனுக்கு நேராக வைக்கப்பட்டிருக்கும். அவைகளுக்கு வாசல் காற்றடிக்காத திசை நோக்கி இருக்கும். வீட்டின் பின்புற சுவரோரமாக தளத்திலிருந்து பதினெட்டு அங்குல உயரத்தில், பலகையால் அட்டாலை போட்டிருக்கும்; அந்த அட்டாலை ஆறு அல்லது எட்டு அடி அகலமுள்ளதாக வீட்டின் நீளமே நெடுகிலும் இருக்கும். அதின் அறைகள் எட்டு அல்லது பத்தடி நீளமுள்ளதாகத் தடுக்கப்பட்டு பலகைச் சுவர் அல்லது தோல்ச் சுவர் உள்ளதாக இருக்கும். ஒவ்வொரு அறையிலுள்ளவர்களுக்கும் அந்த அறையின் முன்னாலே இருக்கும் அட்டாலை சொந்தம். ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு குடும்பம் குடியிருக்கும். அங்கேயே இரவும் பகலும் தாமதிப்பார்கள். மத்தியிலிருக்கும் அறைதான் விசேஷமானதாயிருக்கும். அதில் வீட்டின் சொந்தக்காரனாவது முதிர் வயதுள்ளவனாவது குடியிருப்பான்.

---

THE CARE OF INFANTS.
AN INTERNATIONAL CONGRESS.

## குழந்தைகள் பராமரிப்பு சங்கக் கூட்டம்.

---

தாழ்ந்த ஸ்திதியிலுள்ள ஏழைத் தாய்மாருக்கு பிள்ளைகளைப் பேணி வளர்க்கும் முறைமைகளை பயிற்றுவிக்கும்படியாக ஏற்படுத்தப்பட்ட சங்கமானது சென்ற வருஷத்தில் மிகவும் சிரத்தையாய் வேலை நடத்திற்று. வேனில் காலத்து கொடிய வெயிலில் அநேக ஏழைக் குழந்தைகள் மிகுந்த கஷ்டப்பட்டதனால் சம்பவித்த மரணம் பயங்கரமான விதமாய் அதிகரித்தது. சோபோ என்னும் இடத்தில் ருவின்டன் என்னும் பண்டிதர் சமுத்திர ஜலத்தால் சுகானுகூலத்திற்கு ஏதுவாய்ச் செய்த முறை நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு மிகுந்த பிரயோஜனப்பட்டது. அதை கவனித்த மற்றவர்கள் அவ்வித ஏற்பாடுகளை தேசத்தின் நானாபாகங்களிலும் ஏற்படுத்துவது யுக்தமாயிருக்குமென்றெண்ணி அவ்வித குழந்தைகளின் குடியிருப்புகளுக்கு சமீபமாய் ஸ்தாபனங்களை ஏற்படுத்த யோசிக்கிறார்கள். இவ்வித சிகிச்சையை அடையும்படியாக அநேக குழந்தைகள் அரா பிராணம்



செய்ய நேரிட்டது. கூலிவேலை செய்வோரின் குழந்தைகளுக்குள் அதிகமான மரணம் நேரிடுகிறதைப்பற்றி மிகவும் அனுதாபப்படுகிறார்கள். முன்னிலும் அதிகமான சாவு நேரிட்டதினிமித்தமாக அல்ல, ஜனத்தொகை குறைவுக்கு இது ஒரு காரணமாயிருக்கிறதேயென்று வெகுவாய் கவனித்து அனுதாபப்படுகிறார்கள். ருஷியா, அங்கேரியா, ருமேனியா என்கிற தேசங்களில் மாத்திரம் பிறப்புக் கணக்கு குறையாதிருக்கிறது. மற்ற எல்லா இடங்களிலும் வருஷாவருஷம் குறைந்துகொண்டு வருவதால் குழந்தைகளின் உயிர்நாசத்தை நிவிர்த்திக்க வெகுவாய் பிரயாசப்படுகிறார்கள். குழந்தைகள் மரண நிவிர்த்தி ஜனசமுதாய சங்கக் கூட்டம் சென்ற செப்டெம்பர் மாதம் கடைசியில் பெர்லின் பட்டணத்தில் கூடிற்று. 26 தேசங்களிலுள்ள பிரதிநிதிகள் அங்கு வந்து கூடினபடியால் இது விஷயத்தில் ஜனங்கள் எவ்வளவு அதிகமான சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார்களென்று விளங்கும்.

தாய்மாரின் அறிவீனம் அவர்களுடைய கல்வித்தாழ்வேயென்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆகையால் பெண் பள்ளிக்கூடங்களில் சுகாதார முறைமையையும் பிள்ளை வளர்ப்பு ஒழுங்கையும் கற்பிப்பது மிக்க அவசியம் என்று அந்தக் கூட்டத்தில் வாசிக்கப்பட்ட ஒரு உபந்நியாசத்தின்பேரில் தர்க்கம் நேரிட்டபோது பேசின அநேகர் தாய்மாருக்கு அவ்வித போதனை செய்வது போதுமென்று சொல்வது அப்பிரயோஜனமானது என்றார்கள். சிறு பெண்களுக்கு மனைபாவனையாக போதிப்பதினால் யாதொரு பிரயோஜனம் உண்டாகாது. குழந்தைகளைப் பராமரிக்கும் ஸ்தாபனங்களில் அவர்கள் வளர்ந்தபின் போய் திருஷ்டாந்த பூர்வமாய் பார்த்து யோசித்து அறிந்துகொள்வதே பலிதமாகும். அதற்கு அதிக கஷ்டமும் சிரத்தையும் எடுக்கவேண்டியது. ஜெர்மனிதேசத்தில் இருப்பதுபோல இங்கிலாந்திலே குழந்தை விசாரணை ஸ்தாபனங்கள் இதுவரையிலும் இல்லை. இங்கிலாந்தைவிட ஜெர்மனியிலே வேசிப்பிள்ளைகள் அதிகப்படுவதால் குழந்தைகள் மரணமும் அதிகம்தான். நம்முடைய தாய்மார் பள்ளிக்கூடங்கள் கிட்டத்தட்ட அந்த ஸ்தாபனங்களுக்கு சரியொத்திருக்கிறது. ஆகிலும் இங்கிலாந்திலிருந்து கூட்டத்துக்கு வந்த பிரதிநிதிகள் ஜெர்மனியில் தாங்கள் பார்த்தவைகளைக் குறித்து மிகவும் திருப்தியுள்ளவர்களாகி தங்கள் தேசத்துக்குபோய் இவ்விடத்து ஒழுங்குகளைப்போன்ற ஒழுங்குகளை அங்கேயும் ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். அவைகள் தாய்மார் பாடசாலைகளையொட்டி நடப்பிக்கப்படுகிறபடியால் அதிகமான பயனை விளைவிக்கும் என்பதற்கு சந்தேகமில்லை.

குழந்தைகளை ரட்சிக்கும்படியாக மிகுந்த சிரத்தையுடன் ஏற்பாடுகள் செய்யவே, பிள்ளைகளை வளர்க்கும் விதத்தில் மிகவும் சொற்பமான அறிவு தாய்மாருக்கு மாத்திரமல்ல, எல்லாருக்குமே அப்படித்தான் இருக்கிறது என்பது விசிதமாய் தெரிய வருகிறது. ஜெர்மனி தேசத்து குழந்தை விசாரணை ஸ்தாபனங்களில் வைத்தியர்களும் ஆயாள்மாரும் குழந்தை விஷயத்தைப்பற்றி தாங்களே எவ்வளவு அறிவீனராயிருந்தோமென்றும் அங்கே செய்யப்படும் சிகிச்சா முறைமைகளால் நிவிர்த்திக்கப்படுகிற குற்றம் குறைகள் வாஸ்தவத்தில் இருந்ததென்றுகூட அறியாதவர்களாய் இருந்தோ

மென்றும் கண்டுகொள்ளுகிறார்கள். ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய கருவிகளை தற்கால அறிவு விருத்திக்கு தகுந்த பிரகாரம் சவதரித்து, வைத்திருப்பதோடு நருசுகளையும் ஆயாள்களையும் திட்பநுட்பமாக போதித்து வருகிறார்கள். அநேக தாய்மார் தற்காலம் செய்துவருவது போல தங்கள் பிள்ளைகளை பாமரிக்கும் வேலையை இவ்வித அறிவில்லாத பேதமையுடைய பெண்களிடத்தில் ஒப்புவிக்கிருக்கிற மதிகேடான வழக்கம் சீக்கிரத்திற்குள்ளாக அற்றுப்போகும் என்று நம்ப இடமுண்டு. அப்படிப்பட்ட காலம் வரவர விர்த்தி அடையும் பொழுது இப்பொழுதிருக்கும் தாய்மார் ஏராளமான மோசங்களின் மத்தியில் தங்கள் பிள்ளைகள் எப்படி அபாயத்துக்குள் ஆகாமல் அதிசயமாய் தப்பித்துக் கொண்டார்களென்று எண்ணி பிரமிக்க வேண்டியதாகும்.


**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500 க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100 க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தமையன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| ருசன் என்னும் சிறுமி 4 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயசீஇியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனுனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100க்கு. | 0 | 8 |


# மாதர் மித்திரி.

புத். ௨௫. ௧௯௱௰௨ ௵ - ஏப்பிரல் மீ. இல. ௰.

ARISE, O LORD.

இராகம், லாலி. சாப்புத்தாளம்.

### பல்லவி.

எழுந்தருளும், ஏசு சுவாமீ.

### அனுபல்லவி.

விழுந்தலகை அழிந்தொழிய,
தொழுஞ் சாரும் வரல் ஆச்சே ;— எழுந்

### சரணங்கள்.

1. பத்தினிகள் கந்தவர்க்கம் எடுத் தேந்தி, பிரேதாலங்கா
ரத்தின் முறை நாடி, இதோ ! ஆசரிக்க வந்தாரே ;— எழுந்

2. மகதலா ஊர் மரியாள் மகிழ்ந்து தெரிசித் தேற்ற,
அகமகிழ்ந்தப் போஸ்தலர்கள் அதிசயித்துப் போற்ற,— எழுந்

3. முத்திரையும் காவல்களும் மூடிய கல்லதும் நீங்கி,
சத்துருக்கள் நடுநடுங்கி, தயங்கி, மனங் கலங்க,— எழுந்

4. வேதாளம் நடுங்கி விழ, விண்ணோர்கள் ஒடுங்கித் தொழ,
பாதாளம் இடிந்து விழ, பாபரனே, எழுந்தருளும்,— எழுந்

5. விஸ்தார உலகமதில், மெய்யான திருச்சபையில்,
இஸ்தோத்ர சங்கீர்த்தனம் எந்நாளும் உண்டாக,— எழுந்

## "THE KING HAS COME!"

## "ராஜா வந்தார்!"

கடந்த இரண்டு மூன்று மாதகாலங்களாக இந்த வார்த்தைகள் எத்தனையோ தடவைகளில் சொல்லப்பட்டன. ராஜாவைக் காணக்கூடிய சாவகாசத்திற்காக கல்கத்தாவுக்குப் போனவர்கள் தொகை இதற்கு முன் எக்காலத்திலும் அங்கு கூடினவர்களின் தொகையைவிட மிகவும் அதிகமானது. அவர்கள் தூரமான இடங்களிலிருந்து வந்தார்கள். அவர்களில் அநேகர் கால் நடையாக வெகு தூரம் நடந்து வந்தார்கள். ராஜா கடந்துபோவதை கண்ணுறும்படியாக வெப்பமான வெயிலில் பல மணி நேரமாக நின்றுகொண்டிருந்தார்கள்.

நம்மைப்போன்ற பெரிய ஜனத்திரளை ஆளுகிற மஹா ராஜாவை பார்க்கிறது விசேஷித்த காரியந்தான். ஆனால் அவர் நம்மைப்போல சாதாரண மனிதன். நம்மைப்போலவே அவரும் ஒரு நாள் மரிப்பார்.

ஆனால் இங்கிலாந்து தேசத்தின் ராஜாவைவிட மஹா பெரிய ராஜா ஒருவரிருக்கிறார். அவர் ராஜாக்களுக்கு ராஜா. அவருக்கு முன்பாக நமது ஜார்ஜ் அரசனும் தலை வணங்கிப் பணியவேண்டும். அவர் உலகத்திற்குரிய ராஜ்யத்தின் ராஜா அல்ல. அவர் மனுஷனுடைய இருதயங்களிலும் ஆளுகை செய்கிறார். அவர் ஒரு நாள் வருவார். அந்த நாள் எவ்வளவு மகத்துவம் பொருந்திய நாளாயிருக்கும். அது எப்பொழுது சம்பவிக்கும் என்று நமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று எங்களுக்குத் தெரியும். அவரைப் பார்க்கும்படியாக ஆயத்தப்பட்டிருப்பவர்களுக்கு அவர் காணப்படுவார். அப்பொழுது எல்லாரும் ஒரு இடத்தில் கூடி நெருங்கிவரும்படியான அவசியம் வராது. ஏனென்றால் போதுமான வசதியுள்ள இடம் அப்பொழுது இருக்கும். மிகவும் பெரியவர்களுக்குப் போலவே தாழ்ந்தவர்களுக்கும் சாவகாசங் கிடைக்கும். ஒருவன் இருதயத்தில் சாந்தகுணமும் பரிசுத்தமுமுள்ளவனாயிருந்து தேவனையும் மனுஷனையும் நேசிக்கிற அன்பினால் நிறைந்திருந்தால் ராஜா அப்பேர்ப்பட்டவனுக்குக் காணப்படுவார்.

அவர் வரும்போது டிக்கட்டுகள் வாங்கவோ மற்றவர்கள் தன்னை வெளியே தள்ளிவிடுவார்களென்று பயப்படவோ அவசியமிராது. ஏனென்றால் எல்லாருக்கும் போதுமான இடமிருக்கும். அவசியமான ஒரே டிக்கட் என்னவென்றால் ராஜபக்தியுள்ளவனாயிருப்பதே. தம்முடையவர்களையெல்லாம் அவர் அறிவார். அவர்கள் அன்பு நிறைந்தவர்களாயும் உத்தம இருதயமுள்ளவர்களாயும் சுயநயம் பாராட்டாமல் எல்லாருக்கும் உதவி செய்கிறவர்களாயுமிருப்பார்கள்.

இங்கிலாந்து தேசத்து ராஜா தம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணிக்கொண்ட ஏழைகளிடத்தில் தயவும் தாக்ஷிணியமும் காண்பித்தாரென்று கேள்விப்பட்டோம். ஆனால் அவர் அவர்களுக்கு செய்யக்கூடியது எவ்வளவு சொற்ப உபகாரம். ஏனென்றால் அவருடைய வல்லமைக்கு அளவுண்டு. மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் அவர் சமீபத்தில் வரக்கூடாதவர்களாயிருந்தார்கள். அவருக்கு வெகு தூரத்திலே நின்றார்கள். அவரை நெருங்கிகிட்டிச் சேருவதற்கு ஏதுவில்லாமற்போயிற்று. ஆனால் நமது மஹா பெரிய ராஜனையோ ஆசைப்படுகிறவர்களெல்லாம் அணுகிச் சேரலாம். பூரண நம்



பிக்கையோடும் தாழ்ந்த சிந்தையோடும் அவரிடத்தில் வருகிற யாவரையும் கிருபையாய் ஏற்றுக்கொள்வார். எல்லாருக்கும் உதவிசெய்யத்தக்கதாக அவருடைய வல்லமை அளவற்றதாகவிருக்கிறது. நம்முடைய அன்றாட ஜீவிய விஷயங்களில் அவர் நமக்கு உதவி புரியக்கூடும். அதைவிட அதிகமாகவும் அவர் செய்யக்கூடும். நம்முடைய இருதயத்தை பாவத்தினின்று விடுவித்து சுத்தமாக காத்துக்கொள்ளக்கூடும். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஏனென்றால் தங்களுக்கு இவ்வண்ணமே செய்திருக்கிறாரென்று சாட்சி கொடுக்கிற திரளான ஜனங்களிருக்கிறார்கள்.

நம்முடைய கர்த்தரும் ரக்ஷகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவே இந்த ராஜாதி ராஜா. அவரைக் குறித்து எழுதியிருக்கிறதாவது: "நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியுமுள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவியம் பண்ணி நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்திற்கும் மஹா தேவனும் நமது ரக்ஷகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்கு போதிக்கிறது. அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கிய முள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்."

## A VISIT TO THE MALA.

## உற்சவம் பார்க்கப்போனது.

நாங்கள் ஒரு உற்சவம் பார்க்க இன்று போனோம். அது எங்கள் வீட்டிற்கு அப்பால் ஆற்றைத் தாண்டி சற்றுத் தூரத்திலிருந்தது. நாங்கள் குடியிருக்கிற இடத்திற்கு சமீபத்தில் ஆறு மிகவும் விரிவாயிருந்தது. நாங்கள் கிட்டத்தட்ட இரண்டுமணி நேரம் படகிலே இருக்க நேரிட்டது. ஆற்றோட்டம் சற்று கொந்தளிப்பாயிருந்தது. எங்களில் அநேகருக்கு மயக்கம் வருகிறதுபோல் காணப்பட்டது.

அது பெரிய கூட்டமாயிருக்குமென்றும் ஜனக்கூட்ட மதிகமாயிருந்ததென்றும் கேள்விப்பட்டோம். ஆனால் நாங்கள் கடைசியாய் படகிலிருந்திறங்கி சேற்று நிலத்தினூடே இரண்டு மனுஷர் எங்களை தூக்கிக்கொண்டு போன பின்பு சிறிது தூரம் கால் நடையாகப் போனோம். நாங்கள் எதிர்பார்த்திருந்த வண்ணம் பெருங் கூட்டம் அங்கே காணப்படவில்லை. கடைக்காரர் தங்கள் சாமான்களையெல்லாம் ஒழுங்காயடுக்கி ஜனங்களுடைய வரவுக்காக காத்துக்கொண்டும் முன்னதாக வந்திருந்த சிலருக்கு விற்பனை செய்துகொண்டுமிருந்தார்கள்.

அங்கே வந்த யாவரும் எங்களிடமிருந்து ஆளுக்கொரு புஸ்தகமாவது வாங்கிக்கொள்ள சாவகாசமிருந்தது. படகேறிப்போன எங்கள் ஏழுபேரிடத்திலும ஆளுக்கு ஒவ்வொரு மூட்டை புஸ்தகமிருந்தது. சுவிசேஷ பிரசங்கத்தை கேட்கும்படியான சந்தர்ப்பம் யாவருக்குங் கிடைத்தது. ஆனால் எங்கள் புஸ்தகங்களை வாங்குகிறதற்கு அவ்வளவாக அவர்கள் பிரியங் கொள்ளவில்லை.

அவர்களில் சிலர் "எங்களுக்கு அவைகளை இலவசமாகக் கொடுங்கள், மற்ற துரைமாரும் துரைசானிகளும் அவைகளைக் கிரயமின்றிக் கொடுக்கிறார்கள்" என்றுச் சொன்னார்கள். நாங்கள் அவர்களுக்கு மறுமொழியாக "அவர்கள் இலவசமாய் புஸ்தகங்களைப் பெற்றுக்கொண்டால் அவைகளை மதிக்கமாட்டார்கள். விலை கொடுத்து வாங்கினால் அவைகளைப் பத்திரப்படுத்தவும் வாசிக்கவும் கவலையுண்டாகும். நாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் வஸ்துக்களைப்போல பிரயாசமும் வருத்தமுமில்லாமல் கிடைக்கிற பொருள்களை மதிக்கிறதில்லையென்று உங்களுக்குத் தெரியுமே. மேலும் நாங்கள் விலைகொடுத்து வாங்கின புஸ்தகங்களை சும்மா ஏன் கொடுக்கவேண்டியதென்று சொன்னோம்.

வேறு சிலர், "இந்தப் புஸ்தகங்கள் அப்பிரயோஜனமானவைகள்" என்று சொல்லி வாங்குகிறவர்களையும் வாங்க ஒட்டாமல் தங்கள் காசுகளை விருதே இந்த புஸ்தகங்களுக்காக செலவிடாமல் பத்திரம் பண்ணும்படியாக ஆலோசனை சொன்னார்கள். சொன்னவர்களோ இந்த புஸ்தகங்களை வாசித்திருப்பதில்லை. அப்படியிருக்க அவைகள் உதவக்கூடியவைகளோ உதவாதவைகளோ என்பதைப் பற்றி எப்படித் தீர்ப்புச் சொல்லக்கூடும்?

இன்னும் சிலர், "இவைகள் நமது மார்க்கத்தைச் சேர்ந்த புஸ்தகங்களல்ல. அப்படியிருக்க நாம் ஏன் வாங்கவேண்டும்" என்று சொன்னார்கள். ஆனால் சத்தியம் எப்பொழுதும் நல்லதென்பதையும் அவைகள் எங்கே காணப்பட்டாலும் காரியமில்லையென்பதையும் சிந்திக்கவில்லை. இந்தப் புஸ்தகங்களில் சத்தியமான விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவாவென்று அவர்களுக்குத் தெரியாது. இந்துக்களாயிருந்தபோதிலும் அவைகளைக் கருத்தாய் வாசித்தவர்கள் மெய்யாய் இவைகள் நல்ல வார்த்தைகள், அதின் போதனைகள் உத்தமமானவைகள், அதில் போதிக்கப்பட்டிருக்கிறவைகளின்படி எல்லாரும் கைக்கொண்டு நடப்பார்களாகில் அதைவிட விரும்பப்படத்தக்கது வேறொன்றுமில்லை" என்று சொல்லுகிறார்கள். அது வாஸ்தவமானால் அவைகள் உபயோகமற்ற புஸ்தகங்களென்றும் தங்கள் மார்க்கத்தைப் போதியாதபடியால், அவைகளை வாங்கமாட்டோமென்று சொல்லுகிறவர்கள் மெய்யாய்க் குற்றவாளிகள். இயேசுகிறிஸ்து ஒரே ஜாதியாரை அல்லது ஒரே ஜனத்தை மாத்திரம் ரக்ஷிக்க வரவில்லை. அவர் எந்த ஜாதியாரையும் எத்தேசத்தாரையும் பெரியோர் சிறியோர் யாவரையும் ரக்ஷிக்க வந்தார். ஆகையால் கிறிஸ்துவின் போதனைகள் தங்களுக்கு அவசியமில்லையென்று ஒருவரும் சொல்லக்கூடாது. அவைகள் சகலத்திராருக்கும் உபயோகமானவை.

சிறிது நேரங் கழித்து இனிமேல் அங்கே தாமதிக்கிறதினால் யாதொரு பிரயோஜனமுமில்லையென்று நாங்கள் படவுகளில் ஏறி வீட்டை நோக்கிச் சென்றோம். ஆகிலும் ரக்ஷிப்பின் செய்தியாகிய நற்செய்தியை கேட்டவர்கள் அவைகளை ஞாபகப்படுத்திக்கொள்வார்களென்றும் அந்த போதனைகளால் அவர்களுடைய ஜீவியம் செம்மையாகுமென்றும் நம்புகிறோம். கிட்டத்தட்ட நூறு புஸ்தகங்களை அங்கே விற்றோம். அவைகளை வாங்கினவர்கள் அவைகளை வாசிக்கிறதினால் நற்பலனடைவார்களென்றும் நினைக்கிறோம்.



## THE DANGER OF USING INTONXCICANTS FOR MEDICINE.

## லாகிரிப் பொருள்களை மருந்துக்கென்று உபயோகித்தல்.

அன்றொரு நாள் ஒரு மனுஷன் என்னைப் பார்த்து "நான் வீட்டை விட்டுப் புறப்படும்போது என்னுடைய அண்ணன் என்னை நோக்கி உன் உடம்பு அசௌக்கியப்பட்டால் கொஞ்சம் கள்ளையாவது அதைப்போன்ற வேறெந்த வஸ்துவையாவது நீ சாப்பிட்டாயானால் உனக்குத்தேக சௌக்கியமுண்டாகும் என்று சொன்னார்" என்றான்.

நான் அடிக்கடி கேள்விப்படுகிறபடி இந்தியாவிலேகூட பிராந்தியாவது அதைப்போலொத்த லாகிரி வஸ்துக்களாவது மருந்து வகைக்கு நல்லவைகள் என்று அடிக்கடி சொல்லுகிறதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதைப் போல் அபத்தமான பேச்சு வேறில்லை. கெட்டிக்காரரான வைத்தியர்கள் லாகிரிப் பொருள்களை மருந்துக்கென்று உபயோகிப்பது அநாவசியமும் மோசகரமுமானதென்று அபிப்பிராயப்படுகிறார்கள். மருந்துக்காக அவைகளை உபயோகிக்கத் துவக்குகிறவன் பெரும்பாலும் உபயோகித்துக்கொண்டிருந்து கடைசியாக அதை நெடுகிலும் ஆசிக்கப் பழகிவிடுகிறபடியால் அது மோசகரமானது. அவன் இவ்விதமாக அந்தத் துற்பழக்கத்திற்கு அடிமையாகிப்போகிறான். ஆகையால் இது காரியத்தைக் குறித்து வேறொருவர் சொல்லும் வார்த்தைகளை இங்கே எடுத்துக் கூறுகிறேன். அவைகள் ஞானமான வார்த்தைகள். இதை வாசிக்கிறவர்களும் அவற்றைக் கவனிப்பார்களென்று நினைக்கிறேன்.

"மயக்கமுண்டாகிற காலங்களில் பிராந்தியை அவசியத்திற்கேற்றதென்று பெரும்பாலுங் கொடுக்கிறார்கள். இரத்தாசயம் சட்டென்று தன் வேலையைச் செய்யாமல் நின்று தன் உணர்வை இழந்துபோகிறதினால் மயக்கமுண்டாகிறது. இப்படிப்பட்ட ஸ்திதியில் சிகிற்சைக்காக பிராந்தி கொடுப்பது கொஞ்சமுமவசியமில்லை. அதினால் மெய்யாகவே சேதந்தானுண்டாகுமென்று தெரியவருகிறது. மயக்கம் வரப்போகிறதென்கிற போதம் ஒருவனுக்குண்டாகும்பொழுது அப்படிப்பட்டவன் அமரிக்கையாய்ப் படுத்துக்கொண்டால் மயக்கமானது பெரும்பாலும் நீங்கிப்போகும். ஆனால் இவ்வித நோவு சடுதியாக சம்பவித்தால் வியாதியஸ்தனை முகங்குப்புறப் படுக்கவைத்து தலைப்பக்கம் சற்று தாழ்வாகவும், உடல் பக்கம் சற்று உயர்வாகவும் கிடத்திவைக்கவேண்டியது. அதின்பின் முகத்திலே குளிர்ந்த ஜலத்தை இறைத்தல், உள்ளங்கைகளையும் நெஞ்சையும் தேய்த்தல், நவாச்சாரத்தை முகர்தல் இவைகளை அநுசரிக்கலாம்; நோவாளி சாப்பிடக்கூடுமானால் வெந்நீரையும் சுடுபாலையும் உள்ளுக்குக் கொடுக்கலாம். பூரண உணர்வு திரும்புமட்டும் நோவாளியை எழுந்திருக்கவிடக்கூடாது. அல்லாவிட்டால் மறுபடியும் அந்த நோவு திரும்பி வரும்.

"சடுதியான அபாய சம்பவங்களால் இவ்வித நோவு நேரிட்டால் மேற்சொல்லிய சிகிற்சைகளோடு கைகால்களை வெந்நீரில் கழுவுவது உபயோகமாகும். லாகிரி வஸ்து ரத்தாசயத்தை சோர்வுபடுத்துகிற இயல்புள்ளதானதால் இப்படிப்பட்ட வேளைகளில் அதைக் கொடுக்கவே கூடாது. கொடுக்கிறதினால் மோசமுண்டாகும். வலிப்புக்காரருக்கு பிராந்தி

யைக் கொடுக்கிறது வழக்கமாயிருக்கிறது. அது மிகவும் அபாயம். அதினால் பிரயோஜனமில்லை. இவ்வித வலிப்பு காக்கா வலியைச் சேர்ந்ததாயிருந்தால் சாதாரணமாய் அது வாலிபருக்கு நேரிடுகிறபடியால் அந்த வலிப்பு இருக்குமட்டும் நோவாளி தன்னை காயப்படுத்திக்கொள்ளாதபடி கவனமாய்ப் பார்க்க வேண்டியது. முதியோருக்கு இவ்வித வலிப்பு ரத்தக் கொதிப்பினால் உண்டாகும். இந்த ஸ்திதியில் தலையிலுள்ள ரத்த நரம்பு வெடித்து ரத்த ஓட்டம் அதிகரித்து மூளையை இறுக்குகிறது, அல்லது மூளை நரம்புகளை கெடுத்துப்போடுகிறது. அதனால் சட்டென்று சொரணை கெட்டுப் போகிறது. இந்த ஸ்திதியிலே பிராந்தியைக் கொடுக்கிறதினால் ரத்தப் பாய்ச்சலை அதிகப்படுத்தி நோவாளியை அதிக அபாயத்துக்குள்ளாக்கும் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

“சாதாரண ஜலதோஷம் உண்டாகும்போது அதை வேர்வையினால் தடுக்கும்படியாக மதுபானத்தைக் கொடுக்கிறதுண்டு. ஒருவனுக்கு ஜலதோஷம் உண்டாகும்போது அது எவ்விதமான வியாதியாக திரும்பிவிடுமோ என்று தீர்மானம் சொல்லுவது கூடாமையாயிருக்கும். ஜலதோஷம் அதிகப்பட்டிருக்குமேயானால் ஜுரம் அதோடு சேர்ந்திருக்கும். இப்படிப்பட்ட கோளாறுகளில் மதுபானம் கொடுப்பது யுக்தமல்ல. நுரையீரல் வீங்கி இருக்குமானாலும் காய்ச்சல் குணம் காணப்படும். நுரையீரல் வீக்கமானது வியாதிக்கிருமி ரத்தத்தில் சேருகிறதினால் உண்டாகிறது. இந்த வியாதிக் கிருமியைத் தாக்கும்படியாக ரத்தத்தில் சாதாரணமான ஒரு இயற்கையான வழிவகை அமைந்திருக்கிறது. ஏராளமான வெள்ளை ரத்த அணுக்கள் சாதாரண ரத்தத்தோடு கலந்திருக்கிறது. அவைகளுடைய தன்மை ரத்தத்தில் போய்ச் சேருகிற வியாதிக் கிருமிகளை எதிர்த்து அதம் செய்து சீரணிக்கப்பண்ணுவதுதான். அவைகளை ரத்தத்தைப் பாதுகாக்கிற போலீஸ் சேவகர் என்றாவது, அதைச் சுத்தம் செய்கிற தோட்டிகள் என்றாவது சொல்லலாம். அந்தக் கிருமிகள் ரத்தத்தில் போய்ச் சேரும்பொழுது சீக்கிரத்திற்குள்ளாக தொகையில் பலுகிப்போகும். ரத்தத்தில் உண்டாகும் இவ்விதப் போருக்கு இயற்கையே மிகவும் ஒத்தாசையாக இருக்கிறது. இவ்வித போர் நடக்கும்பொழுது நோவாளி அதிகக் கொடும் ஜுரமும் கொள்ளுகிறான். இந்த வெள்ளை ரத்த அணுக்கள் மற்றவைகளை மேற்கொள்ளுமேயானால் நோய்க் குணம் குறைந்து நோவாளி ஆரோக்கியம் அடைகிறான். ஜலதோஷத்தினாலே அசௌக்கியம் உண்டாயிருக்குமேயானால் அதினால் பிறக்கும் வியாதியின் மும்முரம் நோயைப் பிறப்பிக்கும் கிருமிகள் (Bacteria) ரத்தத்தின் வெள்ளை அணுக்களோடு சண்டையிடுவதினால் அதிகரிக்கும். அந்த வெள்ளை ரத்த அணுக்கள் ஆரோக்கியம் உள்ளவைகளாயிருந்தால் மற்றவைகளை மேற்கொண்டு சில மணி நேரங்களுக்குள்ளாக நோயின் அகோரம் தணிந்துபோகும். லாகிரி வஸ்துக்கள் வெள்ளை ரத்த அணுக்களை பலுகவொட்டாமல் குறைத்து விடுகிறதினால் (Bacteria) என்னும் வியாதிக் கிருமிகள் மேற்கொள்ளவும் முன்னதாக உடலிலிருக்கும் ரத்தக் கிருமிகள் பெலன் குறைந்துபோகவும் செய்கிறது. ஆகவே ஜலதோஷத்தினால் கஷ்டப்பட்டவர்களுக்கு லாகிரி வஸ்து நோயை அதிகரிக்க காரணம் ஆகிறது. வியாதி லகுவாகக்கூடிய ஏது காரணத்தை மதுபானம் அழித்துப்போடு



கிறது. மதுபானம் சாப்பிடுவோர் உடலில் மற்றவர்கள் உடலிலிருப்பதைவிட வெள்ளை ரத்த அணுக்கள் மிகவும் குறைவாயிருக்கும்; இதினாலேதான் அதிக பயங்கரமான வியாதிகள் ஜலதோஷக்காரருக்கு உண்டாகிறது. வியாதி சொஸ்தமாகும்படி இயற்கையிலேயே தேவன் உண்டுபண்ணி இருக்கிற ஏது காரணங்களை தங்கள் குடிவெறியினாலே அபத்தமாக்கிவிடுகிறார்கள்.

இவ்வித காரணங்களினால் அற்ப சொற்ப வியாதிகளுக்கு பிராந்தி முதலிய மதுபானங்களை கொடுப்பது அனுவசியமாயிருப்பதோடு மதியீனமாகவும் இருக்கிறது. லாகிரி வஸ்துக்கள் இல்லாமலே நோய்களை லகுவாய் சௌக்கியப்படுத்தலாம். புத்தியுள்ள வைத்தியர்களிடத்தில் நல்ல மருந்துக்களால் சௌக்கியம் சம்பாதிப்பதற்குப் பதிலாக லாகிரி வஸ்துக்களால் அநேகர் அடிக்கடி தங்கள் சுகத்தையும் ஜீவனையும் இழந்துவிடுகிறார்கள்.

“நான் முப்பது வருஷகாலமாக வைத்திய தொழிலில் அனுபவசாலியாயிருப்பதால் நான் கவனித்தமட்டில் மதுபானமானது சிகிச்சா முறைமைக்கு ஏற்றதல்லவென்றும் மிகுந்த அபாயகரமுள்ளதென்றும் கண்டிருக்கிறேன்.”

---

## A HISTORIC CLOCK.

## காலங் கண்ட கடியாரம்.

கவர்ன்மெண்ட் சம்பந்தமாய் ஒளிச் சித்திர படம் பிடிக்கிறவரும் (Photographer) இயந்திர சாஸ்திரியுமாகிய (J. D'Cruz) எல். டிக்ரூஸ் என்பவர் பற்பனாபபுரம் கோட்டையில் அநேக வருஷங்களாக கெட்டுப் பாழாய்க் கிடந்த ஒரு கடியாரத்தை சமீபகாலத்தில் பூரணமாக பழுதுபார்த்து சீர்ப்படுத்தியிருக்கிறார். 1741-ம் வருஷம் முதல் 1777-ம் வருஷம் மட்டும் திருவிதாங்கோட்டு போர்வீரர் தளத்தை நடத்திவந்த டிலானாய் தளகர்த்தனுடைய ஆக்ஞைப்படி பற்பனாபபுரம் கோட்டை கோபுரத்தில் இந்த கடியாரம் வைக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் அதிகப் பிரபல்யமாயிருந்த கொள்ளைக்காரர் கூட்டத்தின் தலைவனொருவன் பற்பனாபபுரம் கோட்டைக்குள் புகுந்து அநேக அகிர்த்தியங்களை நடப்பித்ததோடு இந்த கடியாரத்தையும் கோபுரத்திலிருந்து கீழே தள்ளி முற்றும் கெடுத்துவிட்டான். இரண்டு நூற்றாண்டுகளாக உபயோகமற்றதாய் குப்பையோடு குப்பையாய் கலந்து கிடந்தது. அந்த கடியாரம் சுதேச தொழிலாளிகளின் வேலைப்பாடு. அதில் பலவகை லோகங்கள் கலப்பிடமாயிருப்பதால் அது என்ன லோகம் என்று பகுத்து பிரித்து அறிவது கூடாததாயிருக்கிறது. அந்த கடியாரம் 4½ அடி உயரம் கொண்டது. அது தொங்குகிற பளுவான குண்டுகளால் இயங்குகிறது.

---

## THE BUILDER OF THE RUHN-L LAH.

## ருன்-இல்-லாவை கட்டி முடித்தவன்.

துரை தனக்கு என்ன வேலையிட்டாலும் செய்வேன் என்று ஜல்லரூர் என்கிற இடத்தில் அவர்களண்டைவந்த அவன் வேக்ராதவன் என்று அர்த்தம்கொள்ளுகிற கச்சா என்பது தன்னுடைய பேர் என்று அவர்களுக்குச் சொல்லி இருந்தான். அவன் அவர்கள் பிரயாணம்பண்ணிக்கொண்டுபோகிற நாட்டில் பிறந்தவன் என்றும், துரிதமாகவும் கனமாகவும்

அவர்களுக்கு வழிகாட்ட தன்னால் கூடும் என்றும் சொன்னான்.

டாக்டர் கிரே சற்று நினைத்தார். அந்த மனுஷன் பார்வைக்கு யுக்திசாலியும் சமர்த்தனுமாய் விளங்கினபடியால் அவன் மனம் கொண்டு வேலை செய்தால் பிரயோஜனமுள்ள வேலைக்காரனாய் இருக்கலாம். ஆனால் அவனை நம்பலாமா? அவர்கள் அவனை சந்தித்த முதல்நாள் இரவிலே அவனுடைய முகத்தை பார்த்தபொழுது, முக வசீகரம் விரும்பப்படத்தக்கதாயிருந்தபோதிலும் அது வெளி வேஷ காட்சியாய் மாத்திரம் இருக்குமோ என்று நினைத்துப் பார்த்தார்.

அவருடைய மகன் அரி என்பவன் இருமின சாடையினாலே அவர் அவனை திரும்பிப் பார்த்து என்ன விசேஷம் என்றார்.

மகன் தகப்பனையும் கச்சாவையும் சந்தேகப் பார்வையோடு மாறி மாறிப் பார்த்து பின்பு "நான் அவனுடைய பேர் ஆலன்சோர் என்று நினைத்தேன். பேர்தான் நதிக்கரையிலே தன் ஜீவியத்தைக் குறித்து ஜாக்கோடும் என்னோடும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அதுதான் என்பேர் என்று சொன்னானே" என்றான்.

அப்பொழுது அந்த மனுஷன் அமரிக்கையான சிரித்த முகத்தோடு "அது வெகுநாளைக்கு முன்னே அப்படி; காவலாளர் இல்லாமல் மதியீனமாக பிரயாணிகள் தனிவழிபோகும்பொழுது அவர்கள் சாமான்களை கொள்ளையிட்டு பங்கிட்டு ஜீவித்துக்கொண்டிருந்தேனே, அப்பொழுது என்பேர் அது. அப்புறம்மாறாமுதல் உருடா மட்டுமுள்ள ஜனங்கள் பயந்து நடுங்கத்தக்கதாக ஆஞ்சியர் பட்டணத்தில் அடிமைகளைப் பிடித்துக்கொண்டிருந்தபொழுது என் பேர் பானா. அந்த வருமானத்தினால் தனவந்தனானபோது ஜானா என்கிற இடத்தில் அடிமை வியாபாரியாயிருந்தபோது எனக்குப் பேர் ஆமட் இபான் ஈஷாக். அதெல்லாம் காலத்துக்கும் ஆஸ்திக்கும் தகுந்த பேர்கள். இப்பொழுது இந்நாட்டின் சுதேசியும் துரைமார் வேலையில் ஜாக்கிரதையுமுள்ளவனுமாகிய கச்சா என்று பேர் வைத்திருக்கிறேன்" என்றான்.

அப்பொழுது டாக்டர் கிரே இந்த இடங்களெல்லாம் உனக்குப் பிறந்தகமாய் இருக்கக்கூடாதே. யதார்த்தமான பேர் உனக்கு ஒன்று இருக்கவேண்டுவது நிச்சயமல்லவா என்று கேட்டார். அப்பொழுது கச்சா "அது எப்படியும் ஆகட்டும், கடந்த காலம் திரும்பி வராது, காலம் மாறும்பொழுது பேரும் மாறும்தான். ஒரு மனுஷன், எந்த ஊரில் குடியிருக்கிறானோ அந்த ஊர் அவனுக்கு சொந்த நாடு. துரையே உமக்கு வேண்டியதெல்லாம் என்ன? ஆலன் சோர் என்கிற திருடன் கச்சா என்கிற வழிகாட்டியாயிருந்து உம்மிடத்தில் ஊழியம் செய்வது உமக்கு சம்மதம்தானா? துரைக்கு தெரியாத காரியமில்லை" என்றான்.

டாக்டர் கிரே அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தார். இவன் என்ன இடக்கனாயிருப்பானோ அல்லது அவன் உண்மைதான் பேசுகிறானோ, அவனுடைய முகக்குறியினால் ஒன்றையும் தீர்மானிக்க வகையில்லையே என்று மவுனமாய் இருந்தார்.

அப்புறம் அவனைப்பார்த்து நீ நாளைக்கு இந்நேரம் என்னிடத்தில் வந்தால் உனக்கு மாறுத்தரம் சொல்லுகிறேன் என்று அனுப்பிவிட்டார்.

அந்த மனுஷன் சலாம் போட்டுக்கொண்டு அறையைவிட்டு வெளிப்படவும், டாக்டர் தன் மனதிலே தீர்மானம் பண்ணிவிட்டார். அவரோடு வந்த சிறு கூட்டத்தார் தங்களுக்கு வேண்டிய சாமான்



களையும், உதவியாட்களையும் சவதரிக்கும்படியாக ஒரு வாரம் காத்திருந்தார்கள். மழைகாலம் ஆரம்பம் ஆகுமுன் சோனாற்றங்கரைக்குப்போய் பாளயம் இறங்கி ஸ்தாபிதமாகி தான் வந்தவேலையை ஆரம்பிக்க அவர் கொண்டிருந்தார். நல்ல மனுஷர் கிடைப்பது அரிதாயிருந்தது. இவன் மற்றவர்களைவிட அதிக அநுபவசாலியும், வேலை செய்யக்கூடியவனுமாயிருந்தான். இவன் காவல் காக்கிறதற்கு உபயோகப் படுவான் என்று எண்ணினார். மூன்றின இரவில் சம்பவித்ததை கவனிக்கும்பொழுது அவன் பேரிலே டாக்டருக்கு நம்பிக்கை யற்றுப்போனபோதிலும் அந்த அநுபவத்துக்கு விரோதமாக இவனை வேலைக்கு வைத்துக்கொள்ளலாம் என்கிற எண்ணம் எப்படியோ இவர் மனதில் பட்டது. அவர்கள் அந்த இடத்துக்கு வந்துசேர்ந்த இரவில் தன் அறையிலேபடுத்திருக்கையில் ஏதோ ஒன்று அங்கு நடமாடுவதாக இவருக்குத் தோன்றி விழித்துக்கொண்டார். ஜன்னல் வழியாக வந்த நிலா வெளிச்சத்தினால் தமது சாமான்களுக்குள்ளே ஏதோ ஒன்று நிழல்போல் அசைவதை கவனித்தார்; அந்த நிழல் தன் படுக்கையண்டை வரவும் அவர் தூங்கினதுபோல் மாரீசம் பண்ணினார். உடனே அவருடைய தலையணைக்குக் கீழும் அவர் தோளைச்சுற்றிலும் ஒரு கை மிகவும் மெதுவாய் தடவிக்கொண்டிருந்தது. அவர் தூங்கிக்கொண்டிருந்தாரானால் இப்படிக் கை நடமாடுகிறதை அவர் அறியக் கூடாதிருக்கும். அந்த உருவம் அவருடைய கைக்கடியாரத்தையும் பணப்பையையும் எடுத்துக்கொண்டு திரும்புகையில் பள்ளிக்கூடத்திலே குஸ்தி கைவரிசை அப்பியாசங்களில் தேறின தமது பலமான கரத்தால் அவன் தோளை இரும்பு ஆயுதத்தால் பிடித்துக்கொள்வதுபோல் அங்குமிங்கும் அசையவொட்டாமல் கொளுவிக்கொண்டார். அப்பொழுது தரையிலே உட்கார்ந்துகொண்டான், அவர் கட்டிலில் உட்கார்ந்து வண்ணமாய் அவனை பார்த்துக்கொண்டிருந்தார்.

அவன் தன் தோளை தடவிக்கொடுத்துக்கொண்டு "துரையுடைய கை ரொம்ப பெலமுள்ளது, துப்பாக்கிக் குண்டைவிட விசைவுள்ளது, துரை இப்பொழுது என்னை கொன்றுவிடப் போகிறாரா அல்லது அறையிலேபோட்டு அடைத்துவைக்கப் போகிறாரா" என்று சொன்னான்.

டாக்டர் அவனைப்பார்த்து சாந்தமாக "துரை உன்னை ஒன்றும் செய்யமாட்டார். நீ எடுத்த பொருட்களை வைத்துவிட்டு சமாதானத்தோடு போகலாம், நான் தண்டனைவிதிக்க இங்கே வரவில்லை" என்று சொன்னார். அப்பொழுது அந்த மனுஷன் பிடிவாதமாக தன் தலையைச் சொறிந்துகொண்டு யோசனை பண்ணுகிறவனைப்போல "துரை என்னைக் கையுங்களவுமாகப் பிடித்தாரே, அவர் என்னைத் தண்டிப்பது நியாயமாயிற்றே. அடிமை வியாபார நாடுகளிலே இப்படிப்பட்டவர்களை நாங்கள் கொன்றுவிடுவது வழக்கம். இந்தப் பட்டணப் பிரதேசங்களில் அடைத்து வைக்கிறார்கள். இருபது வருஷகாலமாக நான் திருடிக்கொண்டு வந்தேன். இவ்விதமாக பிடிபட்டு அபஜெயமடைந்ததில்லை. ஆனால் துரையவர்கள் ஒன்றும் செய்யமாட்டேன் என்கிறீர்கள்" என்று புலம்பினான்.

அவன் கடியாரத்தையும் பணப்பையையும் கட்டிலின்மேல் வைத்துவிட்டு வாசல்மட்டும் போய் மறுபடியும் திரும்பி "துரையவர்களுடைய சாமான்களை பார்க்கிறதற்கு ஆள் வேண்டாமா, நான் துரை அவர்களுடைய ஆட்காரனு

யிருக்க விரும்புகிறேன்" என்று கேட்டான்.

டாக்டர் அவனுக்கு மாறுத்தரமாக "வேண்டாம் நீ எனக்கு அவசியமில்லை, இப்பொழுது நீ போகலாம். இவ்வித தொழிலிலே நீ இன்னும் கண்டுபிடிக்கப் படுவதை நான் இன்னொருதரம் கேள்விப்படாதபடி நீ ஜாக்கிரதையாயிரு" என்று எச்சரித்தார்.

அடுத்த நாளில் யாதொன்றும் சம்பவித்திராததுபோல் மிகுந்த அமரிக்கையோடும் சாந்தத்தோடும் கூட்டத்திலிருந்த சிறுவரோடு தன்னுடைய முந்தின அடங்கா ஜீவியத்தைபபற்றியும், அப்பொழுது காடுகளில் நடந்த சம்பவங்களைப்பற்றியும் விநோதமாய்ப் பேசி, அவர்கள் தயவை சம்பாதிக்க எத்தனித்தான். இந்த சமயத்தில்தான் இந்தக் கதையின் துவக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிற விசேஷம் நடந்தது, வேலை அமர்ந்தான். அடுத்த நாளில் அவனை வேட்டையாடவும் வழிகாட்டவுமாக வேலை அமர்த்திக் கொண்டோம். மறுநாள் உதயத்தில் சோனுற்றங்கரையில் எங்களுடைய வேலை யார்த்தமாக பிரயாணப்பட்டோம். மூன்றாம்நாளில் மழைபெய்து அவரவர் கூடாரங்களுக்குப் போக நேரிட்டது. கச்சாவுக்கு சடுதியாய் பயங்கரமான ஜுரம் உண்டாயிற்று. அவன் ஒருவருக்கும் சொல்லாமல் சாகும்படியாக செடிகளுக்குள்ளேபோய் படுத்துக்கொண்டான், ஏனென்றால் அவன் அறிந்த மட்டில் இப்படி வியாதிப்பட்டவர்களை எதோனே என்று கைசோர விட்டுவிடுவது அவ்விடத்திய வழக்கம். சிறுவரில் ஒருவன் அவனைக் கண்டுபிடித்து கூடாரத்தில் கொண்டுவந்து சுகமான படுக்கையின் மேல் போட்டு அவனுக்கு தன்னுணர்வு வந்தபோது மிகுந்த பிரமிப்பு அடைந்தான். எல்லாரும் மாறி மாறி அவனுக்கு உதவிசெய்து போஷித்துவந்தார்கள். அவன் வியாதியாயிருந்து சௌக்கியமான பத்து நாட்களும் அவன் ஒவ்வொருவரையும் ஆச்சரியத்துடன் பார்த்து தன் புத்திக்கு எட்டாததால் இவர்களுடைய எண்ணம் என்னவாயிருக்குமென்று அதிக ஆச்சரியத்துடன் கவனித்தான். மறுபடியும் நாங்கள் பிரயாணம் ஆரம்பித்தோம். அவனுடைய முகம் எப்போதும்போலவே குறுவினதாயிருந்தது.

கடைசியாக சோனுற்றின் ஒரு கரை அடுத்தோம். அதில் நீரோட்டம் அதிக விசைவாயிருந்தது. கடக்கக்கூடாது என்று தியங்கி நின்றோம். டாக்டர் கிரே சுழலுகிற தண்ணீரைப் பார்த்து பயந்தார். போன வருஷத்தில் இந்தத் தண்ணீரில் ஒரு வெள்ளைக்கார வியாபாரி அமிழ்ந்துபோனதாகவும், அடிக்கடி அநேக சுதேசிகள் அதில் நீந்திப்போய் உயிரிழந்ததாகவும் கேள்விப்பட்டோம். விசேஷமாக நாங்கள் நின்ற இடம் அதிக மோசகரமானது. ஏனென்றால் அந்த இடம் ஈரமும் சகதியும் காச்சல் பிடித்ததுமான இடம். ஆகையால் இரண்டு நாளாய் பிரயாசப்பட்டு ஒரு தெப்பத்தை கட்டி நீரோட்டம் மெதுவாயிருக்கிற ஒரு இடத்தில் கொண்டுபோய் விட்டார்கள். அதிலிருந்து குறுக்கே ஓடி மறுகரை சேர்ந்தோம். உணவு பொருள் கொஞ்சம் தண்ணீருக்குள் விழுந்துபோயிற்று. வேறே நஷ்டம் ஒன்றும் நேரிடவில்லை.

டாக்டர் கிரே படவுகரை வந்து சேர்ந்த உடனே! "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லி "இந்த ஆற்றையும் அதனால் நேரிடும் விபத்துகளையும் நன்றாய் அறிகிற ஒருவனுடைய வசத்தில் ஒரு பெலனான படவு செய்துகொடுத்து இந்த இடத்தில் நிறுத்திவைத்



தால் ஜனங்களுக்கு நன்மையுண்டாகி, அநேக உயிர்கள் சேதப்படாமலிருக்கும். ஒரு நல்ல மனுஷனைக் கொண்டு தேவன் இந்த வேலையை நடப்பிப்பார்" என்று சொன்னார்.

அப்போது கச்சா இடுப்பு அளவு தண்ணீரில்தெப்பத்தைப் பிடித்துக்கொண்டு நின்றான். சுகமாய் கரை சேர்ந்ததை பற்றிய சந்தோஷமாவது, டாக்டர் கிரே சொன்ன வார்த்தைகளை பற்றிய கவனமாவது அவன் முகத்திலே விளங்கினதில்லை. எல்லாரும் பிரயாணத்திற்கு ஆயத்தமாயிருக்கும்பொழுது கச்சா அவர்கள் முன்பாக வந்து சலாம்செய்து: "நம்முடைய பிரயாணம் முடிந்தது, இன்னும் கொஞ்ச தூரம் போனால் மலையுச்சியில் ஏறிவிடுவோம்; அப்புறம் என்னால் யாதொரு பிரயோஜனமுமில்லை, துரைக்கு இப்பொழுது சலாம் சொல்லுகிறேன். நான் நல்லதனமாக துரை யிடத்திலிருந்து போகிறதற்கு அடையாளமாக அவருடைய கையைத் தொட்டு விடைபெற்றுக்கொள்ள எனக்கு ஆசையாயிருக்கிறது" என்று சொன்னான்.

அப்பொழுது டாக்டர் கிரே ஆச்சரியத்தோடு நீ எங்களோடுகூட வரமாட்டாயா என்று கேட்க, அவன் மறுமொழியாக, துரையே அதற்கு அவசியமில்லை, என் பிரயாணம் இங்கே முடிந்து போகிறது என்றுரைத்தான்.

டாக்டர் கிரே கச்சாவைப் பார்த்து, நீ எங்களை விட்டுப்பிரிந்தால் சிலவேளை உனக்கு அதிக சௌக்கியமுண்டாகலாம். ஆனால் இன்னும் சிலகாலம் நீ எங்களோடு தாமதித்திருக்க சம்மதிப்பாய் என்று நினைத்திருந்தேன் என்று சொல்லிக் கொண்டே தன் பணப்பையைத் திறக்கவே, கச்சா வேண்டாமென்று துரிதமாய் தன் கையிலே கையை காட்டி, துரையே அது வேண்டாம்; தெப்பத்தைச் செய்கிறதற்கு நாம் உபயோகித்த கருவிகளாகிய கோடாரி, வாள், கத்தி இவைகளையும், சில ஆணிகளையும், கொஞ்சம் அரிசியையும் கொடுத்தால் போதுமானது என்று சொன்னான்.

பத்து நாளானபின் எங்களோடிருந்த இரண்டு சிறுவர் அந்த ஆற்றங்கரையோரமாக போகநேரிட்டபோது அங்கே ஒரு சிறு குடிசை வீடு கட்டியிருப்பதையும், மரமறுக்கிற சத்தத்தையும் கேட்டு பிரமித்தார்கள். குடிசையின் கதவு திறந்திருந்தது. இந்த சிறுவர் முன்னேறிச் சென்று பார்த்தபொழுது, கச்சா தன் முழங்காலின்மேல் நின்று ஒரு படவின் முனையிலே வாள் கொண்டு அறுத்து ஆணியை ஆழமாய் அடிக்கிறதைப் பார்த்தார்கள்.

பையன்கள் திரும்பிப் போய் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் தகப்பனிடத்தில் அறிவித்தார்கள். தகப்பனுக்கு வேலை அதிகமாயிருந்தபடியால் ஒரு மாதத்திற்குப் பிறகு கச்சாவையும் அவன் செய்கிற வேலையையும் பார்க்கப் புறப்பட்டு வந்தபோது படவு பூரணமாய் முடிந்திருப்பதையும், அது பெலனாகவும் செம்மையாகவும் செய்திருப்பதையும் பார்த்து, டாக்டர் கிரே மிகவும் அதிசயித்து, இந்த இடத்தில் இப்படிப்பட்ட படவைக் கொண்டு என்ன செய்யப் போகிறாய் என்று விசாரித்தார். கச்சாவினுடைய முகம் இதுவரையில் குறுவினதாய் காணப்பட்டிருந்தபோதிலும், இப்பொழுது அவனுடைய முகத்தைப் பார்த்தபொழுது அவன் உள்ளத்திலிருந்த நினைவுகள் முகத்தில் வெளியாகி ஜொலித்துப் பிரகாசித்தது.

கச்சா அவரை நோக்கி "நான் இங்கே படவுகாரனாயிருப்பேன்" என்னிடத்தில்

கொஞ்சம் பணம் இருக்கிறது. நான் காணிய தவசங்களை வாங்கிக் கொள்ளுவேன். ஆற்றின் மேடு பள்ளங்களை சோதித்தறிவேன். கிராணி யுள்ளவர்கள் எனக்கு கூலி கொடுப்பார்கள். கிராணி யற்றவர்கள் இலவசமாய் என் படவில் ஏறி கூலியில்லாமல் என் ஆகாரத்தையும் சாப்பிடுவார்கள். நான் அநேக தேசங்களில் சஞ்சரித்து பல காரியங்களையும் பார்த்து பற்பல மனிதருடைய குணங்களையும் அறிந்திருக்கிறேன். உம்முடைய நடபடிக்கை எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தபடியால் உம்மிடத்தில் வேலை செய்ய சம்மதித்தேன். உம்முடைய வழிகளே உத்தமமானவைகள் என்று கண்டேன். உம்முடைய தேவன் மனிதனை உண்மையைப்போல் ஆக்குவாரேயானால், அவர்தான் நல்ல தேவனென்று நான் நம்புகிறேன். என் உயிருள்ள நாள் அளவும் நான் இங்கே படவுகாரனாயிருப்பேன்" என்று சொன்னான்.

டாக்டர் கிரே அவனுடைய சரத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டு கிகலங்கின கண்களோடே "கச்சா உன் படவுக்கு ஜீவரக்ஷைப்படவு" என்று பெயரிட வேண்டுமென்று ஆலோசனை சொன்னார்.

ஆனால் கச்சா "துரையே, நான் முன்னதாகவே அதற்குப் பெயரிட்டாயிற்று. அதன் பேர் சுன்—இல்—லா" என்றான்.

டாக்டர் கிரே அவன் தோளின்மீது கையை வைத்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையோடே மெதுவான சத்தமாய், கச்சா, அந்தப் பேர் மிகவும் நல்லது. தேவனுடைய அடிமை என்று அர்த்தங்கொள்ளுகிற சுன்—இல்—லா மெய்யாகவே அதற்கு தகுந்த பெயர்தான் என்று சொல்லி முடித்தார்.


Tamil Books and Tracts Published by

**Methodist Publishing House**

ount Road, Madas

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்லொகோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்ற லாமா 2 பக். 500 க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100 க்கு. | 0 | 8 |
| மரண-ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய ஸ்தனன் 8 பக். 100 க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100 க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான துலையன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| குசன் என்னும் சிறுமி 4 பக். புஸ்தகம் 100 க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் சவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயத்தியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனுனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100 க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100க்கு. | 0 | 8 |



# மாதர் மித்திரி.

புத். உரு. கதூயக. வருஷ - மேமீ. இல. ௰௧.


## VICTORIOUS LORD.

இராகம், சுருட்டி. ரூபி அடக்கை.

### பல்லவி.

எழுந்தனன் முகில் மேலே விண்ணதில்
இறைவன் இம்மானுவேலே.

### அனுபல்லவி.

விழுந்தவகை அதிர, வெருண்டு, மரணம் சாபம்
ஒழிந்து போகவே, மரித்துயிர்த்த தி
உபம தாமதை எதையுமே ஜெயித் —. எழுந்

### சரணங்கள்.

1. தொண்டர்கட் கதிபதியாய்,—சர்வவன்மை
கொண்டருட் கடல் நிதியாய்,
மண்டலங்களுக்கு மேல்மண்டலத் தொளிர் தந்தை
வலது பாரிச மேவியே, எழில்
மகத்வ மா முடி சூடவே, மகிழ்— எழுந்

2. திருச்சபை மகிழ்களிக்க,—திவ்ய ஜீவ
விருட்சக் கனியை அளிக்க,
பாதகில் தீய நாமரை உரித்துளோர்கள் ஆக்க,
பரமன் முன் உறு நடுவன் ஆகவே
பரிந்து பேசி நல் வரங்களீந்திட,— எழுந்.

GOD'S WILL A BLESSING.

## தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது.

தெய்வ சித்தத்தைக் குறித்து புதிதான அறிகுறிகள் நமக்கு நேரிடும்போதெல்லாம் அவர் நமக்கு ஏதோ புதிதான ஆசீர்வாதங்களை அளிக்கச் சித்தமாயிருக்கிறாரென்று நாமுணர்ந்துகொள்ளவேண்டியது. எத்தனையோ தடவைகளில் அதற்கு எதிரிடையாக நாம் கருத்துக்கொண்டு தேவன் நமக்கு புதிதாக ஒரு சுமையை ஏற்றுவதாக சலிப்புக் காண்பிக்கிறோம். அவருடைய அன்பைக் குறித்து நாம் தப்பு அபிப்பிராயங் கொள்வது அவரை எவ்வளவோ விசனப்படுத்துகிறதாகவிருக்கும். ஒரு மனுஷன் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தான் நடப்பிக்கவேண்டியப் பிரகாரம் நடப்பிக்கவில்லையென்று அவன் மனதிற்குள் எண்ணமுண்டாவதை கவனித்திருக்கலாம். அவன் மனதார அவ்விதத் தப்பிதத்தை நடப்பியாதிருக்கலாம். ஆனால் அந்த சமயத்தில் அவ்வித யோசனை அவன் மனதிற் தென்படவில்லை. இப்பொழுது சகலத்தையும் முன் யோசித்ததிற்கு முற்றும் விரோதமாக யோசிக்கும்படி நியாயத்தைக் கண்டுக்கொள்ளுகிறான். அப்படி கண்டுகொண்ட பிறகு தான் முன்னதாக இதை அறிந்துக்கொள்ளாமற்போனேனே யென்று விசனப்படுகிறான். தேவன் புதிதான வழி வகைகளை குறித்த எண்ணங்களை அவன் மனதிலே வெளிப்படுத்தும்போது தான், தப்பான எண்ணங் கொள்ளாமல் தெய்வ நியமத்திற்கிணங்க நடந்தேனேயானால் அது எவ்வளவோ ஆசீர்வாதமுள்ளதாக தனக்கு சித்தித்திருக்குமென்றுக் கண்டுக்கொள்ளுகிறான். அறிவீனத்தினாலே தெய்வ சித்தத்தை நிறைவேற்றாதிருப்பதால் நேரிடும் தண்டனை மனதறிய ஒளியை வெறுத்து தெய்வ சித்தத்தை மறுத்து நடப்பதினால் வரும் தண்டனையைவிட லகுவாயிருக்கும். ஆனால் தேவசித்தத்தை அறிந்து நடக்கிறதினால் நமக்கு லபிக்கக்கூடிய அவ்வளவு பூரண ஆசீர்வாதங் கிடைக்க மாட்டாது. நம்முடைய பரமபிதாவாகிய தேவனுடைய அன்பின் மகத்துவத்தைக் குறித்து நாம் எவ்வளவோ சந்தேகமுள்ளவர்களாய்க் காணப்படுகிறோம். அவருடைய அன்பு நாம் அநுபவித்திருக்கும் மெய்த மனுஷ அன்பையும்விட மகா உருக்கமும் கருணை நிறைந்ததும் மட்டடங்கா ஆசீர்வாத முள்ளதுமாயிருக்கிறது. தேவன் எப்போதாகிலும் நமக்கு ஒரு புதிதான வழியைக் காண்பித்தால் சில வேளைகளில் அது நமக்கு கடினமானப் பாதையாகத் தோன்றினும் அது எப்போதும் அவருடைய சொல்லிமுடியாத அன்பின் ஈவுகளை நமதுமேல் சொரியும்படிக்காகவே அப்படிச் செய்வார். அவர் கொடுக்கும் அன்பின் ஈவுகள் நமக்கில்லாவிட்டால் நம்முடைய ஜீவியம் எப்பொழுதும் அஷ்டதரித்திரம் நிறைந்ததாகவேயிருக்கும். நாம் தேவசித்தத்தைக் குறித்து அறியும்படி பின் வாங்காமலும் அவருடைய ஐசுவரியமுள்ள ஆசீர்வாதங்களை இழந்துவிடாமலுமிருக்க எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருப்போமாக.

---

A MOTHER'S INFLUENCE.

## தாய் வளர்ப்பின் அதிசய சக்தி.

500 வருஷங்களுக்கு முன்னே எழுதப்பட்டு ஐம்பது பாஷைகளுக்குமேல் மொழிபெயர்த்து ஆயிரக் கணக்கான தடவைகளுக்குமேல் அச்சிடப்பட்ட ஒரு சிறு புஸ்தகமிருக்கிறது. அது பலராலும் வாசிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலுங்கூட பற்பல விசுவாசக் கொள்கையுள்ளவர்களும் அது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவிப்புரியத் தக்கதென்று கருத்தாயும் ஆவலாயும் வாசித்து வருகிறார்கள். அது ஒரு இந்தியனால் எழுதப்பட்டதல்ல, ஐரோப்பாக் கண்டத்திலுள்ள உலாந்து தேசத்திலுள்ள ஒருவரால் எழுதப்பட்டது. எவ்வித விசுவாசமுள்ளவர்களும் இந்தப் புஸ்தகத்தை இவ்வளவு அருமையாய் மதிப்பதற்கு காரணமென்ன? அது ஆச்சரியப்படத்தக்க விதமாக எளிய பாஷை நடையிலும் அர்த்தம் தெளிவாய் விளங்கக்கூடிய வண்ணமாகவும் சர்வலோகமும் அங்கீகரிக்கக்கூடிய சத்திய போதனை அடங்கியிருப்பதனால் தான். இந்த சிறு புஸ்தகத்தின் பேர் "கிறிஸ்து நாதர் அநுசாரம்" (Imitation of Christ) இயேசுவினுடைய அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்கிறது எவ்விதமென்று அது காண்பிக்கிறது.

அந்த புஸ்தகத்தை எழுதியவர் ஒரு ஏழை சமுசாரியின் மகன். அவருடைய தகப்பன் கடினமான உழைப்பாளி. அவருடைய தாயார் தனது வீட்டு வேலையோடுகூட ஒரு சிறு பள்ளிக்கூடத்தையும் நடத்தி வந்தாள். அந்த மகனுடைய பெயர் தாமஸ் எ கெம்பிஸ் (Thomas a Kempis).

தம்முடைய தாயாரைக் குறித்து அந்த சிறு பள்ளிக்கூடத்தைப் பற்றிய வேலையோடுகூட தன் குடும்ப சம்பந்தமான கடமைகளில் எவ்வளவு ஊக்கமுள்ளவளாயிருந்தாளென்றும் நற்கிரியைகளிலே எவ்வளவு சுறுசுறுப்புள்ளவளாயிருந்தாளென்றும், எவ்வளவு நாவடக்கமுள்ளவளாயிருந்தாளென்றும் சுய வெறுப்புடன் எல்லா விஷயங்களையும் எவ்வளவு நிதானமாய் நடத்திவந்தாளென்றும் அவரே எழுதி அறிவித்திருக்கிறார். மற்ற அநேக விஷயங்களிற் போலவே இந்த மகனுடைய ஜீவியத்தை இவ்வளவு பிரயோஜனமுள்ளதாக்குகிறதற்கு அந்தத் தாயே காரணமுள்ளவளாயிருந்தாளென்று தெளிவாய்க் காணப்படுகிறது. சகல ஜாதியாரிலும் சகலவித அந்தஸ்திலுமிருக்கிற ஒவ்வொருவருடைய ஆத்துமாக்களையும் அசைக்கத்தக்கதாகவும் குணப்படுத்தத்தக்கதாகவும் தகுதியுள்ள ஒரு புஸ்தகத்தை எழுதும்படி போதிக்க தேவனிடத்திலிருந்து கிருபையைப்பெற்றுக்கொள்ள தகுந்த வண்ணமாக அவருடைய ஜீவியத்தை உருவேற்படுத்தினது அந்தத் தாயினுடைய குணமும் முன்மாதிரியான ஜீவியமும்தான்.

இந்நாட்களில் அநேகர் "கிறிஸ்துநாதர் அநுசாரத்தை" வாசித்து வருகிறார்கள். அது ஒரு சாதாரண குடியானவருடைய மகனால் எழுதப்பட்டதென்றும் தேவன் தமது கிருபையையும் ஞான அறிவையும் ஒரு ஜாதியாருக்கு மாத்திரம் அருளிச்செய்யாமல் பஞ்சாரும் சூத்திரரும் பிராமணரைப் போலவே ஞான அறிவை அறிந்துகொள்ளக் கூடுமென்றும் தேவனுடைய ஜனங்கள் ஆவிக்குரிய ஜீவனில் வளர்வதற்கு தங்களையும் தேவன் தெரிந்துகொண்டாலும் தெரிந்துகொள்ளலாமென்றும் இந்த நூலை வாசிக்கிற யாவரும் மனதிற் கவனிக்க வேண்டியது. தாமஸ் எ கெம்பிஸுடைய தாயைக் குறித்து நினைவுகூரும்போதெல்லாம் ஸ்திரீகள் அந்தப்புரத்திலும் அறிவீனத்திலும் வைக்கப்பட்டிருப்பது தேவனுடைய சித்தமல்லவென்றும் அவர்களுக்கு கல்வித் தேர்ச்சி முதலிய எல்லா

சிலாக்கியங்களையும் கொடுக்கவேண்டியதென்றும் அறிந்துகொள்ளவேண்டியது. அப்படியானால் அவளுடைய பிள்ளைகள் தங்கள் சரீர நன்மைகளுக்காக கவலைப்பட்டதற்காக மாத்திரமல்ல தங்களுடைய ஜீவியத்தில் சிறப்புப் பொருந்தியவைகளெல்லாம் அவளுடைய போதனையினாலும் சாதனையினாலுமே உண்டாயிற்றென்றுக் கண்டு அவளை ஆசீர்வதிக்கப்பட்டவளென்று அழைப்பார்கள். தாமெஸ் எ கெம்பிஸ் ஒரு குடியானவன் மகனாயிருந்தபோதிலும அவனுடைய தாயாரே அவருடைய ஜீவியத்தை உருக்குக் கொண்டுவர தேவன் கையாடின பலம் பொருந்திய கருவியாயிருந்தாள்.

அவர் ஒரு சந்நியாசி. ஏனென்றால் ஒரு மனுஷன் தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உத்தமமான வழி அதுதானென்று அக்காலத்தாருக்குத் தோன்றிற்று. அவர் ஒரு சந்நியாச மடத்தில் ஏகாந்த ஜீவியஞ் செய்துகொண்டிருந்தார். ஆனால் அநேக ஸ்திரீ புருஷர்களை இரக்ஷகரண்டைக்கு கொண்டுவரவேண்டுமென்கிற தாபந்தமானது அனல்போலவர் இருதயத்தில் சுவாலித்துக்கொண்டிருந்தது. எல்லாவிதமான உலக ஆஸ்திகளையும் மேன்மைகளையும்விட தமது கர்த்தராகிய தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருப்பதே அதிக இஷ்டம் பொருந்தியதாக அவருக்குக் காணப்பட்டது. இந்தெய்வதோழமையை அவர் மிகவும் நேசித்து ஆசித்தபடியால் அவர் தன் தோழர்களோடு பேசிக்கொண்டு நடந்துபோகையில் திடீரென்று அவர்களை விட்டுவிட்டு "என் அறையிலே ஒருவர் எனக்காக காத்துக்கொண்டிருக்கிறார்" என்று சொல்லிப் போய்விடுவார். கர்த்தராகிய இயேசு தன்னோடு சம்பாஷிக்கும்படியாக தன் இருதயத்தில் வந்திருக்கிறாரென்பதே அவர் கொண்டக் கருத்து. அவர் 91-வருஷம் உயிரோடிருந்தார். வேதப்புஸ்தகத்தைத் தவிர வேறெந்த புஸ்தகத்தையும்விட அவர் எழுதின புஸ்தகம் அதிக பிரபல்லியம் அடைந்திருப்பதாக சொல்லிக்கொள்ளப்படுகிறது.

அவருடைய பரிசுத்த ஜீவியம் அவருடைய புஸ்தகத்தின் மூலமாய் வெளிப்படுகிறது. அவர் மூலமாகவும் அவர் புஸ்தகத்தின் மூலமாகவும் அவரைப் பெற்றத் தாய் இன்னும் உயிரோடிருந்து பேசுகிறாள். தாய்மாரே! தாமெஸ் எ கெம்பிஸினுடைய தாயாரைப்போல உங்களுக்குக் கிடைக்கும் சாவகாசங்களை உண்மையாய்க் கையாடி வருவீர்களானால் அவளுக்குக் கிடைத்த பெருமை உங்களுக்குக் கிடைக்குமென்பது நிச்சயம்.

## THE PAGEANT.
## ஆடம்பர வேடிக்கை.

இராஜா இந்தியாவிலிருந்தபொழுது இராஜாவை உபசரிக்கவும் எல்லா ஜனங்களையும் சந்தோஷப்படுத்தும்படியாகவும் பற்பல ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

அவைகளிலொன்று, கடந்துபோன நூற்றாண்டுகளாக இந்திய ஜன சமுதாய ஜீவியம் எவ்வகைப்பட்டதென்று காண்பிக்கும்படியாக கல்கத்தாவில் செய்த வேடிக்கை. இந்தியாவில் ஆளுகைசெய்த மன்னர், மண்டலீகர், சக்கிரவர்த்திகள் இவர்கள் பவனிபோகும்பொழுது எப்பொழுதும் யானைகள் அவர்களைச் சூழ்ந்திருக்கும். யுத்தகாலத்தில் அவைகள் சண்டை செய்யவும் சமாதானக் காலத்தில் பிரயாணத்திற்கும் வேடிக்கைக்குமாக அவைகள் உபயோகப்பட்டன.



இந்தக் காக்ஷியில் ஐம்பதிற்கதிகமான யானைகளிருந்தன. அவைகளுக்கெல்லாம் அலங்காரமும் விலைபெற்றதுமான ஆடைகள் தரிப்பிக்கப்பட்டிருந்தன. பல யானைகளினுடை பொன்னால் அலங்கரிக்கப்பட்டு சுற்றிலும் தொங்கட்டங்கள் தொங்கிக்கொண்டிருந்தது. மற்றவைகளுக்கு பொன்னால் பின்னல்வேலை செய்யப்பட்ட பட்டாடைகளிருந்தன. அவைகளின் முதுகிலே விலைபெற்ற வேலைப்பாடுள்ள அம்பாரிகளிருந்தன. அவைகளில் ஒருவரும் சவாரி செய்யாமல் வெறுமையாய்ப் போய்க்கொண்டிருந்தன. ஒரு பெரிய இரதத்தை இரண்டு பெரிய யானைகள் முன்னாலே இழுத்துக்கொண்டுபோக பின்னாலே பற்பல வகையான வாகனங்களை மனுஷர் இழுத்துக்கொண்டு போனார்கள். அந்த வாகனங்களின் பேர்கள் முதலாய் எனக்குத் தெரியாது. அவைகள் பார்வைக்கு மாத்திரம் வெகு அலங்காரமாயிருந்தன. அவைகளின் பின்னாலே சில பல்லக்குகள் வந்தன. அவைகள் பார்வைக்கு சாமானியமானவைகளாயிருந்தபோதிலும் அப்படிப்பட்டவைகளை நான் இதற்குமுன் பார்த்ததில்லை. அவைகளில் ஒன்று பொன்னினாலும் மற்றொன்று வெள்ளியினாலும் செய்யப்பட்டிருந்தது.

யானைகளைத் தவிர அநேக ஒட்டகங்களும் அழகான குதிரைகளும் அணி வகுத்து வந்தன. யானைகளின் பக்கத்தில் குதிரைகள் சிறு உடம்புள்ளவைகளானபடியால் அதிகமாய்ச் சோபிக்கவில்லை. அவைகளும் அலங்காரமான உடைகள் தரித்திருந்தன.

முழுவதும் இந்துக்களான அநேக மனுஷர் பகுந்து பகுந்தாக ஒவ்வொரு பகுந்தும் வெவ்வேறு உடைகளைத் தரித்து நின்றார்கள். ஒவ்வொரு பகுந்தும் பார்க்க வெகு அலங்காரமாக இருந்தது. ஒரு பகுந்து கிட்டத்தட்ட நூறு வருஷங்களுக்கு முன்னே உபயோகிக்கப்பட்டு வந்த பழைய மாதிரி துப்பாக்கிகளை தாங்கி நின்றார்கள். இன்னொரு பகுந்து பூர்வீகத்தில் இத்தேசத்தில் வழங்கி வந்த காருவிதமான கீதவாத்தியக் கருவிகளை உபயோகித்துக்கொண்டு நின்றார்கள். வேறொரு பகுந்து இப்பொழுது இல்லாதிருந்தபோதிலும் முற்காலத்தில் யுத்தங்களில் வழங்கி வந்த யுத்தக்கோடரி முதலிய ஆயுதங்களை தரித்தவர்களாய் நின்றனர். தற்காலத்தில் இந்தியாவில் யுத்தங்களில்லாதிருப்பதால் அவைகள் அநாவசியமாயிருப்பதுபற்றி இவ்வித யுத்தக்கருவிகள் யாவும் அவசியமற்றுப்போகிற சர்வலோக சமாதான காலம் சீக்கிரத்திற்குள் வருவதாக. மேலும் ஒரு பகுந்து யுத்தத்திற்கு தயாராய் நிற்பவர்கள் தங்களைக் காபந்து செய்வதற்கு தரித்துக்கொள்ளும் சர்வாயுதவர்க்கங்களையும் அணிந்து குதிரை ஏறின சேவகர்களாய் நின்றனர். இந்த ஆயுதங்கள் மிகுந்த பருவும் இடக்கேடுமுள்ளவைகளுமாயிருந்திருக்கும். தற்கால யுத்தங்களுக்கு இவைகள் சற்றும் உதவமாட்டா. ஏனென்றால் துப்பாக்கி குண்டுகளும் பீரங்கி குண்டுகளும் எவைகளும் வெகு சுலபமாய் இவைகளைத் துளைத்துக்கொண்டு போகும்.

இந்த யானைக்கூட்டங்களும் ஒட்டக இனங்களும் குதிரை அணிகளும் மனுஷ பகுந்துகளும் எங்களுக்கு முன்னாலே அணி அணியாய்ச்சென்று தங்களுக்கு முன்னாலிருந்த விஸ்தாரமான மைதானத்து மத்தியில் போய்ச் சேர்ந்தவுடனே அதில் குறுக்குமறுக்குமாக நாங்கள் நின்ற இடத்திற்கு நேராய் வரிசையாய் நின்றன. அவைகளையெல்லாம் பார்க்கை

யில் திரளான இடத்தைஅடக்கிக்கொண்டு அலங்கார சோபிதமாய் அவைகள் விளங்கின. அப்படி அவைகள் சிறிது நேரம் நின்ற பிறகு எங்களை அடுத்து சமீபித்து வந்து கடைசியாக ஒவ்வொன்றாய் புறப்பட்டுப்போயின.

நாங்கள் எங்கள் கண்ணுக் கெட்டிய தூரமட்டும் அவைகளை பார்த்துக்கொண்டே நின்றோம். ஏனென்றால் அந்த நானாவித வர்ணங்களையும் அபூர்வ காக்ஷிகளையும் பார்க்கப் பார்க்க பரமானந்தமாயிருந்தது. அவைகள் போய்விட்டபின்பு ஜனக் கூட்டங்களை உற்றுப்பார்த்தோம். அவர்கள் பற்பல ஜாதியாரும் அததுஜாதிக் குறிய உடை நடை பாவனை உடையவர்களுமாக காணப்பட்டபடியால் மேற்சொல்லிய வேடிக்கைகளைப்போலவே இவைகளும் எங்களுக்கு சந்தோஷகரமாயிருந்தது.

---

THE NEW RUPEE.

## புதிய ரூபாய்.

இதை வாசிக்கிறவர்கள் இப்பொழுது புதிதாய் வெளிப்பட போகிற ரூபாயைக் குறித்து திட்டமாய் அறிந்துகொள்ள ஆசிப்பார்கள். அவர்கள் இன்னுமதை பார்த்திருப்பதில்லையானால் தங்கள் கையில் அது வரும்போது எவ்விதமாயிருக்கிறதென்று ஒத்துப் பார்ப்பதற்கு இங்கே சொல்லப்படும் குறிப்புகளை பத்திரப்படுத்தி வைக்கலாம். யார் கையிலாவது புது ரூபாயிருக்குமானால் இங்கே சொல்லப்படுவதையும் அதனுடைய நிருமிப்பையும் கவனித்துப் பார்த்து அறிந்துகொள்ளலாம். அப்பொழுது அந்த ரூபாயில் காணப்படும் அச்சுகளின் தாற்பரியம் அவர்களுக்குத் தெளிவாய் விளங்கும்.

ரூபாயின் ஒரு பக்கத்தில் சக்கிரவர்த்தியும் கிரீடம் தரித்திருக்கும் உருவம் பதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் இரண்டு சின்னங்களாகிய இந்திய நக்ஷத்திரம் இந்திய ராஜாங்கம் இவைகளை விளக்கும் பட்டைகளை அவர் அணிந்திருக்கிறார். அந்த இரண்டு பட்டைகளின் மேற்பக்கத்திலும் இரண்டு தாமரைப் புஷ்பங்கள் காணப்படுகின்றன. அவைகளின் மத்தியில் குருத்தோலைக் கொத்துகள் நாடாவினால் பந்திக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் இந்திய நக்ஷத்திர வரிசைக்குரிய சின்னங்களின் பாகம். பட்டையின் கீழ்பக்கத்தில் அதாவது இந்திய இராஜாங்க சின்னத்தில் யானை யுருவமும் தாமரை புஷ்பங்களின் மத்தியில் மயில்களும் விளங்குகின்றன. ஓரத்தைச் சுற்றிலும் "ஐந்தாம் ஜார்ஜ் இராஜ சக்கிரவர்த்தி" என்று இங்கிலீஷில் தீர்த்தப்பட்டிருக்கிறது.

ரூபாயின் மறுபக்கத்தில் "ஒரு ரூபாய், இந்தியா" என்று இங்கிலீஷில் மேற்பாகத்திலும் நாணயம் செய்யப்பட்ட வருஷத்தோடு ஒரு ரூபாய் என்று பாரசீக பாஷையில் கீழ்ப்பக்கத்திலும் வரையப்பட்டிருக்கிறது. மேலும் கீழுமிருக்கிற அலங்கார கை வேலையில் இந்தியாவின் புஷ்ப அடையாளமாகிய தாமரையும், இன்னொரு பக்கத்தில் ரோஜா புஷ்பமும் முட்செடியும் இங்கிலாந்து ஸ்கோத்லாந்து அயர்லாந்து தேசங்களின் சின்னங்களைக் குறிக்க பதிக்கப்பட்டிருக்கிறது.

சிறிய புது வெள்ளி நாணயங்களிலும் செம்பு இரும்பு நாணயங்களிலும் ரூபாயிலிருக்கும் வண்ணமாகவே பதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நாணயங்களெல்லாம் இந்தியாவிலேயே செய்யப்படுகிறது.



PROTECTION AGAINST MOSQUITOES.

## கொசு விலக்கல்.

இந்தியாவிற்போல வேறெந்த இடத்திலும் விஷ ஜுரத்தைப்பற்றி ஜனங்கள் அவ்வளவாய் முறையிடுகிறதில்லை. கிட்டத்தட்ட நாம் போகிற எவ்விடங்களிலும் இந்த வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறவர்கள் அநேகரை நாம் காண்கிறோம். இந்த இடம் ஜுரமுள்ளது அந்த இடம் விஷக் காய்ச்சலுள்ளது என்று பலரும் முறையிடுகிறார்கள். அந்த வியாதியை தடுக்கும் முறையைக் குறித்து அவர்களுக்கு சற்றாகிலும் தெரிந்திருக்கிறதாக விளங்கவில்லை.

தற்காலத்தில் கொசுவானது தேகத்திலுள்ள இரத்தத்தை உறிஞ்சி அதின் வழியாக விஷ அணுக்களை உடலில் பரவச்செய்வதாக வைத்தியர்கள் நிதானிக்கிறார்கள். இது வாஸ்தவமானால் விஷ ஜுரத்திற்கு நீங்கலாயிருப்பதற்கு கொசு கடிக்கவொட்டாமல் தங்களை காத்துக்கொள்வதே உத்தம வழி என்பது தெளிவாகிறது. கொசுக்கள் ஏராளமாயிருக்கிற இடங்களில் எவ்விதம் இதைச் செய்யலாம். சில தேசங்களில் கொசுக்களை நிக்கிரகஞ்செய்ய பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் குளங் குட்டைகள் ஏராளமாயிருக்கும் இந்தியாவிலே அது சாத்தியப்படாது. இராக்காலங்களில்தான் இந்த ஜெந்துக்கள் மனுஷரை அதிகமாய்த் தொந்தரவு செய்வது. ஆகையால் இரவில் வீசும் ஆகாயம் அசௌக்கியமானதென்று எண்ணிக்கொள்ளப்படுகிறது. இது உண்மையல்ல, உண்மையாயிருக்குமேயானால் நாம் சுவாசிக்கிறதற்கு வேறே ஆகாயம் கிடைக்கமாட்டாது. ஆகையால் நாம் சுத்த ஆகாயம் வாவிடவும் அதே சமயத்தில் கொசுக் கடிக்கு நம்மை நீங்கலாக்க காத்துக்கொள்ளவும் நாம் பிரயாசப்படவேண்டியது.

அநேக ஜனங்கள் இந்த துஷ்ட ஜெந்துக்களை விலக்கிவைக்க ஒரு வலையை கையாடுகிறார்கள். இதுவும் சில வேளைகளில் கூடிய காரியமல்ல. திருஷ்டாந்தமாக ஒருவன் சில வேளை வீட்டிற்கு வெளியே வேலைசெய்ய நேரிடலாம், அல்லது ஊரைவிட்டு வெளியே போய் தனக்கு கிடைத்த இடத்தில் நித்திரை செய்ய ஏதுவாகலாம். அப்படிப்பட்ட வேளைகளில் கொசுக்களை துரத்திவிடத் தக்க வழி வகைகளை அறிந்திருப்பது நல்லது.

மண் எண்ணெய் இது விஷயத்திற்கு உதவும். ஆனால் அதின் வாசனை அநேகருக்குப் பொருந்தாது. மேலுமந்த எண்ணெய் சீக்கிரத்தில் ஆவியாய்ப் பறந்துவிடும். சவுக்காரத்தை தண்ணீரில் கலக்கி நொரை எழும்பத்தக்கதாக அடித்து கொஞ்சம் மண் எண்ணெயும் அடித்து முகத்திலும் கைகளிலும் தடவிக்கொள்வது பலிதபடுமென்று ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். எவ்வகையான அதிக வாசனையும் கொசுக்களுக்கு அசௌகரியமாயிருப்பதால் அவ்வித வாசனையுள்ள இடங்களில் அவைகள் அணுகமாட்டாது. யூக்கலிப்டஸ் எண்ணெய், சிட்ரனெல்லா முதலிய பலத்த வாசனையுள்ளவைகள் மிகவும் பிரயோஜனப்படும்.

கொசுவின் வாதனைக்கு விலக்கமாக நம்மைக் காத்துக்கொண்டு சுகமான நித்திரையை உண்டு பண்ணுவதோடு கூட அவைகளாலுண்டாகும் கொடிய வியாதிகளுக்கும் நீங்கலாகியிருக்கலாம்.

## NEWS AND NOTES.
## சமாசாரக் குறிப்புகள்.

சீனதேசம் தற்காலத்தில் இன்னும் தழம்பிக்கொண்டுதானிருக்கிறது. என்ன சம்பவிக்குமோவென்று திட்டஞ் சொல்ல ஏதுவில்லை. தற்காலத்தில் அரசாக்ஷி செய்யும் மஞ்சு ராஜ குடும்பம் அநேக நூற்றாண்டுகளா யாண்டு வந்தபோதிலும் நியாயமான இராஜ குடும்பத்துக்கு அந்நியமானதாயிருப்பதால் அதிகாரத்தை விட்டுவிடும் போலிருக்கிறது. இப்பொழுதிருக்கும் சக்கிரவர்த்தி இராஜ்ஜியத்தை தக்கபடி ஆள சக்தியற்ற சிறுவனாயிருக்கிறபடியால் ராஜாங்கத்தை தன் மந்திரிகள் வசத்தில் ஒப்புவிக்க வேண்டியிருக்கிறது. இராஜாங்க விரோதிகளாயிருப்பவர்கள் பிரஜாதிபத்திய முறைமைக்காக ஆசித்து ஏற்கனவே அவ்வித ஏற்பாடுசெய்து ஒரு பிரஜாதிபதியையும் தெரிந்திருக்கிறார்கள். சீனதேசம் உலகத்திலுள்ள தற்கால இராஜாங்கங்களிலெல்லாம் மிகப் பழமையானது.

---

நம்முடைய இராஜாவும் பத்தினியும் கடந்த பெப்ருவரி மாதத் துவக்கத்தில் இங்கிலாந்துக்கு திரும்பிப்போனவுடன் மிகுந்த அபிமானத்துடனே நல்வரவு ஏற்று உபசரிக்கப்பட்டார்கள். அவர்கள் போய்ச் சேர்ந்த அடுத்த நாளில் அவர்கள் சுகபத்திரமாய் திரும்பிவந்ததற்காக பரிசுத்த பவுல் அத்தியட்ச ஆலயத்தில் நன்றியறிதல் ஆராதனை நடத்தப்பட்டது. அபாயகரமான நெடும் பிரயாணத்தில் யாதொரு விபத்துமின்றி தங்கள் ராஜாவும் ராணியும் தங்கள் மத்தியில் திரும்பிவந்ததற்காக தங்களுக்குண்டான சந்தோஷத்தை காண்பிக்கும்படியாக அநேக விதமான சிறந்த கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன.

---

இங்கிலாந்து தேசத்திலும் ஐரோப்பா கண்டம் முழுவதிலும் பெப்ருவரி மாத ஆரம்பத்தில் அகோர குளிர்ச்சியும் மிகுந்த பனிக்கட்டியுமிருந்தது. ஸ்காத்திலாந்திலுள்ள லாக்லாமண்ட் என்னும் குடாக்கடல் கடந்த பதினேழு வருஷங்களினிடையில் முதற்றடவையாக முற்றும் உறைந்து போயிற்று. ஜலக்கட்டியானது ஒரு அடி கனதிக்கு மேலாக ஏரி குளம் ஆறுகளில் உறைந்துபோய் தரையில் நடமாடுவதுபோல அவைகளை பெரும் பாதைகளாக எண்ணி நடந்து திரியவும் சவாரி செய்யவும் தக்கதாக இருப்பதை இந்தியாவைப்போன்ற உஷ்ண தேசங்களில் குடியிருப்பவர்கள் நிதானித்தறிவதசாத்தியம், ஆனால் அவர்களில் சிலருடைய சிநேகிதர் தற்காலம் இங்கிலாந்திலிருப்பதால் அவர்கள் அதை அநுபவபூர்வமாய் அறியக்கூடும்.

---

பெப்ருவரி மாதம் 6-ம் தேதி பெங்களூரில் லால்பாக் மிருகசாலத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரே சிங்கம் தன் கூட்டிலிருந்து வெளிப்பட்டு அதே தோட்டத்தில் வண்டி இழுத்துக்கொண்டு சென்ற இரண்டு எருதுகளையும் எதிர்த்தது. வண்டியோட்டியவன் தந்திரமாக மரத்திலேறி தப்பித்துக்கொண்டான். அப்புறம் சிங்கம் ஓடி ஒளித்துக்கொண்டது. அது பழக்கப்படாத மிருகமாயிருந்தபடியால் அதை மறுபடியும் பிடிக்கிறதற்கு யாதொரு முயற்சியும் செய்யப்படவில்லை. அதிக சேதம் நேரிடாவண்ணம் அதை சுட்டுக்கொன்று போட்டார்கள்.



## CHILDREN'S COLUMN.
## சிறுவர்க்கான குறிப்புகள்.

### KAH'S TEMPER CURE
### கஹா என்பவனுடைய கோபப் பரிகாரம்.

கஹா என்பவன் சீனக்காரச் சிறுவன். அவன் அமெரிக்காவிலே ஒரு வீட்டில் வேலைசெய்கிறவன். அந்த வீட்டிலுள்ள எல்லா வேலைகளையும் அவன் மிகவும் சுறுசுறுப்பாகவும் செம்மையாகவும் சந்தோஷமாகவும் செய்துகொண்டு வந்தபடியால் அங்குள்ள யாவருக்கும் அவனைக் குறித்து மிகுந்த சந்தோஷமுண்டாயிருந்தது.

ஒரு நாள் அந்த வீட்டின் எஜமாட்டி அவனைப்பார்த்து கஹாவே, நீ எவ்வளவு சந்தோஷமுள்ளவனாய்க்காணப்படுகிறாய். நீ ஒருபோதும் கோபங்கொள்ளுகிறதில்லையா என்று கேட்டாள். கஹா அதற்கு மறுமொழியாக நான் சங்கதியை உள்ளபடி சொல்லிவிடுகிறேன், எனக்கு சில வேளை கோபம் வருகிறதுண்டு. அப்பொழுது யாரோ ஒருவர் என் இருதயத்தைச்சுற்றி கயிற்றினால் வரிந்து நெருக்குகிறதுபோல் எனக்குத்தோன்றும். வரவர அது அதிகமாக என்னை நெருக்குவதினாலே நான் பேசக்கூடாமல் போவேன். உடனே நான் என்னுடைய அறைக்குள்ளே ஓட்டமோட்டமாய் ஓடி முழங்காலில் நின்று தேவனை நோக்கி அந்தக் கயிறுகளை அவிழ்த்து விடும்படியாக வேண்டிக்கொள்ளுவேன். அவர் அப்படியே செய்வார், அதன் பின்பு எனக்கு சரிப்பட்டுப் போகுமென்றான்.

கோபத்தையும் மூர்க்கத்தையும் மேற்கொள்ளுவதற்கு இது தகுதியான வழியல்லவா?

## LEARNING TO BE OBEDIENT.
## கீழ்ப்படிதலை கற்றுக் கொள்ளும் விதம்.

ஒரு துரைமகன் தனக்கு கீழ்ப்படிதலை கற்றுக்கொடுத்த முதலாம் பாடத்தைக் குறித்து பின்வரும் கதையைச் சொல்லுகிறார். அதாவது :—

"நான் ஆயாள் கைப்பிள்ளையாய் வளர்ந்துவந்த மிகுந்த சிறிய பிராயத்தில் ஒரு நாள் சாயங்காலம் தேத்தண்ணீர் செய்யும்படியாக கொதித்துக் கொண்டிருந்த ஒரு இரும்புத் தவலையைப் பார்த்தேன். அதைத் தொடும்படியாக நான் ஆசித்தேன். என் தாயார் என்னை தூரமாய் விலகியிருக்கும்படி சொன்னார்கள். நான் அந்த தவலையை என் கையால் தொட்டுத்தான் தீரவேண்டுமென்று பிடிவாதஞ் செய்தேன். என் ஆயாள் என்னை அப்பாலே தூக்கிக்கொண்டுபோகப் பார்த்தாள். ஆனால் என் தாயார் ஆயாளே! அவனை விட்டுவிடு, அவன் அதைத் தொடட்டும் என்று சொன்னார்கள். அப்படியே நான் அதை தொட்டேன்." அவன் தன் மனம்போல் நடக்க பிரயாசப்பட்டதினால் அவன் கற்றுக்கொண்ட முதற்பாடமிது. அவன் செய்த வேலை அவனுக்கு பிரியமாயிருக்கவில்லையென்று நீ அறிந்துகொள்ளலாம். அவன் அப்புறம் சிலகாலமாக தன் மனப்போக்கிலே நடக்க பிரயத்தனிக்கவே இல்லை.

அநேக சிறுவர் தங்களுக்கு நன்மையை விளைவிக்காத பலகாரியங்களை தொடும்படி ஆசிக்கிறதுண்டு. அது அவர்களுடைய விரல்களை மாத்திரம் காயப்படுத்தவோ அல்லது கைகளை ஊனமாக்கவோ அல்லது தேகத்தில் ஏதாவது ஊறுபாடுண்டாக்கவோ மாத்திரம் செய்தால்

அது பெரியகாரியமல்ல. ஏனென்றால் கொஞ்ச நோவினால் அதிக நஷ்டம் நேரிடாமல் உடம்பு திரும்பவும் சுகப்பட்டுப் போகும். ஆனால் சில விஷயங்களை தொடுவது மிக பெரிய தீமைகளை விளைவிக்கும். ஒரு சிறுவன் மதுபானத்தை அதிகம் சாப்பிட்டால் வெறி உண்டாக்குமென்று அறிந்திருந்தும் அவன் அதை தொடும்படி ஆசித்தான். அவன் பெரியவனாய் வளர்ந்தபொழுது அவன் அதற்கு அடிமையாய்ப் போனான். அவன் தன்னை சுயாதீனமுள்ள எஜமானென்று எண்ணினபோதிலும் வாலிபத்தில் அவன் தொட்ட மதுபானம் அவனை எக்காலமும் அடிமையாக்கி விட்டது. தனக்கு கெடுதியுண்டாக்குவதை தவிர்த்திருக்க வேண்டுமென்று தன்னாலானமட்டும் பிரயாசப்பட்டும் அதை தவிர்த்துவிட அவனுக்கு பெலனில்லாமற் போயிற்று.

CHILDREN'S CORNER-A SWEET VOICE.

## இனிய குரலோசை.

"அப்பா, நான் பாட கூடுமானால் எவ்வளவு நன்றாயிருக்கும்! மற்றவர்களுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணுவது மிகவும் நேர்த்தி. பிளாரென்ஸ் இன்று கூட்டத்தில் இனிமையாய் பாடினாள். எங்களெல்லாருக்கும் அது வெகு ஆனந்தமாயிருந்தது. ஒவ்வொரு இரவிலும் தன் தகப்பனாருக்கு அவள் பாடி காண்பிக்கிறாள். எனக்கு மாத்திரம் பாடக்கூடுமேயானால் எவ்வளவு மனோகரமாயிருக்கும். ஆசைபடுகிறதில் பிரயோஜனமில்லை, ஏனென்றால் பாட்டு பாடும் வரம் எனக்கு இல்லவே இல்லை."

தகப்பனார் இதைக்கேட்டு அவளுடைய குருவின முகத்தை தன் இருகரங்களாலும் தழுவி பிடித்துக்கொண்டு "அப்படியா மகளே, சிலவேளை கீதம் பாடும் வரம் உனக்கு இல்லாதிருக்கலாம், ஆனால் இனிமையான குரலோசை உனக்குஇல்லை என்று சொல்லாதே, உன் சத்தம் எனக்கு மிகவும் இனிமையான கீதம்போல் இருக்கிறது" என்று சொன்னார்.

"ஏன் அப்பா நீர் அவ்விதமாக எப்படி சொல்லலாம்?"

தகப்பனார் மறுமொழியாக ஒவ்வொரு சாயங்காலத்திலும் நான் வீடு நோக்கி வரும்போது முதல் முதல் சந்தோஷமாய் சிரிக்கிற சத்தத்தை கேட்கிறேன். நான் எவ்வளவாய் அலுத்துப்போய் வந்தபோதிலும் உடனே அது எனக்கு ஆரோக்கியத்தை கொடுக்கிறது. நேற்றைய தினம் நான் வரும்போது அந்த சத்தம் 'அழாதே தம்பி இதை அக்காள் உனக்கு பழுதுபார்த்து சரிப்படுத்தி கொடுப்பாள்' என்று சொல்லிற்று. சிலவேளைகளில் அதே குரலோசை பாட்டியாருக்கு இனிமையாய் வாசித்துக்கொண்டிருக்கிறதை கேட்கிறேன். போனவாரத்தில் வேலைக்காரி மரியாளை நோக்கி 'உனக்கு தலை நோகிறதைப்பற்றி நான் விசனப்படுகிறேன், நீ கவலைப்பட வேண்டாம். உனக்காக நான் இன்று இரவில் பாத்திரங்களையெல்லாம் சுத்தம்பண்ணி விடுகிறேன்' என்று உரைத்தது. அப்படிப்பட்ட இத ஓசைதான் எனக்கு பிரியம். என் அருமை சிறுமகளே உனக்கு இனிய கீத ஓசை இல்லை என்று என்னிடத்தில் சொல்லாதே என்று பகர்ந்தார்.

YOUR MOTHER; DO NOT FORGET.

## உன் தாயர் நேருக்கு நீ எவைகளை மறந்துவிடக் கூடாது.

உன் தாய்க்கு எவைகள் பிரியமோ, எவைகளில் சந்தோஷப் படுவாளோ



அவைகளை நீ அநுசரித்து நடக்க மறந்து விடாதே."

"அவள் வயது சென்று உடம்பெல்லாம் சுருங்கிப்போனபோதிலும் இன்னும் அவளுக்கு இன்பமானவைகள் பேரில் ஆசை உண்டென்று மறந்துவிடாதே".

"அடிக்கடி அற்ப சொற்ப வெகுமதிகளை அவளுக்கு கொடுப்பாயானால் அவைகளைக்குறித்து அவள் மிகுந்த சந்துஷ்டியும் அக்களிப்பும் கொள்வாள் என்பதை மறந்துவிடாதே."

"ருசிகரமான பொருள்களும் கருணை நிறைந்த கருசனையும் நீ அவளுக்கு அளிக்கும்போது அவளுடைய மனதை உல்லாசம் நிறைந்த சிறு பெண்ணுடைய மனசுக்கொப்பாய் சந்துஷ்டியடையப்பண்ணுகிறது என்பதை மறந்துவிடாதே."

"அவள் சொல்வதையெல்லாம் நீ மதித்து அவளுக்கு வெறுப்பாயிருக்கிறவைகளை யெல்லாம் நீ நீக்கி இலகிதமாய் அவளை ஆறுதல்படுத்த மறந்துவிடாதே."

"நீ வயதில் எவ்வளவு பேதம் உள்ளவனாய் இருந்தபோதிலும் உன்னுடைய எல்லா விளையாட்டுகளிலும் உல்லாசங்களிலும் அவளையும் உன் கூட்டாளியாக்கிக் கொள்ள மறந்து விடாதே."

"உனக்காக அவள் காத்திருந்து உழைத்த அலுப்பினால் கூனிப்போன அவள் தோள்களிலிருந்து எவ்வளவு பாரத்தை நீ எடுத்து சுமந்துகொள்ளக்கூடுமோ அவ்வளவையும் அவளுக்கு இலேசாக்க வேண்டுமென்பதை நீ மறந்துவிடாதே."

"நீ வேறு அவள் வேறு நிலைமையில் இருக்கிறீர்கள் என்றாவது, அவளை விட நீ சற்று கெட்டிக்காரி என்றாவது உன் வார்த்தையினாலும் செய்கையினாலும் ஒரு பொழுதும் காண்பிக்க கூடாதென்பதை மறந்துவிடாதே."

"உத்தியோகத்திலும் அந்தஸ்திலும் உன்னைவிட மேற்பட்டவர்களை நீ மதிப்பது போலவே அவளையும் மதித்து கனம் பண்ணவேண்டுமென்பதை நீ மறந்து விடாதே."

"அவளுக்கு ஏதேது பழக்க வழக்கங்கள், உண்பனதின்பனபிரியமோ அவைகளை எப்பொழுதும் அநுசரித்து நடக்கவேண்டு மென்பதை மறந்துவிடாதே."

"கஷ்டம், துன்பம் இவைகளின் ஏதுவால் அவளிடத்தில் காணப்படுகிற கோபதாபங்களையும் சுகவீன பெலவீனங்களையும் நீ பொறுமையாய் சகித்துக்கொள்ள வேண்டுமென்பதை மறந்துவிடாதே."

"உன்னுடைய ஜீவியத்தோடு அவளுடைய ஜீவியத்தை ஒத்து நோக்கும்போது அவளுடைய ஜீவியம் ஒரே நிலையாய் இருப்பதால் பலவித காட்சிகளாலும் கேள்விகளாலும் அவள் மனதுக்கு இன்பம் உண்டாகும்படியாக நீ நாட்டில் குடியிருந்தால் பட்டண பிரதேசங்களுக்கும், நீ பட்டணத்தில் குடியிருந்தால் நாட்டுப்புறங்களுக்கும் இடைக்கிடையே அவளை கூட்டிக்கொண்டுபோக நீ மறந்து விடாதே."

THE CHILDREN OF KING GEORGE.

## ஜார்ஜ் அரசனின் பிள்ளைகள்.

இங்கிலாந்து தேசத்தில் மிகவும் கருத்தாய் படிக்கிறவர்களும் மிக்க நேர்த்தியாய் வளர்க்கப்படுகிறவர்களுமான பையன்களும் பெண்களும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகள். உஷ்ணகாலத்தில் ஸ்கோத்லாந்திலுள்ள பிலென்டிம் ராஜ மாளிகைக்கு ராஜ குடும்பம் போகும்பொழுதும் கூட அங்குள்ள தோட்டங்கள் ஒன்றின் மூலையில் இயற்கை படிப்புக்கு ஏற்ற ஏதுகாரணங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு துண்டு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்நிலத்தை பண்படுத்தி செடிகளை நட்டு விதைகளை விதைக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்பட்டு உழைக்கிற ஊக்கமுள்ள சமுசாரிக் குழந்தைகள். அந்தக் குடும்பத்தில் ஜான் ராஜகுமாரன் 6 பிராய

முள்ள திடகாத்திரதேகி. அதற்குமூத்த ஜார்ஜுக்கு 9 வயது. என்றிக்கு 11 வயது. ஒரே ராஜகுமாரத்திக்கு மேரி என்று பெயர். அதன் வயது 14. அந்த ராஜகுமாரத்தி தன் சகோதரர்களை கண்டிப்பாய் நடத்துகிறதாகவும் கல்வி பிரீதியுள்ளதாகவும் சொல்லிக்கொள்ளப்படுகிறது. ஆல்பர்ட் பிரபுவுக்கு வயது 15-ம் எட்வர்ட் பிரபுவுக்கு 17-மாம்.

எட்வர்ட் பிரபு அரசுரிமைக்குரியவராயிருப்பதால் தன் பிற்கால கடமைகளுக்கு மிகவும் ஜாக்கிரதையாய் பயிற்றுவிக்கப்படுகிறார். இரண்டு வருஷகாலமாக டாட்மத் என்னும் இடத்திலிருக்கிற கப்பலோட்டி வித்தை பாடசாலையில் நல்ல மாணுக்கரில் ஒருவராயிருந்தார். * அதிலுள்ள மற்றப் பிள்ளைகளில் ஒருவராக சாப்பாட்டிலும் விளையாட்டிலும் வேலையிலும் யாதொரு பேதமின்றி நடத்தப்பட்டார். சகலவித தேக அப்பியாசங்களிலும், மீன் போல் நீந்துவதிலும், குஸ்தி பிடிப்பதிலும், பந்தாட்டத்திலும் மிக்கப் பிரீதியுள்ளவர். தைரிய புருஷன், பொன் போன்ற இருதயம் படைத்தவர். தாழ்ந்த மிருகங்களின்பேரில் மிக்கப் பட்சாதாபங்கொண்டு "நான் ராஜாவாகும்பொழுது ஒருவரும் நாய்க்குட்டிகளின் வாலை நறிக்கக்கூடாது" என்று சொன்னாராம். தன் பாட்டனாகிய 7-ம் எட்வர்ட் அரசனுக்கு மிகுந்த அருமையுள்ளவர். எல்லாராலும் மதிக்கப்படுகிறார்; அழகில் சிறந்தவர்; உற்சாகமான ஆவியுள்ளவர்; அவருடைய அன்பான குணத்துக்காகவும் மரியாதைக்காகவும் பெருமையற்ற நடபடிகளுக்காகவும் அவர்மேல் ஜனங்கள் எல்லாருக்கும் மிக்க பிரியம்.

---

### Tamil Books and Tracts Published by
## Methodist Publishing House
### Mount Road, Madras

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வோசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 558 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500-க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சரித்திரம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தலைவன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| சூசன் என்னும் சிறுமி 4 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் அன்பு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயசித்தியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனனானது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க ஜெபசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| சிக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குன்-இல்-லாவைக் கட்டி முடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லாகிரிப் பொருட்களை மருந்துக்கென்று உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |

# மாதர் மித்திரி.

புத். உ௫. ௧௯௧௨ ஜூன் மீ. இல. ௰௨.

LOVEST THOU ME.

இராகம், சேனுதை. தாளம் ரூபகம்.

பல்லவி.

பாவியே, பாவியில் பாவியே, உனில் அன்புண்டோ? சொல்,
பாவியே, பாவியில் பாவியே.

அனுபல்லவி.

கூவியே கர்த்தருரைக்கிறார்; கூர்ந்து கேள், உள்ளிருந்தியமே.
பாவியே, என்கிறார் இயேசு பாவியாமுனையே பார்த்து.— பாவி

சரணங்கள்.

1. பாவத்தால் கட்டுண்டிருந்தாயே; பாபரனுட
கோபத்தால் காயமுங் கொண்டாயே;
தேவனை விட்டகன்றாய்; பாவவிருள் அடைந்தாய்;
பாவனையாக வுன்னைப் பவுசாக வைத்தவர் நானே.— பாவி

2. தாயுட அன்பு மாறுமோ? தன்னருமைப் பிள்ளையைத்
தாயுடன் அழைக்க மாட்டாளோ?
தாயுமே மறந்திட்டாலும், தயவை நான் மறப்பதில்லை;
நேயமே யுனை நோர்காலும் நிலையாதே நிறுப்பதில்லை.— பாவி

3. என்னுடைய அன்பு மாறுதல்தே, அநாய உயரமும்
என்னன்பை எட்டி முடியாதே;
பின்னும்கேள்; பாதாளத்திலும் அன்பினுக்காழம் பெரியது;
என்னுமுன் சாவினுறுதியைப்பால் என்னுட அன்புமுறுதியே.— பாவி

4. திருப்பையின் கிரியை முடியவே, அதிசீக்கிரமாகவே
பெருமையாய் மகிமை காண்பையே.
திருத்தவாசனத்தின்மேலே வீற்றுமேயிருப்பதற்கு
கர்த்தராம் என்னோடே நீ களத்த பங்காளியாவாய்.— பாவி



FLORENCE NIGHTINGALE.

## பிளாரன்ஸ் நைற்றிங்கேல் அம்மாள்.

பிளாரன்ஸ் நைற்றிங்கேல் என்னும் மாது, 1820-ம் வருஷத்தில் இத்தாலியாவிலுள்ள ஒரு அழகான பட்டணமாகிய பிளாரன்ஸில் பிறந்து, 1910-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதத்தில் தம்முடைய 90-ம் வயதை பூர்த்தியாக முடித்து தேகவியோகமானார்கள். இம்மாது சிரோன்மணி இங்கிலாந்து தேசத்து ஜனங்களாலும், உலகத்தின்கண் நாறு இடங்களிலுமுள்ள சன்மார்க்க ஜனங்களாலும் நன்கு மதிக்கப்பட்டு அதிகமாய் நேசிக்கப் பெற்றவர்கள். தன் சொந்தவகுப்பாராலும் இதர ஜாதியாராலும் இவ்வளவு கனத்தையும், அன்பையும்பெற காரணமென்னவென்று பின்வரும் இச்சீவியசரித்திரத்தை வாசிக்கும்போது திட்டமாய் விளங்கும். நைற்றிங்கேல் சிறு பிள்ளையாக இருக்கும்போது ஒரு இடையனுடைய நாய் படுகாயப்பட்டிருக்க, அதை கண்ட இவர்கள் வாரி எடுத்து அதன் உயிரைக்காப்பாற்ற மிருந்த கரிசனையும் பிரயாசையும் எடுத்து ஆதரித்த கதையை வாசித்து இருப்பீர்கள். இதுதான் முதலாவதாக அவர்களுடைய ஜீவியச் சரித்திரத்தில்



ஆரம்பித்த ஊழியம். இதைப்போன்ற அநேக மிருகங்களை, அவைகளுக்கு வியாதியோ, படுகாயமோ நேரிடுகிற சமயத்தில் அச்சீவ பிராணிகளைப் பேணி ஜீவகாருண்யத்தைக் காட்டிவந்தே இம்மாதுவின் குணலக்ஷணம். நைற்றிங்கேல் அம்மாள் இத்தாலியாவில் பிறந்தவர்களாகிலும் ஆங்கில வகுப்பைச் சேர்ந்தவர்கள். இம்மாதுவின் பெற்றோர்களுடைய வீடுவாசல் அதிக அழகும், காட்சியும் பொருந்திய இங்கிலாந்து தேசத்திலிருந்தது. இந்த இடத்திலேயே, தங்கள் இளம்பிராயத்தை தங்கள் பெற்றோரோடும், சகோதரிகளோடும் செலவு செய்தார்கள். இவர்களுடைய வீட்டுக்கு பின்பாகத்தில் ஒரு அழகு பொருந்திய தோட்டமிருந்தது. அதிலே வெகு நேரம் இத்தம்மாள் தங்கள் சகோதரிகளோடு உல்லாசமாய் விளையாடி சந்தோஷமடைவார்கள்.

பிளாரன்ஸ் சிறுமியாயிருக்கும்போது, சுற்றுப்புறத்திலுள்ள ஏழை ஜனங்களுக்குதவி செய்யும் குணமுடையவர்களாய் இருந்தபடியால், சில சமயங்களில் அந்த ஏழைகளை சந்திக்கப்போகும்போது ஏழைகள் அவர்களுடைய வீடுகளில் பக்ஷமாய் ஏற்றுக்கொண்டு இத்தம்மாளுக்கு அன்பு பாராட்டுவார்கள். இம்மாதுவின் பெற்றோர்கள் மேலான அந்தஸ்தும் ஐசுவரியமுள்ளவர்களானபடியால் இவர்களுடைய குழந்தைகள் சிறுபருவ முதல்கொண்டு சகல செல்வாக்கிலும் வளர்ந்தாலும், தங்கள் பிள்ளைகள் அதிக நேரத்தை உல்லாசத்தில் கழிக்க விடாமல், அவர்கள் கல்வி தேர்ச்சி அடையவேண்டுமென்கிற விஷயத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார்கள். தகப்பனார் சிறந்த கல்விமானும், தேசப்பிரயாணத்தில் அனுபவபட்டவருமானதால், தம்பிள்ளைகள் கல்வியில் தேறி மாதுசிரோன்மணிகளாய் துலங்கவேண்டுமென்றே கருத்துக்கொண்டார். ஆகையால் அவருடைய பிள்ளைகள் வெகு காலம் பள்ளிக்கூடத்தில் அப்பியாசித்து வந்ததினாலும், பல தேசப்பிரயாணம் செய்ததினாலும், அதில் தேர்ச்சியடைந்து சங்கீத சாகித்தியர்களாய் துலங்கி அநேக கூட்டங்களை பரவசப்படுத்தி வந்தார்கள். ஆனபோதிலும் நைற்றிங்கேல் அம்மாளுக்கு இதிலே திருப்தி இல்லாமல், இத்தம்மாள் தங்கள் ஜீவிய காலத்தில் கையாடவேண்டிய ஒரு முக்கிய கருத்தைக் கொண்டிருந்தார்கள். அக்கருத்துக்கிசைவாக தங்கள் சிநேகிதர்களிடமிருந்து நல்ல தூண்டுதல் கிடைக்காவிட்டாலும், தாங்களே தனிமையாய் அக்கருத்தை கையாட முயற்சி செய்ததையால் அத்தம்மாள் எவ்வளவு தூரம் பயனடைந்தார்கள் என்பதைப்பற்றி பின்னால் வாசிக்கும்போது தெரியவரும்.

(இன்னும் வரும்.)

ASBESTOS IN INDIA

## இந்தியாவில் கல்நார்.

கல்கத்தாவுக்கு மேற்கே பெங்கால் நாகப்பூர் ரெயில் மார்க்கமாய் சுமார் 200 மைலுக்கப்பால் சக்ரதார்பூர் என்றொரு பட்டணமுண்டு. இந்தப்பட்டணத்துக்கு 8-மைல் தூரத்தில் சோட்டா நாகப்பூர் என்றொரு ஊர் இருக்கிறது. அந்த இடத்தில் சுமார் 6-மைல் விஸ்தீரணத்தில் முதல் தடவையாக ஒரு வித நூதன தாதுவர்க்கத்தைச் சேர்ந்த கல்நாரை கண்டுபிடித்திருக்கிறார்கள். இது பலவிதமான தொழிலுக்கு உபயோகப்படுத்தக் கூடியவஸ்துவாயிருக்கிறது. இந்த வஸ்து

தாவர வர்க்கத்தைச் சேர்ந்ததென்பது பூர்வீகத்தாருடைய அபிப்பு. இது பார்வைக்கு விசித்திரமும், பலவிதமானதுமாயிருக்கிறது. இவற்றில் சிலது நார் போன்றதும், மெதுவும், பட்டுமயமானதும், ஒடியக்கூடியதுமாயிருந்தாலும், சிலது நார்போன்றதாயிராமலும், லேசில் அழிக்கக் கூடாததுமாயிருக்கிறது. இதுவரையிலும் இக்கல்நார் மற்ற தாதுவர்க்கங்களைப் பார்க்கிலும் ஒரு விநோதப்பொருளாக மாத்திரம் எண்ணப்பட்டிருந்தது. ஆனால் தற்காலத்தில் அநேக விஷயங்களுக்கு உபயோகப்படக் கூடியதாயிருக்கிறபடியால் விசேஷித்த பொருளாகக் காணப்படுகிறது. இந்த விசேஷித்தபொருள் வீட்டுக்காரியங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும், கல்வி சாஸ்திர பயிற்சிக்கும் பலவிதத்தில் பிரயோசனப்படுகிறது. நெருப்பண்டை வேலை செய்கிறவர்கள், இந்தக் கல்நாரினால் ஒருவிதமான உடையை உண்டாக்கி தரித்துக் கொள்வதினால் நெருப்பின் காங்கையிலிருந்து காக்கப்பட்டு அநுகூலமடைகிறார்கள். நெருப்பின் காங்கையை நீக்கும்படியான சக்தி இதற்கிருக்கிறது. இந்தக் கல்நாரினால் வஸ்திரத்தைச்செய்து திரவங்களை வடிகட்ட உபயோகிக்கிறார்கள். கல்நாரைச் சேர்த்து வீட்டை கட்டினதால், நெருப்பினால் உண்டாகும் மோசத்தைத் தடுத்துக் காத்துக் கொள்ளும்படியான சக்தியுடையதாயிருக்கிறது.

ஆங்கில பாஷையில் இது Asbestos என்றழைக்கப்படுகிறது. இந்த பதம் கிரேக்கபாஷையிலிருந்து வந்தது. இதன் அர்த்தம் "அழியாமையான" என்று பொருள்படும். தமிழ்பாஷையிலும் கல்நார் என்றழைக்கப்படுவதால் மேல்கண்ட வார்த்தைக்கு இசைவாகவே இருக்கிறது. பிராணவாயு, கரியமில்வாயு இவைகளின்பேரிலும், மின்சார நெருப்பின் பேரிலும் இந்தவஸ்துவை பொடிசெய்து காயும்போது வெகு அழகான பிரகாசத்தை தருவதோடுகூட அந்தவஸ்து கரைந்துபோகிறதேயில்லை.

## WHAT MISSIONARIES HAVE DONE?

## மிஷநெரிமார்கள் என்ன செய்தார்கள்?

உலகத்தின் பெரும்பாகத்திலே உள்ள நானாவித பாஷைக்காரரும், பலவித கோட்பாடுகளுள்ளவர்களும், இக்கலை ஞானத்திற்கு நிகரில்லை என்று சொல்லத்தக்கதாக மிஷநெரிமார்கள், வேதாகமத்தை மொழிபெயர்த்துக் கொடுத்தார்கள். உலகத்தில் பேசப்படுகிற பாஷைகளில் பத்தில் எழுபாகத்தில சத்தியவேதம் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. இது யாருடைய வேலை? மிஷநெரிமார்கள்தான் இதை செய்தார்கள். உலகத்தின் பலபாகங்களில் சிதறிக்கிடந்த காட்டுமிருண்டிகளுடைய துர்க்குணங்களை மாற்றவும், நாகரிகமும் அறிவும் உண்டாகவும், இருதயத்தில் சமாதானமுள்ளவர்களாய் வாழவும் அவர்கள் மத்தியில் பிரயாசையோடு ஊழியஞ்செய்து, சமாதானத்தின் பிரபுவாகிய இயேசுநாதரை அவர்களுக்கு போதித்து நித்தியானந்தத்தின் வழியை காட்டினது மிஷநெரிமார்கள்தான், மற்றப்படி ஒருவரும் இந்தவேலையைச் செய்யவில்லை.

பஞ்சகாலத்தில் ஏராளமாய் உதவி செய்தவர்கள் மிஷநெரிமார்கள். சில வருஷங்களுக்கு முன் வந்த பஞ்சகாலத்தில், ஒரே ஒரு மிஷநெரிமாத்திரம் 30 லக்ஷம் ரூபாய் செலவு செய்தார். இந்த பணம் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களிலிருக்கிற கிறிஸ்தவர்களால் அனுப்பப்பட்டது.

## PERSONAL EXPERIENCE IN RELIGION.

## அனுபவ மார்க்கம்.

இயேசுநாதர் உலகசஞ்சாரம் செய்த காலத்தில் அவரால் ஒரு பிரபந்தமும் எழுதப்படவுமில்லை, அவர் உலகராஜ்யத்தை ஸ்தாபிதம் செய்யவுமில்லை, அவர் அவருடைய காலத்தில் பிரக்கியாதி பெற்றவராயுமில்லை, ஆனாலும் அவருடைய ஜீவியம் சன்மானிக்கக்கூடியதும், ஆச்சரியப்படத்தக்கதுமாயிருந்தது. அவர் தம்முடைய சொந்த நடக்கையிலும், ஜீவியத்திலும், கடவுள் எப்படிப்பட்டவரென்றும், எவ்வளவு பரிசுத்தமுள்ளவரென்றும் போதித்துக் காட்டினார். இவ்வருள்நாதருடைய ஜீவியத்தையும், கிரியைகளையும் நாம் சற்று கூர்ந்து பார்ப்போமானால், கடவுள் அவருக்கு சகலத்திலும் உண்மையாய்க் காணப்பட்டார் என்று விளங்கும். பிரபஞ்சத்தின் ஓர் மறைவான இடத்தில் தேவன் இருக்கிறார் என்றும், அவரோடு அழிந்துபோகும் இம்மானிட ஜென்மம் ஐக்கியப்பட்டிருப்பதும் அல்லது நெருங்கிச் சேர்வதும் அசாத்தியமான காரியமென்றும் தப்பபிப்பிராயப்பட இடமே இல்லை. தேவன் கிறிஸ்துவோடு இருந்தார் என்பதை அவர் பூரணமாய் அறிந்திருந்தார். அவர் தேவனோடு சம்பாஷித்தார். அவர் தேவனை இனியபெயரால் தம்முடைய பிதாவென்று அழைத்தார். இந்த சிறந்த அனுபவத்தை அவருடைய போதனையில் நாம் பிரத்தியக்ஷமாய் காணலாம். புதிய ஏற்பாட்டை நாம் வாசிப்போமானால் அந்த போதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. அவருடைய சுயபக்தி வைராக்கியத்திலாவது அல்லது அவருடைய போதனையிலாவது தப்பறையான தொன்றும் கிடையவே கிடையாது.

அவருடைய அன்றாட ஜீவியத்திலும் அவருடைய அனுபவத்திலும் சிறந்த விசுவாசம் நன்றாய் துலங்கினது. இதைத் தவிர தம்முடைய சிஷர்களுக்கு வேறெந்த விஷயத்தையும் போதிக்கவில்லை.

உண்மையாய் தேவன் இருக்கிறார், அவர் அன்புள்ளவர் என்கிற சத்தியம் கிறிஸ்துவுக்குள் பூரணப்பட்டிருந்ததால், அவர் தம்மைச் சூழஇருந்த ஜனங்களுக்கு இவ்வுண்மையைக் காட்டினார்.

அன்பு, அனுதாபம், வல்லமை, சாந்தம், பரிசுத்தம் இவைகளெல்லாம் இரக்ஷகருடைய ஜீவியத்தில் பூரணமாய் விளங்கினதென்று திட்டமாய்ப் பார்க்கலாம். அவருடைய விசுவாசம் எப்படியோ அப்படியே அவருடைய ஜீவியமும் இருந்தது.

எல்லாவற்றிலும் சிறந்தசாக்ஷி ஒருவனுடைய அனுபவசாக்ஷி என்று சாஸ்திரம் சொல்லுகிறது. மற்றவர்கள் மூலமாய் கேள்விப்படுவது உண்மையாயிருக்கலாம், அதை நாம் நம்பவும் துணியலாம், ஆனால் அப்பொருளை நம் சொந்த அனுபவத்தில் கண்டுணர்ந்தபின்தான் அதன் அருமை நமக்கு புலப்படும். கடவுள் நிச்சயமாய் உண்டென்று உணரவும், அவரை அனுபவத்தில் அறிந்துக்கொள்ளவும் தக்கதான உயர் நிலைமையடைந்தவர்கள் வெகு சிலரே.

மார்க்கமாவது என்ன? அது ஒரு விளையாட்டுப் பொருளா? துன்பகாலத்தில் நமக்கு அவசியமாயிருந்து, நாம் சுகமாயிருக்கையில் தேடப்படத்தகாத பொருளா மார்க்கம்? அது நாம் மோக்ஷம் சேரும்படியாக சாகுந்தருணத்தில மாத்திரம் தேடிக்கொள்ளப்படுவதா?

மார்க்கமானது ஒரு ஜீவியம். நாம் பிழைப்பது எதனாலே அது, கிறிஸ்து உண்மைப் பொருளென்றும் கடவுள் எம் பிதா என்றும் அறியும் அறிவே கிறிஸ்து மார்க்கம். ஒருவனது உலகவாழ்க்கை கிறிஸ்துவிற்கேற்ற ஆசை விருப்பங்களால் ஆளப்பட்டு வரும்படி அவரை அறிந்துக் கொள்ளுகிறவனே கிறிஸ்தவனும். அப்பொழுது ஒருவனுடைய சந்தேகங்களெல்லாம் பறந்துபோய்விடும். இயேசுநாதர் கடவுளுடைய பூரணவெளிப்படுத்தலும், மனிதனுடைய இழுக்கற்ற மாதிரியுமாகக் காணப்படுவார். அவர் எப்படியோ அப்படியே நாமும் இவ்வுலகத்திலிருக்கிறோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன், "என்னுடைய போதனைகள் தேவனிடத்திலிருந்து வந்தனவோ, அல்லது நான் என் சுய இஷ்டமாய் பேசுகிறேனோ வென்று அறிந்து கொள்வான்" என்று இயேசுநாதர் சொன்னார். அவரைப் பின்பற்று, அப்பொழுது நீ அறிந்துகொள்ளுவாய். அநுபவசாக்ஷி உன் மார்க்கத்தை உனக்கு உண்மையாக்கிக் காட்டும்.

---

## THE MISSIONARY AND THE KORAN.

## மிஷெநெரியும் கொரானும்.

---

ஆப்பிரிக்காவிலிருந்த ஒரு மிஷெநெரி ஒருநாள் வேதாகம புஸ்தகங்களை விற்பனை செய்யவும் ஒற்றைத்தாள் பிரதிகளைக் கொடுக்கவும் புறப்பட்டுப்போனார். அவர் பார்க்கப்போன கிராமத்திற்கு வெளியே சௌடானிலிருந்து வந்த சில மனிதர் அங்குப் பள்ளிக்கூடம் ஒன்று வைத்திருக்கக்கண்டு தம்முடைய துவிசக்கர வண்டியிலிருந்திறங்கி அவர்களை வினவினர். அவர்கள் அவருடைய வந்தனத்திற்கு பதில் செலுத்தவே, "உங்களில் யாருக்காவது வாசிக்கத் தெரியுமா என்று அந்த மிஷெநெரி கேட்டார். ஒருவருக்கும் தெரியாது என்று சொல்லுவார்களென்று அவர் எண்ணியிருக்கையில், "ஆம் இவனுக்குத் தெரியும்" என்று அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்லவே மிஷெநெரி ஆதியாகமம் ஒன்றை நீட்டிக்கொண்டு, "இது ஒரு நல்ல புஸ்தகம், விலை இரண்டு பைசாதான்" என்றார். வாசிக்கத் தெரிந்த அந்த மனுஷன் அந்தப்புஸ்தகத்தை வாங்கினான். ஆனால் உடனே கொடுத்துவிட்டு, "இம்மாதிரி புஸ்தகங்கள் ஒருவனுக்கும் பயன்படாது. நீர் யாரென்று எனக்குத் தெரியும். நீர் டியூனிஸில் ஒரு வீதியில் புஸ்தகசாலை வைத்திருக்கிறீர்" என்று சொன்னான். அப்படிச்சொன்ன அந்த மனுஷன் ஒரு மகமதியனாகையால் ஆபிரகாமைப்பற்றி நம்பிக்கையும் அபிமானமும் கொண்டிருந்தான். "ஆபிரகாமினுடைய சரித்திரம் பிரயோஜனமற்றதென்று நீ நினைக்கிறாயா" என்று மிஷெநெரி அவனைக் கேட்டார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்ற மனிதர்கள் "அது தேவனுடைய சிநேகிதனாகிய ஆபிரகாமின் சரித்திரமா? அப்படியானால் நீ எப்படி அந்த புஸ்தகத்தை அவமதிக்கலாம், அதை வாங்கி எங்களுக்கு வாசி என்று சொன்னார்கள்." அப்பொழுது மிஷெநெரி—"இல்லை நான் அவனிடத்தில் கொடுக்கமாட்டேன், அவனுக்கு இப்புஸ்தகத்தின் அருமை தெரியவில்லை, நானே உங்களுக்கு வாசிக்கிறேன்" என்று சொன்னார். அவர் அப்புஸ்தகத்தைத் திறந்து ஆபிரகாமின் சரித்திரத்தை வாசித்துக் கொண்டிருக்கையில், ஒரு வண்டியில் போய்க் கொண்டிருந்த சிலரும் நின்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் வாசித்து



முடிக்கவும், இவர்களில் ஒருவன், "வேதத்தை சொல்லுகிறபாதிரி, இரசிக்கப்பட்டது சாக்கல்ல இஸ்மவேல்" என்றான். "அப்படியல்ல கொரானில் ஒருவன் பேரும் சொல்லப்படவில்லை, ஆனால் தோரா என்னும் புஸ்தகம் ஈசாக்கு என்றுதான் தெளிவாகச் சொல்லுகிறது" என்று மிஷெநெரி உத்தரவு சொன்னார். பிறகு தொருவுக்கேற்ப எழுதப்பட்டிருந்த இந்த புஸ்தகத்தை எடுத்துக் காட்டவும், அதை வாங்கும்படி வண்டியிலிருந்து இறங்கிவந்தான். அவனிடம் இரண்டு பைசா இல்லாதிருந்ததால் கடன் வாங்க முயன்றும் அவனுக்கு இரண்டு பைசா கிடைக்கவில்லை. ஆகையால் மிஷெநெரி அவனிடத்திலிருந்த ஒருபைசாவை வாங்கிக்கொண்டு புஸ்தகத்தைக் கொடுத்தார். மற்றொரிடத்தில் பெடுவின் என்ற ஜாதியாரில் சிலர் கூடாரம் அடித்திருக்கக் கண்டார். அவர்களில் ஷயிக் அல்லது குரு ஒருவன் இருந்தான். இவன் சில ஒற்றைத்தாள் பிரதிகளை வாங்கி வாசிக்க ஆரம்பித்து, "நீர் மகமதுவை நம்புகிறதில்லை, அவரில்லாதிருந்தால் உலகமே சிருஷ்டிக்கப்பட்டிராது" என்று சொன்னான். அதற்கு மிஷெநெரி, "புஸ்தகத்தையுடைய மனிதர் உன்னுடைய கொரானில் சொல்லியிருக்கும் மனிதரில் ஒருவன் நான் என்று உனக்குத் தெரியுமா? அவர்களோடு தகுந்த காரணங்களோடன்றி தர்க்கம் பண்ணக்கூடாது என்று உனக்குத் திட்டமாகச் சொல்லப்பட்டிருக்க, நீ இப்பொழுது எனக்கு வெறும் கதையைச் சொல்லுகிறாயே," என்று மிஷெநெரி மறு உத்தரவு சொன்னார்.

"கதைகளா!" என்று ஷயிக் வியந்து கூறினான்.

"ஆமாம், நீ சொன்னதைக் கொரானில் காட்டுவாயானால், நான் உனக்கு இருபது ரூபாய் கொடுக்கிறேன்" என்றார் மிஷெநெரி.

"இல்லை, அது கொரானில் இல்லை, ஆனால் மகமதுதான் நியாயத்தீர்ப்பு நாளில் பரிந்து பேசக்கூடிய ஒரே ஆள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லக்கூடும்" என்று ஷயிக் மெதுவாகச் சொன்னான். அதற்கு மிஷெநெரி "அப்படியல்ல, அதுவும் ஒரு பொய்யே, இந்த வார்த்தைகளை கொரானில் வாசிக்கவில்லையா? "விசுவாசிகளே; வியாபாரமும், சிநேகமும், பரிந்து பேசுதலும் இல்லாத அந்த நாள் வருமுன்னமே, உங்களுக்குள்ளவைகளிலிருந்து தருமம் கொடுங்கள்" என்று சொல்லியிருக்கவில்லையா வென்று சொல்லி அந்த மிஷெநெரி மேல்படி ஷயிக்கின் வாயை அடைத்தார். இதைக்கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள், ஷயிக்கைப் பார்த்து, "அவர் சொல்லுகிறமாதிரி கொரானில் இருக்கிறதா ஷயிக்கே" என்று கேட்டார்கள். அதற்கு ஷயிக் ஆம் என்று சொல்லவேண்டியதாயிற்று. இதன்பின் மிஷெநெரி தான் வந்தவழியே போனார்.

---

## PATENT MEDICINE.

## பேட்டன்ட் அல்லது உரிமை பொருந்திய மருந்துகள்.

---

அநேகவித பேட்டன்ட் மருந்து வியாபாரிகள் தங்களின் மருந்தின் மேன்மையையும் குணங்களையும் பிரசுரம் செய்து அதன் மூலமாய் தங்கள் மருந்துகளை விற்பனைசெய்து வருகிறார்கள் என்று இந்தியாவில் பிரசுரம் செய்யப்படும் பலவித வர்த்தமான பத்திரிகைகளின் மூலமாய்

தெரியவருகிறது. இப்படிப்பட்ட மருந்துகளை அநேகர் வாங்கி பயன் படாமல் வருந்துகிறார்கள். வியாதியின் குணத்தை வைத்தியனே செவ்வையாய் அறிந்து மருந்து கொடுக்கவேண்டும். அதற்குப்பதிலாய் வியாதியஸ்தன் தான் வைத்தியனுடைய அந்தஸ்தில் நின்றுகொண்டு தன் இஷ்டப்பிரகாரம் மருந்துகளை பிரயோகிக்கிறபடியால் பலவித மோசத்துக்குட்படக் காரணமாயிருக்கிறது. இவ்விதமாய் ஜனங்கள், வியாதி கண்டவுடன் வைத்தியனிடத்தில் போகாமல், வர்த்தமானப் பத்திரிகைகளில் புகழ்ந்து பேசப்படுகிறவைகளை நம்பி மேல்படி மருந்துகளை வாங்கி சாப்பிடுவதற்கு இரண்டு முக்கியமான காரணங்களுண்டு.

முதலாவது, ஒருவைத்தியன் நேராய் வந்து வியாதியின் தன்மையை கண்டுபிடித்து வியாதிக்குத்தக்க மருந்தை சாப்பிடவேண்டுமென்று ஒருமருந்தை குறிப்பிட்டு ஆலோசனை கூறுவதற்கு மாத்திரம் மேல்படி வைத்தியனுக்கு பணம் கொடுக்கவேண்டும். அதுமாத்திரமல்ல, அதன் பிறகு அவன் குறிப்பிட்டுக் காட்டுகிற மருந்தையும் பணம்போட்டு கிரயத்திற்கு வாங்கவேண்டும். இதினிமித்தமே,பணம் அதிக செலவாகிறதென்று நினைத்து வைத்தியனுடைய உதவி இல்லாமலே கண்ட மருந்துகளையெல்லாம் சுயமாய் வாங்கி கடைசியாய் திரேகத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

இரண்டாவது, இப்படிப்பட்ட பேட்டன்ட் மருந்துகளை உடனே வாங்கி இத்தேசத்தார் சாப்பிடுவதற்கு இன்னொரு காரணம் உண்டு. அதாவது மேல்படி பேட்டன்ட் மருந்துகளைப்பற்றி பத்திரிகையில் வெகு விமரிசையாய் புகழ்ந்து பேசப்பட்டிருப்பதாலும், அநேக வியாதிகளை சொஸ்தமாக்கக்கூடிய தன்மையுடையதென்று ரூபிக்க பலவித நற்சாட்சிப்பத்திரங்களைப் பிறப்பித்துக் காட்டுகிறபடியாலும், ஜனங்கள் அதை உண்மையாய் நம்பி, அம்மருந்துகளை வாங்கி சாப்பிடும் பக்ஷத்தில் தாங்களும் தங்களுடைய வியாதியிலிருந்து சுகமடையக் கூடுமென்று நிச்சயமாய் நம்பிக்கொள்ளுகிறார்கள்.

இப்படிப்பட்ட மருந்துகளை அநேகர் வாங்கி சாப்பிட்டும், யாதொரு குணத்தையும் அடையாமல் ஏமாந்து போகிறார்கள்.

ஒரு ஸ்திரீக்கு அவளுடைய காலிலே ஒருவிதமான நோய் இருந்தது. அச்சமயத்தில் ஒரு மனுஷன் அவளிடம் வந்து, நீ எனக்கு இரண்டு ரூபாய் கொடுப்பாயானால் உன் வியாதியை நீக்கக்கூடிய ஒருமருந்தை வாங்கித்தருவேன், அதை நீ சாப்பிட்டு சுகமடைந்த பிறகு எனக்கு அதிக பணம் தரவேண்டும், சுகமடையாவிட்டால் ஒன்றும் தரவேண்டாம் என்றான். முதலில் அந்த ஸ்திரீ எவ்வளவு தரவேண்டுமோ என்று பயப்பட்டாலும், அதைவாங்கிச் சாப்பிட்டாள்; ஆனால் ஒன்றும் சுகமடையவில்லை.

சில சமையங்களில் இவ்வித மருந்துகள் உடனே கொஞ்சம் சுகத்தைக் கொடுத்தபோதிலும் வர வர அதின் குணத்தின் தன்மை தணிந்துகொண்டேவருகிறது. இதினிமித்தியம் வியாதியஸ்தன் மருந்தின் அளவை அதிகரித்துச் சாப்பிடநேரிடுகிறது. இப்படிச்செய்வதினால் அந்த மருந்தில் சேர்க்கப்பட்ட சரக்குகளின் குணத்தையே காட்டுகிறது. எப்படியெனில், அவைகளில் சில பலமுள்ள சரக்குகள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பலமுள்ள சரக்குகள் நோயாளியை தூண்டிவிட்டு அதிக உபாதைக்கு உட்படுத்தி மெதுவாய் குணத்தை காண்பிக்கும்.



இதுமாத்திரமல்ல, திரேகக்கூறை அறிந்த வைத்தியன் இவ்வித மருந்துகளை கொடுத்தாலொழிய மற்றையபடி திரேகத்திற்கு மிகுந்த அபாயத்தை கொடுக்கக் கூடியவைகளாகயிருக்கிறது.

இப்படிப்பட்ட மருந்துகளை அடிக்கடி சாப்பிட்டுக்கொண்டே வருவதால் யாதொரு குணமுமடையாமல் மருந்தும் கையுமாய் இருக்க நேரிடுகிறது. ஒருவேளை இம்மருந்து வியாதியஸ்தனை கொல்லாவிட்டாலும் இவனுக்கும், இவனுடைய சிநேகிதர்களுக்கும் வெறுப்பையும் கஷ்டத்தையும் உண்டாக்கக் கூடியதாயிருக்கிறது.

பெரும்பான்மையாய் "இம்மருந்துகள், லாகிரி வஸ்துகளினால்தான் செய்யப்படுகிறது. இதை அறியாமலேயே வியாதியஸ்தன், மருந்தை தான் சாப்பிடுகிறேன் என்று நினைத்து லாகிரி வஸ்துவிலே பழக்கப்படுகிறான். ஆகையால் இப்படிப்பட்டவைகள் அபாயகரமானதே.

இப்படிப்பட்ட மருந்துகளை உபயோகிப்பதைவிட, வைத்தியர்களே குறிப்பிட்டு கொடுக்கும் மருந்துகளை அளவுபிரகாரம் சாப்பிடும் பக்ஷத்தில் சுகத்தைத்தரும்."

---

## CACTUS AND ITS USES.

## நாககாளியும் அதன் பிரயோசனமும்.

சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்றதுபோல், அற்பமாய் காணப்படுகிற வஸ்துக்களும் கூர்ந்து கவனிக்கும்போது பிரயோசனப்படுகிறது. நாககாளி சாதாரணமாய் வேலி அடைக்க மாத்திரம் கொஞ்சம் உதவுகிறதே தவிர மற்ற விஷயத்திற்கு உதவாததுபோல் இருக்கிறது. அப்படிப்பட்ட விஷயத்திற்கும் அதிகமாய் உபயோகிக்கிறதில்லை. ஆனால் அப்படிப்பட்ட முள்நிறைந்த நாககாளி ஆடுமாடுகளுக்கு உணவாக இருக்கிறது. அமெரிக்கா கண்டத்தின் ஒருபாகத்தில் மழை பெய்கிறதேயில்லை. அப்படிப்பட்ட இடத்தில் இவ்வித நாககாளி ஒரு உதவியுமில்லாமல் ஏராளமாய் வளருகிறது. ஆகையால் இந்த நாககாளியை அநேக ஏக்கர் நிலத்தில் பயிர்செய்து ஆடுமாடுகளை போஷிக்கிறார்கள்.

இந்தியாவிலும் அப்படிப்பட்ட நாககாளி ஏராளமாய் வளருகிறது. இந்தியாவில் இப்போதுதான் அதைப்பற்றி சோதித்து வருகிறார்கள். அம்முயற்சி பலிதப்படும் பக்ஷத்தில் பஞ்சகாலத்தில் ஜலத்தினுடைய உதவியில்லாமலேயே, பெரிய அநுகூலமடையலாம். இதே நாககாளியினால் கடிதம் செய்யக்கூடுமென்று தெரியவருகிறது. இது உண்மையானால், இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட தாவரவர்க்கத்தில் மூன்றாவதாக எண்ணப்படும். இதினாலே, துவிசக்கரவண்டிக்கும் ரப்பர் டையர் செய்யக்கூடுமென்று சொல்லப்படுகிறது. வர்ணம், சுண்ணாம்பு முதலியவைகளுக்குப் பதிலாக இவைகள் பிரயோசனப்படுகிறது.

---

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

1. பெங்காலின் புது கவர்னர்.—சென்னை ராஜதானியும் பம்பாய் ராஜதானியும் அநேக வருஷங்களாக கவர்னரால் ஆளப்பட்டு வந்திருக்கையில், பரப்பிலும், ஜனத்தொகையிலும் இவ்விரண்டு ராஜதானிகளைப் பார்க்கிலும் பெரிதான பெங்

கால் இதுவரையும் (Lieutenant Governor) இலப்டினண்ட் கவர்னரால் தான் ஆளப்பட்டு வந்தது. இது வெகு காலமாக மனத்தாங்கலுக்கு காரணமாயிருந்தது. ஆனால், இப்பொழுது இக்குறை நிவர்த்தியாக்கப்பட்டது. மார்ச்சு மாதம் 27-ம் தேதி வைசிராய் கல்குத்தாவை விட்டுப்போகவே எப்ரல் மாதம் 1-ம் தேதி பெங்காலின் புது கவர்னர் வந்தார். கல்குத்தா இனி இந்தியாவின் தலைநகரியாய் இருக்கப்போகிறதில்லை. பெங்காலின் முதல் கவர்னராக வந்த இவருடைய வருகை விசேஷமானதே. கார்மைக்கல் பிரபுவாகிய இவர் கொஞ்சக்காலத்திற்கு முன் சென்னையிலும், அதற்குமுன் ஆஸ்த்ரேலியாவின் விக்டோரியா மாகாணத்திலும் கவர்னராயிருந்தார்.

2. **ஜப்பானும் மார்க்கமும்.**—இந்தியா ஜப்பானைப் பார்த்து அந்நாட்டின் தேர்ச்சியைத் தானும் அடைந்துகொள்ள முயலுகின்றது. ஆனால் ஜப்பானே இப்பொழுது தான் செய்த ஒரு பிழையைக் கண்டுகொண்டது. இப்பொழுது அதிகாரிகள் மூன்று மதங்களிலிருந்து பிரதிநிதிகளை அழைத்து ஒரு சபைகூட்ட பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இம்மதங்களில் இரண்டு அத்தேசத்தின் முக்கிய மதங்களும், மூன்றாவது கிறிஸ்துமார்க்கமுமாம். உற்சாகத்தோடு சீர்திருத்தங்களை ஆரம்பித்த ஜப்பானியர் மார்க்க சீர்திருத்தத்தை அலக்ஷியம் செய்துவிட்டார்கள். இப்பொழுதோ கல்விப்பெருக்கம் மாத்திரம் போதாதென்று காணப்படுகிறது. ஆகவே சில கிறிஸ்தவர்களும் மற்ற இரண்டு மதங்களின் சில குருக்களோடு சேர்ந்து இப்பொழுது என்ன செய்யலாமென்று ஆலோசிக்க எண்ணியிருக்கிறார்கள். இந்த நோக்கம் சகல சமயத்தாராலும் மெச்சிக்கொள்ளப்படுகிறது.

3. **இந்தியாவில் தந்தி.**—மார்ச் மாதம் 26-ம் தேதியன்று இந்தியாவில் தந்தி போடப்பட்டு 58 வருஷங்களாயின. இந்த வருஷங்களில் தேசம் விரைவாகத் தேர்ச்சியடைந்து வந்திருக்கிறது. தந்தி முதல் முதல் ஒரு அற்புதமாகத்தான் காணப்பட்டது. இப்பொழுது தேசத்தின் ஒவ்வொரு மூலையிலும் உபயோகப்படுகிறது. கொஞ்சகாலத்துக்குமுன் கம்பியில்லாமல் பேசும் தந்தியும் கொண்டுவரப்பட்டது. இக்கருவியின் மூலமாய் கம்பிபோடப்படாத இடங்களுக்கும், நடுச்சமுத்திரத்திலுள்ள கப்பல்களுக்கும் சங்கதிகள் அனுப்பலாம். நமதரசர் இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்தபொழுது இங்கிலாந்தின் விசேஷங்களை இக்கருவியின் மூலமாய் அப்போதைக்கப்போதே அறிந்துகொண்டார். இன்னும் ஒரு ஐம்பது வருஷங்களுக்குள் என்னென்ன விநோதங்கள் வருமோ யாருக்குத்தெரியும்.

4. **வைத்திய சாஸ்திரம் படிப்போரை உற்சாகப்படுத்த.**—வைத்திய சாஸ்திரம் படித்து சென்னைக் கல்விசங்கத்தின், எம். பி. சி. எம். பட்டத்தைப் பெற விரும்பும் பெண்களுக்கு உதவிசெய்யும்படி மாதம் ரூபாய் 25 ஸ்றைப்பெண்ட் அல்லது உதவிசம்பளம் கொடுக்க ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. கௌண்டஸ் டப்ரின் பண்டின் அதிகாரிகள் இவைகளைக் கொடுப்பார்கள். இன்டர்மீடியேட் பரிக்ஷையில் தேறினவர்களும், அப்பரிக்ஷைக்குப் படித்துக் கொண்டிருக்கிறவர்களும் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். அப்படிப்பட்ட அந்த உபகார சம்பளம் ஒரு ஆளுக்கு எழு வருஷம் கொடுக்கப்படும்.



5. **பெரும் புசல்.**—மார்ச்சு மாதம் 29-ம் தேதி பாகல்பூரில் அதிக சேதத்தை உண்டுபண்ணின ஒரு பெரிய காற்று மழை அடித்தது. புசல் இரண்டுமணி நேரம் அடித்துக்கொண்டிருந்தது. ஊர் முழுவதையும் பனிக்கட்டியால் நிரப்பிவிட்டது. பலத்த மழையும் பெய்தது. ஆனால் 24-மணி நேரங்களாக பனிக்கட்டி கரையாமலிருந்தது. மரங்களும், செடிகளும், இலையற்றுப்போயின. வெளியிலிருந்த மிருகங்கள் மாண்டுபோயின. குளங்களிலிருந்த மீன்களும் பனியின் குளிரால் விறைத்துப்போயின. கடந்த 50 வருஷங்களுக்குள், இப்படிப்பட்ட புசல்காற்றைப் பார்த்ததாக ஒருவருக்கும் ஞாபகமில்லை. சில இடங்களில் பனிக்கட்டி நாலடி உயரத்தில் கிடந்தது.

---

## LABOUR UNREST.

## உழைப்பாளிகள் கலகம்.

---

### *The coal strike crisis.*

### நிலக்கரி வேலையாட்களின் அமளி.

நிலக்கரிக் கேணியில் வேலை முற்றும் தடைப்பட்டுப் போகாமல் அந்த சம்பந்தமாக உண்டாயிருக்கும் குதர்க்கங்களை சமாதானமாக முடிக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் மிகுந்த ஆங்கலாய்ப்புடன் ஆலோசனை செய்துகொண்டு வருகிறார்கள். ஆகிலும் கவர்ன்மெண்டார் இதிலே தலையிட்டு அதிகாரத்தோடு எதையும் செய்கிறதற்கு இன்னும் சரியான காலம் வரவில்லையென்பது சிலருடைய அபிப்பிராயம். கடந்த பெப்ருவரி மாதம் 17-ம் தேதி மான்செஸ்டர் பட்டணத்தில் சர் எட்வர்ட் கிரே என்பவர் பேசின பொழுது, இத்தேசத்தில், நிலக்கரிக் கேணி வேலை நின்றுபோகுமானால் நம்முடைய ஜனங்களின் வாழ்வு எவ்வளவாகக் குறைந்துபோகுமென்றும் இந்த வேலை முடக்கம் சமாதானமாக முடிந்தபோதிலும் நம்முடைய ராஜ்யம் முன்னிருந்த பழைய செழிப்பான நிலைமைக்கு வந்தெட்டக்கூடுமோ என்றும் ஒருவரும் நிச்சயமாய்ச் சொல்லமுடியாதென்று சொன்னார். இந்த விஷயத்தைக்குறித்து கூட்டங்களில் பேசுவதினால் யாதொரு நன்மையும் விளையாதென்றும் அந்தரங்கத்தில் பேசி பிரயாசைப்பட்டால் சில வேளை அநுகூலமாகுமென்றும் அநுமானிக்கிறார். இங்கிலாந்தின் வடகிழக்கரையில் போதுமான நிலக்கரி அகப்படாமல் வேலைகள் நிறுத்தப்பட நேரிடுமென்று மிகவும் திகிலுள்ளவர்களாயிருக்கிறார்கள். இதைக் குறித்து தொழிற்சாலை ஆலோசனைக் கூட்டத்தார் காலதாமதம் செய்யாமல் ஆலோசிக்க வேண்டியதாயிருக்கிறது. நிலக்கரிக் கேணி சொந்தக்காரராவது அவைகளில் வேலைசெய்வோராவது இத்தருவாயில் கவர்ன்மெண்டார் தலையிட்டு எதையாவது நடப்பிக்கவேண்டுமென்று ஆசிக்கவில்லை.

பெப்ருவரி மாதம் 20-ம் தேதி பிரதம மந்திரி, நிலக்கரி சொந்தக்காரர் அதில் வேலை செய்வோர் இவர்களின் பிரதிநிதிகள் தம்மையாவது தம்மைச் சேர்ந்த மற்ற ஆலோசனைச் சங்கத்தாரையாவது இருபத்திரண்டாம் தேதி தனித்தனியாக வந்து பார்த்து நிலக்கரித் தொழில் நிறுத்தப்படுவதால் ஜனங்களுக்கு புத்திமுட்டு நேரிடாவண்ணம் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கடிதம் எழுதியனுப்பினார். எஜமான்களும் வேலைக்காரரும் தெரிந்துகொண்ட பிரதிநிதிகளின் சமாதான ஆலோசனைக் கூட்டம் வேலைக்காரர் அங்கீகரிக்கும்படியாக சொந்தக்

காரரான எஜமான்கள் ஏற்படுத்தின கூலி தாரிப்பு நிபந்தனைகளை அங்கீகரிக்காத படியால் அந்தக் கூட்டம் கலைந்துபோயிற்று, என்றாலும் பிரதம மந்திரியின் வேண்டுகோளுக் கிணங்கினார்கள்.

வேலை நிறுத்தப்படும் பக்ஷத்தில் சம்பளத்திற்கு உபயோகப்படும்படி இருபது லக்ஷம் பவுன் தர்மபயம் நிதி சேர்த்து வைத்திருக்கிறார்கள். இப்படி பொருள் சகாயம் செய்வதற்கு அறு லக்ஷம் பேர் வாக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

சவுத் வேல்ஸ் (வேல்ஸ் நாட்டின் தெக்ஷிண பாகம்) நாட்டில் கலகம் நேரிடாமல் தடுக்கும்படி பெரும் பிரயத்தனங்கள் நடந்து வருகிறது. எப்படியாவது பொருள்களுக்கு சேதம் நேரிடாமல் காப்பாற்றவேண்டுமென்பது அவர்களுடைய தாற்பரியம். நிலக்கரிச் சேகரிகளிருக்கும் கிராமங்களில் போலீசாரைக் கொண்டு தகுந்த முஸ்திப்புச் செய்திருக்கிறார்கள். போன வருஷம் நேரிட்டதுபோல கலகமுண்டாகும் பக்ஷத்தில் அதிகாரிகளுக்கு எழுதித் தெரிவித்தால் உடனே போலீசாரை அனுப்பி அநுகூலம் செய்யவேண்டுமென்று அந்நாங்க ஏற்பாடாயிருக்கிறது. காடிப் என்னுமிடத்தில் முனிசிப்பாலிட்டியாரும் தக்க முஸ்திப்பு செய்து வருகிறார்கள்.

ராஜாங்கத்தார் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு முன் அமாதத்திற்குப் போதுமான உணவுப்பொருள்கள், தகரத்திலடைத்த தின்பண்டங்கள், மெழுகு வர்த்திகள் இவைகளை உடனேதானே சவதரிக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள்.

---



**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | | | |
|---|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 355 பக். புஸ். | 1 | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு ... | | 0 | 8 |
| குருட்டுள்ள ஆவீழு 20 பக். 100-க்கு. | | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500-க்கு. | | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | | 0 | 8 |
| தைரியசாலியான தலைவன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக். புஸ். 100-க்கு. | | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | | 0 | 4 |
| ஜுசன் என்னும் சிறுமி 4 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | | 0 | 8 |
| சுயசித்தியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோக்ஷமடைந்தது 12 பக். புஸ். 100-க்கு ... ... | | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க பூஜைத்திரியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு | | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | | 0 | 8 |
| குருன்-இல்-லாவைக் கட்டி முடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | | 1 | 0 |
| நாங்கள் வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | | 0 | 8 |
| லாபத்தின் பொருட்டு மருந்துக்கொண்டு உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | | 0 | 12 |



160953

Y15 m2 M11